கடவுள் துணை

நாடார்குல வரலாறு

A Brief Account of the Nadar Race,

being

AN ADDRESS

By Rabbi B. J. M. Kulasekhara-raj

(son of Rabbi A. N. Chattampillai-Aiya,

Prakasapuram, Nazareth, Tinnevelly District),

concerning

the Origin, History, Names, Titles, Subdivisions, Clans (ancient and modern), Occupation, Religion, Manners and Customs, Social Position, Characteristics, Present Status, etc.

of

the Chantras or Mara Nadars,

the Original Lords of the Tamil Country,

delivered on 6th June, 1918,

at the Fourth Conference of the Nadars,

held at the Victoria-Edward Hall, Madura.

Published by request.

PALAMCOTTAH

PRINTED AT THE DARLING PRINTING PRESS,

AND PUBLISHED BY THE AUTHOR.

1918

All Rights Reserved.

குரு வணக்கம்.

(Dedication)

என்னை உருவாக்கி, காப்பாற்றி,
பரோபகார வேலைகளுக்காகத் தெரிந்தெடுத்த,
பரம பிதா வான
[யாவே - வே எலோஹிம் வேஷம்]
(ஆதி. 1. 26)
"சேம்குல ஆண்டவ ராகிய சுவாமி"
என்னும்
ஏகோவா – மேசியாவை
அவர் பாதபடியில் சாஷ்டாங்கஞ்செய்து,
(Orientology) கீழ்தேசங்கள்சம்பந்தமான பூர்வசரித்திரம், பாஷாசாஸ்திர
ஜனவிவரணம், மதவிவரம் முதலிய சாஸ்திரங்களிலும்,
(Chantrology) சான்றோர்ஜாதிவரலாறு ஆகிய சாஸ்திரத்திலும்,
எனக்கு அருளப்பட்டிருக்கும் சகல அறிவுக்கும் மூலகாரண குருஸ்தானமும்
மதவிஷயமாகவும் நாடார்குலமுன்னேற்ற விஷயமாகவும்
தங்களையும் தங்கள் வீட்டுக்காரியாதிகளையும் தியாகம்பண்ணினதினால்
எனக்கும் மற்றோருக்கும் பல நன்மைக ளுண்டாக
ஏதுவாயிருந்தாரிஷியும்,
காலஞ்சென்ற வயதுடையவர்களா யிருப்பவர்களும் ஆகிய
ஸ்தாகனம்பொருந்திய எனது அருமைப்பிதா அவர்களுக்கு நன்றியாராய்
அவர்களின் கீழ்ப்படிதலுள்ள குமாரனாக தெண்டனிட்டு
எனது ஆராய்ச்சிகளின் முதற்பலனான,
நாடார்குல வரலாறு
ஆகிய இப் புஸ்தகத்தை
அர்ப்பணம் செய்கிறேன்.

24—7—1918. பி. ஜே. எம். குலசேகர-ராஜ்.

Y592N NB

நாடார்குல வரலாறு.

தமிழ்நாட்டின் ஆதிக் காணியாட்சிக்காரரான
சான்றோர் என்னும் மாறநாடார்களின்
பூர்வோத்திரம், சரித்திரம், பேர்கள், பட்டப்பேர்கள், உட்பிரிவுகள்,
முற்கால-தற்கால குடும்பபாரம்பரைகள், தொழில்கள், மதம்,
வழக்கபுழக்கம், அந்தஸ்து, குணங்கள், தற்காலநிலைமை முதலானவைகளை,
மதிப்புள்ள திரளான மேற்கோளாதாரங்களின்பேரில்
சுருக்கமும் தெளிவுமாய்த் தொகுத்து,
திருநெல்வேலிஜில்லா, நாசரேத்து - பிரகாசபுரம்,
ரபி அ. நா. சட்டம்பிள்ளைஐயா அவர்கள் குமாரர்,
ரபி B. J. M. குலசேகர ராஜ்
தயார்செய்து,
மதுரை, விக்டோரியா-எட்வர்ட் ஹாலில் கூடிய
நாடார் மஹாஜன சங்கம், 4-வது கான்பரென்ஸில்
1918௵ ஜூலை 6௳ வாசித்த
உபநியாசம்.

பல கனவான்கள், மேதாவிகளின் வேண்டுகோளுக் கிணங்கி
பிரசுரிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை
டார்லிங் அச்சுக்கூடத்தில் ஜெ. ஆசிரியரால்
பதிப்பிக்கப்பட்டது.

1918

இப் புஸ்தகத்தின் சர்வ சுதந்தரங்களும் அதின் ஆசிரியருக்கே
சொந்தமாக ரிஜிஸ்தர்செய்யப்பட்டிருக்கிறது.

முகவுரை

நாடார்குலத்தவரைப் பற்றி, "They now occupy a very high place amongst the most progressive native tribes and castes in Southern India" "அவர்கள், இப்போது தென்இந்தியாவில் மகாமேலாய் முன்னுக்குவருகிற சுதேச குலங்களும் - ஜாதிகளு மானவர்களுக்குள்ளே மிகவும் உன்னதஸ்தானத்தை யடைந்திருக்கிறார்கள்" என்று 1841ளு முதல் திருநெல்வேலிச்சீமையில் மிஷனரிவேலைபார்த்த பேர்பெற்ற பிஷப் கால்டுவெல்துரை தம்முடைய ஜீவகாலத்திற்கண்ட அனுபவமா யெழுதி வைத்திருக்கிறார். அப்படியே, (இவ்வுலகத்தில் தெய்வவரம்பெற்ற மகா மேலான ஆளுகைச்சாதியாரா யிருந்து, தெய்வசாபத்தால், கடந்த சுமார் 1800 வருஷங்களாக உலகமொத்தத்திலும் சிதறுண்டு, மகா கஷ்டத்தையும் இட்டையு மடைந்து, கடந்த சுமார் 1 நூற்றாண்டுக்கால மாக, உலகமொத்தமுமே பிரமிக்கத்தக்கவிதமாய் சகலவிஷயங்களிலும் மகாமுன்னேற்றத்தை யடைந்துவருகிற 'Shemitic சேமியஜாதியா'ராகிய 'Beni Israel இஸ்ரவேல் புத்திரர்' என்னும் 'Jews யூதரு'க்கு ஒரு சிற்றளவா யாகிலும் ஒப்புள்ளவர்களாய்,) தென்இந்தியாவின் இந்த நாடார்குலத்தவர், கடந்த சுமார் ஒரு நூற்றாண்டுக்கால மாக அநேக மேலான விஷயங்களில் முன்னேறி வருவது யாவருமறிந்த உண்மையா யிருக்கிறது. இதினாலே, அவர்கள் முன்னேற்றம் பற்பலவிஷயங்களில் அவர்களோடு குறுக்கிடநேரிடுகிற பல இதரஜாதிமனுஷர், அவர்கள்பேரில் பொறாமையும் விரோதமுமடைந்து, அவர்களுடைய பூர்வோத்திரம், சரித்திரம், குணம், அந்தஸ்து முதலானவைகளைக் குறைத்து-மாற்றியும், வேறுமென்று நிஷ்டம்பண்ணியும் எழுதி, துவக்கமுதலே புஸ்தகம்முதலானவைகள் பிரசுரிப்பதும் விரோதநடபடிக்கைகள் செய்வதும் சகஜ மாகிவிட்டது. ஆகவே, அதைமறுத்து, தங்கள் குலத்தின் யதார்த்த பூர்வோத்திரம்-சரித்திரம்-அந்தஸ்தைத் [illegible]க்கி எழுதமைப்பது, நாடார்குலத்தவர் செய்யவேண்டிய அவசியமே யாகிவிட்டது. இதுவிஷயமாய், துவக்கத்தில் கையெழுத்துப் பிரதிகளான நூல்கள் நாடார்குலத்துள்ளும் வெளியிலும் பரவியிருந்தாலும், இந்தியாவில் கவர்ன்மென்றார் (Census) ஜனசங்கைக்கணக்கெடுத்து, ஜாதிகளை மேல்-கீழ் என்று வகுக்கஆரம்பித்த 1870-ம் வருஷமுதல், நாடார்குல மேன்மையைத் தாக்குவதாக, விவரம்தெரிந்தும்-தெரியாமலும் எழுதினதாக பல அச்சடிப்புஸ்தகங்களும் எழும்பின. அப்படி, நெடுகவெளிவந்த புஸ்தகங்கள் பலவா யிருந்தாலும், அவைகளொன்றிலும், இப்போது பொதுஜனங்கள் நாடார்குலவிஷயமாய் அறியவிரும்பும், சங்கதிகள் அநேகமாய் இல்லையென்றே சொல்லவேண்டியதா யிருக்கிறது.

தூத்துக்குடியில் பிரசுரமாகிவரும் ஞானோதயம் என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் நாளது 1918-ம் ஜூன் மாதத்து இதளில், "(நாடார்) மகாஜன சங்கம்" என, பத்திராதிபரா லெழுதப்பட்டிருக்கும் வியாசத்தில், நாடார்குலவிஷயமா யிருக்கும் அடியிற்கண்ட சங்கதியும் இவ் வுபநியாஸ விஷயமாய் எடுத்தெழுதப்படவேண்டியது அவசியமா யிருக்கிறது. அதாவது:—

111 341

"உங்களுடைய வம்சவழியைப்பற்றி பாராட்டிக்கொண் டிருக்கவேண்டாமென்றும், பதங்களின் மூலங்களையும் பழைய பரம்பரைகளைக்குறித்தும் தர்க்கம் செய்வதால் என்ன பயனுண்டாகு மென்றும் (நாடார்குல விஷயமாய் சிலர்) சொல்கிறார்கள். இது நமக்கும் நமது தேசத்துக்கும் முற்றிலும் மாறுபாடான விஷயம். உன்னதநிலைமையிலிருந்து காலமாறுபாட்டால் தாழ்ந்தநிலை யடைந்த ஒரு மனிதனாவது ஒரு ஜனசமூக மாவது ஒரு தேச மாவது முன்னேற்றமடைய வேண்டினால், அதினுடைய பூர்வசரித்திரங்களையும், அவர்களின் முன்னோர்களுடைய சரித்திரங்களையும், அவர்களின் கீர்த்திப்பிரதாபங்களையும் ஆராய்ந்தறிந்துகொண்டால் தான், தாங்கள் பூர்வீகத்திலிருந்த நிலைமையும் இப்போதிருக்கும் நிலைமையும் தெரிந்து, பழைய உன்னதநிலைமை யடையவதற்கு ஏதுவாயிருக்கு மென்றும், இந்த தேசமானது முன்னேற்றமடையாததற்கு முக்கியகாரணங்களி லொன்று இதுவாகுமென்றும், உண்மை, தேசபக்தர்களால் சொல்லப்பட்டும், தேச ஜனங்களால் ஆமோதிக்கப்பெற்றும் வரும் இக் காலத்தில், - இவ்வாறு சொல்வது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே."

இப்பவும், 1850-ம் வருஷத்துக் கடுக்கஇருந்தே இக் குலபூர்வோத்திர ஆராய்ச்சியை சுயவெறுப்பாய்த் துடங்கி நடத்திவந்திருக்கிற எனது கனம் பிதாவவர்களின் உலகப்பிரஸ்தாபவேலைகளை எண்ணியும், 1901-ம் வருஷத்தில் கவர்ண்மென்றார் தென்இந்தியாவுக்கு எத்னோகிரபிக் ஸர்வே துடங்கிய போது, ஷெ எத்னோகிரபி சூப்பரின்டென்டென்டிடம் நாடார்குல வரலாற்றை ரிக்கார்டாதாரங்களுடன் கொடுக்க, நானும் என்சகோதரரும், பிரதிநிதிகளா யிருக்கும்படியாக விரும்பி, தென்இந்தியாவிலும்-சிலோனிலும்-பர்மாவிலு முள்ள சுமார் 40,000 நாடார்கள் தங்கள் கையொப்பங்களிட்ட மனுக்கள் மூலமாய் ஷெ சூப்பரின்டென்டு துரையைக் கேட்டுக்கொள்ள, அந்தப்படியே ஷெ குலவரலாறு திருப்திகரமாய்க் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்தும், கடந்த 27 வருஷங்களாக நான் (The Orient) கீழ்தேசங்களின் புராதனம், சரித்திரம், பாஷாசாஸ்திரம், ஜனவிவரணம், மதங்கள் முதலானவைகள் விஷயமாய் சுயவெறுப்பாய்ச் செய்துவருகிற விடாமுயற்சியான ஆராய்ச்சியை உத்தேசித்தும், நாடார்குலத்தவரின் பூர்வோத்திரம், சரித்திரம், குணங்கள், அந்தஸ்து, சான்றியற்கை முதலானவைகளை தெளிவுறத் துலக்குவதான ஒரு சிறுபுஸ்தகம் தயாரித்து வெளிப்படுத்த வேண்டுமென்று நாடார்குல அபிமானிகளும்-கனவான்களும், நாடார் மஹாஜன சங்க முக்கியஸ்தரும் மாத்திர மல்ல, சில இதரகுல மேதாவிகளுமே என்னை அடிக்கடி விரும்பிக்கேட்டுக்கொண்டதால், அவர்கள் விருப்பத்துக்கிணங்கியே, இவ் வுபநியாஸத்தை தயார்செய்தேன்.

அந்தக் கேட்டுக்கொள்ளுதல்களின் தொடர்பாய், நாடார் மஹாஜன 4-வது கான்பரென்ஸுக்காக இந்த குலவரலாறு தயாரிக்கும்படியாய், மதுரையிலுள்ள ஷெ கான்பரென்ஸின் உபசாரணைக்கமிட்டியிலிருந் தனுப்பிய வேண்டுதல், (சகல நற்குணங்களும், புத்திக்கூர்மையும், தேகலக்ஷணமும் பொருந்தியவனும், மகா அருமையாய் வளர்க்கப்பட்டவனும், 11 வயதுள்ளவனு மான சேம் அருமைநாயகம் குலசேகரராஜ் என்னும் என் ஜேஷ்ட குமாரனை இழந்த துக்கத்தி லமிழ்ந்திருந்த) எனக்கு, கடந்த மேமீ 3உ யிலேயே கிடைத்தாலும், ஷெ மீ 19உ முதல்தான் அந்தவேலையை ஆரம்பித்து, அதிலிருந்து 2 வாரங்களுக்குள் அதை பூர்த்திபண்ணிவிட்டேன். ஷெ 4-வது கான்பரென்ஸ் மூன்று நாட்களாக, ஜூன்மீ 4, 5, 6உ களில் நடந்

தில், பிரஸிடென்ஷியல் அட்ரஸ் முதல்நாளாகிய 4-வதில் வாசிக்கப்பட்டு, அதைத்தொடர்ந்து ஷை 3 நாட்களிலும் என்னுடைய இந்தக் குலவரலாறு வாசிக்கநேரிடு மென்பதாக எண்ணி, இதை இவ்வளவு விஸ்தாரமாகத் தயார் செய்தேன். ஆனால் ஷை கான்பரென்ஸ் நாட்களின் சந்தர்ப்பப் பிரகாரம், ஷை பிரஸிடென்ஷியல் அட்ரஸும் என்னுடைய இந்தக் குலவரலாறும் கான்பரென்ஸின் கடைசிதினமாகிய 6-வதிலே வாசிக்கும்படி நேரிட்டதால், நான் எழுதியவிவரம் பூராவையும் தெரிவிக்க முடியாததால், அதில் சிலவற்றை மாத்திரம் எழுதியிருந்தஅர்த்தப்படியே வாசித்து, மற்றவைகளுக் கெல்லாம் சுருக்கமே எடுத்துச்சொன்னேன். ஆகிலும், எனக்கு அந்தவிஷயத்துக்காக நியமித்த நேரத்துக்கும் அதிகமாக 1½ மணிநேரம் கொடுத்ததற்காக கான்பரென்ஸின் கனம் பிரஸிடென்றவர்களுக்கும், கனம்பொருந்திய எல்லா பிரதிநிதிகளுக்கும் வந்தனம்சொல்லுகிறேன்.

இந்த உபந்நியாஸம் மிகு அவசரத்தி லெழுதப்பட்டதானதால், இதில் அவசியமான சில சங்கதிகள் வராம லிருந்தாலு மிருக்கலா மென்பதுந் தவிர, சில எழுத்துப்பிழைகளும் சேர்ந்திருக்கலாம். ஆகிலும், இது, வெகு வாய்-வெகுகாலமாய் துன்பமும்-நிந்தையு மடைந்தவர்களும், கனம்பொருந்திய அட்வோகேட்ஜெனர லாகிய The Hon. Mr. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் கண்டுபிடித்துசொல்லுகிறபடி, "an intelligent, enterprising and moral community புத்திசாலித்தனமும், முயற்சியும், நன்மார்க்கமுமுள்ள ஜாதியார்" ஆக இருப்பவர்களு மான ஒரு நல்லகுலத்தவரின் முன்னேற்றத்தைக் கருதி யெழுதப்பட்டதானதால், தமிழ்த்தேசத்தில் மிகமதிப்புப்பெற்ற மேதாவிகளி லொருவ ராகிய கனம் வி. பி. சுப்பிரமணிய முதலியாரவர்கள், "தென்றில்லைச் சான்றோர் நிச்சயமாகவும் தடுக்கமுடியாதபடியாகவே உயர்வடைவு முண்மையை மனதில் வைத்துப், பிறசாதியாருள் அறிவாளிகள், அவர்களின் முயற்சிக்கு உதவிசெய்யா ராயினும், தடையேனுஞ் செய்யாதிருத்தல் தகுதி" என்று மிகுந்த பெருந்தன்மையோடு எழுதி, திருச்சிராப்பள்ளி (Tamilian Archaeological Society) 'தமிழ புராதன ஆராய்ச்சி சங்கத்தவரால் பிரசுரமாகியிருக்கும் வசனத்தை அநுசரித்து, எனக்கு வீண்தொந்தரவையும் சிரமத்தையும் கொடுக்காதபடிக்கு, இவ்வுபந்நியாசவிஷயமாய் அருவருப்பு-கோபத்துடன் கூடிய (criticisms, reviews) கண்டனங்களும் மதிப்புரைகளும் எழுதாமல், சிநேகவிருப்பமாயுள்ள ஆலோசனைகள்மாத்திரம் கொடுக்கும்படியாக இதைவாசிக்கும் எல்லோரையும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கே பின்னால்புலப்பட்டவைகளும், மற்றவர்களால் எனக்குத் தெரிவிக்கப்படுவனவைகளு மான சீர்திருத்தங்கள், இதின் இரண்டாம்பதிப்பில் சேர்ந்துவரும்.—கனவான்கள்-மேதாவிகளின் கேட்டுக்கொள்ளுதல்படி, இதற்கு ஒரு இங்கிலீஷ் தர்ஜுமா பிரசுரிக்கவும் ஆயத்தம் செய்து வருகிறேன்.

பிரகாசபுரம்,
17—7—1918. } B. J. M. KULASEKHARA-RAJ.

A Brief Account of the Nadar Race

BY

RABBI B. J. M. KULASEKHARA-RAJ,

son of Rabbi A. N. Chattampillai-Aiya, Prakasapuram, Nazareth.

நாடார் குல வரலாறு.

திருநெல்வேலி ஜில்லா, நாசரேத்-பிரகாசபுரம், ரபி ஏ. என். சட்டம்பிள்ளை ஐயா அவர்கள் குமாரர்

ரபி B. J. M. குலசேகர ராஜ் தயாரித்தது.

கனவான்களாகிய சகோதரரே!—நம் நாடார்குலத்தவரைப் பற்றிய விசேஷங்கள் சம்ஸ்கிருத-திராவிட நூல்களிலும் சாஸனங்களிலும் இன்னும் பல ஆதாரங்களிலும் நிரம்ப இருந்தாலும், அவைகளில் பலவற்றைத் திரட்டி பல நூல்கள் இதுவரை பிரசுரமாகியிருந்தாலும், அவைகளில் முக்கியமான சில சங்கதிகளை யெடுத்து இந்தக் கான்பரென்ஸில் சுருக்கமாய்ச் சொல்லவேண்டியது அவசியமென்று பல விசேஷகனவான்களும் என்னைக் கேட்டுக்கொண்டபடியால், அவர்கள் விருப்பத்துக் கிணங்கி இந்த வியாசம் தயார்செய்து வாசிக்கிறேன்.

பூர்வ சம்ஸ்கிருத நூல்களையும், தமிழ் முதலிய தென்இந்தியபாஷைகளிலமைந்திருக்கும் நூல்களையும் ஆராயுங்கால், 'சத்தியவிரதன்' என்னப்பட்ட வைவசுவதமநுகாலத்துப் பிரளயத்துக்குப் பின், 'ஆரியாவர்த்தம்' அல்லது பஞ்ச-கௌடம் என்னப்பட்ட வடஇந்தியாவில் ஜனங்கள் வெகுதிரளாய்ப் பலுகியிருக்கும்போது, அவர்களுள் இரு வகையான கட்சிப்பிரிவுக ளுண்டானதில், நன்மையைப்பரிபாலித்தவர்கள் சுரர் என்றும், தின்மையைப்பரிபாலித்தவர்கள் அசுரர்—ராக்ஷஸர் என்றும் பேர்பெற்றார்கள். இந்த இரு கட்சியாருக்குள்ளும் அப்பால் கடூரமான யுத்தங்கள் நேரிட்டு, அதில் அசுரரும் ராக்ஷஸரும் தோல்வியடைந்து, அசுரரில் பெரும்பாலர் ஐரோப்பாவின் மேல்அந்தம்வரையுள்ள மேல்நாடுகளுக்கும், ராக்ஷதர் இந்தியாவுக்கு கிழக்கே அமெரிக்காவரையுள்ள தீவுகளுக்கும்-நாடுகளுக்கும் ஓடிப்போன பின், இந்தியாவில் மீந்தவர்களில், [illegible] பிராம்ம-க்ஷத்திரிய-வைசியராகிய 'தமிழர்' அல்லது 'ஆரியர்'

என்றும், அந்த ஆரியரால் கீழ்ப்படுத்தப்பட்ட 'தாசர்' என்னும் அசுரகட்சியார் 'சூத்திரர்' ஆகிய 'அநாரியர்' என்றும் பேர்பெற்றிருந்தார்கள். இது சங்கதி யஜுர்வேதத்தைச் சேர்ந்த தைத்திரீய ப்ராஹ்மணத்தில் (I. 2. 6, 7) தெளிவாய் நேருக்குநேரே சொல்லப்பட்டிருப்பதுந் தவிர, ருக்வேதத்திலும், "Dasam varnam sudradikam, அசுரராகிய தாசவருணத்தார் சூத்திரர் முதலான ஜாதிகளானார்கள்" (ii. 19. 6) என்றும், "Dasah karmakarah sudrakah, தாசர்கள் ஏவல்செய்கிற சூத்திரரானார்கள்" (x. 38. 3) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

முன் பிரஹ்மாவின் சந்ததியார் என்றர்த்தமாகிய [illegible]வர் என்னும் ஒரேபேருக்குள் அடங்கி ஒரேகுலத்தவரா யிருந்து, பின்னால் தங்களுடைய செய்கையினால் பிரஹ்ம-க்ஷத்ர-விஸ்ய-சூத்திர ராகிய நாலுவருணத்தா ரான மேற்கண்ட நாலுவருப்பாருக்கும் வெவ்வேறான அவ்வாறு தொழில்கள் ஏற்பட்டதில், க்ஷத்திரியருக்கு பிராஹ்மணரின் ஆறுதொழில்களில், 'ஓதல்' அதாவது அறிவுடையோராயிருந்து மற்றவர்களுக்கு அறிவையூட்டுதல், 'வேட்டல்' அதாவது கோவில்களில் புரோகித வேலைகள் நடத்துதல் முதலான மூன்று பிராஹ்மணத்தொழில்களு மன்றி, 'பெரும்பாரப் புரத்தல்' அதாவது நாடுகாலாயண்டு பிரஜைகளைப் பரிபாலித்தல், 'படையறுபடைக்கலங் கற்றல்' அதாவது ஆறு வகை ஆயுதங்கள்சம்பந்தமான அறிவுடையோரா யிருத்தல், 'விசயம்' என்ற மூன்று தனிவிசேஷ தொழில்களும் ஏற்பட்டிருந்தன. ஹிதோபதேசத்திலடங்கிய ஒரு பூர்வ சம்ஸ்கிருத சுலோகத்தில்,

"Vidya sastrasya sastrasya dve vidye pratipattaye"

"அறிவுமே சஸ்திரமாகிய ஆயுதசம்பந்தஅறிவு, சாஸ்திரமாகிய நூல்கள்சம்பந்த அறிவு, என்னும் இருவகையறிவுகள் சேர்ந்ததாக பூர்வமுதல் பிரஸ்தாபமான காரியமாயிருக்கிறது" என்றும், இன்னொரு சுலோகத்தில்,

"Vidyamso vede dhanushi cabhavan"

"வேதஅறிவிலும் வில்லறிவிலும் தேர்ந்தவர்களானார்கள்" என்றும் வருகிறபடிக்கு, வேதஅறிவு அல்லது சாஸ்திரஅறிவு என்றும், ஆயுதசம்பந்தமான அறிவு அல்லது வில்சம்பந்தமான அறிவு என்றும் இருவகையான அறிவுகள் இருந்தவர் நிமித்தம், பொதுவாய் க்ஷத்திரியரும், அதில் விசேஷமாய், பின்னால் விபரங்கண்டபடி தென் இந்தியாவுக்குக் குடியெழும்பிவந்த ஆரியராகிய க்ஷத்திரியரும் தமிழ் நூல்களில் "அறிவுடையோர்" ஆகிய "சான்றோர்" என்று பிரஸ்தாபமாய்ப் பேர்சொல்லப்பட்டிருக்கிறார்கள். (திவாகரம், 2. 11 காண்க.) இந்தவேதங்களின் பின்பாகமான உபநிஷதங்களில் பிரஸ்தாபிக்கப்படும்

விசேஷ சாஸ்திரஅறிவுக ளெல்லாம் ஆதியில் இந்த க்ஷத்திரியராகிய ராஜன்யருடையவைகளா யிருந்து, அவர்களாலேயே பின்னால் பிராமணருக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டனவாக தற்கால நூலாராய்ச்சியில் தெற்றென வெளிவந்திருக்கின்றன. அப்படியே இது விஷயமாய் ஆராய்ச்சிசெய்த பேர்பெற்ற ஒரு பண்டிதர்,

"Learning was indeed, a part of the duty of a Ksatriya, who was possessed of a higher knowledge than an ordinary Brahman, and the explanation of religious dogmas and philosophic truths ever proceeded [illegible] the mouth of a Rajanya." "நிச்சயமாகவே, அறிவுடைமை க்ஷத்திரியருடைய தொழில்களில் ஒருபாகமா யிருந்தது; க்ஷத்ரியர் சாதாரண பிராமணரைவிட உயர்தர அறிவுடையோரா யிருந்தார்கள்; மதகொள்கைகள்சம்பந்தமான வியாக்கியானங்களும், தர்க்கசாஸ்திர தத்துவங்களும் எப்போதும் ராஜன்யரின் வாக்கின் மூலமாகவே கிடைக்கக்கூடியவைகளா யிருந்தன"

என்றெழுதுகிறார். இந்துதேசசரித்திரஆராய்ச்சியில் மிகவும் பேர்பெற்றவர்களில் ஒருவரான (J. T. Wheeler Esq.) உவீலர்துரை, "In the Vedic period the Ksatriyas were their own priests" "வேதங்கள் எழுதப்பட்ட காலத்தில் க்ஷத்திரியஜாதியார் தாங்களே புரோகிதர்களாகவு மிருந்தார்கள்" என்று சொல்லுகிறபடிக்கு, பின்னால் பிராமணர்செய்த புரோஹிதத்தொழிலுமே ஆதியில் க்ஷத்திரியருடையதா யிருந்ததென் றறியலாம்.

இந்த க்ஷத்ரியரின் விசேஷமுன்னவர்களில் சிரேஷ்டமானவர், நவப்பிரஜாபதிகளில் ஒருவரான அத்திரிமஹாரிஷியின் புத்திரரும், சிலசமயங்களில் "பிராஹ்மணரின்ராஜா" என்றும், சிலசமயங்களில் "க்ஷத்திரியன்" அல்லது "ராஜன்" என்றும் சொல்லப்பட்டவரும், அசுரருக்குவிரோதமாய் யுத்தம்பண்ணின பெரிய சேனாபதிகளி லொருவரு மாகிய சந்திரன் ஆவர். இவருடைய பேரடியாய், க்ஷத்திரியஜாதி மொத்தமுமே 'ராஜன்யர்,' 'ராஜபுத்திரர்,' 'ராஜவம்ஸியர்' எனப் பேர்பெற்றிருக்கிறார்கள்.

மேற்சொன்ன ராஜ ஜாதியார் அல்லது வருணத்தாராகப் பேர்பெற்ற இவர்கள், ஆரியவர்த்தத்தில் பலுகியிருந்தவுடனே, அவர்களுள் மேற்கண்ட சந்திரனின் பௌத்திரனான சாந்த்ரன் அல்லது ஐலன் (ஏலன்) என்னப்பட்டவரும், வேதங்களில் ஆரியன் என்று பிரஸ்தாபிக்கப்பட்டவரு மாகிய புரூரவச் சக்கரவர்த்தியின் பரம்பரையி லுதித்த யயாதிசக்கரவர்த்தியின் இந்து குமாரராகிய யது, துர்வசு ஆகிய துர்வன், த்ருஹ்யு, அனு, புரு என்னும் இந்த ஐனத்தலைவருக்குள் இந்தியாவின் ஜனங்கள் பூராவும் (முறையே யாதவர், தௌர்வசர் அல்லது தௌர்வர், த்ரௌஹியர், ஆனவர், பௌரவர் என்னும் நாமதேயத்துடன்) அடங்கிவிட்டார்கள். அப்படி, ஏவல்வேலைக்காரராகிய மேற்

கண்ட சூத்திரரும் உள்பட்ட பூரா ஆரியஜனங்களும், ருக்வேதம் முதலிய வெகு பூர்வ சம்ஸ்கிருத ஆதாரங்களில், "Panca janah, ஐந்து ஜாதியார்"(ருக்வே. i. 89. 10), "Panca carshani, ஐந்து குலத்தார்" (ருக்வே. vii. 15. 2), அல்லது "Panca manavah, Panca manushah, ஐந்துபிரிவான மநுசர்"(ருக்வே. xii. 1. 5; viii. 9. 2) முதலான வகையாய் அடிக்கடி பேர்சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இப்படியிருக்கும்போது, இந்தியாவின் தென்பாக மாகிய விந்தியகிரிக்குத் தெற்கேயுள்ள 'தக்ஷிணாவர்த்தம்' என்னப்பட்ட பஞ்ச திராவிடதேச மானது சாராதினம் குடியேற்ற மில்லாமல், இலங்கைவழியாய்க் கிழக்கே சென்றுகொண்டிருந்த ராக்ஷதக்கூட்டியாரின் நடமாட்டத்துக்குள் ளாகிக்கொண்டிருந்ததால், அங்கே அவர்கள்தொந்தரவை நீக்கி சுதஜனங்களின் குடியிருப்பை ஸ்தாபிக்கும்படியாக, மேற்கண்ட இந்துவம்ச ஆதினத்து ஜனக்கூட்டத்தாரில், (அதிவீரராமபாண்டியர் தமிழில் செய்த) கூர்ம்புராணம்-பூர்வகாண்டத்தில், "தென்றிக்கினிற் றென்னனுகெனத் தருவசுவா மன்னர்மன்னவன் மணிமுடிபுனைந்து" என்று சரித்திரம் குறிப்பிடப்பட்டிருக்கிறபடிக்கு, துர்வஸ் (தர்வசு) வகைச் சனக்கூட்டத்தார், அகஸ்தியர் என்னும் பேர்பெற்றயக்ஞமுனி வழிகாட்டியபடி, ஆரியவர்த்தத்தைவிட்டுப் புறப்பட்டு, க்ஷத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர் ஆகிய நாலுஜாதிகளும் உள்பட, "அரசர்க்கு மூவகையில் பதினெண் கிளைவகைச"ளாய் (திவாகரம், 12. 164) 18 கோடி ஜனங்களாக வந்து குடியேறினார்கள். இந்தக் குடியேற்றக்காலத்தில், பின்னால் 'தமிழரசர்' என்னப்பட்டவர்களும், மேற்கண்ட துர்வராஜாவின் நேரான சந்ததியாருமான பாண்டியர், சேரர், சோளர், கர்நாடர் என்னும் ராஜபுத்திரர் இந்தக் குடியேற்றத்தின் தலைமை ராஜாக்களாக வந்திருக்கிறார்கள்.

[பூர்வ பெர்ஷியர், அசீரியர், பாபிலோனியர், துருக்கர், எபிரேயர், அராமியர், அராபியர், எகிப்தியர், ஆப்பிரிக்காவின் காப்பிரிகள், கிரேக்கர், லத்தீனர், (Teutons) தெவுத்தனியர், (Kelts) கெல்த்தர், (Slavs) சிலாவர் முதலிய மேற்றிசையாரும், வடக்கேயிருக்கும் சீனர், ஜப்பானியர் முதலானவர்களும், சிலோன்தீவின் பழயகுடிக ளாகிய இயக்கர், (Javanese) யாவகர், (Malays) மலாயர், கிழக்கே அமெரிக்காவரையுள்ள தீவுகளுக்கு சிதறிப்போய் பொதுவாய் (Negroes) 'நீகிரோவர்' என்று பேர்சொல்லப்படுபவர்கள் ஆகிய கிழக்கித்தியரும் ஆன ஜனலோகத்தின் சகல ஜனங்களும்; ஆதியாய் ஆரியாவர்த்தத்தின் இமயமலைச்சாரலி லிருந்தே குடிபெயர்ந்துபோனவர்க ளென்று, (Geology) பூதத்துவசாஸ்திரம், உலகத்தில் சகலதேசங்களின்பூர்வசரித்திரம், (Ethnology) ஜனங்களின் வழக்கவழக்கம், (Philology) பாஷாசாஸ்திரம், இந்தியாவின் பூர்வ நூல்க ளாகிய சுருதி-ஸ்மிருதிகள், அசீரிய-எகிப்து முதலிய தேசங்களின் பூதயங்களிலிருந்து அதனமாய் வெளிவந்துகொண்டிருக்கும் ஏராளமான புராதனரிக்கார்டுகள், சீனர்-எபிரேயர்-அரபியர்-கிரேக்கர் முதலானவர்களின் பூர்வ சரித்திரப்புஸ்தகங்கள் முதலானவைகள் மூலமாய் ருஜுவாத்துலங்கி நான் இங்கிலீஷில் தயாரித்திருக்கிற புஸ்தகத்தில் இந்தச்சரித்திரம் சவிஸ்தாரமாய்த் தெரியவரும்.]

மேலே விவரங்கண்டபடி, விசேஷமாய் சந்திரனின்சம்பந்த மாகவே க்ஷத்திரியஜாதியின் பேர்கள் பிறந்திருக்கிறபடிக்கு, தமிழ்நாட்டில் குடியேற்ற முக்கியஸ்தராக வந்த தமிழ்க்ஷத்திரியரின் பேர், சந்த்ரவம்சத்தான் அல்லது சந்திரனின் பௌத்திரன் என்ற அர்த்தமாய் 'Chandrah சாந்த்ரன்' என்னப்பட்டவனும், சூரியன் என்று வேதங்களில் துலங்கியவனு மான ஈளன் (ஐளன்) என்ற புரூரவசக்கரவர்த்தியின் வம்சத்தவர் என்னும் அர்த்தமாய் 'Chandrah சாந்த்ரார்'என்றான அந்தப் பதம் திரிந்து, தமிழில் சான்றார் அல்லது சான்றோர் என்றும், சிலவேளை 'ஈளகுலச் சான்றோர்' என்றும் வழங்கியிருக்கிறது. திவாகரத்தில் "சான்றோன்" என்பது சூரியன்பேராகச் சொல்லப்படுவது (திவா. i. 55) புரூரவனுகிய சூரியன்தான். சூரியன் என்பதுக்கு சம்ஸ்கிருதத்தில் 'Saksi ஸாக்ஷி' என்ற பதமும் வழங்கியிருப்பதாக அமரகோஷம், ஹலாயுதம் முதலிய நிகண்டுகளால் துலங்குகிறது. அப்படியே, 63 சிவதொண்டர்களில் ஒருவரான ஏனாதிநாதநாயனார் மேற்கண்ட ஈளன் அல்லது புரூரவன் ஆகிய சூரியனின் குலத்தில் பிறந்தவராக, அவருடைய சரித்திரம்சொல்லும் தமிழ்நூலாகிய பெரியபுராணத்தில், 'ஈளகுலச் சான்றார்' என்று சொல்லப்பட்டிருக்கிறபடிக்கு, அந்தச் சரித்திரம்சொல்லும் சம்ஸ்கிருதநூலாகிய 'பக்தவிலாசம்' என்னும்பக்தமாஹாத்மியத்தில், அவரை "Saksi kulotbhavah ஸாக்ஷிகுலோத்பவ:" அதாவது 'ஸாக்ஷிகுலத்தில் உற்பவித்தவர்' என்று சொல்லியிருக்கிறது. ஈளன் (ஐளன்) என்ற புரூரவன் பேர், பூமி, நாடு என் றர்த்தமாகிற அவனுடைய தாயின் பேராகிய இளா அல்லது ஏளா என்னும் பதத்திலிருந்து பிறந்த தானதால், 'ஈளகுலம்' என்றால் பொதுவாய் 'நாடாக்கள்வம்சம்' என்றும் அர்த்தமாவதாயிருக்கிறது. க்ஷத்திரியர் என்ற நாடாளும்ஜாதியின் பேர், வேதங்கள் முதலிய வெகுபூர்வ சம்ஸ்கிருதநூல்களில் (Ksattrah) க்ஷத்ரர், (Ksattrah) க்ஷாத்ரார் என்றே வழங்கியிருக்கிறது. 'க்ஷத்ரர்' என்ற இந்தப் பதம் ரகுவம்சத்தின் ஒரு சுலோகத்தில் மூலார்த்தம்பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிற படிக்கு, 'வெட்டுதல்' என் றர்த்தமாகிற 'ksad க்ஷத்' என்னும் வினைப்பதத்திலிருந்து பிறக்காமல், 'நாடு, பூமி' என் றர்த்தமாகிற 'ksattra க்ஷத்ர' என்னும் பெயர்ப்பதத்தி லிருந்து பிறந்ததாக, சமஸ்கிருதபாஷையிலும் நூலாராய்ச்சியிலும் நிரம்பவும் நிபுணராய் உலகெங்கும் பிரக்கியாதிபெற்ற (Dr. J. Muir) டாக்டர் மூயிர் துரையால் துலக்கப்பட்டு, பின்னான மற்றும் நிபுணர்களாலும் ஒப்பப்பட் டிருக்கிறது.

சந்திரராஜாவே இந்தியாவில் முதல்க்ஷத்திரியனாயிருந்தார் என்று ப்ருஹத் ஆரண்யகத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கு, அவ்வகை க்ஷத்திரியராய் தமிழ்த்தேசத்தில்வந்து குடியமர்ந்தவர்களுக்கு வழங்கியிருக்கும் மேற்கண்ட சான்றார் அல்லது சான்றோர் என்னும் பேர், அவர்களுக்கு ஆதியாய் வழங்கிய நாமமாகிய Ksattrah க்ஷாத்ரார் (சாத்ரார்) என்னும் பதமே இடையில் 'ன்' என்னும் (nasal) இடையினஒற்றுச் சேர்ந்து மெலித்தலானதிரிபாகவும் தெரிகிறது. சம்ஸ்கிருதத்தில் 'Pottri போத்ரீ' (a hog, boar) என்றிருக்கும் பதம் தமிழில் 'பன்றி' என்றும், 'Attra அத்ர' (then, at that time) என்ற பதம் 'அன்று' என்றும், 'Yattra யத்ர' (when, *rel.*) என்பது 'என்று' என்றும், 'Dhattri தாத்ரி' (a tree) என்பது 'தான்றி' என்றும், சம்ஸ்கிருதத்திலேயே 'Attika அத்திகா' (elder sister) என்பது 'Antika அந்திகா' என்றும், 'Satata ஸதத' (eternal, perpetual) என்பது 'Santata ஸந்தத' என்றும், 'Kuth குத்' (to be distressed, to suffer pain) என்பது 'Kunth குந்த்' என்றும், 'Grath க்ரத்' (to tie, to connect) என்பது 'Granth க்ரந்த்' என்றும், 'Math மத்' (to stir, to kill) என்பது 'Manth மந்த்' என்றும், தமிழிலுமே 'வித்து' என்பது 'விந்து' என்றும், 'தோற்று' என்பது 'தோன்று' என்றும் மெலித்து திரிந்து வழங்கியிருப்பவைகளை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். சான்றார் என்னும் இந்தப்பேருக்கொப்பாக, பிராமணர்பேராக தமிழில் வழங்கியிருக்கும் பார்ப்பார், பாப்பார் அல்லது பாப்பு என்னும் வார்த்தையும், 'பிராஹ்மணர்' என்ற பதத்தின் மூலவடிவமாக பூர்வசம்ஸ்கிருத நூல்களில் வழங்கியிருக்கும் 'Brahmah ப்ராஹ்மா' அல்லது 'Brahmah ப்ராஹ்மா' என்னும்பதத்தின் மருஉவேயன்றி வேறல்ல. இதே பதம் சிங்களத்தில் (Bamu) பாமு எனத் திரிந்துநிற்கிறது.

[தக்ஷிணாவர்த்தத்தில் வந்து குடியமர்ந்த பிரஹ்ம-க்ஷத்திர-வைசிய-சூத்திரர்கிய, பாஷையியற்கைப்படி ஆரியரான மேற்கண்ட 18 கோடி ஜனங்களும் பேசிய சம்ஸ்கிருதபாஷையானது, வங்காளி, நேபாலி, இந்துவி முதலிய ஆரியவர்த்தத்துப் பிராகிருதங்களுக்கொப்ப, இவ்விடத்தில் தமிழ், கர்நாடகம், தெலுங்கு முதலான பிராகிருதங்களாக கால்டிவெல் லான திரிபுகளுடன் அமைந்திருக்கிறதென்று ருஜுப்பிக்கிற (Historical Grammar and Lexicon) சரித்திரநூலுக்கும் வியாக்கரணமும் அபிதானமும், நான் கடந்த 25 வருஷங்களாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். சம்ஸ்கிருதத்திற்கு விகற்பமான சுத்தத்தமிழ் வார்த்தைகள் என்று தென்இந்தியாவின் பாஷைஆராய்ச்சி விஷயமாய் நிபுணத்வம்பெற்றவர்களாயெண்ணப்படும் சாஸ்திரிகள் குறிப்பிடுகிற சகல தமிழ்வார்த்தைகளுக்கும் யாவரும்ஒப்பக்கூடியதான சம்ஸ்கிருதமூலங்கள் அதில் நூலக்கியிருக்கிறேன். அந்தப்படி, பாஷைசம்பந்தமாய், இவ்விடமுள்ள பிராமணவகுப்பார் ஆரியாவர்த்தரானாயின், இவ்விடம் அடிமைஜாதிகள்

வரையுள்ள பிராமணரல்லாத சகல இதரஜாதிகளும் ஆரியரே; ஆக்க இதரஜாதிகள் பாஷைசம்பந்தமாய் திராவிடராகில், இவ்விடமுள்ள பிராமணரும் திராவிடரே. Dravidam த்ராவிடம் என்பது Dramilam த்ரமிளம் என்றே சம்ஸ்கிருதத்தில் அதிசாதாரணமாயிருக்கிறது. அது ஆரியாவர்த்தத்திலிருந்து ஆதியாய்க் குடியமரும்பிவந்த தலைமைக்கூட்டத்தாரின் பேராயிருந்து, அப்பால் அவர்கள்குடியேறின தேசத்தின் பேரும், அதின்பின்னால் அவர்கள்வகையாய்த் திரிபடைந்த ஒரு தனிப்பாஷைபோல் தோற்றும் சம்ஸ்கிருதபாஷையின்பேருமாயிற்று. 'க்ரமுக' என்ற சம்ஸ்கிருதவார்த்தை தமிழில் 'கமுகு' என்றும், 'ப்ரவாளம்' என்பது 'பவளம்' என்றும், 'ப்ரதிமா' 'படிமம்' என்றும், 'ப்ரக்ருதி' என்பது 'பகுதி' என்றும் திரிந்திருப்பது போல, இந்த 'Dramila த்ரமிள' என்ற பதமும் பாலிப்பிராகிருதத்தில் 'Damila தமிள' என்றும், இவ்விடத்தில் 'தமிள்-தமிழ்' என்றும் மருவியிருக்கிறது.]

மேலே விவரங்கண்டபடி பிராமணருக்கும் உரிய தொழிலாகிய "ஓதல்" என்னும் சாஸ்திரஅறிவும் க்ஷத்திரியருக்குமாத்திரம் உரியதாகிய "கையறு படைக்கலங்கற்றல்" என்னும் ஆயுதஅறிவும் ஆகிய இருவகையான அறிவுடைமையும் இந்தச் சான்றோருடைய விசேஷ தொழில்களாயிருந்ததால், வெகு பூர்வ தமிழ்நிகண்டாகிய திவாகரத்தில், இவர்கள்பேர் 'அறிவுடையோர்' என்றிருப்பதுமாத்திரமல்ல, பிராமணர்பேருக்கும் க்ஷத்திரியஜாதியில் அரசாட்சிப்பட்டத்துக்குவரும் குடும்பத்தினருக்குமாத்திரம்உரிய பேராகிய 'அரசர்' என்னும் பேருக்கும் இடையிலும் அது வைக்கப்பட்டிருக்கிறது. பிராமணரும் க்ஷத்திரியரும் ஆதியில் ஒரேஜாதியாயிருந்தார்களென்றும், விஷ்ணுபுராணத்தை ஆராயுங்கால், 'க்ஷத்திரியப்பிராமணர்' என்பதாக, ஒரேகுடும்பத்திலிருந்தே, சிலர் பிராமணரென்றும் சிலர் க்ஷத்திரியரென்றும் வெளியேறியிருப்பதாகவும், பிராமணப்பெண்கள் சாதாரணமாய் க்ஷத்திரியபுருஷருக்கு வாழ்க்கைப்பட்டிருப்பதாகவும் நூலகுவதாக, 1851-ம்வருஷத்தில் (Rev. W. Clarkson) கிளார்க்ஸன் என்றும் துரை எழுதியிருக்கிறபடிக்கு, இந்த சான்றோரை 'க்ஷத்திரியப்பிராமணர்' அல்லது 'பிராமணக்ஷத்திரியர்' என்றே சொல்லவேண்டியதிருக்கிறது. தொல்காப்பியம்-பொருளதிகாரத்திலும்,

"அந்தணாளர்க் குரியவுமரசர்க்
கொன்றியவருஉம் பொருளுமா ருளவே"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியரும் பிராமணரும் ஏகசம்பந்தமுடையோராயிருந்ததற்கு இன்னும் வெறுபலஆதாரங்களுமிருக்கின்றன.

நாடார்குலத்தவரில் குருத்துவ-புரோகித வேலைகள் செய்கிற பிரிவார் ஜாதிப்பேரால் சான்றோர் என்றும், பட்டப்பேரால் நாயர் என்றும் அறியப்

பட்டவர்க ளாக திருச்செந்தூர்தாலூகா படுக்கப்பத்து, கோட்டகத்தி, தண்டுப்பத்து, சாத்தன்குளம், வேப்பங்காடு, கச்சிகுவிளை, காஞ்சிருட்டைச்சேர்ந்த பேயோடு, அம்பாசமுத்திரம்தாலூகா கடையம், குரும்பில்லாப்பேரி, கோவில்பட்டிதாலூகா ஈரால், புங்கவர்நத்தம் முதலிய இடங்களில் நாளதுவரை யிருந்து வருகிறார்கள். அரசகுலத்தவன் என்றும் சொல்லப்பட்ட 'கவிச்சக்கரவர்த்தி' யாகிய கம்பநாடான், நாடார்குலத்தவ ரென்பது சந்தேகமற்ற காரியமா யிருப்பது போக, தொல்காப்பியம்-சொல்லதிகாரம் உரையாசிரிய ராகிய சேனாவிரையர் என்னும் 'சேனாவரையர்,' திருக்குறளின் பேர்பெற்ற உரையாசிரிய ராகிய பரிமேலழகர் முதலான விசேஷ தமிழாசிரியர்கள், இந்த பிராமணச் சான்றோரின்வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் சந்தேகமற்ற விஷயம். (தமிழ்ப்பாஷையில் வெகுபூர்வமுதல் நாளதுவரையும் இதிகாச மாகவும் மற்றும் செய்யுட்களாகவும் இலக்கியநூல்க ளியற்றியவர்களாகத் துலங்கும் நாடார்குல வித்வான்கள் ஏராளமாயுண்டு. அவர்கள் பேரையும் சரித்திரத்தையும் துலக்கி யெழுதுவதா யிருந்தால் அது ஒரு தனிப்புஸ்தகமாகும்.)

தென்இந்தியக் குடியேற்றத்தலைவர்க ளாகிய சந்திரவம்சத் துதித்த 'தமிழ் நாடர்' என்னப்பட்ட பாண்டியர், 'புனநாடர்' என்னப்பட்ட சோளர், 'மலை நாடர்' என்னப்பட்ட சேரர் முதலானோர், ஆரியகுலத்தவரான திராவிடச்சத்திரியர் என்பதை அநேக பாஷாசாஸ்திரிகளும் சரித்திரஆராய்ச்சிநிபுணர்களும் ஒப்பியே யெழுதியிருக்கிறார்கள். பாண்டியராஜாக்கள் கொற்கையாகிய கபாடத்திலும், மதுரையிலும் தமிழ்ச்சங்கங்கள்நடத்தின முந்தியகாலத்தில் அச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட 'குறுந்தொகை,' 'ஐங்குறுநூறு,' 'கலித்தொகை,' 'அகநானூறு,' 'புறநானூறு,' 'ஐந்திணையைம்பது,' 'திணைமாலை நூற்றைம்பது,' 'முத்தொள்ளாயிரம்,' 'பத்துப்பாட்டு,' 'பழமொழி,' 'நாலடியார்' முதலிய பழய இலக்கியங்களிலும், 'தேவாரம்,' 'திருவாசகம்,' 'நைடதம்,' 'நள வெண்பா,' 'திருவிளையாடல்' முதலிய நூல்களிலும், நாடன், நாடான், நாடவன் என்னும் பேர்கள், பாண்டியர் முதலிய ராஜாக்களின் சாதாரணப் பட்டப் பேர்களாக நூற்றுக்கணக்கான பாட்டுகளில் வழங்கியிருக்கின்றன. அப்படியே சோளருக்கு நாடன்-நாடான் என்று பேர்வழங்கிய தமிழ்நூல்களும் அநேகமா யிருக்கின்றன. நாடு என்றால் 'ராச்சியம்' என்றும், அதிலிருந்துபிறந்த நாடர், நாடார் முதலிய பதங்கள் 'நாடாளும் ராஜாக்கள்' என்று அர்த்தமாகிறதென்றும், நாடன், நாடான், நாடவன் முதலிய பதங்கள், சோளர், பாண்டியர் முதலான தமிழரசரின் பட்டப்பேர்களாக வழங்கியிருக்கிற தென்றும், பூர்வ தமிழபிதானங்களில் வருவதை அனுசரித்து, (Dr. Rottler) டாக்டர் ராட்லர், (Dr. Caldwell) டாக்டர் கால்டுவெல், (Dr. Pope) டாக்டர் போப், (Dr. Winslow) டாக்டர் உவின்ஸ்லோ, (Prof. Wilson) புரொபெஸர்

உவில்ஸன், புதுச்சேரியில் அச்சான தமிழ்-பிரெஞ்சு அகராதிகளின் ஆசிரியர்கள், தரங்கம்பாடியி லச்சான தமிழ்-இங்கிலீஷ் அகராதியின் ஆசிரியர், யாழ்ப்பாணம் தமிழகராதிகளின் ஆசிரியர்கள் முதலான பிரஸ்தாப ஐரோப்பிய-திராவிட பாஷாசாஸ்திரிகள் ஒப்புக்கொண் டெழுதியிருக்கிறார்கள்.

பாண்டியராஜாக்கள் தங்கள் ராச்சியம் மொத்தத்தையுமே 'நாடு'-'நாடு' என்னும் பேர்கொண்ட ஜமீன்களாகப் பிரித்து ஆண்டுவந்ததால், அவைகளின் தலைவரான பாண்டியவம்சத்தாருக்கு 'நாடர்' ('நாடார்') அல்லது 'நாடாள்வார்' என்பது சகஜமான பேராயிற்று. இதைப்பற்றி 1820-ம் வருஷத்தளவில் திருநெல்வேலிஜில்லாவில் கவர்ன்மென்றுத்தரப்பு ஸர்வேயரா யிருந்தவ ராகிய, (Thomas Turnbull Esq.) தாமஸ் தர்ன்புள்துரை, திருநெல்வேலிஜில்லாவின் விவரமாய் கவர்ன்மென்றுக்காகத் தயாரித்த புஸ்தகத்தில் சொல்லியிருப்ப தாவது:—"In times of remote antiquity this Province (Tiranelveli) formed part of the great Pandian Dynasty, the capital of which was Maddra; and was divided into Principalities and States, denominated Naads [நாடு] governed by a noble race of Chetric [Ksatriya] princes." "வெகுபூர்வ காலத்தில் இந்த திருநெல்வேலிச்சீமை யானது, மஹா பாண்டியராச்சியத்தின் ஒரு பாகமாகவும், அதின் தலைநகரி மதுரை யாகவும் அமைந்திருந்தது. அந்த ராச்சியம் நாடு-நாடு என்னும் பேர்களா லறியப்பட்ட மாகாணங்க ளாகவும் சிற்றரசுக ளாகவும் பிரிக்கப்பட்டு, மேன்மைபொருந்திய க்ஷத்திரியகுலப் பிரபுக்களால் ஆளப்பட்டு வந்தது" என்பதே. அப்படியே, 1897-ல் பிரசுரமான தரங்கம்பாடி தமிழ்-இங்கிலீஷ் அகராதியில், "நாடன்" என்றால் "an epithet of Pandya kings" "பாண்டியராஜாக்களின் பட்டப்பெயர்" எனக் கண்டிருக்கிறது. உதாரணமாக,

பாண்டியதேசத்தில் மேற்கண்டபடி நாடு-நாடுகளாகப் பிரிந்த சிற்றரசுகளில் ஒன்றாகிய திருவழுதி(வள)நாட்டின் தலைநகரியாயிருந்த 'குருகூர்' என்னும் ஆள்வார்திருநகரியில் வைஷ்ணவர்களால் பூஜிக்கப்படும் நாடாள்வார் (•ஆள்வார்-ஆழ்வார்) என்ற நம்மாழ்வார் அல்லது திருவழுதி நாடான் என்னும் பாண்டியனுக்கு, 'நாடான்,' 'நாடன்' என்பது சாதாரணப் பட்டப்பேராக நூல்களிலும் சாசனங்களிலும் வழங்கியிருக்கிறது. 'திருவாய்மொழி' என்னும் திராவிட வேதத்திலுமே இவர்பேர் நாடன்என்று வருகிறது. இந்தத் திருவழுதிநாடாரின்கோனசந்ததியார், நாளதுவரை ஸ்ரீவைகுண்டம்தாலூகா-நட்டாத்தியையாண்டவரும், டாக்டர் கால்டுவெல் துரை, ஸர் ஸ்வோர்ட் பிரபு முதலானோரால் நாடார்குலஜமீன்தார் என்று சொல்லப்பட்டிருப்பவரு மான நட்டாத்தி திரு

வழுதிநாடார் என்னும் வைகுண்டநாடார். இம்மான்வாருக்குள் ளிருந்த 'மதுரகவி' என்னும் கவிவாணர் வான்முறை இந்த ஜமீன்தாரின் ஆதரணைக்குள் ளிருந்துவருகிறது.

கி. பி. 12-ம் நூற்றாண்டளவில் பாண்டியதேசத்தில் பராக்கிரமபாண்டியனுக்கும் அவன் சொக்காரனை குலசேகரபாண்டியனுக்கும் ராஜபட்ட விஷயமாய் விவாதம்சேர்ந்த போது, பராக்கிரமபாண்டியனுக்கு உதவிசெய்யவந்த 1-ம் பராக்கிரமபாகு என்னும் இலங்கைராஜாவோடு யுத்தஞ்செய்த குலசேகரபாண்டியனின் சேனாவீரர், "வீரகங்க நாடாள்வார்," "தலவண்டிய நாடாள்வார்," "அளத்தூரு நாடாள்வார்," "அளத்தூரு நாடாள்," "அஞ்சுகோட்டை நாடாள்வார்," "காங்கய நாடாள்வார்," "புங்குண்ட நாடாள்வார்" முதலான பேர்களையுடையோரா யிருந்ததாக, பௌத்தமதத்தாரின் மதசம்பந்தநூல்களையைப் பெற்று பௌத்தரால் விசேஷித்து மதிக்கப்படுவதும், காளதில் பேச்சுப்பாஷையில்லாததுமான பாலி என்னும் பிராகிருதபாஷையில் வெகுகாலத்துக்குமுன் எழுதப்பெற்ற 'மஹாவம்ஸோ' என்னும் இலங்கைதேச நானாகமப்புஸ்தகம் 76-ம், 77-ம் அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் தென்பாகத்தி லிருந்து கி. மு. 500-ம் வருஷத்தளவில் வெளியேறி (Indo-Chinese Peninsula) இந்து-சீன தீபகல்பதேசங்களில் போயமர்ந்து அவ்விடம் சுதேசஜனங்களுடன் கலந்து நாளதுவரை அவ்விடத்தில் அரசாளும்ஜாதியோரா யிருப்பதாகச் சொல்லப்படுபவர்களுக்குள், (Burmese) வர்மர், (Laos or Lawas) [ஈ]ழவர், (Thi or Tiam) தீயர், தேயர், Shans சாணர் என விசேஷமா யிருந்துவரும் ஜாதிவகுப்புப் பேர்கள், முறையே தென்இந்தியாவில் தங்களை அரசகுலத்தவரென்று சொல்லிவருகிற 'வர்மா' பட்டமுடைய மலையாளம்க்ஷத்திரியர், ஈழர்-ஈழவர், தீயர், சாணார் என்னும் மலையாளஜாதிகளின் பேர்களாகவே யிருக்கலா மென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலே பேர்சொன்ன இந்து-சீன ஜாதிகளிற் பலர், உண்மை, சொல்லுறுதி, தீரம், மானவீரம் முதலிய ஸத்குணங்களில் ரொம்ப விசேஷமுள்ளவர்களென, 1807-ல் (J. Pinkerton) பிங்கர்ட்டன் என்னும் துரை எழுதியிருக்கிறார். (Siamese) சீயபாஷை யெழுத்துக்கு மூலமான (Cambodian) காம்போஜபாஷையின் லிபிகள், கி. மு. 6-ம், 8-ம் நூற்றாண்டுகள் வரை தென்இந்தியாவில் வழங்கிய (Cave characters) குகையெழுத்துகளி லிருந்து பிறந்ததாக நாளது (palæographists) முதுலிபிசாஸ்திரிகளால் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. மேலேபேர்கண்ட (Laos) (ஈ)ழவஜாதியார் சீயம்தேசத்தாருக்கு பனையோலையில் எழுதும் வழக்கத்தை கற்றுக்கொடுத்தவர்களாகவும் சொல்லப்படுகிறார்கள். (Upper Burma) வர்மா தேசத்தின் [illegible]ரசரும், (Shan) சாணர்குலத்தவருமாகிய தீபா என்பவர், தம்குலம்

க்ஷத்திரியஜாதியைச்சேர்ந்ததெனச் சொல்லிவந்ததாக, இந்துதேசசரித்திரம் எழுதியவிஷயமாய் மிகவும் கீர்த்திபெற்ற ஆசிரியர்களி லொருவராகிய (J. T. Wheeler Esq.) உவீலர்துரை எழுதியிருக்கிறார். தென்இந்தியஜனங்களுக்கும் இந்து-சீனதீபகல்பஜனங்களுக்கும் முற்காலத்தில் போக்குவரத்துப்புழக்கமிருந்த சங்கதியை ருஜுப்பிக்கிற ஒரேகாரியத்துக்காக மேற்கண்ட சங்கதிகளை இங் கெடுத்துச்சொல்கிறேன். அந்தப்படி, கி. பி. 8-ம் நூற்றாண்டளவில் இவ்விடம் தமிழ்த்தேசத்தின் கீழ்பாகத்தி லிருந்து (க்ஷத்திரியராகிய) சான்றோர்குலத்தவர் எழும்பி, "Tsandra dynasty, Chandra dynasty or Chandra race, சான்றார ராஜவம்சம் அல்லது சான்றார் குலம்" என்னும் நாமமாய், ஷை இந்து-சீனதேசத்து (Arakan) அரக்கன் நாட்டில் (Wet ali) வேதாளி என்னும் இடத்தை தலைநகரியாய் வைத்து, கி. பி. 788 முதல் 957 வரை அரசாண்டார்களென்றும், அக் காலத்தில் அவர்கள் அவ்விடத்தில் சிவமதஅடையாளங்களுடன் போட்ட காசுகள்; அக் காலத்தில் தமிழ்த்தேசத்தி லரசாண்ட சோளராஜாக்களின் காசுகளுக்கு ஒத்துமையா யிருக்கின்றனவென்றும், பர்மா, இந்தியா முதலிய தேசங்களின் சரித்திரஆராய்ச்சி நிபுணர்களாகிய (Lieut.-Gen. Sir Arthur Phayre) வர் பேயர்பிரபுவும், (Sir Walter Elliot, K. C. S. I., LL. D., F. R. S.) வர் எல்லியட்பிரபுவும் எழுதியிருக்கிறார்கள். மேலும் இந்த சான்றார்குலத்தவர் சோழராஜவம்சத்தினரே யென்றும் ஷை எல்லியட்பிரபு சொல்லுகிறார்.

கிறிஸ்தாப்தத்துக்கு முன்னான வெகுபூர்வ கால முதல் கி. பி. 600-ல் சளுக்கியனான கீர்த்திவர்மசக்கரவர்த்தியால் ஜெயிக்கப்படும் வரை இடமாகவும், அப்பால் கி. பி. 1336-வரை சில்லறை யாசகம், மைசூரின் மேல்பாகத்திலும், நாளது வட கன்னடம்ஜில்லா வான (Hanga) ஹங்கநாட்டிலும், தென் கன்னடம்ஜில்லா வான துளுவநாட்டிலும், (ஷை வட கன்னடம்ஜில்லா வில் வனவாசி தாலுகாவி லுள்ள) பின்னும் 'வைஜயந்தி' என்னப்பட்ட (Banavasi) வனவாசியைத் தலைநகரியாய்வைத்து ஆண்ட ஆரியக்ஷத்திரியராகச் சொல்லப்படுபவர்களும், கர்நாட-துளுவ-குடகபாஷைகள் பேசியவர்களுமாகிய (Kadambas) கதம்ப ராஜகுலத்தவரும், பின்னும் மேல்கடற்கரை யோரமான (Goa) கோவையி லாண்ட காதம்பரும், மைசூரைச்சேர்ந்த (Darwad) தார்வாட் ஜில்லா (Hangal) ஹாங்கல் என்னும் இடத்தி லாண்ட கதம்ப ராஜவம்சத்தவரும், சான்றோர் ஆகிய நாடார்குலத்தைச்சேர்ந்தவர்களென்று, மைசூர் ராஜ்ஜியத்தில் புராதனஆராய்ச்சிசெய்தவிஷயமாய் உலகெங்கும் கீர்த்திபெற்ற (B. L. Rice Esq., C. I. E., M. R. A. S.) ரைஸ்துரையும், கர்நாடகதேச சரித்திரஆராய்ச்சியில் நிபுணரான (J.F. Fleet Esq., Bo.C. S., M. R. A. S.) பிளீட்துரையும், சென்னைராஜதானியின் ஜனவிவரண விஷயமாய் விசேஷ

ஆராய்ச்சிசெய்த சண்யம்பொருந்திய உத்தியோகஸ்தராகிய (Sir H. A. Stuart, C. I. E., I. C. S., M. R. A. S.) ஸர் ஸ்டூவர்ட்பிரபுவும் எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் கதம்பராஜாக்களின் பின்னடியாராக மேற்கண்ட மைசூர்தேசத்திற்கும் சோளநாட்டுக்கும் இடையிலுள்ள நாட்டி லாண்ட ராஜகுலத்தாருக்கு ஈழநாடர் என்று பேர். அந் நாட்டில் வான்முறையா யாண்ட அந்த க்ஷத்திரிய ராஜாக்கள் ஈழநாடன் என்பதையே தங்கள் விசேஷபட்டமாக வழங்கிவந்தார்கள். இதை சிலர் 'ஈள பெருமான்' என்றும் வழங்கியிருக்கிறார்கள். இந்தராஜ குடும்பத்தின் சரித்திரம்சொல்லுகிற தனிநூல்களு மிருக்கின்றன. இந்த ராஜ வம்சத்தார் சிலகாலம் இலங்கைதேசத்தையும் ஜெயித் தாண்டதால் ['பரத கண்டம்' நாளதில் பிரிட்டிஷாரால் ஆளப்படுவதை முன்னிட்டு 'The British Empire பிரிட்டிஷ் ராச்சியம்' என்னப்படுவது போல] ஈழம் என்னப்பட்டது. 'ஈளம்' என்பது தமிழிலுமே 'ஏளம்' என்றும் வழங்கியிருப்பதற்குச் சரியாய், இலங்கையை ஜெயித்த மேற்கண்ட ஈள(ழ)நாடன், 'மஹாவம்ஸோ' முதலிய இலங்கை நாளாகமங்களில் (Elala) ஏளாளன் (=ஏள×ஆளன்-ராஜா) என்று பேர்சொல்லப்பட் டிருக்கிறான். இலங்கையை ஜெயித் தாண்ட பெருமானாகிய க்ஷத்திரியராஜாவுக்கு நரஸிம்ஹன் என்பது இடுகுறிப்பேரென்றும், அவன் க்ஷத்திரியகுலத்தவனான மதுரைப்பாண்டியராஜ னொருவனின் மகளாகிய அல்லி யென்பவளை விவாகஞ்செய்தா னென்றும், அவனுடைய குலமும் நாடார்களாகிய சான்றோர்குலமும் ஏககுல மென்றும், கொச்சிராச்சியத்து (ஜனவிவரணம்) எத்னாகிரபி எழுதிய (Mr. L. K. AnanthaKrishna Iyer, B. A.) கனம் அனந்தகிருஷ்ணையரவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

மேற்கண்ட கதம்பராஜகுலத்தவரி லிருந்து ஜைனரான ஒரு கூட்டத்தார் (Jinadatta Raya)ஜினதத்த ராஜா என்பவனின் தலைமைக்குள் "Chantas, Santas சான்றார்" அல்லது "Santara kings சான்றா ராஜாக்கள்" என்னும் நாமமாய் தனிராச்சியமாகப் பிரிந்து, ஜைனரின் ஐந்தாம் கலியுகத்தின் 500-ம் வருஷமாகிய கி. மு. 159 முதல் மைசூர்ராச்சியத்து ஷிமோகா ஜில்லாவைச்சேர்ந்த (Nagar country) நகரச்சீமையி லுள்ள (Homcha or Hombucha) ஹொம்புசம் என்னும் பட்டிபொம்புச்சபுரத்தை தலைநகரியாக வைத்து நெடுக ஆளுகைசெய்துவந்து பின்னால் சிலகாலம் சளுக்கியராஜாக்களுக்கு கப்பம்கட்டுகிறவர்களாகவும் இருந்து, அப்புறம் இருக்கஇருக்க பெலப்பட்டு, தெற்கே (Kadur)காடூர்ஜில்லா, (Mudgere)முடிகிரிதாலூகாவைச் சேர்ந்த (Kalasa)கலசம் என்ற இடம் மட்டும் பரவி, வடக்கே (Sagar) ஸகர் தாலூகாவைச்சேர்ந்த கோவர்த்தனகிரியை அரண்செய்து,தென்கன்னடம்ஜில்லாவிலுள்ள (Sisila or Sisukala) ஸிஸுகலம் என்ற இடத்தையும், கடைசி-

யாய், ஷை ஜில்லாவைச் சேர்ந்த (Karkala)கார்களம் என்ற இடத்தையும் தலைநகரிகளாக்கி அரசாண்டார்களென்றும், அவர்கள் தங்கள் (governors) தேசாதிபதிகளை (Barkur)பர்க்கூர், (Bangadi)வாங்காடி, (Mudu)மூடு, (Bidare)விதரே, (Mulki) மூல்கி என்னும் இடங்களில் ஸ்தாபித்திருந்தார்களென்றும், பின்னால், ஹொய்சலராஜாக்களுக்கும், விஜயநகரம்ராஜாக்களுக்கும் கப்பம்கட்டுகிறவர்களாகி, கடைசியாய், அவர்களாளுகை(Keladi)கேலதி ராஜாக்களால் எடுபட்டுப்போயிற் றென்றும், அந்த சான்றார் சூரியவம்சத்தவர் என்னப்பட்டாலும், அவர்கள், மதுரைப் பாண்டியராஜவம்சத்தவரோடு சேர்ந்த ஏககுலத்தவரென்றும், மேற்கண்ட ரைஸ்துரை, பிளீட்துரை, (R. Sewell Esq., M. C.S., M.R.A. S.) சூவல்துரை முதலானவர்களைக் கொண்டு புராதனசாஸன ஆராய்ச்சிகள் நடத்தி, மைசூர்கவர்ன்மென்றாலும், மதராஸ்கவர்ன்மென்றாலும் சரித்திரங்கள் வெளியிடப்பட் டிருக்கின்றன. ஜைனருக்கு (Natas) 'நாடர்' என்று பேர் வழங்கியிருந்ததாகவும் துலங்கியிருக்கிறது —கி. பி. 2-ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவின் (Greece) கிரேக்கதேசத்தி லிருந்து கப்பலமார்க்கமாய் வந்து இந்தியாவைச் சுற்றிப்பார்த்த (லத்தீனில் '*Periplus Maris Erythrae*' என்று பேர்சொல்லப்படும் புஸ்தகத்தின்) கிரேக்கஆசிரியரும், (Clemens of Alexandria) அலெக்சாந்திரியாபட்டணத்து கிளமென்ஸ என்னும் கிரேக்கஆசிரியரும், மைசூருக்குமேற்கே இந்தியாவின் மேல்கடற்கரையில் அக்காலத்தில் சாலிவாகனராஜா வகையார் ஆளுகை எடுபட்டு, மேற்கண்ட சான்றாரின் ஆளுகை நிலைப்பட்டசரித்திரத்தை, "Saraganes சாரகனன்"களின் ஆளுகை எடுபட்டு "Kingdom of Sandanes சான்றான்களின் ராஜாங்கம்" ஸ்திரப்பட்டதாகச் சொல்வது மல்லாமல், நாளது தென்கன்னடம் ஜில்லாவிலிருக்கிற (Kalliane) 'கலியாணம்' என்னும் கலியாணபுரம் ஷை சாரகனன்கள் காலத்தில் தகுந்த வியாபாரத்துறைமுகமாச்சு தென்றும், அப்புறம் அது சான்றான்கள்ஆளுகையில் வந்தபிற்பாடு, அவர்கள் அதுவிஷயமாய் அநேக கட்டுப்பாடுகளை யேற்படுத்தி, ஏதேனும் கிரேக்ககப்பல் அங்கு வந்து விட்டால், உடனே ஒரு காவற்காரனை கூடஅனுப்பி, அதை (Barugaza) பருகாசா என்னும் இடத்திற்குத் திருப்பிவிடுவார்களென்னும், ஷை (*Periplus*) பிரயாணவிவரப்புஸ்தகத்தின் 52-ம் பிரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கி. பி. 1474-ல் தென்இந்தியாவை வந்து சுற்றிப்பார்த்த ருஷிய மேதாவி யாகிய (Nikitin)நிகிதின்என்பவர் எழுதிவைத்திருக்கிறபடிக்கும் மற்றநேக புராதனசரித்திரஆதாரங்களை ஆராய்ந்து மேற்கண்ட ரைஸ்துரை சொல்லுகிறபடிக்கும், விஜயநகரத்தில் சக்கரவர்த்திகளா யாண்ட கர்நாடகராகிய (ராயலு) ராயர்மார், முன் கர்நாடகதேசத்து வனவாஸியி லாண்ட (சான்றோர்) க்ஷத்திரியராஜாக்களாகிய கதம்பரின் குலத்தவரே. (Balijas)

ர்மமாகவும் அரசாண்டு, நாளதில் 'வந்தர்' ஆகிய நாடவர்ஜாதியாராய் விளங்குகிறார்களென்று ஐயமறத் தெரிகிறது. மேலே விவரங்கண்டபடி, பாண்டியராஜாக்களுக்கு 'நாடன்,' 'நாடான்' என்றுமாத்திர மல்ல, "நாடவர்" என்றுமே 'தேவாரம்,' 'திருவாசகம்,' 'திருவிளையாடல்புராணம்' முதலிய பூர்வ நூல்களின் பல பாடல்களில் பேர்வழங்கியிருப்பதைக் காண்கிறோம். (Dr. Gundert) டாக்டர் குண்டர்ட்துரை யெழுதிய மலையாளம்-இங்கிலிஷ் அகராதியில், நாளதுவழக்கத்தை அனுசரித்து, "நாடவர்" என்பது "a headman of Chandras சான்றருள் முக்கியஸ்தருக்கு வழங்கும் பேர்" என்று எழுதியிருக்கிறார். நாளதில் மதராஸ், ஹைதராபாத், மைசூர், கொச்சி, திருவாங்கூர் என்னும் மாகாணங்களில் சிதறியிருக்கும் இந்த 'வந்தர்' ஆகிய நாடவர்ஜாதியாரின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 1¼-லக்ஷ மாகிறது. இதுபோக, பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த வடகன்னடம்ஜில்லாவில் பெரும்பாலும் நிலச்சுவான்களும், விவசாயிகளும், லேவாதேவிசெய்கிறவர்களும், மதத்தில் வைஷ்ணவாளும், மத்யபானம்அருந்தாமை முதலிய அநேக சற்குணங்கள் பொருந்தியவர்களும், மிகுந்த தேகலக்ஷண முள்ளவர்களும், சுமார் 6000 ஜனத்தொகை யுடையவர்களு மாக இருக்கிற "Nador நாடோர்" என்னும் ஜாதியாருக்குள், "Torke Nador தெற்கு நாடோர்" என்னும் ஒரு விசேஷ பிரிவா ரிருப்பதால், அந்த நாடோர் ஜாதியாரும் இவ்விடம் நாடார்ஜாதியிலிருந்து பிரிந்து, ஒருகாலத்தில் அவ்விடம் போனவர்க ளாகவே துலங்குகிறது.

நாளதுக்கு நானூறு-ஐந்நூ[illegible] வருஷங்களுக்குமுன் ராஜாங்கத்தாரப்பில் எழுதப்பட்டதாய் திருவாங்கூர் [illegible]த்தைச் சேர்ந்த நாஞ்சிநாட்டி லிருக்கும் பல சிலாசாஸனங்களில், நாடாள்வார் என்னும் பட்டத்தோடு அவ்விடங்களில் அநேக ஜமீன்தாரபிரபுக்களும், படைவீரரும் இருந்ததாகத் துலங்குவதாக, திருவாங்கூர்கவர்ண்மெண்டாரின் ஆர்க்கியாலஜிகல் டிப்பார்ட்டுமெண்டாரால் கண்டுபிடிக்கப்பட்டு, அவ்விடம் கவர்ன்மெண்டு கெஜட்டில் பிரசுரமாகி யிருக்கிறது. அந்த 'நாடாள்வார்' என்னும் பட்டப்பெயர் நாடார்ஜாதிக்கார ருடையதா னென்று 'திருவாங்கூர் ஸ்டேட்மானுயலி'ல் கனம் திவான்பஹதூர் வி. நாகமய்யரவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பாண்டியர், சோளர், சேரர், ஈளர் முதலிய தமிழரசருக்கு வழங்கிய நாடர், நாடார், நாடவர், நாடாள்வார் முதலிய அதேபேர்கள் தானே நாளது வரையும் நாடார்களுக்கு பெரும் பட்டப்பேரு மாய் வழங்கி வந்திருப்பதல் தவிர, பின்னால் விவரங்கண்டபடி, அவர்களுடைய ராஜாங்கம் அவர்களை விட்டுப் பிடுங்கப்பட்டு நூற்றுக்கணக்கான வருஷங்க ளானாலும், ராஜாங்கவரன்முறை யான அவர்களுடைய "பார்ப்புரத்தல்" ஆகிய நாடாளுந் தன்மை சிற்றளவி லாகிலும்

நாளதுவரை வெகு விமரிசையாய் அவர்களிடம் இருந்தே வருகிறது. அது விஷயமாய் என்னுடைய சுயவார்த்தைகளால் விவரம்சொல்லாமல், அது சங்கதியை அனுபவமா யறிந்த சில ஐரோப்பிய ஆசிரியர்களின் வார்த்தைகளை மாத்திரம் இங் கெடுத்தெழுதுகிறேன். அந்தப்படி, திருநெல்வேலிஜில்லாவிலுள்ள நாடார்களுள் வெகுவாய்ப் புழங்கினவரும், பாளையங்கோட்டை 'சாராடக்கர் காலேஜி'ன் ஸ்தாபகத்துக்கு மூலகாரணரா யிருந்தவரு மாகிய (Miss S. Tucker) மிஸ் டக்கர் துரைசானி, 1843-ம் வருஷத்தில் தென் இந்தியாவைப்பற்றி விவரமெழுதிய ஒரு புஸ்தகத்தில் சொல்லியிருப்ப தாவது: 'In the southern part of Tinnevelly, the highest class of Chantrars, called 'Nadans,' are the acknowledged proprietors of the soil; and when a Nadan has sold a piece of hand, he retains the right to a sort of quit rent. Indeed, the system is very like that of our lords of the manor, with the addition of the remarkable privilege, that in any dispute that is brought into a court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claim by written documents, it is only necessary for a Nadan to be identified as *the Nadan* of such a partic[illegible] spot, and the disputed property is adjusted to him, unless the opponent can *prove* his purchase of it." "திருநெல்வேலி ஜில்லாவின் தென்பாகத்தில், சான்றோருள் மகாஉயர்ந்த வகுப்பினரா யிருக்கிற நாடார்கள் ஆட்சேபமற்ற பூமியதிபதிகளே. ஒரு நாடான் தன் பூஸ்திதியில் ஒரு பாகத்தை விற்றுப்போட்டாலும், அதில் அவனுக்கிருக்கும் ஒருவகையான 'குவிட்ரென்று'த்தீர்வைப் பாத்தியதையை அவன் விட்டுவிடமாட்டான். இந்த ஏற்பாடு நம் இங்கிலாந்துதேசத்திலுள்ள 'மேனோர்' பிரபுக்களின்வரிசைக்கு ஒத்ததா யிருக்கிறது. ஆனால், இவர்கள்சங்கதியில் அதற்கும்மேலாயிருக்கும் விசேஷமென்னவென்றால், நிலச்சொத்துவிஷயமாய் லாகோர்ட்டில் ஏதாகிலும் வியாஜ்யம் கொண்டுவரப்பட்டால், மற்றும் சகல ஜாதியாரும் தங்கள் பாத்தியதைகளை எழுத்தாதாரங்கள் மூலமாய் ஸ்தாபிக்கவேண்டிய திருக்க, இந்த நாடானுக்கோ குறிப்பிட்ட இன்னஇடத்துநாடான் என்று அவன் தன்னை இனங்காண்பிக்கிற அவ்வளவே போதுமானதா யிருக்கிறது; எதிரி, தான் அதை அறுதிக்கிரயமாய் வாங்கிப்போட்டதாக ருஜுப்பண்ணினா லன்றி, தாவாசொத்து நாடானுக்கே சரிப்படுத்தப்படும்" என்பதே.—அப்படியே, நாடார் ஜாதியார்களின் மத்தியில் மிஷனரிவேலைபார்த்தவரும், துவக்கமுதல் அவர்களோடு நேர்ந்த சில மனஸ்தாபங்களால் அவர்கள்பேரில் அநேகமாய் நல்லபிப்பிராயமில்லாதவரு மாகிய, பின்னால் (Bishop) 'பிஷப்' ஆன (Rev. Dr. R. Caldwell) டாக்டர் கால்டுவெல் துரை, நாடார்குலத்தவரின் பூர்வோத்தரத்தைப்பற்றிச் சொல்லும்போது 1850ல்,

"The Nadans are in possession of extensive tracts of land" "நாடார்கள் வெகுவிஸ்தீர்ணமான நாடுகளை சொந்தமா யுடையவர்களா யிருக்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார். அவரே, 1890-ம் வருஷத்தளவில், "I had also to deal with another class of claimants—the Nadans, who had been the original proprietors of all the lands in the neighbourhood and who still professed, as lords of the soil, to have certain rights of seigniorage over even the lands they have sold, especially the right of levying a small rent on all houses built within their boundaries and a small fee at weddings, &c.-- I had no doubt its having been customarily submitted to." "இன்னொருவகை பாத்தியஸ்தர்களான நாடார்களோடும் நான் புழங்கவேண்டிய திருந்தது. இந்த நாடார்கள் நான் இருந்தஇடத்தின் பக்கத்திலுள்ள எல்லா நிலங்களினுடையவும் ஆதியுரிமைக்காரர்; இவர்கள், 'நாட்டுக் கதிபதிகள்' என்ற தங்களுடைய மேன்மையில், நாளதிலும், தாங்கள் விற்றுப்போட்ட நிலங்களிலுங்கூட தங்களுக்கு சில வரிச்சுதந்தரங்க ளிருப்பதாக பாத்தியங் கொண்டாடுவ தல்லாமல், விசேஷமாய் தங்கள் எல்லைகளுக்குட்பட்ட குடிகளுடைய எல்லா வீடுகளின் பேரிலும் தாங்கள்ஏற்படுத்திய லகுவான ஒரு தீர்வையைப்பெற்றுக்கொள்ளும் சுதந்தரமும், கலியாணசந்தர்ப்பங்கள் முதலானவைகளில் ஒரு சிறுவரி பெற்றுக்கொள்ளும் சுதந்தரமும் அவர்களுக் கேற்பட்டவைகளா யிருந்துவருகின்றன. சாதாரண வழக்கமாய் ஜனங்கள் அவர்களுக் கடங்கி இவ்விதத் தீர்வைகள் கொடுத்துவந்த விஷயத்தில் நானும் அவர்களுக்கு யாதொரு ஆட்சேபமும் செய்யவில்லை" என் றெழுதிவைத்திருக்கிறார்.—மேலும் 28—11—1900-ல் பிரசுரமான *(The Madras Times)* 'மதராஸ் டைம்ஸ்' பத்திரிகையில், "Their (*i. e.*, The Chantras') general possession of land is not from purchase, and many of the other castes are in their services" "பொதுவாய் சான்றோர்ஜாதியாருக் கிருக்கும் நிலவுரிமை யானது, அவர்கள் கிரயத்துக்கு நிலம்வாங்கினதினா லுண்டான தல்ல. இதரஜாதிக்காரரி லநேகர் அவர்களுக்கு ஏவல்வேலைசெய்வோரா யிருக்கிறார்கள்"என்று கண்டிருக்கிறது. திவான்பஹதூர் வி. நாகமய்யரவர்கள், 'திருவாங்கூர் ஸ்டேட் மானுயல்' புஸ்தகத்தின் (Glossory) அரும்பதஅகராதியில், "Nadar நாடார்" என்னும் பதத்துக்கு "Rulers ராஜாக்கள்" என்று அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள். (Edgar Thurston, Esq.)டாக்டர் தர்ஸ்ட்டன்துரையைக்கொண்டு கவர்ன்மென்றார் தென்இந்திய எத்னாகிரபி யாக தயாரித்த *(Castes and Tribes of Southern India* என்னும்) புஸ்தகத்தில் (V.134) "Nadan, meaning ruler of a country or village—is a title of the Chandrans, who, further call themselves Nadans in preference to Chandrans" "நாட்டை அல்

லது கிராமத்தை ஆளும் ராஜா என் றர்த்தமாகிற நாடான் என்பது, சான்றார் ஜாதியாரின் பட்டப்பேரா யிருக்கிறது. மேலும், அச் சாதியார், தங்கள் ஜாதிப்பேரையுமே சான்றான்(சாணான்) என்று வழங்காமல் நாடார் என்றே அதிசாதாரணமாய் வழங்கிவருகிறார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள இதரஜாதியார்களின் பெண்க ளெல்லோரும் சாதாரணவார்த்தை யாகிய 'அம்மாள்' என்ற ஒன்றையே தங்கள் பேருடன் பட்டப்பேர்போல் வழங்கிவர, நமது நாடார்குலப்பெண்கள் மாத்திரம், 'நாடார்'என்பதின் பெண்பாலபதமாய் 'நாடாளும் ராஜாத்தி' என் றர்த்தமாகிற நாடாச்சி என்னும் மகிமைப்பட்டத்தை ஞாபகத்துக் கெட்டாக்காலமுதல் தங்கள்பேரோடே சதா [illegible] வழங்கிவருவது, இக்குலத்தார் நாடாளும்ராஜவம்சத்தவரா யிருந்ததை தெளிவாய் விளக்குகிறது.

இத் தேசத்தின் பூர்வ சரித்திரங்களுக் கிசைய, சரித்திர ஆராய்வுசாஸ்திரிகளிற் பலரும் ஒப்புக்கொள்ளுகிறபடிக்கு, கிறிஸ்தாப்தத்துக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்தே பாண்டியராகிய நமது முன்னோரின் ஆளுகை துடங்கி, அநேகமாய் யுத்தக்குழப்பங்களில்லாமல் அமைதலாகவே கல்விவிருத்தியோடுங்கூடி நடைபெற்றுவந்தது. ஆனால் இடைக்கிடையே சோளர், சேரர் முதலான நமது பூர்வ தாயாதிக்காரருடையவும், அவர்களுக்கப்பால் வடக்கேயுள்ள மற்றும் சில்லறை ராஜாக்களுடையவும், இலங்கையரசருடையவும் தொல்லைகள் பல சமயங்களில் இருந்துவந்தது மாத்திர மல்ல, மேல்தேசங்களிலுள்ள (Huns) அவுணர், யவனர், சகர், சோனகர் முதலிய அந்நியரின் படையெழுச்சித் தொந்தரைகளும் இடைக்கிடையே இருந்துவந்திருக்கின்றன. கடைசியாய் கி. பி. 16-ம் நூற்றாண்டின் மத்தியில், விஜயநகரம் (Balija)பளைஜ ராயர்களின் சேனைபதிகளும் கர்த்தாக்களு மான நாகமநாயக்கர், அரியநாயக முதலியார், விஸ்வநாதநாயக்கர் முதலானவர்கள், விரோத நோக்கத்துடன் பெலமாய் இந் நாட்டில் வந்து ஸ்தாபகமான பின்பே நம் நாடார்குலத்தவரின் ஆளுகை குன்றியிருக்கிறது. அந்தச் சரித்திரத்தைக் கவனிக்குங்கால், மேற்கண்ட சேனைபதிகள் அங்கங்கே தங்களை யெதிர்த்த பழய ராஜவம்சத்தாரை மடக்கி இப் பாண்டியநாட்டைப் பூரணமாய்க் கைப்பற்றுவதற்காக, யுத்தங்கள் நடத்திக்கொண் டிருந்தபோது, நாடார்குலத்தவருள் "பஞ்ச திருவடிராஜாக்கள்" ('பஞ்ச திருவழுதிராசாக்கள்') அல்லது 'பஞ்ச பாண்டியாள்' என்னும் நாடாக்கள்வகுப்பைச் சேர்ந்த தளபதிகளான ஜமீன்தார்கள், தாமிரவருணி, சித்ரா நதிகளின் வழக்கைப்பெற்ற திருவழுதிநாடு முதலிய செழிப்பான இடங்களிலிருந்து படைகளைத் திரட்டிக்கொண்டு மேற்கேபோய், கடைசியாய் கயற்றாற்றி லமர்ந்து, கபடநாடகமாயிருந்து விரோதிகளாகிக்கொண்ட மேற்கண்ட விஜயநகரம் சேனைபதிகளுக் கெதிரே ஆறுமாதகாலத்துக்கு மேற்பட தளராது

நின்று யுத்தஞ்செய்தபின், கடைசியாய், கி. பி. 1561ளு பங்குனிமாதத்தில் மேற்கண்ட விஸ்வநாதநாயக்கர் வகையராக்களின் ஏமாற்றுக்குள் அகப்பட்டு, இந்தப் பாண்டியகுல நாடாள்வாரி லொருவர் மேற்படி நாயக்கருடன் ஒற்றைமல்செய்ய சம்மதித்து, அதில் வெட்டுண்டுபோனதால், அந்த மல் துடங்கு முன்னிலையில்பேசிக்கொண்ட வாக்குக்குக் கட்டுப்பட்டு, சேஷமுள்ள நாடாக்களும் அவர்களின் சேனைகளும் பின்னால் யாதொரு யுத்தமும் செய்யாதொழியாமல், மனதார தங்கள் நாட்டை மேற்படி நாயக்கமாரின் ஆளுகைக்கு ஒப்புவித்துவிட்டு ஒதுங்கிக்கொண்டார்கள். ஆனால் மேற்படி புதுராஜாங்கத்தா ரான கர்நாடக கர்த்தாக்களோ, ஒருவேளை நாடாக்கள் திரும்பவும் ஒன்றுகூடி பெலத்து தங்கள் ஆளுகையை எடுபடுத்திவிடுவார்களென்று பயந்து, நாடார்களின் சுதந்தரமாய் தாமிரவருணி, சித்ரா முதலிய நதிகளின் நீர்ப்பாய்ச்சலைப் பெற்றிருந்த 'காடு' ஆகிய சகல மருதநிலங்களையும், இன்னும் பாண்டியதேசம் மொத்தத்திலும் அங்கங்கே செழுமைபொருந்தியதா யிருந்த எல்லா மேற்றரச் சொத்துக்களையும், அதுமுதல் நம் நாடார்குலத்தவ ரிடமிருந்து தங்கள் பெலவந்த நடபடிக்கைகளால் பிடுங்கி, தங்களுக்கு உதவிக்காரரும், நாடார்குலத்தவரைப் பகைத்து துவேஷிக்கிறவிஷயத்தில் உஜாருள்ளவர்களுமா யிருந்த இதரஜாதிக் காரருக்கு கொடுத்துவிட்டதாக ஏராளமான சரித்திரஐதீகங்கள் நாடார்குலத்தா ரிருந்துவருகின்றன. பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரோடு யுத்தஞ்செய்து கலகக்காரரையடக்கினவரும், இங்கிலீஷ்கும்பினியார் ஆற்காட்டுநவாபிடமிருந்து நம் நாட்டைக் கையேற்றதுவக்கத்தில் அதை ஸர்வேபண்ணி முதலாவதாய் ஆயக்கட்டு ஒழுங்குபண்ணியவரும், பின்னால் மதராஸ் கவர்னர் வேலை பார்த்தவருமான (S. R. Lushington Esq.) லஷிங்டன்துரை 1802-ல் எழுதிய தம்முடைய முதலாம் ஜமாபந்திரிப்போர்ட்டிலும், 1820-ம் வருஷத்தளவில் திருநெல்வேலிஜில்லாவில் ஸர்வேநடத்திய (Thomas Turnbull Esq.) டர்ண்புள்துரையும், திருநெல்வேலிஜில்லாவில் இரண்டாவதாய்ஸர்வே-செற்றில்மென்று நடத்தி மிகவும் மதிப்படைந்த (R. K. Puckle Esq., M. C. S.) பக்கிள்துரை 1868-ல் எழுதிய தம்முடைய செற்றில்மென்று ரிப்போர்ட்டிலும், மதுரைச்சீமைக்கு 'மானுயல்' புஸ்தகம் எழுதிய (J. H. Nelson Esq., M. A., M. C. S.) நெல்ஸன்துரையும், 1871-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ்ஆபீசரா யிருந்த (W. R. Cornish Esq.) கார்னிஷ்துரையும், 1879-ம் வருஷத்தில் திருநெல்வேலி 'டிஸ்டிரிக்டு மானுயல்' எழுதிய (A. J. Stuart Esq., M. C. S.) ஸ்டுவர்ட்துரையும், இன்னும் பலரும் இதுசங்கதியை ஒப்புக்கொண் டெழுதியிருக்கிறார்கள். இதுவன்றி, அந்தப் புதுராஜாங்கத்தாரின் ஆளுன்கைக்காலத்தில் நாடார்குலத்தவருக்கு அவர்கள் வகையராக்களால் வேறநேக கஷ்டநஷ்டங்களுண்டானதும்நம்மவர்களுக்கு அநேகமாய்த் தெரிந்த விஷயம். அவைகளை யெல்லாம் விவரிக்க இங்கு இடம்போதா தென்

றெண்ணி நிறுத்தியிருக்கிறேன். அப்படியே, 29—11—1900-ல் பிரசுரமான (*The Madras Times*) 'மதராஸ் டைம்ஸ்' பத்திரிகையில், "The adversity they (the Chantras) have been exposed to since the days of their rule has been great. Awful treatment has been meted out to them by the successive rulers. It is no wonder that they have suffered so." "தங்கள் அரசாட்சி நின்றுபோனகால முதல் சான்றோ ரடைந்திருக்கும் துன்பங்களுக்கு கணக்குவழக்கில்லை; தொடர்ந்துவந்த வேற்றரசர்கள், அவர்கள் மிகவும் பரிதபிக்கத்தக்க விதமான கொடூரங்களை அவர்களுக்கு நடப்பித்தார்கள். ஆனால், (ராஜாங்கமிழந்த) அவர்கள், (பின்வந்த எதிர்ராஜாங்க அரசர்களால்) அப்படி கொடூரமனுபவிப்பது ஆச்சரியமான காரியமல்ல" என்று சொல்லப்பட் டிருக்கிறது.

பின்வந்த ராஜாங்கத்தாரால் முந்திய ராஜகுலத்தவருக்கு சகிக்கொண்ணு இடுக்கணும் நஷ்டங்களும் நேரிடும்போது, அந்த முந்திய ராஜகுலத்தவர் வேற்றுசாரம்-வேற்றுமதங்களையும் அனுசரிக்க நேரிடுகிற வழக்கப்படிக்கு, க்ஷத்திரியரும் பாண்டிய-சோள-சேர ராஜவம்சத்தவரு மான நம் நாடார்குலத்தவரில் பலர், தென்இந்தியாவில் முகமதிய மதஸ்தர்க ளாகிவிட்டார்களெனவும் சரித்திர மிருக்கிறது. இதுபோக, எண்ணிறந்தபேர் வியாபாரவிஷயமாய், செட்டி என்னும்பட்டத்தை மேற்கொண்டு, இந்துமதஇயற்கையிலேயே நாடார்குலத்தினின்று விலகிவிட்டது மல்லாமல், குருத்துவ-புரோகித வேலைகள் செய்வோராய் ஐயர் என்னும் பட்டத்தோ டிருந்த மேற்கண்ட சான்றோர்ப் பிரிவாரில் மிச்சமானபேர், தங்கள் ஆதீனத்தி லிருந்த நாடார்களின் அநேக கோவில்களையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு அங்கங்கே பிராமணவகுப்பாராகவும் மாறிவிட்டார்கள். இப்படி இதரகுலத்தவர் பிராமணரான சங்கதியை, தக்ஷிணத்தில் மிகுதியும் கனம்பெற்ற மேதாவியாகிய மகா-ள-ள-ஸ்ரீ வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்களும், தென்னாட்டு வழக்கம் மிகுதியா யறிந்த காலம்சென்ற பிராமணவித்வா னாகிய கனம் பண்டிதர் எஸ். எம். நடேசசாஸ்திரியார் பி. ஏ. அவர்களும், தர்ஸ்டன்துரையும், இன்னும்பல மேதாவிகளும் ஒப்பி யெழுதியிருக்கிறார்கள்.

மேற்கண்ட கர்நாடககர்த்தாக்களின் ராஜாங்கம் கி. பி. 1736-ம் ளு முதல் ஆற்காட்டுநவாபு வகையரா முகம்மதியரின் ஆதீனத்து ளானபோதும் நாடார்குலத்தவரின் கஷ்டங்களுக்கு பரிகார மேற்படவில்லை. கடைசியாய் இந்தச்சீமை, 1801-ம்ளு, நமது போஷகராகக் கொண்டாடப்பட வேண்டிய அங்கிலேயரின் காருண்ய ஆளுகைக்குள் வந்தது முதலே நம்முடைய கஷ்டநஷ்டங்களுக்கு விமோசனமும் நமது முன்னேற்றத்துக்கு மார்க்கமும் ஏற்பட்டது. இதுவே தற்காலம்வரை யுள்ள நமது சரித்திர மாகும்.

மேற்கண்டபடி நமது பாரம்பரையரசாட்சி நம்மைவிட் டகன்றுபோய் விட்டாலும், நம்மை இத்தேசத்தின் ஆதியுரிமையரசரின் வம்சத்தா ராகவும் குலத்தாராகவும் காண்பிக்கும் சரித்திரஐதீகங்கள், குடும்பவான்முறைகள், விசேஷபேர்கள், பாரம்பரை அந்தஸ்துகள், தொழில்கள், மதகொள்கைகள், வழக்கவழக்கங்கள், ஒழுக்கம் முதலிவைகள் அநேகமா யிருக்கின்றன. அவைகளெல்லாவற்றையும் விவரித்தால் விரியுமென் றெண்ணி, தற்சமயம் ஞாபகத்துக்குவந்த சில ஆதாரங்களை மாத்திரம் சுருக்கமாய் இங் கெடுத்துச் சொல்கிறேன். அவைகளாவன:

(1). தென்இந்தியாவின் சைவமதத் தலைவராகிய 'லோக குரு' என்னப்பட்ட சிரிங்கேரிமடத்து ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள், நாடார் குலத்தவரையும் தமது ஆதீனத்துக்குள் ளாக்கவேண்டி, தம்முடைய சிஷ்யர்களி லொருவரான மைசூர் சமஸ்தானம், தாராபுரம்தாலூகா, குனேஞ்சிவாடி, கேற்கேசுரஅக்கிரகாரம், ஸ்ரீமடத்தி லிருந்த, சிவசுவாமிசாஸ்திரியளின் பௌத்திரர், சிவராமசுவாமி சாஸ்திரியாரை நியமித்து, அவருக்கு சவுமியளு (கி. பி. 1789) கொடுத்த அதிகாரப்பத்திர மாகிய தாமிரசாஸனத்தில்,

"...........பாணடியகுல மாயும சிவகொததிர சமபனனாயும பாண டியதெசததில பிறநதவாளாயும க்ஷததிரியவமிஸாளாயு மிருககிற நாடாககள குலம சமஸததததுககும குலகுருவாய நெமுகமசெயது..........."

என்று கண்டிருக்கிறது. ஆனால் அந்த சமயஅதிகாரி வந்த காலத்தில், நாடார்கள், ஸ்ரீ சிரிங்கேரிமடத்துக் குட்பட்ட நாலு மடங்களில் ஒன்றாகிய ஸத்யோஜாதமடத்துக் குருசுவாமிகளுக்கு ஏற்கனவே சிஷ்யர்களா யிருந்துவருவது தெரிந்து, இந்த ஸ்ரீமடத்து அதிகாரி இவ்விடத்தை விட்டுப் பின்வாங்கிக் கொண்டதாகத் தெரிகிறது. பிராமணத்திருமேனிக ளான மேற்கண்ட ஸத்யோஜாதமடக் குருசுவாமிகளும், நாடார்குல விஷயமாய் மேற்கண்ட ஸ்ரீமடம் குருக்களுக்குக் கொடுக்கப்பட்டது போன்ற அதிகாரப்பட்டயம் ஷை சங்கராசாரியசுவாமிகளாலும், மைசூர்சமஸ்தானத்தாராலும் வெகுகாலத்துக்கு முன்னதாகவே பெற்று, மதிப்படைந்தவர்களா யிருந்துவருகிறார்கள்.

(2). நாடார்குலத்துள் 'சேர்வைகாரர்'அதாவது 'படைத்தலைவர்,' 'கொடிக்காரர்' அதாவது 'யுத்தத்தில் கொடிபிடிப்போர்,' 'அண்ணாவி'—'சிலம்பக்கார அண்ணாவி' முதலிய வகையாக, யுத்ததொழில்சம்பந்த மான பட்டப்பேர்களும்,பேர்களும்பாரம்பரையா யிருந்துவருவதும் அவர்களுடைய க்ஷத்திரியமூலத்தைத் துலக்குவதா யிருக்கிறது. இதுபோக, மலையாளம் நாஞ்சினாட்டி லுள்ள நாடார்கள், ஞாபகத்துக்கெட்டாக் காலமுதலே பழயகாலத்து யுத்தவித்தையில் தேர்ந்தவர்களா யிருப்பது மாத்திர மல்ல, நாளதுவரையும் அவ்விடமுள்ள

இதரஜாதிக்காரருக்கும் அதைக் கற்றுக்கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அந்தப்படி, ஈளகுலச்சான்றார் என்னப்பட்ட ஏனாதிநாதநாயனாரும், "வென்றி வடிவாட்படை பயிற்றும் தன்மைத்தொழில் விஞ்சையிற் றலைமைசார்ந் துள்ளார்" ஆக இருந்ததாய் 'பெரியபுராணம்' என்னும் திருத்தொண்டர்புராணத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. திருநெல்வேலிஜில்லாவின் மேல்பாகத்தில் காவலேற்பாடுகள் அநேகமாய் நாடார்குலத்தவரால் நடத்தப்பட்டுவருவதும், அவர்களுடைய பூர்வ பொருநத்தொழிலை வெளிப்படுத்துவதா யிருக்கிறது. நாடார்ஜாதியினர் பாரம்பரையாய் நடத்திவரும் அந்தக் காவலேற்பாட்டு விஷயமாய், 1917-ல் பிரசுரமாகியிருக்கும் 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி'ல் (pp. 338, 339) சொல்லியிருப்ப தாவது:—"Among the most successful *kavals* are the few which are held by the Chandrans. The Chandrans, or 'Panikkans' (as they style themselves), of Chidambarapuram (Nanguneri taluk) are the holders of a *kaval* which extends over the neighbouring villages of Kalakkad, Pattai, Koilpatti, Nangulam, Singampatti and Vijayarajapuram. According to a copper-plate in the possession of the head Panikkan, bearing the date *Saka* 1422 (A. D. 1500-01), the right was originally granted to the Chandrans of the place by Tirumeni Malandan, who may have been the representative of the Travancore ruler at a time when he was in possession of a portion of the Tinnevelly district. Four of these villages, the *kaval* of which the Chandrans had allowed the Maravans to annex, have lately been restored to their rightful protectors by the intervention of the police. At Kuttam, again, in the Nanguneri taluk, and at Kadayam (Ambasamudram taluk), the *kaval* is in the hands of Chandrans, or 'Panikkans.'" "சான்றோர்ஜாதிக்காரரால் நடத்தப்பட்டுவரும் காவலேற்பாடுகள் கொஞ்சஇடங்களில் நடந்தேறினாலும், அவைகள் தாம் மகா கெட்டிக்காரத்தனமாய் நடந்தேறிவரும் காவல்களாகும். (இந்தக் காவலேற்பாட்டு விஷயமாய்) 'பணிக்கன்' என்றும் தங்களுக்கு பட்டப்பேர்வழங்கிக்கொள்ளுகிற (நாங்குனேரிதாலூகாவைச் சேர்ந்த) சிதம்பரபுரம் சான்றோர் ஒருவகைக் காவலேற்பாட்டின் தலைவ ராவர்; அந்தக் காவலேற்பாடு களக்காடு, பத்தை, கோவில்பட்டி, நாங்குளம், சிங்கம்பட்டி, விஜயராஜபுரம் என்னும் இடங்களில் நடந்தேறிவருகிறது. சகாப்தம்1422 (கி. பி. 1500-01)-ல் எழுதப்பட்டதாக (மேற்கண்ட காவலேற்பாட்டின்) தலைமைப்பணிக்கனிட மிருக்கிற ஒரு தாமிரசாஸனப் படிக்கு, திருவாங்கூர்அரசரின் பிரதிநிதியா யெண்ணப்படுகிற திருமேனி மாலந்தன் என்பவருடைய ஆதீனத்தில் திரு

நெல்வேலிஜில்லாவின் ஓர்பாகம் இருந்தகாலத்தில், அவரால் அவ்விடம்சான்றோருக்கு இந்தக் காவல்சுதந்தரம் நிலைப்படுத்தப்பட்டது. இதில், நாலு கிராமங்களின் காவலை மறவர் அபகரித்துக்கொள்ளும்படியாக, (ஒருகாலத்தில்) சான்றோர் இடங்கொடுத்துவிட்டாலும், இப்போ சிலகாலத்துக்குமுன் போலீஸ் டிப்பார்ட்மென்றார் அதுவிஷயமாய்த் தலையிட்டு, அந்தக் காவல்கிராமங்களை அவைகளின் பூர்வ சுதந்தரக்கார ராகிய நாடார்களுக்கு திருப்பிக்கொடுத்திருக்கிறார்கள். ஷெடி நாங்குனேரிதாலூகாவிலேயே, குட்டம்இலாகாவிலும், அம்பாசமுத்திரம்தாலூகா கடையம்வட்டகையிலும், காவல்ஏற்பாடு, பணிக்கர் என்னப்படும் சான்றோர்ஜாதியார் வசமேயிருந்துவருகிறது" என்பதே. இதுபோக ஸ்ரீவைகுண்டம்தாலூகா சிறுத்தண்டிலும், திருச்செந்தூர்தாலூகாவின் சில இடங்களிலும், காவல் நாடார்கள்வசமே பாரம்பரையா யிருந்துவருகிறது.

டாக்டர் உவின்ஸ்லோதுரை எழுதிய தமிழ்-இங்கிலிஷ் அகராதியில், "பணிக்கன்" என்னும் வார்த்தைக்கு, "a fencing master, சிலம்பம் பயிற்றுவோன்; one who teaches the use of arms, ஆயுதம் பயிற்றுவோன்" என்று அர்த்தம்கொடுத்திருப்பதுந் தவிர, டாக்டர் தர்ஸ்ட்டன்துரையைக்கொண்டு கவர்ன்மென்றார் 1909-ல் பதிப்பித்த தென்இந்திய எத்னொகிராபிபுஸ்தகத்தில் (III. p. 178), "The word Panikkar comes from pani, or work, viz., that of military training. பணிக்கர் என்னும் வார்த்தை, யுத்தவித்தை கற்றுக்கொடுத்த லாகிய தொழில் என் றர்த்தமாகிற 'பணி' என்னும் பதத்திலிருந்து வந்தது" என்று சொல்லப்பட் டிருக்கிறது.

(3). "பாண்டியன்" என்பது நாடார்ஜாதியாரின்பட்டப்பேர்களி லொன்றாய், நாளதும் அவர்களுக்குள் வழங்கிவருவதை ஒப்புக்கொண்டு, (W. Francis Esq., I.C.S.)பிரான்ஸிஸ்துரை 1901வருஷத்து மதராஸ் சென்சஸ்ரிப்போர்ட்டிலும், டாக்டர். தர்ஸ்ட்டன்துரை 1909-ல் பிரசுரித்த தென்இந்திய எத்னொகிராபிபுஸ்தகத்திலும் எழுதியிருக்கிறார்கள். "பஞ்சவன்" என்று பாண்டியராஜாக்களுக்கு பூர்வ தமிழ்நூல்களில் பேர்வழங்கி யிருப்பதின் சார்பாய், திருநெல்வேலிஜில்லாவின் தென்பாகத்தில் நிலச்சுவான்களா யிருக்கும் நாடார்களுக்கு 'அஞ்சாலிக்காரர்'என்ற பேர் பாரம்பரையாய் நாளதுவரையும் வழங்கிவந்திருக்கிறது.

(4). இதுபோக, கொற்கைவேந்த ராகிய ஆதிப்பாண்டியரின் சந்ததியார், 'குலசேகரராஜா வம்சம்' என்பதாக அநுமத்தா யிருந்துவருகிறார்கள். அவர்களைப்பற்றி 29-9-1916 போட்ட 'திராவிடாபிமானி' (சேலம்) பத்திரிகையில் கொஞ்சம் சொல்லப்பட் டிருக்கிறது. கெங்கைகொண்டானி லிருக்கும் 'சத்திரிய ராஜாக்கள்' என்னும் விசேஷகுடும்பத்தார், முற்காலத்தில் அவர்களோடு ஏக குடும்பத்தவரா யிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

(5). முன், தென்காசித்தாலூகா வீரகேரளம்புதூர் பக்கத்தில் வசித்தவர்களும், நாளதில் மதராஸ் ஜியார்ஜ்டவுனி லிருப்பவர்களுமான டாக்டர் ஏ.சி. ஆசீர்வாதம்நாடாரவர்களின் குடும்பத்தவர், கி. பி. 16-ம் நூற்றாண்டின் பின்பாகத்தில் தென்காசி வட்டகையி லரசாண்ட அபிராம நாடாள்வார் அல்லது அபிராம பாண்டியன் அல்லது அதிவீரராம பாண்டியன் என்னும் சிற்றரசனுடைய நேரான பின்சந்ததியா ரென அந்தக் குடும்பத்தில் பாரம்பரையாய் ஒரு ஐதிகமிருந்துவருகிறது.

(6). திருச்செந்தூர்தாலூகாவின் தென்கீழ் பாகத்தில், 'ஏழு கரைக்காரர்' அல்லது 'ஏழு தண்டிகைக்காரர்' என்ற நாமமாய் பூபதிகளான பிரபுக்கள், அநேக கிராமங்களின் ஆட்சியை யுடையவர்களாய் கோட்டைகள் கட்டி, வெண்கலக்கதவுகள் போட்டு, வெகு பிரஸ்தாபமா யிருந்ததாக நாளதுவரையும் சாதாரணமாய்ச் சொல்லப்பட்டுவருகிறது. அவர்கள் நாமங்கள்: (1) தலைவனாகிய வெட்டிவீரண்டான் என்னும் வெற்றிகொண்ட நாடான்- (இந்தக் குடும்பத்தார் பின்னாலே விவரங்கண்ட பாலருக்கும் நாடார்களுக்கும் நேர்ந்த யுத்தத்திலும் மிகவும் ஜெயம்பெற்றவர்களாய்ப் பேர்வாங்கியிருக்கிறார்கள்); (2) சிம்மங்கரையான் என்ற செவினி; (3) பின்னங்கரையான்; (4) குமாரகரைக்காரன்; (5) அத்திபெரியவன்; (6) அறம்வளர்த்தாண்டான்; (7) சாவணைபெரியவன் என்னப்படும். இவர்கள் சந்ததியாராய்த் துலங்குவோருக்கு நாளதும் உறவுமுறைகளாலும் புலவர்களாலும் சில மரியாதைகள் நடந்துவருகின்றன. கரைக்காரர் என்றால் நாடர்களும்பிரபுக்கள் என் றர்த்தம். தண்டிகைக்காரர் என்றால் பல்லக்குப்பிரபுக்கள்.' இந்த ஏழு தண்டிகைக்காரரைப் பற்றி 'கான்சாய்பு சண்டை' என்னும் சரித்திரப்பாடலில்,

"ஏற்கவேதெற்கே பகையாதே; அதிலே
ஏழுதண்டிகைக்காரர் பொல்லாதபோக்கர்"

என்று, அவர்களுடைய எதிரிகள் அவர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டதாக ஒரு சுலோகம் வருகிறது. ஷெடி கரைக்காரரில் சாவணைபெரியவன் என்பவனின் சொத்தில் சுமார் 1-லக்ஷ ரூ. பெறுமானதை, பின்னால் ஷெடி கரைக்காரர்பலருடைய சொத்துக்களின் ஆதீனத்தை யடைந்த ஆதித்தநாடார், வீரப்பநாடார், தீத்தியப்பநாடார், வடமலைநாடார் என்ற சகோதரர்கள் குதிரைமொழி கிராமத்தி லிருக்கும் சுந்தராக்ஷிஅம்மன்கோவிலுக்கு மானியமாய் விட்டுக்கொடுத்ததாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. அதுபோலவே, ஷெடி கரைக்காரரின் சொத்துக்களிலிருந்து ஷெடி சுந்தராக்ஷிஅம்மன்கோவிலுக்குச் சமீபமாயிருக்கும் கலியுகவரதர்கோவிலுக்கும், மேற்கிட்டிருக்கும் கருக்குவேலையன் கோவிலுக்கும், பள்ளிப்பத்துக்கு வடபுறமாயிருக்கும் 'வெளிநின்ற பத்திரகாளியம்மன்'கோவிலுக்கும், மிருந்த மானியங்கள் கொடுத்திருக்கிறார்கள்.—

ஷை கலியுகவரதர்கோவிலுக்கு காயாமொழிநாடார்களாலும் தண்டுபத்துநாடார்களாலும் கொடுக்கப்பட்ட மானிபங்களுக்கு விவரம்சொல்லுகிற ஒரு தாமிரசாஸனம், முன் ஷை கோவில் பக்கத்தில் குடியிருந்து நாளதில் பழங்குளத்தில் வசிக்கிற பிள்ளைமார்வசமிருப்பதை, வருஷந்தோறும் ஷை கோவிலில் பங்குனிமாத உத்தரத்திலிருந்து 5-ம் நாளில் வாசிக்கிற துண்டு.— அத்திபெரியவனைப் பற்றி, "அறுதவழக் கெல்லாம் அத்திபெரியவனிடத்தில் அறும்" என பழமொழி ஏற்பட்டிருந்ததாம்.—இதுவன்றி, 'அறுபத்து நாலு (or அறுபது) தலைப்பாக்கட்டிகள்' என்ற பிரபுக்கள்வரிசையும் முற்காலத்தில்தென்னாட்டில் நாடார்குலத்தவருள் ளிருந்ததாக சாதாரணமான ஐதிகமுண்டு. தலைப்பாக்கட்டிகள் என்றால், கிரீடமணிந்த சிற்றரசர் என்றர்த்தம்.

(7). திருச்செந்தூர்தாலுகாவின் தென்கிழ்பக்கத்தில், 'மானவீரவளநாடு' என்னும் நாமமாய் ஒரு மாகாணப்பிரிவு இருந்துவந்ததாகவும், அது 'தென்பத்து,' 'வடபத்து' என இரு பாகமாயிருந்ததில், தென்பத்தில்: (1) மானவீரநாடு ஆண்ட மாறுட்சியா நாடார், (2) வல்லநாடு ஆண்ட சின்னமாட நாடார்-குமாரசுவாமி நாடார், (3) சித்தன்விளையில் ஆண்ட வள்ளிக்குட்டி நாடார், (4) அடப்பனூரில் ஆண்ட குலசேகர நாடார், (5) நங்கமொழியாண்ட சொக்கன்-திருப்பாபு நாடார் என ஐந்து ஜமீன்தார்கள், "ஐந்து கரை நாடாக்கள்" அல்லது "அஞ்சு பத்து நாடாக்கள்" என்று பேர்விளங்கியிருந்ததாக 'குமாரசுவாமிநாடார் கதை' என்னும் சரித்திரப்பாடலில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் திருப்பாபுநாடார் பேர், கொல்லம் 705-ம்ஆண்டில் (கி.பி. 1529) அவர்செய்த ஒரு தர்மத்தைப்பற்றி எழுதப்பட்ட ஒரு சிலாசாஸனத்தில், "அடைககலநகரம திருபபாபுநாடாளவான தனமம" எனக் கண்டிருக்கிறது.

(8). சகாப்தம் 1561-ல்(கி.பி.1639) எழுதப்பட்டதாய் திருச்செந்தூர்தாலூகா, குதிரைமொழி ரிஸர்வ்பாரஸ்ட்டின் தென்ஓரத்தில் நிற்கிற ஒரு பெரும் சாஸனக்கல்லில், அக் காலத்தில் மேற்கண்ட மானவீரவளநாட்டு வடபத்துஇலாகாவில், (1) ஆதிச்ச நாடான், (2) கோவிந்தப்பணிக்க நாடான், (3) வீரப்ப நாடான், (4) தித்தியப்ப நாடான், (5) பிச்ச நாடான், (6) அப்பக்குட்டி நாடான், (7) திக்கெலாங்கெட்டி நாடான், (8) நினைச்சதுமுடித்த நாடான், (9) அவத்தைக்குதவி நாடான், (10) குத்தியுண்டா நாடான் என்பவர்கள், ஜமீன்தார்களும் பிரபுக்களும், தங்கள் இலாகாவுக்குட்பட்ட (மறவர் உள்பட) சர்வஜாதிக் குடிகளின்பேரிலும் தீர்வைகளை ஏற்ற-இறக்க-ரத்துச்செய்ய அதிகாரமுடையவர்களாகவும் இருந்து, அக்காலத்தில் மதுரையை யாண்ட திருமலைநாயக்கர் என்னும் வடுகராஜாவின் கவர்ன்மென்டுக்கு தீர்வை முதலிய விஷயங்களில் எப்பொறுப்புமுடையவர்களாகவும் நாட்டாண்டுவந்ததாகத் துலங்குகிறது.

(9). இதுபோலவே, சகாப்தம் 1707-ல் (கி.பி. 1785) எழுதப்பட்டதாய் குலசேகரபட்டணத்தில் நாட்டப்பட்டிருக்கிற ஒரு சாஸனக்கல்லில், குட்டம் சந்திரமார்த்தாண்டப்பணிக்க நாடான், குமாரவீரமார்த்தாண்ட நாடான் முதலானவர்கள் அவ் வட்டகையில் அக்காலத்து கவர்ன்மென்டுத்தீர்வை முதலானதுக்கு பொறுப்புதார்களான பிரபுக்களாயிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குட்டம்நாடார்கள், பழயகாலத்து ராஜாக்களால் விருதாக அளிக்கப்பெற்ற பலஆயுதங்களையுடையவர்களாயிருப்பது மல்லாமல், அவர்கள் பவனிசெல்வதற்காக ராஜாக்களால் கொடுக்கப்பெற்ற பழயகாலத்துப் பல்லக்குகளையுடையவர்களாகவுமிருக்கிறார்கள். அதில் ஆற்காட்நவாபால் அவர்களுக்கு மரியாதையாகக் கொடுக்கப்பட்டதாய் சொல்லும் சாஸனஎழுத்துகளையுடைய சில பல்லக்குகளையும் ஆயுதங்களையும் (Dr. Edgar Thurston) டாக்டர் தர்ஸ்ட்டன்துரை தாம் நேரில் பார்த்ததாக தென்இந்தியா எத்னாகிரபி புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார்.

(10). இதுபோக, காஞ்சிரோட்டிலுள்ள அகஸ்தீஸ்வரத்திலிருக்கும் நாடார்குலஜமீன்தாராகிய நாகமணிமார்த்தாண்டநாடார் குடும்பத்தாருக்கு, கோட்டையும் ஆயுதபாணிகளான 100 பொருநர்கள் புடைசூழ்ந்துவர பல்லக்கில்பவனிபோகும் சலாக்கியமும், ஞாபகத்துக்கெட்டாக் காலமுதலே திருவாங்கூர் மஹாராஜாக்களின் அநுமதியுடனுமிருந்துவந் திருக்கிறது. இந்த வான்முறை க்ஷீணதசையில் கி. பி. 1871-ம்௵ வரையிலுங்கூட இருந்துவந்ததாக (Rev. S. Mateer, F. L. S.) மத்தீர் என்னும் மிஷனரிதுரை திருவாங்கூர்ராச்சியத்தைப்பற்றி யெழுதிய தம்முடைய புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார். திருநெல்வேலிஜில்லாவைச் சேர்ந்த குட்டம், செம்மரிக்குளம் என்னும் ஊர்களிலிருக்கும் நிலைமைக்கார நாடாக்களும், நாலுமாவடிகிராமம்-பணிக்கநாடான்குடியிருப்பில் பின்னால் போய்ச்சேர்ந்த நாடாக்களும் இந்த அகஸ்தீஸ்வரம் மார்த்தாண்டநாடாரின் குடும்பத்தோடு சேர்ந்தவர்களாகச் சொல்லப்படுகிறார்கள்.

(11). 'குறும்பு' என்றால் பாலைநிலம், அதாவது, மணற்பாங்கான பூமி, அல்லது பாலைநிலத் தார். தமிழரசர்கள் தங்கள் அரசாட்சி சுயாதீனமாய் நடைபெற்றுவருங் காலத்தில், தங்கள் நாட்டில் அங்கங்கேயுள்ள இந்த 'குறும்பு' ஆகிய மணற்பிரதேசங்களில் ஜமீன்தார்களாயிருந்து நாடாண்டு, தங்களுக்கு வரிவசூலித்து செலுத்திவரும்படியான பிரபுக்கள்வரிசையையும் ஏற்படுத்தியிருந்ததாக சரித்திரக்குறிப்புகளாலும் ஐதீகங்களாலும் துலங்குகிறது. அந்தப்படி, கொற்கைவேந்தராகிய பாண்டியரின் ஆதீனத்துள், ஷை கொற்கை இலாகாவுக்குத் தென்புறமாயுள்ள 'குறும்பு' ஆகிய, (நாளது திருச்செந்தூர் தாலூகாவைச் சேர்ந்த) 'குதிரைமொழித் தேரி' என்னும் மணற்குன்றின் வட

கீழ்சரியிலிருந்து நாடாண்ட ஏழு பிரபுக்களின் வம்சத்தவர் நாளதுவரையும் 'குறும்பூர் நாடாக்கள்' என்னும் நாமமாய் செல்வாக்குடன் பரம்பரைப் பூமியாதீனக்காரரா யிருந்துவருகிறார்கள். இந்த ஏழு மேன்மக்களின் பரம்பரைக் காணியாட்சியை 'ஏழு பந்து' என்று சொல்வது முண்டு. தற்காலத்தில் ஷெ வம்சத்தவர் குடியிருக்கிற ஊர்களின் பேர்ப்படி, மேற்கண்ட ஏழு ஜமீன்தாரக் குடும்பங்களின் விவர மாவது:—(1). காணம் நாடாக்கள்; (2). மூலப்புளி நாடாக்கள்; (3). அம்மன்புரம்-புதுக்குடி நாடாக்கள்; (4). மூலக்கரை நாடாக்கள் (5). நல்லூர் என்னும் வீரமாணிக்கபுரம் நாடாக்கள்; (6). நாலுமாவடி நாடாக்கள்; (7). முன்னால் 'குறும்பூர்' என்னப்பட்ட பணிக்கநாடான்குடியிருப்பு நாடாக்கள்.

(12). முன்னொருகாலத்தில் திருநெல்வேலிஜில்லாவின் தென்கீழ்பாகத்திலுள்ளபரவர்ஜாதியாருக்கும் நாடார்களுக்கும் குலாபிமானவிஷயமாய் நேரிட்ட ஒரு யுத்தத்தில் நாடார்கள் ஜெயசீலர்களானதில், நாடார்குலத்தில் ஏழு குடும்பத்தவர் யுத்தவீரர்களாய் முன்வந்த காரணத்தால், அவர்களுக்கு உறவுமுறைக் கூட்டங்களிலும் புலவர்களாலும் பல மரியாதைகள் நடந்துவருகின்றன.

(13). மதுரைக் கர்த்தாக்கள்ஆளுகையின் கடைசிக்காலத்தில், பேர்பெற்ற மாவை குமாரசாமிமுதலியாரின் மருமகனான ஆறை அழகப்பமுதலியார், கி. பி. 1700 முதல் 1735 வரை, திருநெல்வேலிச்சீர்மையில் ஷெ கர்த்தாக்கள் ராஜாங்கத்தின் தளகர்த்தராக திருவாங்கூர்ராச்சியம் வரையும் மதிப்புப்பெற்றவராய் பிரஸ்தாபத்துடன் அதிகாரம்பண்ணிக்கொண் டிருந்தார். [கர்நாடகஅரசாட்சியில், கன்னியாகுமரி முதல் காசி வரை பற்பல இடங்களில் உண்டாக்கப்பட் டிருந்த சத்திரங்கள்-மடங்களுடையவும், அவைகள்சம்பந்தமான தர்மச் சொத்துக்களுடையவும் ஆளுகையை தர்மாபுரம் முதலான ஸ்தானங்களின் மடாதிபதிகளுடைய ஆளுகையி லிருந்துவரும்படி செய்தவர் இவரெனச் சொல்லிக்கொள்ளப்படுவ துண்டு.] குமாரசாமிமுதலியார் என்பவர் அவருக்குத் தத்துமகனாகி, அவருக்கு உடனாளியா யிருந்தார். அக்காலத்தில் ஆறை அழகப்பமுதலியார், தம்மிடத்தில் கணக்குக்கொடுக்கவரும் பாளயகாரர் தமக்கு மிதமிஞ்சின மரியாதைகள்செய்யும்படி ஏற்பாடுபண்ணியிருக்கிறா ரென்பதாய் எண்ணி, சில பாளையகாரர் அவர்பேரில் பொறாமையடைந்து அவருக்குச்சதிசெய்ய ஒப்பந்தம்பண்ணி, அவருடைய சிநேகிதராயிருந்த 'தென்மலைவன்னியன்' என்னும் சிவகிரிபாளயகாரரான வன்னியனாரை துரோகமாய் ஆசக்கொண்டு, அவர் தூங்கும்சமயத்தில் அவர் வீட்டில் போய் அவரை ஷெ வன்னியனாரைக் கொண்டு சிரச்சேதம்செய்துவிட்டார்கள். அதின்பேரில், குமாரசாமிமுதலியார், அக்காலத்தில் இச்சீர்மையை மேற்பார்க்கும்அதிகாரத்தை ஒருவகையா யடைந்

திருந்த ஆற்காட்டுநவாபிடம்போய் ஆறை அழகப்பமுதலியாருக்கிருந்த தளகர்த்த அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு வந்து, மேல்திருநெல்வேலிநாட்டில் நாடார் குலத்தவராக பரம்பரை யுத்தவீரராயும் 'சேர்வைகாரர்' (படைத்தலைவர்) என்னும்பட்ட முடையோராயு மிருந்த மாடக்கண்ணு, பெயமஹாநாடன், புறங்காட்டாப்புலி, குட்சமுடையான் என்னும் நாலு தளகர்த்தர்களுடன் சேர்ந்து, அவர்கள்சேனைகளையும் கூட்டிக்கொண்டு சிவகிரிக்குப்போய், ஷெ வன்னியனாரோடு யுத்தம்செய்து அவரைக் கொன்று, அவருடைய சேனையையும் கோட்டையையும் நாசம்பண்ணிவிட்டார்கள். நட்டாத்தி திருவழுதிநாடாரின் சேனைகளும் இதில் சேர்ந்திருந்ததாகச் சொல்வ துண்டு. இந்த வீரசூரச் செய்கையி னிமித்தம், மேற்கண்ட பெயமஹாநாடன்சேர்வைகாரர் என்னும் சேனாபதிக்கு ஷெ ஆறை அழகப்பமுதலியாரின் மனைவியார், 'தம்முடைய தாலிக்கு-வேலியானவர்' என்ற அர்த்தமாய், 'தாலிக்குவேலி'' என்னும் விசேஷபட்டமளித்து, மானியமாக நஞ்சை-புஞ்சை நிலங்களும் விட்டுக்கொடுத்து, அடியிற்கண்ட வாழ்த்தையும் பாடினதாக பரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளப் படுகிறது. அந்தப் பாட்டாவது:

"நிலைகொண்ட கீர்த்திஅ ழகப்பராயன்தன் நித்திரையில்
கொலைகொண்ட பாதகன் தென்மலை வன்னியன் கோட்டைதன்னில்
அலைவந்து மோதியே ராவணன் கோட்டைய ழிந்ததுபோல்
தலைகொண்டு வந்தஎன் தாலிக்குவேலி தளசிங்கமே!"

இதுசங்கதி, தளவாய்முதலியார்களின் குடும்பவரலாறாக, நான் இங்கிலிஷிலும் தமிழிலும் தயாரித்திருக்கிற புஸ்தகத்தில் விவரமா யிருக்கிறது. இந்தச்சரித்திரத்தை (H. R. Pate Esq.) மிஸ்டர் பேட்துரையும் திருநெல்வேலிடிஸ்டிரிக்டு கெஜட்டீரில் விவரம் தெரியாமல் சரித்தப்பாய் கொஞ்சம் எழுதி யிருக்கிறார். இது விஷயமாய் உண்டாயிருப்பதாகச் சொல்லப்படும் பழய சரித்திரப்பாடல் இதுவரை என் பார்வைக்குக்கிட்டவில்லை.

(14). உத்தர மாறநாடார்களுக்குள் 'ஆறுஊர் உறவுமுறைகள்' என்ற அந்தஸ்துவரிசை பரம்பரையாய் மிகவும் மதிப்புப்பொருந்தி யிருந்துவருகிறது. இந்த ஆறுஊர்உறவுமுறைகளுள்ளும் பெரும்பெரும் பஞ்சாயத்து சபைகளும், முறைகாரரேற்பாடுகளும் இருப்பதன்றி, பரம்பரைஅந்தஸ்துப் பொருந்தியவர்களும் சீமான்களு முள்ள அநேக குடும்பங்களு மிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் விவரம்சொன்னால் இவ் வியாஸம் ரொம்பவும் விரிவுறு மென்றெண்ணி, அதுவிஷயத்தை இவ்வளவோடு நிறுத்துகிறேன்.

(15). இந்துமதக் கோவில்கள்விஷயமாகவும் நாடார்களுக்கு தமிழ்நாடெங்கும் மிகுந்த மரியாதைகள் பூர்வந்தொட்டு ஏற்பட்டிருந்ததில், ஜாஸ்தியானவை, மேற்கண்ட தெலுங்கராளுகைக் காலமுதல் பெலவந்தமாய் நிறுத்தப்

பட்டுப்போனது போக, இன்னமும் அங்கங்கே யிருந்துவருபவைகளில், திருச்செந்தூர், பெருங்குளம், திருப்பரங்குன்றம், மதுரை, பழனி, சிதம்பரம் என்னும் விசேஷஸ்தலங்களில் ஞாபகத்துக்கெட்டாக்காலமுதல் பரம்பரையா யிருந்துவரும் சில நடபடிக்கைகளை மாத்திரம் உதாரணமாக இங் கெடுத்துக் கூறுகிறேன். அவைக ளாவன:—

(a). திருச்செந்தூர் சிவன்கோவிலுக்குள் ளிருக்கும் மண்டபம், முற்காலத்தில் திருச்செந்தூர்தாலூகா, காயாமொழி-சிவந்தி ஆதித்தநாடார் என்பவரால் கட்டிவைக்கப்பட்டதுந் தவிர, ஷை கோவில்-சிவக்கொழுந்தீஸ்வரர்சந்நிதி ஆயிரக்கால்பந்தல்மண்டபமும், அதைச்சேர்ந்த தண்ணீர்ப்பந்தல்மண்டபமும், நந்தவனமும் ஷை சிவந்திஆதித்தநாடாராலும், குமாரசுவாமிஆதித்தநாடார் என்பவராலும் கட்டப்பட்டன. அவைகளின் குறைவேலையை, நாளதுக்கு சுமார் 100-வருஷங்களுக்கு முன் ராமலிங்கஆதித்தநாடார் என்பவர் கட்டி முடித்தார். துவக்கமுதலே இந்த மண்டபங்கள் ஷை ஆதித்தநாடார்களின் ஆதீனத்தி லிருந்துவந்தன. ஆவணி-மாசி மாத உற்சவங்களில் ஷை பந்தல் மண்டபத்துக்குள் ஷை ஈஸ்வரர்வரும்போது நடக்கும் நைவேத்தியச்செலவு ஆதித்தநாடார்களால் நடத்தப்படும். ஷை மண்டபத்து முகப்பிலிருக்கும் 6-ம் திருநாள் சாட்டையடி மண்டபப்படியும் ஷை ஆதித்தநாடார்க ளுடையது.— இதுபோக, திருச்செந்தூர்கோவிலுக்கு (ரதம்)தேர் செய்துவைத்ததும் ஆதித்த நாடார்கள்தாம். இதுவிஷயமாய் 'திருச்செந்தூர்கோவில் பிரபந்தம்' என்னும் பழய நூலில், "அட்டதிசை புகழ் ஆதித்தநாடார் —கொட்டகை தேரையும் பாராய்" என பாட்டு வருகிறது. ஆவணி-மாசி மாதங்களில் ரதஉற்சவம் நடக்கும்போது, ஷை ஆதித்தநாடார்களை ஷை கோவில்ஸ்தானீகர்கள், தாசிகள் முன்பின்வர, மேளதாளங்களோடு மிக்க மரியாதையாய் ஷை தேருக்குச்சமீபமாக அழைத்துவர, அவர்கள் முன்னுயத்தமாய் பலி-விடலை எறிதல் முதலிய கிரியைகளை நடத்திக்கொண்டு, ஷை தேர்வடத்தைத் தொட்டுக் கொடுத்த பின்பே இதரகுலத்தவர்கள் தேரைஇழுப்ப துண்டு. இந்த வழக்கம் ஞாபகத்துக்கெட்டாக்காலமுதல் நடந்துவருகிறது. ஷை தேர்அலங்காரச் செலவையும் இந்த ஆதித்தநாடார்களே கொடுத்துவருகிறார்கள். இதுவிஷயமாய், "ஆர் வந்தால் தேரோடும்?. ஆதிச்சநாடான் வந்தால் தேரோடும்" என, அவ்வட்டகையில் யாவருமறிந்த பழமொழி யிருந்துவருகிறது. —மேலும், பிரதிதினமும் சுப்பிரமணியர்ஆலயத்தில் நடக்கும் 'அறுபத்துமூவர்' அர்ச்சனைச்செலவு ஷை ஆதித்தநாடார்களால் நடந்துவருகிறது. —விசாககாலத்தில் ஊரடங்க பிராமணபோஜனம் ஆதித்தநாடார்களால் கொடுக்கப்பட்டுவருகிறது. —ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணியருக்கு திருக்கல்யாணஉத்ஸவம் நடக்கும்போது, முதல் நாளில் மாப்பிளைவீட்டுச்செலவாக கல்யாணவிருந்தும், ஊரடங்க பிராமண

போஜனமும் ஆதித்தநாடார்களால் நடக்கும்; மறுநாள் பெண்வீட்டுவகையாய் நடக்கும் விருந்தும், ஊரடங்க பிராமணபோஜனமும், வள்ளியம்மை தினைப்புல மண்டபப்படியும் நட்டாத்தி ஜமீன்தா ரான திருவழுதிநாடார் செலவில் நடக்கும். —ஆவணி-மாசி மாத திருநாட்களில் திருவாங்கூர் மஹாராஜாவால் நடத்தப்படும் உற்சவத்தின் இரண்டாம் 'சேவை,' மேற்கண்ட ஆதித்த நாடார்களால் நடத்தப்படும். —ஷை தேவஸ்தான விஷயமாகவும் தேர்விஷய மாகவும் ஆதித்தநாடார்கள் முற்காலத்தில் மிகுதியான மானியங்கள் விட்டுக்கொடுத்திருப்பதில், சிலவற்றுக்கு அவர்களே நாளதுவரை ஹக்தார்க ளாகவும் இருந்து வருகிறார்கள்; அப்படியே, ஷை சுப்பிரமணியர்கோவிலின் "ஆட்டவிசேஷம், மாஸ்தவிசேஷம், ஆற்று திருமஞ்சனம்" இவைகளுக்காகவும், திருச்செந்தூரிலுள்ள நந்தவனபரிபாலனம், மடத்துதிருவிளக்கு இவைகளுக்காகவும், நட்டாத்தி திருவழுதிநாடார் குடும்பத்தார் விட்டுக்கொடுத்த மானியச்சொத்துக்கள்சிலவற்றின் ஹக்தார்வேலை, ஷை திருவழுதிநாடார்குடும்பத்தி லிருந்து வருகிறது. —கார்த்திகைதீப உற்சவத்தில் திருச்செந்தூரில் நடடும் 'சொற்கப்பனை'யும் அதைச்சேர்ந்த செலவும் ஆதித்தநாடார்களால் நடத்தப்பட்டு வருகிறது. —வெயிலுகந்தஅம்மன், 8-ம்திருநாள் மண்டபப்படிசெலவு பூராவும்ஆதித்தநாடார்களால் நடந்துவருவது மல்லாமல், தெற்குரதவீதியி லிருக்கும் மண்டபமும் அதைச்சேர்ந்த நந்தவனமும் ஆதித்தநாடார்களின் ஆதீனத்திலேயே யிருந்துவருகின்றன. ஷை மண்டபச்செலவுக் காகவும், அதிலிருக்கும் (கணபதி) பிள்ளையார்பூசைக் காகவும், முன்னமே ஷை நாடார்கள் சேர்ந்த மானியமும் விட்டுக்கொடுத்திருக்கிறார்கள். —பிரதிமாதத்தின் கடைசி சுக்கிரவாரத்தில் சுப்பிரமணியர்கோவிலில் நடக்கும் நைவேத்திய-அலங்கார-எழுந்திருத்தல் செலவு பூராவும், நாஞ்சினாட்டைச்சேர்ந்த ராஜாக்கள்மங்கலம், பத்மநாபநாடார் குடும்பத்தவரால் பரம்பரையாய் நடந்துவருகிறது. —பிரதிதினமும் ஷை கோவிலில்நடக்கும் 'உதயமார்த்தாண்டபூசைக்'குரிய புஷ்பச்செலவு, குட்டம் குமாரவீரமார்த்தாண்டநாடார் குடும்பத்தவரால் நடந்துவருகிறது. —ஷை கோவில் கோபுரத்தின் மேலவாசலிலிருக்கும் அம்மனுக்கு பிரதிதினமும்நடக்கும் பூசைசெலவு மூலப்புளி, சிவசுப்பிரமணியநாடார் குடும்பத்தவரால் நடந்துவருகிறது. —இப்படியே இன்னும் பல வுண்டு.

(b). ஸ்ரீவைகுண்டம்தாலூகா -பெருங்குளத்தில், நட்டாத்தி ஜமீன்தாராகிய திருவழுதிநாடார் வம்சத்தவரின் குலதேவதையாகக் கொண்டாடப்படுகிற திருவழுதீ ஈஸ்வரர் கோவிலுக்கு, ஷை திருவழுதிநாடார் குடும்பத்தவரால் அநேக மானியங்கள் விடப்பட்டு, அநேக கைங்கிரியங்கள் அவர்களால் பண்டைக்காலமுதல் நடந்துவந்திருக்கின்றன. நாளதும் ஷை கோவிலில் பங்குனி மாதம் நடக்கும் உற்சவ சந்தர்ப்பத்தில், ஷை திருவழுதிநாடார்குடும்பத் தலைவ

ருக்கு ஷை கோவில் ஸ்தானீகர் பட்டுக்கட்டி, அநேகமரியாதைகள் செய்விப்பதுந் தவிர, ஷை குடும்பத்தவரால் ஒரு மண்டபப்படியும் நடந்துவருகிறது. —அதுபோக, கார்த்திகைதீப தினத்தில் பெருங்குளத்தில்கட்டும் 'சொக்கப்பனை'யும், அதுசம்பந்தமான செலவுகளும் ஷை திருவழுதிநாடார் குடும்பத்தவராலேயே பரம்பரையாய் நடந்துவருகின்றன.

(c). மதுரைக்கு அடுத்த தென்புறமான திருப்பரங்குன்றத்தி லிருக்கும் சுப்பிரமணியர் கோவிலின் மஹாமண்டபம், ஆஸ்தானமண்டபம் முதலிய எல்லா மண்டபங்களும், உத்தர மாறநாடார்களால் சில நூறுவருஷங்களுக்கு முன்னமே சுமார் 10-லக்ஷரூபாய் செலவில் மிக அலங்காரமாய் கட்டிவைக்கப்பட்டிருப்பது மல்லாமல், அதின் ரிப்பேர், தளவரிசை, முன்னலங்காரம் முதலியவைகளெல்லாம், நாளதுக்கு 30 வருஷங்களுக்கு முன், சுமார் 1-லக்ஷரூபாய் செலவில் அவர்களாலேயே செய்துவைக்கப்பட்டன. —அதுபோக, ஷை கோவிலின் பங்குனிஉற்சவத் தேரும், உத்தேசம் 100-வருஷங்களுக்குமுன் சுமார் 1-லக்ஷரூபாய் செலவில் ஷை நாடார்களால் செய்துவைக்கப்பட்டது. —மேலும் ஷை கோவிலில் நித்யம் சுப்பிரமணியருக்குநடக்கும் 'அர்த்தசாமக்கட்டளை' பரம்பரையாய் ஷை நாடார்களின் செலவில் நடந்துவருகிறது மல்லாமல், நித்திய அர்ச்சனைக்கு வேண்டிய புஷ்பத்துக்கான நந்தவனங்களும், பாலுக்கான பசுக்களும் அவர்கள் செலவிலே பரிபாலித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. —இதுவன்றி, ஷை கோவிலின் ஆஸ்தான மண்டபத்தி லிருக்கிற 'திருவாட்சி'க்குரிய நித்திய தீபார்ச்சனை, மாதாந்தரமும் மற்றும் உற்சவகாலங்களிலும் சுப்பிரமணியர் கோவிலைச்சுற்றிவரும்போது நடக்கும் 'தட்டி திருக்கண்' தீபார்ச்சனை, இவைகளின் செலவுகளும் ஷை நாடார்களால் நடந்துவருகிறது மல்லாமல், ஐப்பசிமாதம் நடக்கும் 'கந்தர் சஷ்டி' உற்சவத்தில் ஒரு மண்டபப்படியும் நாடார்களால் நடத்தப்படுகிறது. ஷை கோவில்விசேஷங்களின்போது திருப்பரங்குன்றம்போகும் நாடார்களின் வசதிக்காக அங்கே அநேக மண்டபங்கள், மடங்கள் முதலானவைகளை நாடார்கள் உண்டுபண்ணி பரிபாலித்துவருகின்றனர்.

(d). மதுரை மீனாக்ஷி-சுந்தரேஸ்வரர் கோவிலில், நித்தியம் ஷை ஈஸ்வரருக்கு (காலை)சந்தி, இரண்டாம்கால நைவேத்தியம் இவைகள் நடக்கும்போது சொக்கலிங்கத்துக்கு அணியும் 'இண்டை' என்னும் கொண்டைமாலை, பரம்பரையாய் உத்தர மாறநாடார்களின் செலவில் நடந்துவருகிறது. இதுபோக, ஆவணிமாத உற்சவத்தில், பழயசொக்கநாதர்கோவில் முன்பாக பிட்டுத்திருவிழா பாகம்நடத்த சுந்தரேஸ்வரர் செல்லும்போது, ஷை நாடார்களால் ஒரு மண்டபப்படியும் நடந்துவருகிறது.

(e). பழனி- 'தண்டாயுதபாணி' என்னும் சுப்பிரமணியர் கோவிலில், சுமார் 1,000 வருஷங்களுக்கு முன், நாடார்களால் தங்கத்தால் செய்துவைக்கப்பட்ட குதிரைவாகனம், இப்போ சிலவருஷங்களுக்கு முன் ஷை உத்தர மாறநாடார்களால் இன்னும் மிகுதியான பொருள் செலவுசெய்து புதுப்பித்துவைக்கப்பட்டிருக்கிறது. —ஷை கோவிலின்முன்பாக இருக்கும் ஆஸ்தான மண்டபமும் ஷை நாடார்களால் சுமார் 1 லக்ஷரூபாய் செலவுசெய்து கட்டிவைக்கப்பட்டது தான். —இக்கோவிலின் புரட்டாசிமாதத்து உற்சவத்தில் ஷை நாடார்களால் ஒரு மண்டபப்படி நடந்துவருகிறது.

(f). தஞ்சாவூர்ஜில்லா- கும்பகோணம், கும்பேஸ்வரர்கோவிலின் வைகாசிமாச உற்சவத்தில் மூன்று மண்டபப்படிகள் நாடார்களால் நடத்தப்படுகின்றன.

(g). தென்ஆற்காடுஜில்லா- சிதம்பரம், நடேசர்கோவிலின் ஒருகாலப் பூசை நாடார்கள்செலவில் நடந்துவருகிறது. அதுபோக, ஷை கோவிலில் ரூ. 2,000க்கு மேற்பட்ட செலவில் நாடார்கள் ஒரு செடிவிளக்கு செய்துவைத்து, அதின் நித்திய தீபச்செலவையும் தாங்களே நடத்திவருகிறார்கள்.

☞ இதுபோக, 'திருக்குற்றாலக் குறவஞ்சி' என்னும் பழயநூலில், பாண்டிய அரசரை, "அப்பனே, மேலவாசலி லரசே!" என்று பாடியிருக்கிறபடி, இந்நாட்டுக் கோவில்களின் மேலவாசல்வழியாய் தனிவிசேஷமாய்ப் போக்குவரவுசெய்தல், நாட்டுக் காசரான பாண்டிய வம்சத்தவராம் நாடார்களுக்கே விசேஷித்து உரியதாயிருந்துவந்தது. அந்த தனிவிசேஷப்பிரவேசத்தை மேற்கண்ட தெலுங்கராஜாகை மும்முரமாய் நடக்கும்போது, நாடார்களைப் பகைத்தோர் கட்டாயமாய் நிறுத்தி, அவ் வாசல்களை கற்கள்வைத் தடைத்துப் போட்டார்கள். இதுசங்கதி, நாடார்குலத்துள் பெரியோர்முதல் சிறியோர்வரை யாவருக்கும் தெரிந்தசரித்திரமா யிருப்பதுந் தவிர, இதரகுலத்தவரிற் பலரும் அதற்குச் சாட்சி கொடுக்கிறார்கள். ஸ்ரீவைகுண்டம், கள்ளப்பிரான்(பெருமாள்) கோவிலின் மேலவாசலுக்கு வழங்கிய 'சிங்கநாடான் வாசல்' என்னும் பேர், நாளதுவரை சமயாசமயங்களில் அவ்விடத்தில் பலர்வாயால் துலங்கியும் வருகிறது. நாடார்ஜாதிக்காரரைக் குறித்து கணியார் பரம்பரையாய்ப் படித்துவரும் 'வணங்கான் மாலை'யில், "மேலவாசல் விசேடத்தோன்" என்றொரு வாழ்த்தல்வக்கணையு மிருக்கிறது.

(16). நாடார்குலத்துக்குரிய நடையுடைபாவனைகள், ஆபரணங்கள், வழக்கபழக்கங்கள் முதலியவைகளினாலும் அவர்கள் அரசகுலத்தவரெனத் துலங்கும்சங்கதிகள் ஏராளமா யிருக்கின்றன. அவைகளை யிங் கெடுத்துவிவரிக்க

இடம்போதாதென்றெண்ணி, ஒரு தனிப்புஸ்தகமாகத் தயாரித்துவருகிறேன். கல்யாணப் பட்டணப்பிரவேசக் காலத்தில், யுத்தாயுதமாகிய பட்டயத்தை அல்லது கத்தியை மாப்பிள்ளை தன் வலதுகையில் பிடித்திருப்பது அல்லது இடுப்பிலணிந்திருப்பதும், கன்னியநாடார்களின் பிரேதத்தை எடுக்கும்போது வெகு விமரிசையாய் பெலமான மூன்று புஷ்பத்தேர்கள் கட்டி, அவற்றுள் நடுவில் போகும் தேரை, பூர்வ ராஜாக்கள் சமர்க்களத்தில் உபயோகித்த தேர்களுக்குச் சமமாகவே செய்து, அதில் ஷை பிரேதத்தை வைத்து, அந்தத்தேரில் வாலிபர் ஏறி ஷை பிரேதத்துக்கு வெண்சாமரைவீசிக்கொண்டுபோவதும், பிரேதம் எடுத்துப்போகும் சமயத்திலும், பின்னால் உத்தரகிரியைகள் நடத்தும்போதும், மற்றும் பலஜாதிகளின் நடபடிக்கைக்கு வித்தியாசமாய், இரட்டைச்சங்கு ஊதுவதும், பள்ளர் பறையராதி அடிமைப்பெண்கள் திரளாய் வந்து மாரடித்துச்செல்லுவதும், ஆகியவைகளை ஷை வழக்கபுழக்கங்கள் விஷயமான இரண்டொரு உதாரணங்களாக சொல்லலாம். நாடார்குல மாப்பிள்ளைகள் விவாக காலத்தில் பட்டயம்தரிக்கும் நடபடிக்கையை, அக் குலத்துக்குரிய ஓர் விசேஷமாக, திவான்பஹதூர் வி. நாகமய்யாவர்கள் 'திருவாங்கூர் ஸ்டேட்மானுயலி'ல் சொல்லியிருக்கிறார்கள். மேலும், நாடார்குலத்தவரின் மதகொள்கைகளும் வழக்கபுழக்கங்களுமெல்லாம், அநேகமாய் இந்துக்களின் சதுர்வேதங்களிலும், அதற்கடுத்தவுண்டான 'சிரௌத' என்னும் கல்பசூத்திரங்கள், 'ஸ்மார்த்தசூத்திரங்கள்' ஆகிய கிருஹ்ய- சமயாசாரிக சூத்திரங்கள் முதலான முதுநூல்களில் துலங்குகிற பூர்வநாகரீக வழக்கபுழக்கங்களுக்கு ஒற்றுமையுள்ளனவாகவேயிருக்கின்றன. அப்படியே, நாளதுவரை சில பிராமணப்பிரிவாரின் வழக்கபுழக்கங்களுமிருக்கின்றன. உதாரணமாக, நாடார்குலத்தாருள் இருந்துவருகிற வழக்கப்படி, பெண்கள் ருதுவான பின்னாவது முன்னாவது சேர்க்கப்படி விவாகமாகுதலும் (மாநவ-தர்மசாஸ்திரம், ix. 88-94), செத்தவர்களை தகனிப்பது மாத்திரமல்ல, மண்ணில் அடக்கம்செய்வதும் ஆகிய நடபடிக்கைகள் சாதாரணமாய் இருந்துவந்ததாக ஷை வேதங்கள்- சூத்திரங்கள் முதலான நூல்கள் மூலமாய்த் துலங்குகிறது. (ஆஸ்வலாயன-கிருஹ்யசூத்., 4-ம் புத்.; ருக்-சங்கிதை, x. 18, 11; Monier-Williams' *Indian Wisdom*, pp. 206–210.) கர்நாடகதேசத்து ஹவிக் பிராமணரும், மலையாளதேசத்து நம்பூரிபிராமணரும் ருதுவானபின் பெண்களை விவாகஞ்செய்துகொடுக்கிறவர்களாகவே நாளதுவரையிருக்கிறார்கள். வடஇந்தியாபிராமணரில் மிச்சமானபேரும், க்ஷத்திரியரும் சாதாரணமாய் மீனும்மாம்சமும் புசிக்கிறார்கள். அப்படியே, மைசூரைச்சேர்ந்த (Kanghal) குங்கல் பிராமணரும், மலையாளநாட்டிலும் ஒட்டிய தேசத்திலுமுள்ள சில பிராமணவகுப்பாரும் மாம்சம்-மச்சம் வரைவின்றி சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறது. கோவில்களில் மாம்சபலியிடுவது, கௌட

தேசங்களில் சாதாரணமாய் பிராமணராலே நடைபெறுங் காரியமாகவுமிருக்கிறது. ஷை ஹவிக்பிராமண ஸ்திரீகள் பிராமணரல்லாத இதரஜாதிப் பெண்களுக்கு ஒற்றுமையாகவே வஸ்திரம்தரிப்பார்கள். அப்படியே ஒட்டிய தேசத்து (Santos) சான்றோர் என்னும் பிராமணவகுப்பாரின் ஸ்திரீகளுடைய உடுப்பும் மற்றும் பிராமணஸ்திரீகளின் உடுப்புக்கு வித்தியாசமாயிருக்கிறது.

(17). க்ஷத்திரியர்தரிக்கும் பூர்வஅடையாளங்களிலொன்றாகிய 'பூணூல்' என்னும் யக்ஞோபவீதமும் நாடார்குலத்தவருள் பாரம்பரையாய் அனுசரிக்கப்பட்டே வந்திருக்கிறது. எப்போதும் பூணூல்தரித்திருப்பவர்களும் நாடார்குலத்துள் அங்கங்கே மிச்சமாயிருந்துவருவதுந் தவிர, அவர்களுள் ஏழைகளும் கைவேலைசெய்கிறவர்களுமானவர்கள் எப்போதும் பூணூல்தரித்திராவிட்டாலும், விவாகம், உத்தரகிரியை முதலான சந்தர்ப்பங்களிலும் மதசம்பந்தமான அனுஷ்டானங்கள் நடக்கும்போதும் கட்டாயம் அதைத்தரிப்பதுண்டு. இதுபோக, அங்கங்கே நாடார்களின் பாரம்பரை இந்துமதஇயற்கையான குடியிருப்புகளுக் கூடே கிறிஸ்தவமிஷன்கள் வந்து ஸ்தாபகமாகி, பழய இந்துமத அனுஷ்டானங்களிலனேகம் புத்தியீனமாயேற்படுத்தப்பட்டவைகளென்று போதிக்கவும் பகிடிபண்ணவும் ஆரம்பித்துவிட்டதால், இந்தப் பூணூலணிதல் முதலான பழயவழக்கங்கள் புதுநாகரீகங்களை மதிக்கிற பல நாடார வாலியர்களால் அவமதித்து அயரவிடப்பட்டு வருகின்றன. ஆகிலும், ராஜபுதனத்து (Ajmire, Merwara). அஜ்மீர்-மேர்வாரமாகாணங்களின் 1881ம் வருஷத்து சென்சஸ்ரிப்போர்ட்டில், (Pandit BLagram) பண்டிதர் பாக்ராம் என்னும் சென்சஸ் ஆபீசர் அனுபவத்திலறிந்தெழுதிவைத்திருப்பதும், இதன்கீழே எடுத்தெழுதப்பட்டிருப்பதுமான வடஇந்தியாக்ஷத்திரியரான ராஜபுத்திரரின் நாளதியற்கைக்கு, தென்இந்தியக்ஷத்திரியரான இந்த நாடார்குலத்தவரின் நாளதியற்கையும் வழக்கபுழக்கங்களும் அநேகவிஷயங்களில் மேலானஸ்திதியிலிருக்கின்றனவென்றே யறியவேண்டும். அதாவது:-

"As all the Brahmans are not Priests, so all Rajputs are not warriors, they too have their industrial classes, and there are villages in these districts and in the neighbouring States, in which they are only known as peaceful agriculturists.—To such an extent have the Rajputs forsaken the religious principles of their forefathers, that the majority of them *do not even wear* the sacred thread, or perform the daily ablutions and attendant ceremonies, they are therefore considered by the Brahmans little better than Sudras." "நாளதில் பிராமணரெல்லாரும் தங்கள்ஜாதிக்கேற்பட்ட குருத்துவவேலைகளைச் செய்யாதிருப்பது போல, ராஜபுத்திரரும் தங்கள்ஜாதியியற்கைப்படி யுத்தவீரராயிருக்கவில்லை. ராஜபுத்திரருக்குள் கைத்தொழில்வேலைசெய்வோர் அநேகராயிருப்பதுமாத்திரமல்ல, இந்தஜில்லாக்

களிலும் இவைகளுக் கடுத்துள்ள ராஜபுத்திரராச்சியங்களிலும் அவர்கள் சாதாரண பயிர்டும்வேலைக்காரராயிருக்கிற கிராமங்களுமிருக்கின்றன.— இதுபோக, இந்த ராஜபுத்திரர், இதனடியில் விவரம்சொல்வதற்கும் அதிகக்கேவலமாய், தங்கள் முற்பிதாக்க ளனுசரித்துவந்த மதானுஷ்டானங்களை மறந்துபோய்விட்டார்கள்; அதாவது ராஜபுத்திரஜாதியாரில் வெகுஜாஸ்தியானபேர் பூணூல்கூட தரிக்கிறதில்லை; நித்திய பூஜை அனுஷ்டானங்களையும் அதுசம்பந்தமான மற்றும் கிரியைகளையும் செய்கிறதில்லை. இதினுலே பிராமணர், ராஜபுத்திரஜாதியாரை சூத்திரஜாதியாரைப்போலவே எண்ணிவருகிறார்கள்" என்பதே.

(18). மேலே சொல்லியபடி, நாடார்கள், தென்நாட்டில் எந்த ராஜாங்க விபத்தினுலும் அடிமைகளாகாமல் பூபதிகளா யிருந்துவருவது மாத்திர மல்ல, தங்களுக்கு ஏவல்வேலைகள்செய்யும் நிமித்தியம்ஞாபகத்துக்கெட்டாக்காலமுதல் பள்ளர், பறையர் முதலான உழவடைச்சாதியாரை கிரயங்கொடுத்து வாங்கி, கொண்டல்மாற்றல்செய்து, அடிமைகளாகவைத்து உபயோகப்படுத்துகிறவர்களாகவும் இருந்துவந்தார்கள். ஐரோப்பியரின் செல்வாக்குசெல்லும் தேசங்களெங்கும் மனுப்பிராணிகளை மிருகங்களைப்போற் கொண்டல்மாற்றல்செய்து கொடுமையாய் வேலைவாங்கும் செய்கையை கட்டாயமாய் நிறுத்திக்கொண்டுவரும் நடபடிக்கை, இந்தியாவில் 1843-ம்வருஷத்து V-வது இந்திய ஆக்டினுல் ஆரம்பமாகி, அது தென்இந்தியாவில் பூரணமாய் அமுலுக்குவரும் காலம்வரை நாடார்குலத்தவர் பள்ளர்-பறையர் முதலான ஜாதியாரை அடிமைகளாகவைத்து வேலைவாங்கும் பாரம்பரை வழக்கத்தை வைத்தேயிருந்தார்கள். அதற்குப்பின்தான் அந்த வழக்கம் சன்னம்சன்னமாய் நிற்பாட்டப்பட்டிருக்கிறது. நாடார்கள் பள்ளர்-பறையரை அடிமைகளாகவாங்கி கொண்டல்மாற்றல்செய்த நூற்றுக்கணக்கான வருஷங்களின் ஓலைப்பத்திரங்களை இன்றைக்கும் தகுதிண மாற நாடார்களின் வீடுகளில் வண்டிக்கணக்காகப் புரட்டியெடுக்கலாம். அடிமைவாங்கும்ஏற்பாடு மேற்கண்ட சட்டத்தினுல் எடுபட்டுப்போனுலும், தற்போதும் பள்ளர் முதலிய ஜாதியோர், நாடார்குலத்தவரை, 'நாயன்' ('நாயினு'), 'எஜமான்கள்,' 'மகாராசா' முதலான உயர்வக்கணைகளுடன் அழைக்கும் வழக்கமும், நாடார்களில் சற்று அந்தஸ்துடையவர்களைச் சந்திக்கும்போது நின்றும்-சாஷ்டாங்கம்செய்தும் நமஸ்கரிப்பதும், நாடார்களைக் கண்டவுடனே தங்கள் மேல்வேஷ்டியை இறக்கிவிடுவதும், தங்கள் கலியாணக்காலங்களிலுமுதலாய் நாடார்களிருக்கும் தெருக்கள்வழியாய்ப் பவனிபோகாமல் ஒதுங்கிப்போவதும், நாடார்களுடைய தண்ணீர்க்கிணறுகளின் சமீபத்தில்கூட வாராமல் விலகிப்போவதும், இன்னும் பல மரியாதைநடபடிக்கைகள்செய்வதும் இருந்தே வருகின்றன. இதுசங்கதிகளை மதராஸ்-பிஷப்பா யிருந்த (Bp. Gell) ஜெல் என்னும் அதிகண்ணியம்பொருந்திய துரையும், திருநெல்வேலிஜில்லாவில் மிஷனரியும் பிஷப்புமா யிருந்து, அவ்விடம் ஜனங்களோடு மிகவும் புழங்கிய

(Bp. Sargent)பிஷப் சார்ஜென்றுதுரையும் ஒப்பியெழுதி, அது 1868-ஆ பிரசுரமான ஒரு புஸ்தகத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:

"They (*i. e.* The Chantrars) buy Pariahs and Pallas, to work in their houses as slaves, so as to retain their usual proud customs."—"They (*i. e.* The Pallas) are not usually allowed, during their marriage feast days, to ride on horseback through the streets of Nadakkals or Chantrars who are generally landholders and of an influential caste of this place."— "The people (Chantrar) would not allow our horse-keepers or other servants, being Pariahs, to draw water at the village well.-Pariahs and Pallas in passing through a Chantrar village would not be allowed to do so with shoes on their feet."

(19). காளதிலும் நாடார்ஜாதியார் நிலச்சுவான்களா யிருந்து, அநேக கிராமங்களையும், பெரும்பகுதியான நஞ்சைபுஞ்சை நிலங்களையும் தங்கள் ஆதீனத்தில் வைத்திருந்து பள்ளர்-பறையர் முதலானவர்களைக் கொண்டும், தாங்கள் நேரிலும், விவசாயவேலைகளை மதிப்புடன் நடத்திவருவதை தங்கள் தொழிலாக தென்திருநெல்வேலி- மேல்திருநெல்வேலி- நாஞ்சில் என்னும் நாடுகளிலும், நிலஆதீனத்தோடே வியாபாரத்தை பெருமிதமாய் நடத்துவதாக, வடதிருநெல்வேலி நாட்டிலும், ராமநாதபுரம்-மதுரை ஜில்லாக்களிலும் இருந்துவருகிறார்கள். ஜமீன்தார அந்தஸ்துள்ள பெரும் நிலச்சுவான்களாகவும் அவர்களில் இன்னும் அநேக பாரம்பரைக்குடும்பத்தவர் இருந்துவருகின்றனர். பல இதரஜாதிகளுக் கொப்பந்தமாய் கைத்தொழில்கள்- கூலிவேலைகள் செய்வோ ரெல்லாம் அவர்களுள் ஏழைகளே யாவர். நாடார்ஜாதியாரின் தற்காலத் தொழில்விஷயமாய் பிஷப் கால்டுவெல்துரை, 1857-ம்வருஷத்தில் இங்கிலாந்தில்செய்த ஒரு உபநியாஸத்தில், "A considerable proportion of the Chantrars are owners of the land they cultivate, many are engaged in trade, and some of both these classes are wealthy as wealth is estimated amongst peasantry; whilst one family, being Zamindars, is entitled to be classed with the gentry of the province." "சான்றோரில் பெரும்பாகத்தார் தாங்கள் பயிர்வேலை நடத்துகிற நிலங்களின் சுவான்தார்களா யிருக்கிறார்கள்; அநேகர் வியாபாரத்தில் பிரவிர்த்தியுள்ளவர்கள். சமுசாரிகளுக்குள் ஐஸ்வரியம் மதிக்கப்படுகிற ரீதியில், அவ் விருவகுப்பாரிலும் சிலர் ஐஸ்வரியவான்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுள் ஒருவகுப்பார் (பூமியாதீனக்காரரான) ஜமீன்தார்களா யிருப்பதால், அவர்கள் தென்இந்தியாமாகாணத்தின் பிரபுக்கள்வரிசையில் சேரத்தக்கவர்களா யிருக்கிறார்கள்" என்றும், 1869-ம்வருஷத்தில் மதராஸில்செய்த உபநியாஸத்தில், "Many of them

(*i. e.* Chantrars), perhaps the greater number, are cultivators of theland, like other ryots; sometimes renters, sometimes proprietors of the land they cultivate. Some are traders, and some are day-labourers." "சான்றோரில் அநேகர், அதாவது, அவர்கள்தொகையில் அதிக ஜாஸ்தியானபேர், மற்றும் சாதாரண சம்சாரிகளைப் போல, நிலத்தில்பயிர் செய்கிறவர்களா யிருக்கிறார்கள். இப்படி, தாங்கள்பயிரிடும் நிலங்களுக்கு அவர்கள் சிலவேளைகளில் குத்தகைதார்க ளாகவும், சிலவேளைகளில் சுவான்தார்க ளாகவும் இருக்கிறார்கள். இன்னும்சிலர் வியாபாரிகளாகவும், சிலர் நாள்வேலைக்காரராகவும் இருக்கிறார்கள்" என்றும் சொல்லியிருக்கிறார். 1909-ல் வெளியான தென்இந்திய எத்னொகிரபிபுஸ்தகத்தில் (VI. 371), "In many villages they (*i. e.* the Nadars) own much of the land, and monopolise the bulk of the trade and wealth." "அநேக கிராமங்களில் ஜாஸ்தியான நிலச் சொத்துக்கள் நாடார்களின் ஆதீனத்திலேயே யிருந்துவருகின்றன.-மேலும், இத்தேசத்தின் வியாபாரத்துக்கும் திரவியத்துக்கும் அவர்களே சுதந்தரக்காரர் போ லிருக்கிறார்கள்" என்றும், 1917-ல் வெளிவந்திருக்கிற 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டுகெஜட்டியரி'ல், "In some villages Chandrans have long been well-to-do landowners; in the centres of trade rich Chandran merchants are numerous." "சில கிராமங்களில் சான்றோர் பழயகாலந் தொட்டு பூமியாதீனக்காரரா யிருந்துவருகிறார்கள்; வியாபாரத்துக்குப்பொருப்பான இடங்களில் தனவந்தரான சான்றாரவியாபாரிகள், ஏராளமா யிருக்கிறார்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(20). மதவிஷயத்தில், நாடார்கள், வேதங்கள் எழுதப்பட்டகாலத்தி லுள்ள தங்கள் தமிழரச முன்னோரின் அப்பட்டமானசிவமதத்தை பெரும்பான்மையாகவும், சிற்சில இடங்களில் விஷ்ணுமதத்தையும் அனுசரிக்கிறவர்களாகவு மிருக்கிறார்களே யல்லாமல், அவர்கள் மதம் சாதாரண இந்துமதத்துக்கு ஒருபோதும் விகற்பமான தல்ல. 'சைவம்' என்று பேர்சொல்லி மாம்ச மருந்தாதிருப்பது, மதுசம்பந்தித்த பொருள்களை அர்ச்சனைக்கு விலக்குவது முதலான வேதவிதிகளுக்குவிகற்பமான நடபடிக்கைக ளெல்லாம், பூர்வ இந்து மதத்துக்கு வேற்றுமையாய் புத்த-ஜினமதம் இந்தியாவில் பெலத்து விருத்தியான காலமுதல் ஏற்பட்ட கலப்பு நடபடிக்கைகளே யன்றி வேறல்ல. அந்தப்படி, நாடார்களுடைய மதம் சாதாரண மற்றும்இந்துக்களின் மதத்துக்குச் சரியான சிவமதம் அல்லது இந்துமதமே யல்லாமல் அதற்கு கிஞ்சித்தும் விகற்பமுள்ள தல்ல என்றும், பேய்களென்னப்படுவதுகளுக்குச் சிலசமயங்களில் அர்ச்சனைசெய்வது, சாதாரணமாய் இதரஉயர்ஜாதிகளுக்கு முரிய இந்து மதத்தின் ஓர் பாகமே யல்லாமல் வேறல்ல என்றும்,நாடார்கள் இந்துமதத்துக்கு

விகற்பமான பேய்மதத்தையனுசரிக்கிறவர்க ளென்று தாம் முன்னொருகாலத்தில் தப்பிதமா யெழுதி உலகமொத்தமும் நாடார்குலத்தவரை அந்தவிஷயமாய் அவமதித் தெழுதும்படி செய்துவிட்டதும் மனவருத்தமானகாரியமா யிருக்கிற தென்றும், பிஷப் கால்வெல்துரை, தாம் 1869-ல் மதராசில் செய்த மேற்கண்ட உபநியாசத்திலும், 1880-ம் வருஷத்தில் ஒரு மாதாந்தரப்பத்திரிகைக் கெழுதிய தம்முடைய ஒரு ஆர்ட்டிக்கிலிலும் விவரமாய்ச் சொல்லி யிருக்கிறார். பிஷப் கால்வெல் துரையின் அந்தஎழுத்துக ளாவன:—

1869.—"That they (*i. e.* the Chantrars) are not Hindus is quite a mistake. If the term Hindu denotes nationality, the Chantrars are Hindus, because they have been resident in India from a period beyond which the memory of man runneth not. If the term denotes religion, then also the Chantrars are Hindus, because, though they are addicted to the worship of devils, yet they also worship the great Hindu divinities and wear the sectarial marks, pretty much like the rest of the people, and because their devil worship is not opposed to the worship of Siva, but has been incorporated with it, and as a matter of fact is practised by the people of many of the higher castes in Tinnevelly, about whose Hinduism no doubt can be entertained. But surely it would not be asserted by any one that none but the Brahmans are Hindus. The Chantrars are not isolated from the rest of the community, but are simply one caste out of many,—Hindus in their nationality and Hindus in their religion, like the rest of the Tamil castes above and below them in the social scale."

1880.—"I may here notice a misconception with regard to the Chantrars, which appears widely to prevail, viz., that they are 'not Hindus.' - -This expression had better be avoided for the future, as the use of it is erroneous and misleading, the Chantrars being not only Hindus by domicile, but also, in the original heathen condition, Hindus by the profession of the ordinary Hindu religion,-and Hindus in virtue of their being members of a recognised Hindu caste. - - This notion that the Chantrars are not Hindus is a notion unknown to the Hindus themselves. It appears to be altogether a European misapprehension."

வடஇந்தியாவில் பிராமணரும் மற்றும் உயர்ஜாதிஇந்துக்களும் தென்இந்தியாவின் பலஜாதியாருக் கொப்பாகவே சாதாரணமாய் கோவில்களில் மாம்சபலி செய்துவருவதைப் பற்றி (R. Rickards Esq.) ரிக்கார்ட்ஸ் என்னும்துரை 1832-ல் லண்டனில் அச்சிட்ட '*India* இந்தியா' (Vol. I. p. 52) என்னும் புஸ்தகத்தில் எழுதியிருப்ப தாவது:—

"I have now myself seen Brahmins of the highest caste cut off the head of goats as a sacrifice to *durja*; and I know from the testimony of Brahmins, as well as from other sources, that not only hecatombs of animals are often offered in this manner, as a most meritorious act (a rajah about twenty-five years back, offered sixty thousand in one fortnight); but any person, Brahmins not excepted, eats readily of the flesh of whatever has been offered up to one of their divinities."

(21). "கற்புடையசாதி யென்று கணக்கி லெழுதுமென்றார்" என்று, மனுஷர் இறந்தபின்பு யமலோகத்தில் ஒவ்வொருவரையும் பற்றி அபிப்பிராயம் எழுதப்படுவதில், நாடார்குலத்தவரின் விசேஷகுணமாக கற்புநெறி இருந்துவருவதாய் யமதர்மராஜாவாலும் தீர்ந்திருப்பதாக 'சித்திரபுத்திரநயினார் கதை' என்னும் பழய தமிழ்ப்பாடலில் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கு, நாடார் குலத்தவரின் ஆடவருங்கூட, தென்இந்தியாவில் உயர்ந்தஜாதிக ளென்னப்படுகிற, மற்றநேகருக்கு மேலாக கற்புநிலைச்சுத்தாங்கத்தைப் பரிபாலித்துநடக்கிறவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய ஸ்திரீகளின் கற்போ அக்கினிக்குச் சமமானது. இந்துமத இயற்கையில் அவர்கள்ஜாதியின் விதவைகள் ஒருபோதும் மறுவிவாகம் செய்துகொள்ளுகிறதில்லை. (Divorce) தீர்த்தறுத்துக்கட்டும் வழக்கமும் அவர்களுக்குள் இல்லவே யில்லை. கள், சாராயம் முதலிய எவ்வித மத்யபானமும் அருந்துகிறதில்லை. இன்னும் நற்குலஇந்துக்களுக் கமைந்தான மற்றும் சதாச்சாரங்களிலும், விசேஷ நற்குண-நற்செய்கைகளிலும், நாடார்குலத்தவரைவிட மேம்பட்டோர் தென்இந்தியாவில் இல்லவேயில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அந்தப்படி, நாடார்குலத்தவருள் கைமைவிவாகம்செய்யும் வழக்கம் முன்ஒருகாலமும் கிடைக்கவேகிடையா தென்பதாக பிஷப் கால்டுவெல்துரை, (A. F. Cox Esq., M. C. S.) காக்ஸ்துரை, (Sir H. A. Stuart, I. C. S.) ஸர் ஸ்டுவார்ட்பிரபு, கனம் வி.பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள், 'திருநெல்வேலி டிஸ்டிரிக்மானுயலி'ல் (A. J. Stuart Esq., M. C. S.) ஸ்டுவர்ட்துரை முதலிய கனவான்களும், 'திருவாங்கூர் ஸ்டேட் மானுயலி'ல் கனம் திவான்பஹதூர் வி. நாகமய்யாவவர்களும் சாட்சிபகர்ந்திருக்கிறார்கள். (Rev. R. R. Meadows) மெடோஸ் என்னும் மிஷனரிதுரை 1863-ல், "The Chantrar caste, among whom as heathen, the marriage of widows is not allowed." "சான்றோர்ஜாதியார், தங்கள் பழய (இந்து)மத இயற்கைப்படி, விதவைவிவாகம்செய்ய உடன்படுகிறதேயில்லை" என்று எழுதியிருக்கிறார். அப்படியே, திருவாங்கூர்ராச்சியத்தின் தமிழ்ப்பகுதியான நாஞ்சினாட்டிலிருந்த (Rev. S. Mateer, F. L. S.) மத்தீர் பாதிரியார் 1871-ல் "They (The Nadars) are usually faithful in the

observance of the marriage bond, and are somewhat more chaste and truthful, more grateful and less prejudiced, than many other classes of the Hindus. They appear to have been providentially prepared to lend a willing ear to the truths of the gospel." "நாடார்கள் வழக்கமாய் விவாகஉடன்பாட்டுப்பிரமாணங்களில் உண்மையுள்ளவர்களா யிருக்கிறார்கள். மற்றும் அநேக இந்துஜாதிகளை விட கற்புநிலைச்சுத்தாங்கத்திலும் உண்மையிலும் மேம்பட்டவர்களும், அதிக நன்றியறிதலுள்ளவர்களும், தப்பெண்ணம்கொள்ளும் துர்க்குணத்தில் குறைந்தவர்களுமானவர்கள். அவர்கள் சுவிசேஷத்தின் உண்மைகளுக்கு மனங்கொண்டுசெவிகொடுக்க தெய்வேத்தனமாய் ஆயித்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது" என் றெழுதியிருக்கிறார்.

(22). நாடார்குலத்தவர் இவ்விடம் பிராமணர்களுக்கும் மேலாக கள்ளையும் மற்றும் லாகிரிப்பானங்களையும் அருந்தாமல் விலகுகிறவர்கள் என்பதாக 1850-லும், 1857-லும் பிஷப் கால்டுவெல்துரையும், 1854-ல் (Rev. J. Mullens) மல்லன்ஸ் என்னும் மிஷனரிதுரையும், 1856-ல் (Rev. J. Thomas) தாமஸ் என்னும் மிஷனரிதுரையும், 1883-ல் (Rev. F. J. Leeper) லீப்பர் என்னும் மிஷனரிதுரையும், 1907-ல் கனம் வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்களும் எழுதியிருக்கிறார்கள். (Rev. E. R. Baierlein) பையர்லேன் என்னும் பாதிரியாரோ, தென்இந்தியாவில், நாடார்ஜாதியார் மாத்திரந்தான் குடிவெறிப்பாவத்தை அதிவிசேஷஇயற்கையாய் அகற்றினவர் ளென்றும், இங்கிலீஷ்கவர்ண்மென்றாரின் அப்காரிடிப்பார்ட்மென்றாலும், ஐரோப்பியக்கிறிஸ்தவர்கள் பலரின் அநாசாரங்களாலும் குடிவெறி மிகுந்துவிட்ட இக்காலத்திலுங்கூட, அதை அதிகமாய்ப் பின்பற்றாமல் விலக்கியிருப்பவர்கள் இந்த ஒரே ஜாதியாரே என்றும், தமிழ்நாட்டின்விவரமா யெழுதிய தம்முடைய புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார். மேற்கண்டது முதலான நாடார்ஜாதியின் உயர்குல ஆசாரங்களைக் குறித்து, பிஷப் கால்டுவெல்துரை 1857-ல் செய்த (*Lectures*) உபநியாஸங்களில் சொல்லியிருப்ப தாவது:—

"In some respects the position the Chantrars in the scale of castes is peculiar. Their abstinence from spirituous liquors and from beef, and the circumstance that their widows are not allowed to marry again, connect them with the Sudra group of castes." "சில விஷயங்களில், ஜாதிகளின் உயர்வுதாழ்வு சம்பந்தமான அந்தஸ்தியற்கையில் சான்றோரின்நிலைமை தனிவிசேஷம்பொருந்தியதாயிருக்கிறது. அவர்கள் மத்யபானங்களையும், மாட்டுமாம்சத்தையும் அருந்தாமல் விலகுவதும், தங்கள்ஜாதி விதவைகளை மறுவிவாகம்செய்ய இடங்கொடாதிருப்பது மாகிய அவர்கள் நடபடிக்கைகள், அவர்களை உயர்வகுப்பு சூத்திரக் கூட்டத்தாரோடே சேர்ந்தவர்களாகக் காட்டுகின்றன" என்பதே. [ஆனால்,

தங்களை சூத்திரவகுப்போடே சேர்ப்பதை சான்றோர் ஒருபோதும் ஒப்புவதில்லை.
1857-ம் வருஷத்து அதே உபநியாஸத்தின் இன்னொரு இடத்தில் ஷெடி
பிஷப் சொல்லுகிறபடி, "as a caste, they (*i. e.* the Chantrars) are strictly
temperate, in which respect they - claim to be ranked with the
higher castes." "ஜாதிமொத்தமாய்ப் பார்த்தால், சான்றோர் மத்யபானத்தை
கண்டிப்பாய் விலக்குகிறவர்களா யிருப்பது மாத்திர மல்ல, இந்தவிஷயமாய்
தாங்கள் உயர்ஜாதிகளோடு சேர்ந்தவர்க ளென வழக்கிடுகிறவர்க ளாகவு மிருக்
கிறார்கள்."]

நாடார்ஜாதியாரின் உயர்குலஒழுக்கங்களைக் குறித்து, மதராஸ்கவர்ன்
மென்று ஸிவில்வெற்றரினரி டிப்டிசூப்பரின்டென்டென்டா யிருந்தவர்களும்,
மிகவும் மதிப்புப்பெற்ற தமிழ்வித்வானும், சைவமுதலியார்கள்வகுப்பில் பரம்
பரையாய் மிகுந்த அந்தஸ்துப்பெற்ற குடும்பத்தில் ஜனித்தவர்களு மான மேற்
கண்ட கனம் வி. பி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் 1907-ல் எழுதியிருப்ப
தாவது:—

"தென்சில்லாக்களி லுள்ள மறவர்-இடையர் முதலிய சாதிகளின் ஒழுக்
கத்துக்கு அச் சில்லாக்களி லுள்ள சான்றா ரொழுக்கம் குறைவுபட்டதாகத்
தோன்றவில்லை. உயர்ந்தசாதிகளுக் குரிய ஒழுக்கங்களுள் மாமிசம்புசியாமை
யும் விதவைகள்கலியாணஞ்செய்யாமையும் முக்கியமானவை. அவ் விரு வழக்
கங்களும் நல்லவையோ தீயவையோ வென்பதைப்பற்றி நான் இங்கே பேச
வில்லை; அவைகளை ஆராய்வதற்கு இது இடமு மன்று. இவ் வழக்கங்கள்
தற்காலம்வரை இந்தியாவில் சாதியாசாரங்களுள் மேற்பட்டவைகளாகக் கருதப்
படுகின்றன வென்பது, நான் விவகரிக்கப்புகுந்த விஷயத்துக்கு அவசிய
மாதலால், நான் அவ் வழக்கங்களை இங் கெடுத்துக்கூறினேன். கள்ளுண்
ணாமை, விதவாவிவாகஞ்செய்யாமை முதலிய உயர்குலவழக்கங்களுடைய சான்
றார் பல சிறந்தநல்லொழுக்கங்க ளுடையவர்கள்; ஆச்சரியப்படத்தக்க விடா
முயற்சி யுடையவர்கள். இப்படிப்பட்ட குணங்களையுடைய சாதி, மெலியாரை
வலியார் வருத்தவிடங்கொடாத ஆங்கிலேயஇராசாங்கத்தில் மேன்மையடைய
ஆரம்பித்திருப்பது இயல்பே" என்பதே.

குறிப்பு. க்ஷத்திரியராகிய பாண்டியர்-சோளர் வகையரா தமிளரசகுலத்தவர்,
தர்மசாஸ்திரவிதிப்படி ஆரியரின் குடித்தனவொழுக்கங்களா யிருப்பவைகளில்,
(Divorce) தீர்த்தறுத்துக்கட்டாமை, விதவைவிவாகம்செய்யாமை, மத்யபா
னம்அருந்தாமை முதலிய விசேஷநடபடிக்கைகளை ஆதிமுதல் பாரம்பரையாய்
(பிஷப் கால்டுவெல்துரை 1850-ல் எழுதுகிறபடிக்கு, "as carefully as the
most punctilious Brahmins" "மகாதிட்டவட்டமுள்ள பிராமணர்களுக்
கொப்பந்தமான கருத்துடன்") அநுஷ்டித்துவருகிறவர்க ளென்பது நிச்சய
மான சங்கதி. அப்படியிருக்க, மேன்மைக்ஷத்திரிய ஒழுக்கங்களை யுடைய இந்த
நாடார்குலத்தவரைத் தவிர்த்து, தீர்த்தறுத்துக்கட்டுவதும், கைம்மைவிவாகம்செய்
வதும், மத்யபானங்களையருந்துவதும், களவு-கொள்ளை- கொலைபாதகங்களைச்
செய்வது மான கீழ்மக்களின் நீசநடபடிக்கைகளில் எதையாகிலும் பாரம்பரைக்

குலவழக்கமா யுடைய எச் சாதியாராவது, மேற்கண்ட "நெறியினாற்றிய அறி
வன்" (தொல்காப்பியம், III. 2. 20) அல்லது "உசிதன்" (=சகல ஒழுக்கங்
களிலும் மேலானவன்) ஆகிய பாண்டியன் வகையரா தமிழரசரின் வம்சத்தா
ரும்குலத்தாரு மாகிவிடுவார்களோ என்று சப்தம்கூறவும் நம் நாடார்குலத்தவ
ருக்குப் பாத்திய மிருக்கிறது. - விஷயம் இப்படியிருக்க, (H. R. Pate Esq.,
I. C. S.) பேட்துரையவர்களைக்கொண் டெழுதி, கவர்ண்மென்றார் 1917-ல்
பிரசுரமாக்கியிருக்கும் 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டுகெஜட்டீரி'ல், நாடார்குல
விஷயமாய் உண்மைக்குவிகற்பமும் நிந்தையு மான அநேக சங்கதிகள் எழுதப்
பட்டிருப்பதில், "the re-marriage of widows விதவைகளுக்கு விவாகஞ்
செய்வதை" மாறநாட்டாரும் மேனாட்டாரு மாகிய "Members of the first
two sub-divisions allow இரண்டு வகுப்பினரும் இடங்கொடுத்து நட
படிக்கைசெய்கிறார்கள்" என்றும் (p. 130), "Divorce தீர்த்தறுத்துக்கட்டும்
வழக்கம்" "is not forbidden விலக்கப்படவில்லை" (p. 130) என்றும்,
இதற்குவித்தியாசமாய், ஷெடி நடபடிக்கைகளை விலக்குவதாகத்தெரிவ தெல்
லாம், உயர்ஜாதியாவதற்காக வேணுமென்றுகாட்டும் பாவனைநடபடிக்கைக
ளென்றும் (p. 106) சொல்லப்பட்டிருக்கும் சங்கதிகள், மேற்கண்ட மேன்மை
யொழுக்கங்களைப் பாரம்பரையா யுடைய இந் நாடார்குலத்தினருக்கு மிகவும் மன
வருத்தமுண்டாக்குவதா யிருக்கிறது.

(23). டாக்டர் தர்ஸ்ட்டன்துரை கவர்ண்மென்றாரின் உத்தரவுப்படி
தயாரித்த (*Castes and Tribes of Southern India* என்னும்) எத்னொகிர
பிக் பிரசுரத்தில், தாம் திருநெல்வேலிச்சீமைக்குப் போய் நாடார்ஜாதியாரின்
தேகலக்ஷணங்களைப் பரிசோதனைசெய்ததில், அவர்கள் தேகலக்ஷணத்தின்
மேன்மையும், தேகப்பயிற்சி சம்பந்தமான அவர்களின் அப்பியாசங்களும்
தமக்கு மிகவும் மனதில்பதியக்கூடிய வைகளா யிருந்ததாகவும், 'ஆஜாநுபாஹு'
அதாவது, முழங்கால்வரை கைநீண்டிருக்கும்இயற்கை, ராஜகுலத்தவர் என்
பதைக்காட்டும் விசேஷஅடையாள மாக உலகெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்
டிருக்கிறபடிக்கு, பழயகாலத்தில் ஸ்ரீராமரும், ரோப்ராய் எனபவரும் ஆஜாநு
பாஹுவா யிருந்ததாகவும், அந்தப்படியே முன் மதராஸ்கவர்னரா யிருந்த ஸர்
தாமஸ் மன்றோ பிரபுவுக்கும் கைகள் முழங்கால்வரை நீண்டிருந்த தாகவும்,
தாம் தென்இந்தியாவின் அநேகஜாதிகளின் தேகக்கூறுபாடுகளை ஆராய்ந்த
மொத்தவேலையிலும், இந்த விசேஷ ராஜத்வஅடையாளத்தை ஒரு நாடார்குலத்
தவரிடத்தில் மாத்திரம் தாம் கண்டுபிடித்திருப்பதாகவும் மிகவும்வியப்பாய்
எழுதியிருக்கிறார். அந்த வசன மாவது:—

"With the physique of the Chandrans, whom I examined at
Nazareth and Sawyerpuram in Tinnevelly, and their skill in

physical exercises I was very much impressed.—One of the good qualities of Sir Thomas Munro, formerly Governor of Madras, was that, like Rama and RobRoy, his arms reached to his knees, or, in other words, he possessed the kingly quality of an Ajanu-bahu, which is the heritage of kings, or those who have blue blood in them. This particular anatomical character I have met with myself only once, in a Chantran, whose height was 173 cm. and span of the arms 194 cm. (+21 cm.)."

இதற் காதாரமாக, 1806-ம்வருஷத் தளவில் திருநெல்வேலிச்சீமையில் மிஷனரிவேலை பார்த்த (Rev. W. T. Ringeltaube) ரிங்கில்டாப் என்னும் துரை, தன்னியற்கையாய் எழுதிவைத்திருக்கிற ஒருகுறிப்பும் சாட்சி கொடுக்கிறது. அதாவது:—"The Chantrars are a set of people more robust than other Indians;-their features completely European.—They divide themselves into five families." "சான்றோர் ஒருவகையான கட்டுப்பாடுள்ள ஜனங்கள்; மற்றும் இந்தியருக்கு மேலான புஜபலபராக்கிரம முடையவர்கள்; அவர்கள் முகச்சாயல் பூராவும் ஐரோப்பியருக் கொத்ததாயிருக்கிறது. அவர்களுக்குள் ஐந்து உட்பிரிவுக ளுண்டு" என்பதே. நாடார் குலத்தவர் தமிழ்த்தேசத்தி லுள்ள சகல ஜாதிகளையும்விட மானத்தோடுகூடிய வீரசூரபராக்கிரமத்தில் மேற்பட்டவர்க ளென்பது, மேற்கண்ட துரைமாரின் சாட்சியங்களினால் மாத்திர மல்ல, இங்கிலிஷ்ராஜாங்கம் இவ்விடத்தில் நிலைப்படுவதற்கு முன்னால் அவர்கள் இவ்விடம் பலஜாதி எதிரிகளோடு பற்பலகாலங்களில் செய்யநேர்ந்த யுத்தங்களி லெல்லாம் அடைந்திருக்கும் வெற்றிச்சரித்திரங்களைக் கவனிப்பதினாலும் தெரியவரும்.

(24). நாடார்குலத்தவரின் கலியாணஉற்சவங்களிலும், நாடகசாலைகளிலும், அவர்களுடைய குலவழமைகளைக் குறிப்பிட்டு கணியார் (=மாகதர்) பரம்பரையாகப் படித்துவருகிற "வணங்கான் மாலை" என்னும் வாழ்த்திலும், நாடார்குலத்தவர் முற்காலத்தில் தமிழ்நாட்டு அரசாளுஞ்சாதியா யிருந்த விசேஷங்கள் தெளிவாய்க் குறிப்பிடப்பட் டிருக்கிறது. அதின் சரியானவாசகமாக, மதராஸில் 1912-ல் அச்சான ஒரு புஸ்தகத்தி லிருப்பதை இங் கெடுத்துக்கூறுகிறேன். அதாவது:—

"சங்கை திங்கட்கு லாதிபன்; —சக்ரவர்த்தி ஈனன்வங் கிசத்தோன்;
பஞ்சதிராவிட முதல்வன்; —பரம்பரைப் பாண்டியன்; நாடான்;
சக்தகன்னி புத்திரன்; —தமிழைக் குருமுனிக் குரைத்தவன்;
கல்விச்சங்க முடையவன்; —காசமுத்திரை விடுத்தவன்;
வேப்பமாலை தரித்தவன்; —மேலவாசல் விசேடத்தோன்;
கொற்கை-மதுரை யாண்டவன்; —கோலப்பனைமீன் கேதனன்;

வில்வாள்வித்தை வல்லவன்; —சொல்லுறுதி விடாதவன்;
சன்மார்க்கன்; நீடூழிவாழ்க; —சான்றோர்கள் வாழிதானே."

இனி நாடார்குலத்தவரின் உட்பிரிவுவிவரங்களைச் சற்று விவரமாய்க் கவனிப்போமாக. வேம்பத்தூரார் என்னும் பூர்வ கவிராயர்,

"வெள்ளாற்றின் றெற்கு, வெள்குமரிக் கேவடக்கு,
தெள்ளுகட லின்மேற்கு, தேவர்தொழும் —உள்ளமகிழ்
வன்றுசி பேரு ரதின்கிழக்கு, மாறனெல்லை
யன்பத் தறுகாத மாம்"

என்று சொல்லியிருக்கிற படி, 'பாண்டியம்' ஆகிய மாறநாட்டின் எல்லை, தெற்கே குமரி முதல், வடக்கே (தொண்டமான்)புதுக்கோட்டை, ஆரந்தாங்கி முதலிய ஊர்களுக் கருகாமையா யோடும் 'வெள்ளாறு' என்னும் சிறு நதி வரை யிருந்தது. இந்தப் பாண்டியநாட்டுக் குரியவர்க ளாகிய சான்றோர்ஜாதியார், கீழே விவரங்கண்ட பிரகாரம், நான தியற்கைப்படி ஒன்றுக்கொன்று விவாகசம்பந்த மில்லாத நாலைந்து உட்பிரிவினரா யிருந்தாலும், அவ் வைந்து பிரிவினருள் எல்லோரிலும் அதிக ஜனத்தொகை யுடையவர்களும், எல்லோரிலும் உயர்ந்தோரா யெண்ணப்படுவோரும், பாண்டியனாகிய (மாறன்) மாறனின் குலத்தவராய் ஆதிமுதலே மாறநாட்டில் வந் தமர்ந்து, மாறநாட் டாதினத்துக் குரியவர்களா யிருந்துவருகிறவர்களு மாகிய மாற நாடடார் - மார் நாட்டார் அல்லது மருஉஆய் மாநாடடார் என்னப்பட்டவர்களு மாகிய பிரிவினரை முன்னிட்டு, சேஷ முள்ள நான்கு பிரிவினரும் உள்ளடங்கிய அவர்க ளெல்லோரும் ஒருவகையாய் மாற நாடடார் (மார நாடார்) என்று சாதாரணமாய்ப் பேர்சொல்லப்படுகிறார்கள். இந்த மாறநாட்டின் மத்தியில், கிழமேலாய், கிழவிகுளம், வடகரை, வெம்பக்கோட்டை, சாத்தூர், கீழ்நாட்டுக்குறிச்சி, விளாத்திகுளம், வைப்பாறு முதலிய ஊர்களுக் கருகாமையாய்ப் போய்க்கொண் டிருக்கிற வைப்பாறு என்னும் நதிக்கு வடக்கேயிருக்கிற நாடார்களின் வழக்கபுழக்கங்களும், அந் நதிக்குத் தெற்கேயிருக்கிற நாடார்களின் வழக்கபுழக்கங்களும் ஒன்றுக்கொன்று சற்று வித்தியாசமா யிருப்பதாலும், அவரவர்களின் உறவுமுறைப் பஞ்சாயத்துகளும் மகமையேற்பாடுகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி இருபாங்காய் நடந்துவருவதாலும், அந் நதிக்கு வடக்கேயுள்ள தமிழ்நாடார்க்கள் 'உத்தர மாறநாடடார்' அல்லது 'வடக்கித்து நாடார்க்கள்' என்றும், அதற்குத் தெற்கே கன்னியாகுமரிவரை யுள்ள தமிழ்நாடார்கள் 'தக்ஷிண மாறநாட்டார்' அல்லது 'தெற்கித்து நாடார்க்கள்' என்றும் சாதாரணமாய் விளங்கிவருகிறார்கள். (Rev. S. Mateer, F. L. S.) மத்தீர் என்னும் மிஷனரிதுரை, 1871-ல், "The Chandrars of South Travancore are of the same class as those of Tinnevelly, and in both provinces they have in large numbers embraced the

profession of Christianity." "திருவாங்கூர்ராச்சியத்தின் தென்பாகத்தி
லுள்ள சான்றோர், திருநெல்வேலிஜில்லாவி லுள்ள சான்றோரோடு சேர்ந்த
ஏகவகுப்பினரா யிருக்கிறார்கள்; இவ் விரு மாகாணங்களி லுள்ள சான்றோரி
லுடமிகவும்ஜாஸ்தியான தொகையோர் கிறிஸ்துமார்க்கத்தை யனுசரித்திருக்
கிறார்கள்" என்று எழுதியிருக்கிறபடிக்கு, திருவாங்கூர்ராச்சியத்தின் தென்
பாகத்தில் தமிழ்ப்பேசும்பாகமா யிருப்பதும், முன் பாண்டியராச்சியத்தின்
ஓர் மாகாணமா யிருந்தது மான நாஞ்சினாட்டி லுள்ள நாடார்களும் தக்ஷிண
மாறநாட்டாரே. இதுபோக கடந்த ஐம்பது- அறுபது வருஷங்களாக, தங்
கள் நாட்டைவிட்டு வெளியேறி, உத்யோகவிஷயமாகவும்- வியாபாரவிஷய
மாகவும் இந்தியாவின் மற்றும் இடங்களுக்கும் இலங்கை, பர்மா, ஸ்டிரேட்ஸ்,
மலே ஸ்டேட்ஸ், மோரிஸ், தென்ஆப்பிரிக்கா முதலிய அந்நியதேசங்களுக்கும்
போயிருக்கிற தக்ஷிணமாறநாடார்களின் தொகையும் ஏராளமா யிருக்கிறது.
மேற்கண்டபடி பாண்டியநாட்டு நாடார்களுக்குள் ளிருந்துவருகிற ஐந்து உட்
பிரிவுகளும் என்னவென்றால்:—

(1). **மாறநாட்டார்.** இது மருஉஆய் **மார்நாட்டார்- மாநாட்டார் -
மாறநாடார்** என்றும் வழங்கும். "(**மாரன்**) **மாறன்**" என்பது பாண்டியரா
ஜாக்களின் விசேஷபேர்களி லொன்று. (சேந்தன்-திவாகரம், 2. 23.) **மாற்
நாடு** என்றால் பாண்டியநாடு என் றர்த்தம். மேலே சொல்லியபடி பாண்டிய
ராஜகுலத்தவராய் ஆதிமுதலே தக்ஷிண-உத்தர மாறநாட்டில் வந் தடர்ந்து அதி
ஞானத்தை யுடையவர்களா யிருந்துவருபவர்களும், நாடார்ஜாதியில் அதிக
மான ஜனத்தொகை யுடையவர்களும் இவ் வகுப்பினர் தாம். இதர நாலுவகுப்
பினரும் சொற்பத் தொகையுடையவர்களா யிருக்கின்றனர். மாறநாட்டாரி
லும் மற்றும் வகுப்பினரிலும் பலர் தற்காலம் மாறநாட் டெல்கைக்கு அப்புறத்
திலும்போய் வசிக்கிறவர்களா யிருக்கிறார்கள். மாறநாட்டாருக்கு '**கறுக்குப்
பட்டயர்**' எனவும் ஒருபே ருண்டு. "Karukku-pattayar கருக்குப் பட்டயர்"
என்ற இவர்கள் பேருக்கு, "Those of the sharp sword கூர்மையான
வாளையுடையோர்" என்று அர்த்தம்சொல்லி, "which (subdivision) is
considered to be superior to the rest-இந்த உட்பிரிவார் அந்தஸ்தில் மற்
றும் பிரிவினருக்கு மேலானோரா யெண்ணப்படுகிறார்கள்" என்று, "(Edgar
Thurston Esq.) தர்ஸ்டன் துரையைக் கொண்டு கவர்ன்மென்றார் தென்
இந்திய ஜாதிகள்-குலங்களின் விவரமாய்த் தயாரித்த புஸ்தகத்தில் சொல்லப்
பட்டிருக்கிறது. கறுக்குப்பட்டயர் முற்காலத்தில் போர்வீரரா யிருந்ததாய்
அர்த்தமாவ தாகவும், 'கறுக்குமட்டை' என்று சொல்வது தப்பிதம் என்றும்
திவான்பஹதூர் வி. நாகமய்யாவர்கள் 1906-ல் பதிப்பித்த 'திருவாங்கூர்
ஸ்டேட்மானுயல்'ல் கண்டிருக்கிறது. அப்படியே (H. R. Pate Esq.)

பேட்துரையவர்களைக்கொண் டெழுதி 1917-ல் பதிப்பித்திருக்கும் 'திருநெல்
வேலி டிஸ்டிரிக்டுகெஜட்டீரி'ல் இவர்களைப்பற்றி, "by far the most numer-
ous of all (subdivisions) and by general repute the highest in the
social scale" "எல்லா உட்பிரிவினரிலும் அதிக ஜனத்தொகையுள்ளவர்
களாய் அந்தஸ்தில் மகா உயர்வாய் எல்லாராலும் மதிக்கப்படுகிறவர்கள்" என்
றும், "கறுக்குமட்டையர்" என்று சொல்வது "is unpopular ஜனங்களால்
வழங்கப்படாத நூதனப்பேர்" என்றும், "sharp edged sword கூர்மை
பொருந்திய வாளை"யுடையோர் என் றர்த்தமாகிற "Karukkupattaiyan
கறுக்குப்பட்டையன்" என்பதுதான் "is generally given சாதாரணமாய்
வழங்குகிறது". என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 'பெரிய புராணம்' என்
னும் திருத்தொண்டர் (ஏனாதிநாதநாயனார்) புராணத்தில் பிரஸ்தாபிக்கப்படும்
"**மறப்படை வாட்சுற்றத்தார்**" இந்தக் கறுக்குப்பட்டயரைச் சேர்ந்தவர்கள்
தாம். மேலே விவரங்கண்டபடி எல்லா வகுப்பினரையும் சேர்த்து எல்கை
லக்குப்படி 'தக்ஷிண மாறநாட்டார்' 'உத்தர மாறநாட்டார்' என்று பிரித்து
பேர்வழங்குவது மாத்திர மல்ல, இந்த மாறநாட்டார் என்னும் கறுக்குப்பட்டயர்
பிரிவை மாத்திரம் குறிப்பிடும்போதும், அவர்களில், வைப்பாற்றுக்குத் தெற்
கேயிருக்கிறவர்களை **தக்ஷிண மாறநாடடார்** என்றும் அதற்கு வடக்கேயிருக்
கிறவர்களை **உத்தர மாறநாடடார்** என்றும் பேர்சொல்லும்வழக்கமு மிருந்து
வருகிறது.

மிகுதியாக இந்த மாறநாட்டாருக்குள்ளும், பின்னாலே விவரங்கண்ட
மட்டாத்தியாதிய பிரிவினர்களுக்குள்ளும் **நாடாக்கள்**, **முக்கந்தமார்** என்
னும் இருவகையான அந்தஸ்துப்பிரிவுகளு மிருக்கின்றன. இதைப் பற்றி மத
ராஸ் பிஷப்பான கனம் ஜெல்துரையவர்கள் 1863-ல் பதிப்பித்த (*Inquiries
made by the Bishop of Madras* என்னும்) ஒரு புஸ்தகத்தில் "There
are two divisions even among the Chandrars, namely Nadars other-
wise called land-holders, and common people." "சான்றோருக்குள்ளு
மே இரண்டு வகுப்பா ரிருக்கின்றனர்: அவர்களில் ஒரு வகுப்பார் நிலச்சுவான்
கள் (மிராசதார்கள்) ஆகிய நாடார்களும், இன்னொரு வகுப்பார் சாதாரணஜனங்
களுமாவார்" என்று சொல்லியிருக்கிறது.

இவர்களில், **நாடாக்கள்** என்னும் பிரிவாரைப்பற்றி, பிஷப் கால்டுவெல்
துரை, 1845-ல், "The Nadans, a name signifying 'lords of the soil'
are Chantrar land-owners, who claim rights of seigniorage over
most of the villages in the south." "**நாடாக்கள்** என்றால் 'நாடாளும்
பிரபுக்கள்' என்று அர்த்தம்; இவர்கள் சான்றோர்ஜாதியின் மிராசதார்களா
யிருக்கிறார்கள்; தென்சீமையின் ஜாஸ்தியான கிராமங்கள் இவர்களுடைய

"ஆளுகைச்சுதந்தரங்களுக் குட்பட்டவைகளா யிருக்கின்றன" என்றும், "One family (of the Chantrars), being Zamindars, is entitled to be classed with the gentry of the province." "சான்றோர்குலத்துள் ஒரு வகுப்பார் (பூமியாதினக்காரரான) ஜமீன்தார்களா யிருப்பதால், அவர்கள் தென் இந்தியமாகாணத்தின் பிரபுக்கள்வரிசையில் சேரத்தக்கவர்களா யிருக்கிறார்கள்" என்றும் எழுதியிருக்கிறார். — 1854-ம் வருஷத்தில் (Rev. H. C. Huxtable) ஹக்ஸ்டபில் என்னும் மிஷனரிதுரை, "In almost all Chantrar villages there is one headman or more, who under all the name of Nadan, claims for himself many privileges and much authority." "கிட்டத்தட்ட சான்றோரின் சகல கிராமங்களிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கதிகமான தலைவர்கள் இருக்கிறார்கள். 'நாடான்' என்னும் பட்டத்துக்குள் அவர்களுக்கு அநேக சுதந்தரங்களும் ஜாஸ்தியான அதிகாரங்களு மிருக்கின்றன" என்று எழுதியிருக்கிறார். —அப்படியே, திவான்பஹதூர் வி. நாகமய்யரவர்கள் "*Nadan.* The head-men among the Chandrars are called by this general term. Also another name for Chandrars." "சான்றோரின் பொதுவான பட்டப்பேரா யிருக்கிற நாடான் என்பது, சான்றோருள் தலைமையாயிருக்கும் வகுப்பாரின் பேராகவு மிருக்கிறது. மேலும், அதுவே சான்றோர் என்னும் ஜாதிப்பேருக்கு பதிலே பேராகவும் வழங்குகிறது" என்று, 'திருவாங்கூர் ஸ்டேட்மானுயலி'ல் எழுதியிருக்கிறார்கள். இவர்கள், 'பங்குவழி நாடாக்கள்' என்றும், 'நிலைமைக்காரர்' என்றும் சொல்லப்படுவது மல்லாமல், 'அஞ்சாலிக்காரர்' என்பதும் இவர்களுடைய சாதாரணப்பேராய் வழங்கிவருகிறது. ['ஆல்' என்றால் பங்கு என்றர்த்தமாகும்.] "பஞ்சவன்" (= அஞ்சு பங்குடையவன்) என்பது பாண்டியராஜாக்களின் விசேஷபேர்களி லொன்று (சேந்தன்திவாகரம், 2. 23). தென்இந்தியாவின் சரித்திரஆராய்ச்சிநிபுணர்களி லொருவரான (Rev W. Taylor) டேய்லர்துரையும் மற்றவர்களும் அச்சிட்டிருக்கும் பூர்வசரித்திரப் பிரதிகளிற் காணப்படுகிறபடி, கி. பி. 1561-ல் கயற்றாற்றூரில் விஜயநகரம்சேனாதிபதிகளுக் கெதிரே நாடாக்கள் செய்த யுத்தத்தில் தலைவரா யிருந்த "பஞ்ச பாண்டியாள்" அல்லது "பஞ்ச திருவடி (-திருவழுதி) ராசாக்கள்" என்றவர்கள் இந்த நாடாக்கள்வம்சத்து வீரரே. கிராமாந்தரங்களிலுள்ள இவர்களுடைய ஞாயசபை, பஞ்சாயத்து (அதாவது, 'பஞ்சவர்' ஆகிய பாண்டியரைத் தலைமையாகக்கொண்ட சபை) எனனப்பட்டது. நாடார்களின் பேர்முக்கியத்தால் இந்த சபைக்கு, 'நாடுகூடுதல்,' 'நாட்டுக்கூட்டம்,' 'நாட்டாண்மை' என்னும் பேர்களும் வழங்கும். பாண்டியர்அரசாட்சியின் பூர்வநிலைமையையும் சரித்திரத்தையும் வெகுவாய் ஆராய்ந்த ஒரு எம். ஏ. வித்வான் (Mr. A. Appadurai, M. A.) பாண்டியராஜாக்களின் பஞ்சாயத்துசபை விஷயமாய், 'மதராஸ் கிறிஸ்தியன்காலேஜ் மாகஜின்' என்னும் உயர்தரப்

பத்திரிகையில், 1898-ஹு எழுதியிருப்பதாவது: "The Pandyan kingdom consisted of villages or municipia, and each village had its own ruler or governor assisted by a representative assembly." "பாண்டியராச்சியம் சிற்சிறு முனிஸிப்பல்கிராமங்களை நிரம்பவுடையதா யிருந்தது; அந்த ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனி பஞ்சாயத்துசபையும், அதின் தலைமையையுடையோரான சிற்சிறு ராஜாக்களு மிருந்தார்கள்" என்பதே. —"ஆட்களிலெல்லாம் பெரியஆட்கள் ஆர்? நாடாக்கள்" என்ற பழமொழியும் தென்னாட்டில் வழங்கிவருகிறது.

'Skanda*h* கந்தன்' என்றால் (prince)பிரபு என்றர்த்தம். அதுவே முருகர்(சுப்பிரமணியர்) ஆகிய உக்கிரபாண்டியனின் பேராகவு மிருந்தது. 'முக்கியமான' என்றர்த்தமாகிற 'Mukha முக' என்னும் பதத்துடன் அந்த 'கந்தன்'என்னும் பதம் சேர்ந்து, 'முக்கந்தர்' (=முக்கியமான பிரபு) என்று வழங்கலாயிற்று. இதன் மராட்டியபாஷைவடிவமான 'Mukkaddam முக்கந்தம்' என்னும் பட்டத்தையுடையவர்கள், பம்பாய்ராஜதானியிலும், அதற்கு வடக்கேயுள்ள கௌளாகேளிலு மடைந்திருக்கும் அந்தஸ்தையும் உத்யோகவரிசைகளையும் பற்றி, கீர்த்திபெற்ற சம்ஸ்கிருதவித்வானும் பாஷாசாஸ்திரியுமாகிய (Prof. H. H. Wilson) ப்ரோபெஸர் உவில்ஸன்துரை எழுதியிருப்பதாவது:—

"*Mukkaddam.* A chief, a leader–: In India, applied especially to the headman of a village or of a caste or corporation: in the Maratha villages the headman was usually charged with the management of the affairs of the village, &c. - - : he was also intrusted, to a certain extent, with jurisdiction in disputes among the cultivators, and with the police." "முக்கந்தம் என்றால் முக்கியஸ்தன் அல்லது தலைவன் என்றர்த்தம். இந்தியாவில் இந்தப் பட்டம் விசேஷமாய் ஊர்த்தலைவர்- ஜாதித்தலைவர், அல்லது ஜனக்கூட்டங்களின் தலைவருக்கு வழங்கிவருகிறது. மராட்டிய கிராமாந்தரங்களில், இந்தத் தலைவருக்கு சாதாரணமாய் கிராமக்காரியாதிகளின் மேற்பார்வை முதலிய உத்யோகங்கள் இருந்துவருகின்றன. சமுசாரிகளுக்குள்ளும் நகரஜனங்களுக்குள்ளும் நேரிடும் (போலீஸ்)வழக்குகளை விசாரணைசெய்து தீர்ப்பிடுவதும் ஒருவகையாய் இவர்களுக்கே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது."

நாடார்ஜாதியாருக்குள் ளிருக்கும் 'முக்கந்தமார்' ஏற்பாட்டைப் பற்றி, 1856-ம் வருஷத்தில் (Rev. T. H. Suter)சூட்டர் என்னும் மிஷனரிதுரை எழுதியிருப்பதாவது:—

"With regard to worldly matters, the Village Authority is self-supporting and self-controlled. A Punchayet, or council, consisting of the older and more influential men of the Village,

meet once a week and regularly examine into all the complaints and troubles of the people. Besides this body there is a higher one, consisting of five principal men, not belonging to the former body called Mukkandanmar. These constitute a court of appeal, in which disputed judgments of the Gnaya-sabhai ஞாயச் சபை, are brought to a final decision. The Mukkandanmar are an executive body and exercise a supervision over the Police of the Village." "லௌகிகவிஷயங்களில் ஊரதிகாரிகள் தங்களைத்தாங்களே தாங்கிக் கொள்ளுகிறவர்களும், தங்களைத்தாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்களுமா யிருக்கிறார்கள். ஊரின் மூப்பரும் அதிகச்செல்வாக்குடையவர்களு மாகச் சேர்ந்து ஒரு பஞ்சாயத்துகவுன்ஸில் (ஞாய சபை) ஏற்படுத்தியிருப்பார்கள்; இவர்கள் வாரத்துக்கு ஒருதரங் கூடி, ஜனங்களுக்குள் ஏற்படாகும் சகல தொந்தரவுகளையும் ஆவலாதிகளையும் பற்றி ஒழுங்காய்ப் பரிசீலனைசெய்வார்கள். முக்கந்தமாரின் இந்தசபையை யன்றி, ஐந்து முக்கியஸ்தர்கள் கூடிய ஒரு உயர்ந்த பஞ்சாயத்தும் உண்டு; இந்த பஞ்சாயத்தாரை அப்பீல்கோர்ட்டார்கள் என்றே சொல்லவேண்டும். மேற்கண்ட ஞாயசபையோரின் ஜட்ஜ்மென்டு (தீர்மானம்)களில் விவாதத்துக்கிடமானவைகளெல்லாம் இவர்களுடையகோர்ட்டில் வந்துதான் முடிவான தீர்மானத்துக்குள் ளாகின்றன. முக்கந்தமார் ஊர்க்காரியாதிகளைநடத்துவோராயிருப்பது மாத்திர மல்ல, கிராமங்களின்போலீஸ்நடபடிக்கைகளும் இவர்களால் மேற்பார்க்கப்பட்டு வருகின்றன" என்பதே.

1917ம் வருஷத்தில் பிரசுரமாகியிருக்கும் 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டுகெஜட்டீரி'ல், "Mukkundan, which seems originally to have implied a local headmanship, is now falling into disuse and conveys no particular meaning." "ஆதியாய் ஊர்த்தலைமையைக் குறிப்பிடுவதாயிருந்ததாகத்தெரிகிற முக்கந்தன் என்னும் பட்டமானது, இப்போ வழக்கத்திலிருந்து எடுபட்டுவருவதால், அந்தப் பட்டப்பேர் இப்போது யாதொரு விசேஷஅர்த்தமும் கொடுக்கவில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்படி, இந்த நாடாக்களாலும் முக்கந்தமாராலும், "புரைதீரப் பேணும் பார்ப்புரத்தல்" (சேந்தன்-திவா., 12. 82) ஆகிய 'Praja-palanam பிரஜா பாலநம்' என்னும் க்ஷத்திரியத்தொழில் நிறைவாகரமாய் நடந்தேறிவருகிறது. "ஊராண்மை மிக்கசெயல்" என்று ஒரு பூர்வ தமிழ்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட 'நாடார்'-'முக்கந்தர்' என்னும் அந்தஸ்துவரிசை, பூர்வ ரோமருக்குள் ளிருந்த 'Patricians'-'Plebeians' 'பாத்ரீஷியர்'-'பிளேபியர்' என்னும் அந்தஸ்துவரிசைக்கும், நாளது இங்கிலீஷ் பார்ளிமெந்து சபையில் 'Lords லார்ட்ஸ்' என்றும் 'Commons காமன்ஸ்' என்றும் இருவகை யந்தஸ்தா யேற்பட்டிருக்கும் வரிசைக்கும் ஒருவகையில் ஒத்ததா யிருந்து வருகிறது.

(2). **நட்டாத்தியர்.** பாண்டியரும் சோழரும் ஏகவம்சத்தி லுற்பவித்த ஆரியக்ஷத்திரிய ரென்பது முன்னமே எடுத்துச்சொன்ன விஷயம். இந்தப் பாண்டியரும் சோளரும் ஒன்றுக்கொன்று அடுக்கவுள்ள தேசங்களை யரசாண்டு வந்ததால், நாடாளுகைவிஷயமாய் பல சமயங்களில் அவர்களுக்குள் யுத்தங்கள் நேரிட்டது மாத்திர மல்ல, அப்படி யுத்தம்பண்ணி ஒருவர்நாட்டை யொருவர் கைப்பற்றிய போதும், மற்றும் பல சமயங்களிலும், அவ்விரு ராஜகுடும்பத்தவரும் அடிக்கடி விவாகசம்பந்தமும் செய்துகொண்டார்க ளென்பதும், 'ஹாலாஸ்யம்,' 'திருவிளையாடற் புராணம்,' 'ஸ்ரீதாலம்' முதலிய பாண்டியநாளாகமங்களால் தெரியவருகிறது. பாண்டியர் சோழதேசத்தையும், சோழர் பாண்டியதேசத்தையும் யுத்தம்பண்ணிக் கைப்பற்றி, ஒருவர்வீட்டுப்பெண்ணை ஒருவர் விவாகஞ்செய்துகொண்டு, இருதேசங்களையும் சமமாயாண்ட ராஜகுடும்பத்தவருக்கு 'சோழ-பாண்டியர்' என்னும் பட்டம் இருந்துவந்திருப்பதாய் சரித்திரங்களிலும் சாஸனங்களிலும் துலங்குகிறது. புகழேந்திப்புலவரின் சரித்திரமா யெழுதப்பட்டிருக்குங் குறிப்புகளிலுங் கூட, செண்பகமாறன்-குலோத்துங்கசோளன் என்னும் பாண்டிய-சோள ராஜாக்கள் தங்களுக்குள் விவாகசம்பந்தம் செய்துகொண்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி, பாண்டிய ராஜகுலத்தவரோடு விவாகநட்புச்செய்து பலுகியவம்சத்தவரில், மாறநாட்டில் நிலையாய் [illegible]ருந்துகொண்டவர்கள், அவ்விடத்திலே தனிப்பட்ட ஒரு வகுப்பார்போல் விருத்தியாகிக்கொண்டு வந்திருக்கிறார்கள். "ஆரே தாதகி ஆத்தியாகும்" (சேந்தன்-திவா., 4. 31) என்றபடி, 'ஆர்' என்ற 'ஆத்தி'மாலை தரித்தது நிமித்தம் 'ஆத்திபன்' என்னப்பட்ட சோளராஜ பட்டப்பேரால் இவர்கள் நட்டாத்தியர் என்னப்பட்டார்கள். 'நள்' என்றால் 'நட்புக்கொள்ளு' என்று அர்த்தமாகிறபடி, அவ் வினைப்பதத்தின் சென்றகாலப் பெயரெச்சமாகிய 'நட்ட' என்னும் வார்த்தைக்கு, 'விவாகநட்பு செய்துகொண்ட' என்றர்த்தமாகும். ஆகவே, நட்டாத்தியர் என்னும் பேர், 'விவாகநட்புச் செய்துகொண்ட சோளராஜவம்சத்தவர்' என்று பொருளாகிறது. அப்பால் இவர்கள் பேரை முன்னிட்டு, இவர்கள் முக்கியமா யமர்ந்த ஊர்கள், நட்டாத்தி என்னப்பட்டன. கொள்வினை-கொடுப்பினை விஷயமாய் நட்டாத்தியருக்குள் 63 இண்டி (கோத்திர) பிரிவுக ளிருக்கின்றன. சில [illegible]களுக்குமுன் மாறவீரவளநாட்டின் தென்பத்தில் [illegible] ஆட்சிசெய்ததாக மேலே (பக். 26) விவரக்கண்ட '[illegible]-நாடாக்கள்' ஆகிய '[illegible] நாடாக்கள்' இந்த நட்டாத்தியர்வகுப்பைச் சேர்ந்தவர்கள். இதுபோக, 'இருவழுதி நாடான்' என ஆதியில் 'குருகூர்' என்னும் ஆழ்வார்திருநகரியில் ஆண்ட நாடான்வாரின் வம்சத்து பட்டவர்த்தனர், கடைசியாய் தாமிரவருணி[illegible] என்னும் நதியினின் வடபுரமான '[illegible]' என்னும் நட்டாத்தியில் போய்ச்

சேர்ந்து, காலதுவரையும் 'திருவழுதி நாடார்' என்னும் பட்டத்துடன் ஜமீன்தாரபிரபுவா யிருந்துவருவதைப் பற்றி முன்னமே (பக். 9, 10, 31, 32) சொல்லியிருக்கிறேன். அவரும், 'வழுதி' (=பாண்டியன், திவா., 2, 23) என்னப்பட்டாலும், பின்னால் விவாககட்டினால் இந்த ஆத்தியரைச் சேர்ந்துபோனதாகத் தெரிகிறது. இந்தத் திருவழுதிநாடாரின் குடும்பத்தைப் பற்றி, 1869-ல் பிஷப் கால்டுவெல்துரை, "One member of a division of the caste (i. e. Chantrar) is a Zamindar" "சான்றோர்ஜாதியின் உட்பிரிவுகளொன்றி லுள்ள ஒருகுடும்பத்தவர் ஜமீன்தாராயிருக்கிறார்" என்றும், 1891-ல் (Sir H. A. Stuart) ஸர் ஸ்டூவர்ட்பிரபு, "There is at least one Chandran Zamindar" "சான்றோருள் குறைந்தபட்சம் ஒரு ஜமீன்தாருண்டு" என்றும் எழுதியிருக்கிறார்கள். கட்டாத்தியர்வகுப்பில் ஜாஸ்தியானபேர் நிலச்சுவான்களாகவும், மற்றவர்கள் விவசாயம்-வியாபாரம் நடத்துகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பெருமிதமாய் திருநெல்வேலிஜில்லாவிலும், அற்பசொற்பமாய் காஞ்சிபுரத்திலும், ராமநாதபுரம்-மதுரை-கோயம்புத்தூர் ஜில்லாக்களிலும் வசித்துவருகிறார்கள். இவர்கள் ஜனத்தொகையை நான் சில வருஷங்களுக்குமுன் கணக்கெடுத்ததில், மொத்தம் சுமார் 1,500 தலைக்கட்டுகளாக வந்துசேர்ந்தது. தலைக்கட்டு 1-க்கு சுமார் 5 ஜனங்களாகக் கணக்கேற்றினால், கட்டாத்தியரின் தொகை மொத்தம் சுமார் 7,500 ஜனங்களாகும். நாளதில் மதராஸ் கவர்னர்பெருமான் ஆபீஸ், ரெவினியூ ஸெக்ரட்டேரியட்டில் ரிஜிஸ்திராரா யிருக்கும் கனம் ராவுபஹதூர் வி. பொன்னையநாடார் அவர்கள், பி. ஏ. இந்த கட்டாத்தியர் வகுப்பினரே. ஜமீன்தாரர்களும், டிஸ்டிரிக்டுபோர்டு மெம்பர்- ஆனரரிமாஜிஸ்திரேட்- ஜூரர்- அஸெஸ்ஸர் முதலிய பல கண்ணிய உத்யோகம்பெற்றவர்களும் இவ் வகுப்பினருளுண்டு.

(3). மேல்நாட்டார். சோழராஜ வம்சத்தவராய் மாறநாட்டி லமர்ந்த கட்டாத்தியரைப் போல, இவர்கள், சேரசோழ லாகிய 'குட நாட'னின் ராஜாங்கம் இதராராஜாக்களின் படையெழுச்சிகளால் நிலைகுலைந்தபோது, அக் குடநாடனின் வம்சத்தவராய் சேரநாட்டிலிருந் தெழும்பி, தங்கள் பூர்வசொக்காரராகிய மாறநாடார்களிடம் வந்துசேர்ந்தவர்கள். சேரராஜாக்களின் விசேஷ பேர்களி லொன்றாகிய "குட நாடன்" என்பதற்கு (திவா., 2. 21) 'மலை நாடான்' என்று மாத்திர மல்ல, 'மேல் நாடடான்' என்றுமே அர்த்த மாவதால், 'மேல் நாட்டார்' என்னும் இவர்கள் பேர், இவர்கள் சேரராஜவம்சத்தவ ரென்பதை நேருக்குநேரே குறிப்பிடுவதாகவு மிருக்கிறது. இவர்களுள் அநேகர் பரம்பரையான பாரி நிலச்சுவான்களும், மற்றவர்கள் நிலச்சுவான்களா யிருப்பதோடே, விவசாயம்- வியாபாரத்தை நடத்திவருகிறவர்களாகவு மிருக்கிறார்கள். இப்போ சிலகாலமாக பீடி-பால்கிரட் உற்பத்திசெய்யும் கைத்தொழில் இவர்

களில் முக்கூடல்வாசிகளால் தென்இந்தியாவிலும் சிலோனிலும் மிகவும் முன்னேற்றமடைந்து வருகிறது. இந்தக் கைத்தொழில்-வியாபார விஷயமாய் பம்பாய்ராஜதானி வரை இவர்கள் மிகுதியாய் புழங்க நேரிட்டிருப்பதால், முக்கூடல்வட்டகை மேனாட்டார்வாலிபரில் சுமார் 200 பேர் மராட்டி, இந்துஸ்தானி, குஜராத்தி, தெலுங்கு முதலிய பாஷைகள் பேசக் கற்றிருக்கிறார்கள். இவர்களால் முக்கூடலில் 'க்ஷத்திரியபாலியர் அபிவிர்த்தி சங்கம்' ஒன்றும் நடைபெற்றுவருகிறது. மேனாட்டாரில் சிலர் யூனிவர்ஸிட்டி கிராஜுயேற்றுகளு மாகியிருக்கிறார்கள். இவர்களுள் சமர்வீரர் ஏராளமா யுண்டு. இவ் வகுப்பினரில், அம்பாசமுத்திரம்தாலூகா- முக்கூடல், கடையம், செட்டிகுளம், நாங்குனேரித்தாலூகா-களக்காடு முதலான இடங்களி லிருப்பவர்களுக்கு 'படைத்தலைவர்' என் றர்த்தமாகிற 'சேர்வைகாரர்' என்னும் பட்டம் பரம்பரையா யிருந்துவருவது மல்லாமல், அவ் வட்டகையின் காவலும் அவர்கள் வசமே யிருந்துவருகிறது. (மேலே பக். 23, 24 காண்க) இதுவிஷயமாய், 1917-ல் வெளியான 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டுகெஜட்டீரி'ல், "Servai is the title borne by the Chandrans of Kadaiyam and Kalakkad, in both of which places the hereditary *kudikaval* is in the lands of this caste; and it is possible that they owe the appellation to their position." "சேர்வை என்பது கடையத்திலும் களக்காட்டிலு முள்ள சான்றோருடைய பட்டப்பேர்; அவ் விரண் டிடங்களிலும் 'குடிக்காவல்' பரம்பரையாய் இச் சாதியார் வசமே யிருந்துவருகிறது; இந்தப் பட்டம் அவர்களுக்கு அவர்களுடைய அந்தஸ்துக்குத் தக்கதாய் கிடைத்திருக்கக்கூடும்" என்று சொல்லியிருக்கிறது. இதாஜாதியாரிலும் யுத்தசேனைத் தலைமையை வகிக்க நேர்ந்தவர்கள் 'சேர்வைகாரர்' என்னும் இப் பட்டத்தை மகிமைப்பட்ட மாக வழங்கும்வழக்க மிருந்துவருகிறது. மேலே 28, 29-ம் பக்கங்களில் கண்டதான, சிவகிரிப்பாளையகாரரை சங்காரம்பண்ணிய யுத்தத்தில் தளகர்த்தர்களா யிருந்த நால்வருள், தங்களுடைய மகாதிறமையான சமர்வீரச்செய்கைகளி னிமித்தம் 'புறங்காட்டாப் புலி,' 'சூட்ச முடையான்' என்னும் பட்டங்களைப் பெற்ற இருவரும், இந்த மேல்நாட்டார்வகுப்பினரே. இதுவிஷயமான சரித்திரப் பாடல்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த மேல்நாட்டார், அம்பாசமுத்திரம்தாலூகாவில் மிகுந்தும், நாங்குனேரி, தென்காசி, சங்கரநயினார் கோவில், ஸ்ரீவைகுண்டம் தாலூகாக்களில் சில்லறையாகவு மிருந்துவருகிறார்கள். நாளதில் இவர்கள் ஜனத்தொகை சுமார் 25,000.

(4). குருக்கள். (அத்யயநம்) ஓதலும்,(யஜநம்)வேட்டலும் க்ஷத்திரியருடைய விசேஷதொழில்களா யிருந்துவருகிற படிக்கு(சேந்தன்-திவா.,12.81) இவ்வேலைகளை மாத்திரம் பாரம்பரைக் குலத்தொழிலாய் செய்துவருகிற ஒரு

பிரிவினரும் நாடார்குலத்தவ ரிருந்துவருகிறார்கள். ஐயர் என்பது இவர்களுடைய சாதாரணப் பட்டப்பெயர். ஜைன-பௌத்தக் கொள்கைகள் தென் இந்தியாவில் முக்கியப்பட்ட காலமுதல், இவ்விடம் பார்ப்பாரதிய மற்றும் சில ஜாதிகளுக் கொப்பந்தமாய் இவர்கள் மாமிசமருந்துவதை நிறுத்தியிருக்கிறார்கள். இவர்களைப்பற்றி 1871-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ்ரிப்போர்ட்டில் (W. R. Cornish Esq., F. R. C. S.)கார்னிஷ்துரை, "They (The Chantrars) are chiefly classed as Sivaites 68.3 per cent., but 24. 4 per cent. are nominally Vishnuites. They have their own gurus or priests in the *Sivaite* sects." "சான்றோரில் நூற்றுக்கு 68 பேர் முக்கியமாய் சைவரென்றும் நூற்றுக்கு 24 பேர் வைஷ்ணவர் என்றும் (மதவிஷயமாய்) வகுக்கப்பட்டிருக்கிறார்கள்; சிவமத சம்பந்தமாய் அவர்களுக்கு அவர்கள் சொந்த ஜாதியிலே குருக்களாகிய புரோகிதர்கள் இருக்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார்.—திவான்பஹதூர் வி. நாகமய்யரவர்கள், 1906-ல் வெளியான 'திருவாங்கூர் ஸ்டேட்மானுவ'லில், "The Chandras have hereditary families of priests in the caste itself known as *Aiyar.*" "சான்றோர் தங்கள் ஜாதியிலேயே பரம்பரையாய் குருத்துவ-புரோகித வேலைகளை தொழிலாகவுடையவர்களும், ஐயர் என்னும் பட்டத்தை வகிப்பவர்களுமான வகுப்பினரையுடையவர்களா யிருக்கிறார்கள்" என்றெழுதியிருக்கிறார்கள்.-திருச்சிறுப்பள்ளி (Tamilian Archæological Society)'தமிழ புராதனஆராய்ச்சி சங்கத்'தின் ஸ்தாபகரும் ஆனரரி ஸெக்ரட்டரியும், ஸென்-ஜோஸப் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய பேர்பெற்ற மகா-ள-ள-ஸ்ரீ பண்டிதர் டி. சவரிராயபிள்ளையவர்கள், இத்த குருக்கள் வகுப்பில் பிறந்தவரும் திருக்குறளின் விசேஷ உரையாசிரியருமாகிய பரிமேலழகரைப் பற்றி, 1913-ல் எழுதிஅச்சிட்டிருப்பதில் சிலபாகமாவது:—

"Parimelalagar himself was of the same caste as his patron — a Chantrar, and belonged to the *Gurukkal* family of the community.—Branches of this *Gurukkal* family are at present found at Iral, Kadayam, Padukkapatti (near Kulasekarapattinam), Kachinavilai (near Alwar-tirunagari) and in some of the villages of Nanjil-nadu (South Travancore). The members of this family invariably bear the title of 'Aiya' or 'Aiyar.' This is a hereditary title owned, from time immemorial, by the community to which the great Parimelalagar belonged. Perhaps this has led the modern literary world as well as the late talented Bishop, Dr. Caldwell, to shift Parimelalagar from the Chantrar (சான்றார்) community and place him in a Brahman environment." "பரிமேலழகர் தம்முடைய போஷகருக் கொப்பாகவே சான்றோர்ஜாதியை, அதாவது அந்தஜாதியின் குருக்கள்வகுப்பைச் சேர்ந்தவரா யிருந்தார். — இந்தக்

குருக்கள்வகுப்பு வம்சத்தினரை தற்காலத்தில் ஈரால், கடையம், குலசேகரபட்டினத்துக்குச் சமீபமான படுக்கப்பத்து, ஆழ்வார்திருநகரிக்குச் சமீபமாயுள்ள கச்சினாவிளை, திருவாங்கூர்ராச்சியத்தின் தென்பாகமான நாஞ்சிநாட்டின் சில கிராமங்கள், இவைகளில் காணலாம். இவ் வகுப்பினர் சாதாரணமாய் 'ஐயா' அல்லது 'ஐயர்' என்னும் பட்டப்பேரை வகித்துவருகிறார்கள். பேர்பெற்ற பரிமேலழகரும் உதித்தகுலமாகிய இவ் வகுப்பினர், ஞாபகத்துக்கெட்டாக் கால முதலே இப் பரம்பரைப்பட்டத்தை வழங்கிவருகிறார்கள். ஒருவேளை இதுகாரணத்தால் தான், தற்கால வித்வான்களும், மிக மதிப்புடைய பிஷப் பாகிய காலஞ்சென்ற டாக்டர் கால்வெல் துரையும், பரிமேலழகரை சான்றோர்சாதியை விட்டு நீக்கி, பிராமணவகுப்பில் சேர்த்தெழுதும்படி நேர்ந்திருக்கலா மென்று தெரிகிறது" என்பதே.

இவர்கள் ஜனத்தொகை ரொம்பவும் சொற்பமா யிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலும், நாஞ்சிநாட்டிலும் இவ் வகுப்பினர் வசிக்கும் ஊர்களின் பேர் மேலே (பக். 8) சொல்லப்பட்டிருப்பதுபோக, ராமநாதபுரம் ஜில்லா-விருதுப்பட்டி, மதுரைஜில்லா-திருமங்கலம் முதலிய இடங்களிலும் இவ் வகுப்பாரில் சிலர் வசித்துவருகிறார்கள். இவ்வகுப்பினரிலுதித்த தெய்வச்சிலையார் என்பவர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு உரையும், பரிமேலழகர் என்பவர் திருக்குறளுக்கு உரையும் செய்தது மாத்திர மல்ல, பின்வந்த குமரகுருபர சுவாமிகள் முதலானோர், 'ஆத்ம ராமாயணம்,' 'ஞானக் குறவஞ்சி,' காமாட்சியம்மன்பேரில் 'கிள்ளைவிடு தூது,' 'மயில்விடு தூது,' 'தென்றல்விடு தூது' முதலிய தமிழ்நூல்களும் பாடியிருக்கிறார்கள். இதுபோக, இவ்வகுப்பிலுதித்தோராய் நாளதில் விருதுப்பட்டியி லிருக்கிற ஸ்ரீ ராமலிங்க ஐயர் என்னும் ராமலிங்க குருக்கள், சில தமிழ்நூல்களை உண்டுபண்ணியும்-பதிப்பித்துமிருப்பதன்றி, 'சச்சிதானந்தம் பிரஸ்' என்னும் ஒரு முத்ராக்ஷரசாலையும் வைத்து நடத்திவருகிறார்கள்.

(5). காவேரிபுரத்தார் என்னும் கோடிக்காரர். 'காவேரிபுரம்' அல்லது 'காவேரிப்பட்டினம்' என்பது, பாண்டிய ராஜாக்களுக்கு கொற்கை என்னும் கபாடம் இருந்ததுக் கொப்பாக, சோழராஜாக்களுக் கிருந்த கடற்றுறைமுகப் பட்டணம். இதின் பேர்கள், திவாகரத்தில் (5. 115) "காகந்தி, புகார், காவேரிப்பூம்பட்டினம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைமுகப்பட்டணத்தில், ஐரோப்பாவரையுள்ள அநேக மேல்தேசஜாதியார் முதலானவர்கள், கப்பல்போக்குவரவு மூலமாய் வெகுபூர்வ காலமுதல் வியாபாரப்புழக்கம் செய்துகொண்டுவந்தால், இவ்விடம்ஜனங்கள், பல ஆசாரக்குறைவுகளிலும் பழகியிருந்த திண்டு. இந்த காவேரிபுரத் துறைமுகத்தில் அந்நியதேச வியாபாரங்களை மேல்

நடத்தும்தொழிலை வகித்திருந்த புன்னுடன்குலத்தவரின் ஒரு சிறுபாகத்தாரே, அந்த வியாபாரமுக்கியம் கின்றபின், அதிலிருந்து வெளியேறி நமதுநாட்டில் வந்து, பாண்டியராஜகுலத்தவரான நம் மாறநாட்டார் வகுப்பினரை அண்டி, காவேரிபுரத்தார் என்னும் நாமத்தோடிருந்துவருகிறார்கள். (H. R. Pate Esq.) பேட்துரை யெழுதிய 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி'ல், அப்படியே, "Kaveripurathan (are) those who immigrated from the banks of the Cauvery." "காவேரிபுரத்தார் என்பவர்கள், காவேரிநதிக்கரையிலிருந்து வெளியேறி இங்கு வந்துசேர்ந்தவர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இக் குலத்தோரில் பெரும்பாகத்தார், 'நாட்டுக்கோட்டை செட்டி' என்னும் நாமதேயத்துடன் வேறுஜாதியாராய் பிரிந்துவிட்டதாக கேகை ஐதிகமிருந்துவருகிறது. இந்தக் காவேரிபுரத்தார் தங்களிடம் வந்துசேர்ந்தபின், மாறநாடார்கள், தங்கள் சேனவீரர்கள் அணிவகுத்துப்போகும்போது முன்னணியில் ராஜாங்கஅடையாளமாகிய கொடியைப்பிடித்துச் செல்லும் வேலையை அவர்களுக்குக் கொடுத்ததால், அவர்கள் கோடிக்காரர் என்றும் பேர்சொல்லப்பட்டார்கள். அப்படியே, கவர்ண்மென்ருர் (Dr. Edgar Thurston) தர்ஸ்ட்டன்துரையவர்கள் கொண்டெழுதிய தென்இந்திய எத்னுகிரபிபுஸ்தகத்தில், 'கொடிக்காரர்' என்னும் இவர்கள் பேர், "A flag யுத்தக்கொடி" என்ற அர்த்தத்தில் "Kodi கொடி" என்னும் பதத்திலிருந்து பிறந்ததாகவும், அவர்கள் "Standard-bearers of the fighting men." "யுத்தஞ்செய்யும்வீரருள் கொடிப்பிடிக்கும்உத்யோக முடையோர்" ஆக இருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

"படையுங் கொடியுங் குடையு முரசு நடைநவில்புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந் தெரிவுகொள்செங்கோ லரசர்க் குரிய"

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படிக்கு (III. 9. 72), இப்படி கொடிப்பிடித்துச்செல்லும் பொருநரும் அரசருக்கு வேண்டியவர்களாகவேயிருந்தார்கள். காவேரிபுரத்தார் இங்கு வந்துசேர்ந்தகாலமுதலே அவர்களுக்கு தமிழ்நாடன்குலத்தவரால் பலஇடங்களில் பூமியாதினமும் கொடுக்கப்பட்டவரன்முறையில், காளதிலும் இப் பிரிவினரிலநேகர் நிலச்சுவான்களாகவும் விவசாயிகளாகவு மிருக்கிறார்கள்; சிலர் வியாபாரமும் செய்கிறார்கள். திருநெல்வேலிஜில்லாவின் தென்பாகத்திலும் மேல்பாகத்திலும் இவர்களைக் காணலாம். இவர்கள் ஜனத்தொகை சொற்பம்; இவர்கள்தொகை இன்னும் சரியாய்க் கணக்கெடுக்கப்படவில்லை.

மேற்கண்ட ஐந்து வகுப்பாரே நாடார்குலத்தவரின் உட்பிரிவினராவர். ஆனால், காலதில் தென்இந்தியாவின் ஜனவிவரசம்பந்தமாய் நூல்

கள் எழுதுகிற பல ஐரோப்பியஆசிரியர்களும் மற்றவர்களும், நாடார் ஜாதியின் உட்பிரிவுகள் விஷயமாயும் சரியான விவரம் தெரிந்துகொள்ளாமல், வெவ்வேறு ஜாதிகளிலிருந்து பிரிந்து பனை-தென்னை மரங்களேறி கள்ளிறக்குகிறவர்களையும், ஒருகாலத்தில் சோழநாட்டிலிருந் தெழும்பி வந்து நாடார்ஜாதியாருக்கு புழுக்கை வேலை செய்யும் கள்ளர் என்னும் மண்டையரையும் நாடார் ஜாதியோடு தப்பிதமாய்ச் சேர்த்துப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. அதின் விவரமாவது:—"The manufacture of liquor is no longer the monopoly of a single caste" "மதுபானம் உண்டுபண்ணுவது ஒருஜாதிக்குத்தான் ஏற்பட்ட தொழில் என்பது ஒருபோதுமில்லை" என்று (H. C. Turner Esq.) தர்ணர் என்னும் துரையின் வசனமாக, 1871-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ் ரிப்போர்ட்டில் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. அந்தப்படி, பனை-தென்னை முதலிய மரங்களில் வேலைசெய்து மதுவிறக்குவது, இவ்விடத்தில் ஒருஜாதிக்கு மாத்திரமுரிய தொழிலாயிராமல், பலஜாதிக்காரரும் செய்கிற தொழிலாகவேயிருக்கிறது. தமிழ்நாட்டில், கள்ளர், பள்ளிகள், இடையர், கவரைகள், கவுண்டர், சடையர், முகம்மதியர் முதலியவர்களும், 'முதலி,' 'பிள்ளை,' 'நாயக்கர்' என்னும் பட்டங்களையுடைய பலஜாதியினரும் மதுவிறக்குந் தொழிலை நடத்திவருவதை அங்கங்கே நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். கீழேகண்ட சமுதி கோவில்வியாச்சியம் (கீழ்)மதுரை ஸப் கோர்ட்டில் (O. S. No. 33/1898 ஆக) நடந்துகொண்டிருந்தபோது, மதுவிறக்குதலையும் தொழிலாக வுடையவர்களாயிருக்கிற மேலே பேர் சொன்ன ஜாதியாரிற் பலர் வந்து, தாங்கள் கையாரா அந்தத் தொழிலை நடத்திவரும் யதார்த்தத்தைப்பற்றி, ஷை கோர்ட்டில் சாட்சிசொல்லியிருக்கிறார்கள்.—தென்காசிக் கடுத்த செங்கோட்டைப்பக்கத்தில் குறவராலும், ஷை தாலூகா, ஊற்றுமலைப்பக்கத்திலும், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, சாயர்புரம் வட்டகையிலும் கோலியப்பள்ளராலும், திருச்செந்தூர் தாலூகா உடையார்குளம் வட்டகையில் நாவிதராலும், பனையேறிமதுவிறக்கும் தொழில் நாளதும் நடந்துவருகிறது. "மலைக்குடியர்" என்னும் ஜாதியாராலும் பனையேறி மதுவிறக்கும் தொழில் தென்இந்தியாவில் நடந்துவருவதாக, தென்இந்திய ஜனஆராய்ச்சி விஷயமாய் பேர்பெற்ற ஆசிரியரும் ரோமன்கத்தோலிக்குமதச் சாமியாருமாகிய (Abbe J. A. Dubois, S. J.) அபி டூபோ என்பவர் 19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் எழுதியிருக்கிறார்.—வங்காளம் பிராமணரில் 'மிச்சமானபேர், காளதும் மதுபானம்விற்கும் தொழிலை விசேஷித்து நடத்திவருவதாக (Muir's Sanskrit Texts) மூயிர்துரையின் 'சம்ஸ்கிருத மேற்கோள்கள்' என்னும்

புஸ்தகத்துக்கு 1858-ல் லண்டன் (*Times*) 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த (Review) மதிப்புரையில் சொல்லியிருக்கிறது. — பம்பாய் ராஜதானியில், (Parsis) பார்சிகளில் பலர் பனைமதுவிறக்கும் தொழிலுடையோரா யிருப்பதுந் தவிர, (Bassein) பாசேனுக்கு வடக்கேயிருக்கும் சோப்பாரம் என்னும் இடத்திலுள்ள "Soparas சோப்பாரர்" என்னும் பிராமண வகுப்பார், ஈளதும் தாலமரமேறி ஜீவிக்கிறவர்களா யிருக்கிறார்களென்று, (Dr. John Wilson, F.R.S.) டாக்டர் உவில்ஸன் துரை (*Indian Caste*) இந்தியஜாதிகளின் விவரமா யெழுதி 1877-ல் பதிப்பித்த தம்முடைய புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார்.—அப்படியே, (Orissa) ஒட்டியதேசத்திலுள்ள (Mahasthan or Mastan Brahmans) மஸ்தான் பிராமணர் தென்னை முதலிய பனைவர்க்க மரங்களேறி ஜீவனம்செய்வதை தங்கள் தொழிலாய் வைத்திருப்பதாக (A. Stirling Esq.) ஸ்டர்லிங் என்னும் துரை (*Orissa*) ஒட்டியதேசத்தைப்பற்றி யெழுதிய தம்முடைய புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார்.—1883-ம் வருஷத்தில் ஒரு ஆசிரியர், "Even in the southern districts of this (Madras) Presidency, Pariahs, Mussalmans, Vellalas, and Vadugas are here and there engaged in the cultivation of palm trees." "சென்னைராஜதானியின் தென் ஜில்லாக்களில் பறையர், மகம்மதியர், வெள்ளாளர், வடுகர் ஆகிய ஜாதியினர் அங்கங்கே பனைமரத்தில் வேலைசெய்வோரா யிருக்கிறார்கள்" என் றெழுதியிருக்கிறார்.

நாடார் ஜாதியாருக்கு நஞ்சை-புஞ்சை நிலங்களோடே பனை-தென்னைமரச் சொத்துக்களும் ஏராளமா யிருக்கின்றன; இந்த ரீதியில், அவர்கள் (Dr. G. U. Pope) டாக்டர் போப்துரையவர்கள் சொல்லுகிறபடி, "assume the position of masters" "எஜமான்கள் நிலைமையை உடையவர்களா யிருக்கிறார்கள்." அந்தமரங்களிலேறி குற்றமற்றவஸ்துவாகிய பதனீர் இறக்கி சற்பக்கட்டிகாய்த்தல், காய்பறித்தல், ஓலைவெட்டுதல் முதலிய தொழில்கள் செய்வதற்காக, ஷை சொத்துக்களின் எஜமான்களாகிய மேற்கண்ட நாடார்கள், பல இடங்களுக்கும் போய் 'பனையேறிகள்' அல்லது 'மாமேறிகள்' என்று சொல்லப்படும் ஜனங்களைக் கூட்டிவந்து, அவர்களுக்கு வீடுகள் முதலிய சலக்கரணையும் ஆகப்பண்ணிக் கொடுத்து, தங்களுடைய மேற்கண்ட சொத்துக்களின் பக்கங்களில் குடியிருக்கச் செய்திருக்கிறார்கள். இந்தப் பனையேறிகளிற் பலர் தாங்கள் முன்னிருந்த இடங்களுக்குத் திரும்பிப் போய்விடுவது முண்டு. இவர்களைப்பற்றி (H. R. Pate Esq.) பேட்துரை திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் கெஜட்டரி'ல் (p. 225) சொல்லியிருப்பதாவது:—

"These foreigners arrive just at the season when the *paruvam* and *alagu* are readily to be tapped. They build their little leaf-huts in the topes, tap the trees according to the terms made with the owners and having finished with one tope move on to another." "அந்நியராகிய இவர்கள், பருவப்பனைகளும், அலகுப்பனைகளும் பதனீரிறக்க பக்குவஞ்செய்யப்படவேண்டிய சரியானகாலத்தில் வந்துசேர்வார்கள். இவர்கள், பனந்தோப்புகளுக்குள்ளேயே ஓலைக்குச்சுகளை கட்டி வசித்துக்கொண்டு, ஷை மரச்சொத்துக்களின் சொந்தக்காரரோடு செய்துகொண்ட ஒப்பந்தநிபந்தனைகளின்படிக்கு, பனைகளைப் பக்குவம்பண்ணி பதனீரிறக்கும்வேலைகளைச் செய்வார்கள். ஒரு தோப்பில் வேலைமுடிந்துவிட்டால், அப்பால் அடுத்ததோப்புக்குப் போவார்கள்" என்பதே.

இந்தப் பனையேறிகளும், பின்னாலே விவரங்கண்டபடி நாடார்களின் புழக்கைவேலைக்காரரான 'மண்டையர்' என்னும் கள்ளரும் அநேகமாய்த்தங்கள் எஜமான்களான நாடார்களின் வழக்கபுழக்கங்களைப் பின்பற்றுவதினிமித்தம், அவர்களை நாடார்ஜாதியாரின் உட்பிரிவினராக எண்ணி பல ஆசிரியர்களும் தப்பிதமா யெழுதியிருக்கிறார்கள். அந்தப்படி, 1806-ம்வருஷத்தில் (Rev. W. T. Ringeltaube) ரிங்கில்டாப் என்னும் மிஷனரிதுரை, இச் சாதியாரின் உட்பிரிவுகளைப்பற்றிச் சொல்லும்போது, "One of which exclusively ascends the trees" "ஒரு பிரிவார் மரமேறும்தொழிலே பூராவாய் நடத்திவருகிறார்கள்" என் றெழுதியிருக்கிறார். அப்படியே, 1843-ம் வருஷத்தில், தென்இந்தியா விவரமாய் புஸ்தகம் எழுதிய (Miss S. Tucker) மிஸ் டக்கர் துரைசானியும், "The cultivation of the palmyra is also the exclusive right of one division of these people called the 'climbing Shanars,' and is never infringed on by any others." "பனைமரச் சம்பந்தமான வேலைகள்செய்வது, இந்த ஜனங்களுள் 'பனையேறிச் சாணார்' என்னப்பட்ட ஒரு பிரிவினரின் தனித்த சுதந்தரமா யிருக்கிறது; அந்த வேலைகள் மற்றும் எந்தப் பிரிவினராலும் ஒருபோதும் செய்யப்படுகிற தில்லை" என் றெழுதியிருக்கிறார். (Dr. J. Mullens) மல்லென்ஸ் என்னும் துரை தென்இந்திய மிஷன்களைப் பற்றி யெழுதி, 1854-ல் லண்டனில் அச்சிட்ட புஸ்தகத்தில், "They are distinguished among their tribe as Panaiyeris or climbers. . . The Panaiyeris or climbers are of course the poorest of all." "அவர்கள் தங்கள் ஜாதியாருள், 'பனையேறிகள்' அல்லது 'மரமேறிகள்' என, மற்றவர்களுக்கு வித்தியாசமாகவே யிருந்துவருகிறார்கள்; பனையேறிகளாகிய இந்த மரமேறிகள்தாம், நிச்சயமாகவே, ரெம்ப ஏழைகள்" என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பனையேறிக

ளுங் கூட, குற்றமுள்ள வஸ்து வாகிய லாகிரிக்கள்ளிறக்கும்வேலையை, சமீபகாலத்துக்குமுன் கவர்ண்மென்றார் அப்காரிடிப்பார்ட்மென்று ஏற்படுத்தி, லாகிரிவஸ்துவை மிகுதியும் பரவச்செய்தபின்தான் நூதனமாய்ப் பின்பற்றியிருக்கிறார்கள். (பிஷப் கால்டுவெல்துரையும் அதற்குச் சாட்சி பகர்ந் தெழுதியிருக்கிறார்.) இதுபோக, சாராயம் முதலான லாகிரி வஸ்துக்களுண்டாக்கும் வேலை, இந்தப் பனையேறிகளுக்கும் முற்றிலும் அலாக்கான வேறு ஜாதிக்காரரால் நடத்தப்பட்டுவருகிறது. கி. பி. 17-ம், 18-ம் நூற்றாண்டுகளி லெழுதப்பட்டதாக, திருநெல்வேலிஜில்லாவின் தென்பாகத்திலுள்ள பலஇடங்களிலிருக்கும் சிலாசாஸனங்களை ஆராய்ந்து பார்த்ததிலும், அக்காலங்களில் பனை-தென்னை யேறிக் கள்ளிறக்குவோர், நாடார்ஜாதியாருக் கலாக்கான வேறுபிரிவினரா யிருந்ததாகவே ஸந் தேகமறத் துலங்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பனை-தென்னை மரங்களேறி கள்ளிறக்கும்வேலைகளில் நாடார்குலத்தவருக்கு யாதொரு சம்பந்தமு மில்லை யென்பதைப்பற்றி, 1820-ம் வருஷத்தளவில் இவ்விடம் திருநெல்வேலிஜில்லாவிலே கவர்ண்மென்று ஸர்வேயரா யிருந்த (T. Turubull Esq.) தர்ண்புள் என்னும் துரை, திருநெல்வேலி ஜில்லாவின் விவரமாய் கவர்ண்மென்றாருக்காகத் தயாரித்த மேலேகண்ட புஸ்தகத்தில், அடியிற்கண்டபடி மிகத்தெளிவான அனுபவத்துடன் எழுதிவைத்திருக்கிறார். அதாவது:—

"The Chantrars are very numerous in this District (Tinnevelly); they are styled Naadigals [Nadakkals or Nadars] and are a mercantile people, distinct from those that extract the Toddy from the Palmyra and Cocoanut Trees." "சான்றோர் இந்த திருநெல்வேலி ஜில்லாவில் மிகவும் ஜாஸ்தியா யிருக்கிறார்கள்; அவர்களுக்கு 'நாடாக்கள்' என்று பேர்; அவர்கள் வியாபாரம் செய்கிற ஜனங்கள்; பனை-தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்குகிறவர்கள் அவர்களுக்கு அலாக்கான வேறுவகுப்பார்" என்பதே.

நடந்த 1917-ம்லு வெளியான 'திருநெல்வேலிஜில்லா கெஜட்டீர்'லுங் கூட, நாடார்குலத்தாரின் உட்பிரிவுகளைப்பற்றி விவரம்சொல்லும் இடத்தில், "In villages where both [Chantran] agriculturists and tappers are found, the two classes tend to grow mutually exclusive in regard to social matters. Each section lives by itself; an agriculturist seldom marries a bride from a tapper's family." "சான்றோர்குல விவசாயிகளும் பனையேறிகளும் குடியிருக்கிற கிராமங்களில், புழக்கவிஷயங்களில் அவ் விருவகைப்பேரும் ஒருவருக் கொருவர் யாதொரு சம்பந்தமு மில்லாமல் தனித்தனி யாகவே யிருந்துவருகிறார்கள்; அவர்க ளிருவகைப்பேரும் தனித்தனியே தங்களைத் தாங்களே நடத்திக்

கொள்ளுகிறார்கள். விவசாயிகளாயிருக்கிற வகுப்பார் பனையேறுவோரின் குடும்பங்களில் பெண்ணெடுத்து விவாகஞ்செய்துகொள்ளுகிற தில்லை" என்று கண்டிருக்கிறது.

☞ திருநெல்வேலி ஜில்லா முதலிய இடங்களில் கிறிஸ்துமார்க்கம் ஸ்தாபிக்க துவக்கத்தில்வந்த கிறிஸ்தவ மிஷனரிகளிற் பலர், அங்கங்கே மேற்கண்ட பனையேறிகளும் ஏழைச்சான்றோரும் குடியிருந்த இடங்களில் இறங்கி, அவர்களோடேமாத்திரம் அதிகப்புழக்கஞ்செய்து, அவர்களுக் கலாக்காயிருந்த பெருங்கூட்டத்தாரான நாடார்குல மேன்மக்களோடு சரியானபடி புழக்கம்வைத்துக்கொள்ளாததால், நாடார்ஜாதியாரையும், அவர்கள் உட்பிரிவுகளையும்-தொழில்களையும்-அந்தஸ்தையும் பற்றி பலவிதமான தப்பெழுத்துகள் அவர்கள்மூலமா யுண்டாகி, அப்பால் அவைகள் பல கவர்ண்மென்றுப் பிரசுரங்களிலும் வந்துசேரும்படி யாகிவிட்டது விசனிக்கப்படத்தக்க காரியமே.

இனி, மேற்சொன்ன புழக்கவேலைக்காரராகிய கள்ளரைப் பற்றி கொஞ்சம் சொல்லிவிட்டு, உட்பிரிவுகள்விஷயமான விவரத்தை முடிக்கிறேன்.

மண்டையர் என்னும் கள்ளர். இவர்கள் நாடார்ஜாதியின் உட்பிரிவின ரல்லர். முன் இவர்கள், சோழதேசத்தின் ஒரு பெருங்குழுவாய் 'சேர்வை' முதலிய பட்டங்களை வைத்திருக்கிற கள்ளர் என்னும் ஜாதியாரின் ஓர் உட்பிரிவினரா யிருந்து, பின்னால் இவ்விடம் மாறநாட்டில் வந்து சேர்ந்தவர்களாகச் சொல்லப்படுகிறார்கள். இவர்கள் பெருஞ்சொத்துடையோரான நாடார் குடும்பத்தினருக்கு வீடுகள்-சொத்துகள் சம்பந்தமான எல்லாப் புழங்கை வேலைகளும் செய்கிறவர்களா யிருக்கிறார்கள். கள்ளர் என்னும் இவர்கள் பேர், முன் இவர்கள் கள்ளிறக்கும்வேலையை யுடையோரா யிருந்ததினால் ஏற்பட்டதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. மண்டையர் என்பதும், அப்படியே, மது என்றர்த்தமாகிற 'மண்டா' என்னும் சம்ஸ்கிருதபதத்திலிருந்து பிறந்ததா யிருக்கலாம். இவர்கள், நாடார்களுக்கு ஏவல்செய்வோராய் மாத்திர மல்ல, தருணங்களில் போர்வீர ராகவு மிருந்துவருவதால், சேர்வை (from Sans. *Chari*, foot-soldier) என்னும் பட்டம் இவர்களுக்கு வழங்குகிறது. க்ஷத்திரியர் செய்யும் யுத்தத்துக்கு ஓர் உபகரணமாகச் சொல்லப்பட்டிருக்கிற "முறக" (தொல்காப்பியம், III . 9.72) ஆகிய 'ராஜசேவை'யும் இவர்கள் சேவிக்கிறதுண்டு. (A. F. Cox Esq., I. C. S.) காக்ஸ் துரையும், (Sir. H. A. Stuart, I. C. S., C. I. E.) ஸர் ஸ்டேவார்ட் பிரபுவும், 'வட ஆர்க்காட்டு டிஸ்டிரிக்டு மானுவல்' புஸ்தகத்தில், "They were employed

by former rulers as foot-soldiers and body-guards" "அவர்கள் முற்காலத்து அரசரால் (சேர்வைகள்) காலாட்படைகளாகவும், அரண்மனைப் பாதுகாவலராகவும் வேலைவாங்கப்பட்டார்கள்" என்று சொல்லியிருப்பதும், ஷை ஸ்டுவார்ட் பிரபு, 1891-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ் ரிப்போர்ட்டில், "We find traces of a military occupation among several toddy-drawing castes of the south" "தென் இந்தியாவில் மதுவிறக்கும் அநேக ஜாதிகளுக்குள், முற்காலத்தில் போர்வீரத்தொழிலுமிருந்ததைக் காட்டுகிற அநேக அடையாளங்கள் காணப்படுகின்றன" என்று சொல்லியிருப்பதும், இவர்களையும் இவர்களைப்போலொத்த தொழிலாளரையும் பற்றிய சங்கதியே யாகும்.. (E. Thurston Esq.) தர்ஸ்டன் துரை, இவர்களைப்பற்றி, "Kalla. Said to be the original servants of the Karukkupattayar, doing menial work in their houses and serving as palanquin-bearers." "கள்ளர்: இவர்கள், கருக்குப்பட்டயர் என்னும் வகுப்பாருக்கு வேலைக்காரரா யிருந்து, அவர்கள் வீடுகளில் ஏவற்றொழில் செய்கிறவர்களும், அவர்களுக்குப் பல்லக்குச்சுமக்கிறவர்களுமா யிருப்பதாகச் சொல்லப்படுகிறார்கள்" என்று, மேற்கண்ட தென்இந்திய எத்னொகிரபி புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். இது சங்கதி பிஷப் கால்டுவெல் துரையாலும், டாக்டர் போப் துரையாலும் முன்னமே ஒப்பியெழுதப்பட்டுமிருக்கிறது. 1917-ல் வெளியாகியிருக்கிற 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி'ல், ஷை கள்ளர் புழுக்கைவேலை செய்வதி னிமித்தம் அவர்களை "புழுக்கச் சாணர்" என்று பேர்சொல்வது மல்லாமல், "The Pulukka Shanar are properly, the domestic servants of the other classes and are, in fact, often so employed. They are generally spoken of as an inferior class and are in many places not allowed to feed with members of the other sections." "சரியாய்ச் சொல்லவேண்டுமானால், புழுக்கசாணார் (நாடார் குலத்தின்) மற்றும் வகுப்பாருக்கு வீட்டுவேலைக்காரரா யிருப்பது மல்லாமல், நிச்சயமாகவே, அவ்வேலையைச் செய்துவருகிறவர்களாகவு மிருக்கிறார்கள். அவர்கள் தாழ்ந்த வகுப்பின ரென்று சாதாரணமாய்ச் சொல்லப்படுவதுந் தவிர, (நாடார் குலத்தின்) மற்றும் வகுப்பினரோடு பந்திபோஜனஞ்செய்ய இடங்கொடுக்கப்படாதவர்களாகவு மிருக்கிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (Dr. G. U. Pope, M. A.) டாக்டர் போப்துரை, கள்ளர் என்னும் பிரிவினரைப்பற்றி, அவர்கள், "probably immigrated at a later period" "பின்னொருகாலத்தில் வேறுஇடத்திலிருந்து வந்துசேர்ந்தவர்களா யிருக்கலாம்" என்று எழுதியிருக்கிறார். மாறநாட்டார்பிரிவில் நாடாக்கள்

வகுப்பார் எங்கெங்கே யிருந்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களைச் சார்ந்து இந்தக் கள்ளரும் வேலைக்காரராய்க் குடியிருந்துவருகிறார்கள். இவர்கள் தொகை இன்னும் சரியாய்க் கணக்கெடுக்கப்படவில்லை.

விஷயம் இப்படியிருக்க, (H. R. Pate Esq., I. C. S.) பேட்துரையால் எழுதப்பட்டு, 1917-ம் வருஷத்தில் வெளியாகியிருக்கும் 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி'ல், மேலே சொல்லியபடி பொதுவாய் நாடார்குலத்தவர் விசேஷமாய் சரியான விவரம் தெரியாமலும் தெரிந்துகொள்ளாமலும், தப்பிதமும்-யதார்த்தமல்லாதது மான அநேக நிந்தனையெழுத்துகள் எழுதப்பட்டிருப்பதோடே, நாடார்களின் உட்பிரிவுகள் விஷயமாகவும் அடியிற்கண்டது முதலான அநேக பிசகான சங்கதிகள் சேர்ந்திருக்கின்றன:- நட்டாத்தியாரும் கொடிக்காரரும் ஒன்றுக்கொன்று யாதொரு சம்பந்தமுமில்லாத வெவ்வேறு வகுப்பினரா யிருக்க, அவர்களிருவரும் ஒரே வகுப்பின ரென்றும் "They are largely employed in the cultivation of betel-gardens." "கொடிக்கால் என்னும் வெற்றிலைத் தோட்டப்பயிர் செய்வது, அவர்களுடைய பெருமிதமான தொழிலாயிருக்கிறது" என்றும் சொல்லுகிறார். நட்டாத்தியருக்காவது, கொடிக்காரருக்காவது, வெற்றிலைப்பயிர் செய்வது ஒருஇடத்திலும்-ஒருகாலத்திலும் தொழிலல்ல. காவேரிபுரத்தாரும் கொடிக்காரரும் ஒரேவகுப்பினரா யிருக்க, காவேரிபுரத்தாரை கொடிக்காரருக்கலாக்கான தனிப்பிரிவினராக்கி, அவர்களைப்பற்றி சொல்லிக்கொள்ளுகிறார்களே யல்லாமல், அவர்கள் இரட்டியில்லை என்றெழுதுகிறார். புழுக்கச்சாணார் என்று அவர் பேர் குறிப்பிடுகிறவர்களுக்கு வழங்கும் 'மண்டையர்' அல்லது 'கள்ளர்' என்னும் பேரைப்பற்றி டாக்டர் கால்டுவெல், டாக்டர் போப், டாக்டர் தர்ஸ்டன் முதலான விசேஷ சாஸ்திரிகளெல்லாம் சொல்லியிருக்க, இவருடைய எழுத்தில் அப் பேர் ஒரு இடத்திலும் எடுத்துச்சொல்லப்படவில்லை. இந்தக் கள்ளர், நாடார்குலத்துக்கு அலாக்கான வேலைக்கார வகுப்பினரா யிருக்க, அவர்களை நாடார்குலத்தின் ஒரு உட்பிரிவினரா யெழுதியிருக்கிறார். இதுபோக, குருக்கள் என்னும் உட்பிரிவாரைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை.

இனி, நம் நாடார்குலத்தவரைப்பற்றி மேதாவிகளும் அனுபவஸ்தருமான பல கனவான்கள் தங்கள் இயற்கையாய் எழுதிவைத்திருக்கும் எழுத்துகளில், மேலே அங்கங்கே எடுத்துச்சொன்னவைகள் போக, இன்னும் மீதமாயிருக்கும் சிலவற்றை இங்கே எடுத்துச்சொல்லுகிறேன்.

(1). தமிழ்நாட்டு ஜனங்கள்விஷய மாகவும் சரித்திரவிஷய மாகவும் மிகுந்த அனுபவமுடைய மேற்கண்ட (Miss S. Tucker) டக்கர் துரை

சானி, 1843-ல் தென் இந்தியாவிவரமா யெழுதிய தம்முடைய புஸ்தகத்தில், "From all that I can find about them (Nadars), I am much inclined to agree with those who consider them to have been the original possessors of the (Tamil) country." "நாடார் ஜாதியாரைப் பற்றி நான் கண்டுபிடிக்கக்கூடிய சகல ருசுக்களிலிருந்தும், அவர்கள் இந்த (தமிழ்) தேசத்தின் ஆதிஉரிமைக்காரரா யிருந்தார்க ளென்று அபிப்பிராயப்படுகிறவர்களுடன் நானும் மிகவும்சார்ந்து ஆமோதிக்கிறவனா யிருக்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

(2). மதராஸ் கவர்னர்சபையில் மெம்பொருந்திய எக்ஸிகியூட்டிவ் கவுன்ஸில்மெம்பரா யிருந்த (Sir H. A. Stuart, I. C. S., M. R. A. S., C. I. E.) ஸர் ஸ்டூவர்ட் பிரபு அவர்கள், நம் நாடார் ஜாதியாருக்குள், அவர்கள் முற்காலத்தில் யுத்தஜாதியா யிருந்த சரித்திரம்துலக்குவதான அம்சங்கள் அநேகமா யிருக்கிற தென்றும், மைசூர்தேசத்தி லாண்ட கதம்பராஜாக்களுங் கூட இக் குலத்தைச் சேர்ந்தவர்களாகச் சொல்லப்படுகிறார்க ளென்றும், "It is by no means certain that the Chandrans were not at one time a warlike tribe.—Nadan is a ruler of a *nadu* or district; it is the usual title of the southern Chandrans. The Chandrans are a hardworking, industrious people, and pauperism is almost unknown among them. Many are farmers, many engage successfully in trdae, and there is at least one Chandran Zamindar." 'சான்றார் ஒரு காலத்தில் யுத்தவீரஜாதியா ரிருந்தார்க ளென்பது நிச்சயமான சங்கதியா யிருக்கிறது.—நாடான் என்றால் 'நாடு' என்னும் மாகாணத்தை யரசாளும் ராஜா என் றர்த்தம்; அந்தப் பேர் தென்தேசத்தி லுள்ள சான்றார்ஜாதியாரின் சாதாரணப் பட்டமா யிருக்கிறது. சான்றோர் கஷ்டத்தைப் பாராமல் வேலைசெய்கிறவர்களும், தொழில்முயற்சி யுடையவர்களு மான ஜனங்கள்; பிச்சை யெடுத்த லென்னும் பிரவிர்த்தி அவர்களுக்குக் கிடைக்காது. அவர்களில் அநேகர் நிலங்களைவிருத்திசெய்வோரும், அநேகர் வியாபாரத்தை ஜயாதி பெற முன்னேறி நடத்துகிறவர்களுமா யிருக்கிறார்கள். சான்றோருக்குள் ஒன்றுக்குக்குறையாத ஜமீன்தார்களும் உண்டு" என்று 1891-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ் ரிப்போர்ட்டில் எழுதியிருக்கிறார்.

(3). (W. R. Cornish Esq., F. R. C. S.) கார்னிஷ் துரையைக் கொண்டு கவர்ன்மெண்டார் தயாரித்த 1871-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ் ரிப்போர்ட்டில், "They (i, e, The Chantrars) do not merely mean that they were the original kings of the soil, but that they are descended from the Aryan Kshatriyas". "சான்றோர் தாங்கள்

இத்தேசத்தின் அதிபூர்வ ராஜாக்களா யிருந்தோ மென்று மாத்திர மல்ல, தாங்கள் ஆரியக்ஷத்திரிய குலத்தவ ரென்றும் கருதுகிறார்கள்" என்று எடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

(4). 1881-ம் வருஷத்து மதராஸ்சென்சஸ் ரிப்போர்ட்டில் (Lewis McIver Esq., I. C. S.) மாக்ஐவர் துரை, "The Chantrar claims to be a Rajput." "சான்றார் தாங்கள் ராஜபுத்திரவகுப்பா ரென்று வழக்கிடுகிறார்கள்" என் றெழுதியிருக்கிறார்.

(5). இந்தியா மொத்தத்தின் (Director of Statistics) ஸ்டாடிஸ்டிக்ஸ் டயரெக்டரா யிருந்த மகாமேதாவி யாகிய (Sir W. W. Hunter, LL. D., C. I. E.) ஸர் ஹண்ட்டர்பிரபுவைக் கொண்டு, இந்திய சக்ராதிபத்யம் மொத்தத்துக்கும் விவரமாய் கவர்ன்மெண்டார் 1887-ல் தயாரித்த கெஜட்டீரிலும், 1893-ல் அச்சான 'சென்னைமாகாண அட்மினிஸ்டிரேஷன் மானுயலி'லும், "They (*i. e.*, The Chantrars) claim, perhaps with justice, to be the original lords of the soil," 'சான்றோர், தாங்கள் இத்தேசத்தின் அதிபூர்வ பூமியாதினக்காரரா யிருந்தோ மென்று உரிமைபேசுவது ஒருவேளை யதார்த்தமா யிருக்கலாம்" என்று கண்டிருக்கிறது.

(6). கல்குத்தாவில் பிரசுரமாகிவரும் (*Statesman*) 'ஸ்டேட்ஸ்மன்' என்னும் மதிப்புப்பெற்ற பத்திரிகையில், 1899-ம் வருஷத்தில், "It seems unquestioned, that the Chantrars, not oply for a period of many centuries, dating from long before the Christian era, ruled the Dravida country, but were recognised by the (later) Aryan invaders as Dravidian Kshatriyas." "சான்றார் கிறிஸ்தாப்தத்துக்கு வெகுநீண்ட காலத்துக்குமுன் னிருந்தே, அநேக நூற்றாண்டுக் காலங்களாக திராவிடதேசத்தை அரசாட்சிசெய்தவர்கள் என்பது மாத்திரமல்ல, (பின்வந்த) ஆரியப் படையெழுச்சிக்காரராலுமே, அவர்கள் திராவிட க்ஷத்திரிய ரென ஒப்புக்கொள்ளப்பட்டு மிருக்கிறார்கள் என்பது சந்தேகமறத் நிர்த்தாரியமாய்த் தெரிகிறது" என்று பிரசுரிக்கப்பட் டிருக்கிறது.

(7). திருவாங்கூர் திவான்பேஷ்கரா யிருந்த கனம் திவான் பஹதூர் வி. நாகமய்யாவர்களைக் கொண்டு திருவாங்கூர்கவர்ன்மெண்டார் தயாரித்த 'திருவாங்கூர் ஸ்டேட் மானுவலி'ல் அடியிற்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—

"The correct form of the name of this race is Chandrar. The expressions Chandror and Chandravar—are but different

forms of Chandrar. From a few stray hints that are found in Tamil literature and the traditions peculiar to the race, we learn that the Chandrars belong to a wave of warlike adventurers who migrated towards the South from North India. Enathi-Natha-Nayanar one of the sixty-three disciples of Siva is described as having belonged to the Chandrar caste in the Tamil work Periyapuranam and as Sakshikulothbhaya in the Sanskrit work. They appear to have, in the earliest times, settled down as rulers in several parts of the country. The fact of their having been a ruling race at one time is borne out not only by such expressions as Nadar and Nadalvar, but also by numerous customs which are peculiar to them and other circumstances. The expression Nadalvar occurs in some ancient stone inscriptions of Travancore. — Their rule was subsequently overthrown by later waves of Dravidians. — The people of this caste are ordinarily called Chandrars by people of other castes, but they themselves use the term Nadar. The word Nadar is also used as a title" "இக் குலத்தாருடைய பேரின் சரியான ரூபம் சான்றார் என்பது. சான்றோர், சான்றவர் என்னும் மொழிகளும் சான்றார் என்பதன் பிரதிவடிவங்களாக இருக்கின்றன. தமிழிலக்கிய நூல்களிலே காணப்படுகிற சில்லறையான சில குறிப்புகளிலிருந்தும், இக்குலத்தாருக்கு மாத்திரம் உரியவைகளாயிருக்கும் ஐதீகங்களிலிருந்தும், சான்றார் வட இந்தியாவிலிருந்து தெற்கே குடியெழும்பி வந்த துணிவான யுத்தவீர ஜாதியாரின் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று நமக்குத் தெரியவருகிறது. அறுபத்துமூன்று சிவதொண்டர்களிலொருவரான ஏனாதிநாதநாயனார், சான்றார்ஜாதியைச் சேர்ந்தவரென்பதாக தமிழ்ப் பெரியபுராணத்திலும், அவர், ஸாக்ஷிகுலோத்பவர் என்பதாக அதின் சம்ஸ்கிருதப் பிரதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிபூர்வ காலங்களில் இச் சாதியார், இத்தேசத்தின் பல பாகங்களில் அரசாளுவோராய் அமர்ந்ததாகப் புலப்படுகிறது. அவர்கள், ஒருகாலத்தில் ராஜாங்கமாளும் ஜாதியாராயிருந்தார்களென்ற உண்மைச்சங்கதியானது, 'நாடார்,' 'நாடாள்வார்' போன்ற அவர்களுக்குரிய பட்டப்பேர்களால் மாத்திரமல்ல, அவர்களுக்கு மாத்திரம் உரியதான திரளான வழக்கபழக்கங்களாலும், இன்னும் வேறு பல சங்கதிகளாலும் ருசுவாகின்றன. நாடாள்வார் என்னும் பட்டப்பேர் திருவாங்கூர்நாட்டின் சில பூர்வ சிலாசாஸனங்களில் காணப்படுகிறது. அவர்களுடைய ஆளுகை, பின்வந்த திராவிட ஜனங்களின் படையெழுச்சியால் பின்னொருகாலத்தில் கவிழ்க்கப்பட்டது. . . . . இந்த ஜாதிச் சனங்கள் மற்றுஞ்சாதிச் சனங்களால் சாதாரணமாய் சான்றார் என்று சொல்லப்பட்டாலும், அவர்கள், நாடார் என்னும் பேரைத்தான் தங்களுக்கு வழங்குகிறார்கள். நாடார் என்னும் பதம் பட்டப்பேராகவும் வழங்கியிருக்கிறது" என்பதே.

(8). திருவனந்தபுரம் கவர்ண்மென்று காலேஜில் பேர்பெற்ற புரொபெஸராயிருந்தவரும், பிராமணரல்லாதோரால் மிகவும் கொண்டாடப்

படுவோருமாகிய (Prof. P. Sundaram Pillai, M. A., M. R. A. S) புரொபெஸர் சுந்தரம்பிள்ளையவர்கள் எழுதியிருப்பதாவது:—

"Chandrars call themselves also Ksatriyas. Chandrars may have occupied positions of as much respectability as they now claim among the original Tamil people; but probably suffered a disgrace when the Brahmins came down to the South and effected their own supremacy by flattering the ruling (Telugu) princes. . . I doubt not, therefore, that when one dynasty upset a previous one, the latter were forced to flee the country and seek homes elsewhere, and there hide their name and origin and become hewers of wood and drawers of water and undertake such low occupations as were despised by the other sections of the community who found favour or were tolerated by the new dynasty. Such questions, therefore derive importance in one way-namely, if these despised castes should recognise their old high position and should therefore bestir themselves and strive to better their position by education, &c., I should say they should have all honour and glory." "சான்றார் தங்களை க்ஷத்திரியர் என்றும் சொல்லுகிறார்கள். சான்றோர் இப்போது தாங்கள் பாராட்டுகிறபடியே பூர்வ தமிழ்நாட்டு ஜாதிகளுக்குள் மிகவும் மதிப்பான அந்தஸ்துகளை யுடையவர்களாகவே யிருந்திருக்கலாம். ஆனால் அப்புறம் பிராமணர் தென்னாட்டுக்கு வந்து, பின்னால் ஆண்ட ராஜாக்களை முகஸ்துதியாய் ஏமாற்றி, தங்களுக்கு உயர்ந்தபதவிகளை ஆக்கபண்ணிக்கொண்டது முதல் தான் சான்றார் குறைவடைந்தார்களென்று சொல்லலாம். எனக்கு சந்தேகமறத் தெரிந்தபடி, ஒரு புதுராஜாங்கத்தார் வந்து, முந்திய ராஜாங்கத்தாரைத் தலைகீழாய்த் தாழ்த்தி, அவர்களைப் பூமியாதினைத் துரத்திவிட்டோடப் பெலவந்தஞ் செய்வதால், அவர்கள் வேறெங்கேயாகிலும் புகலிடந்தேடி, அங்கே தங்கள் பேரையும் பூர்வோத்திரத்தையும் மறைத்து, பூர்வ குடியோனியர் விறகுவெட்டிகளும் தண்ணீர்ச் சுமைகாரருமானதுபோல, அப்புதுராஜாங்கத்தாரின் தயவைப்பெற்று சலுகையடைந்த இதரஜாதிகளால் அவமதிக்கப்படுகிற தாழ்ந்த தொழில்களை நடத்திவருவது சகசம் தான். ஆகையால் இவ் விஷயங்களை ஒருவகையாய் விசேஷித்துக் கவனிக்கவேண்டியதாகவே யிருக்கிறது. இப்படி அவமதிக்கப்படுகிற இந்த ஜாதியார், தங்களுடைய பூர்வ உயர்வுநிலைமையைக் கண்டுபிடித்ததினால் தங்களிலே மனஎழுப்பமாகி, தங்களின் தற்கால நிலைமையை கல்வி முதலியவற்றால் மேன்மைக்குக் கொண்டுவரப் பிரயாசப்பட்டால், அவர்களுக்கு மற்றவர்கள் சகல கனத்தையும் மகிமையையும் கொடுக்கவேண்டுமெனவே நான் தாராளமாய்ச் சொல்வேன்" என்பதே.

(9). இப்படியே இன்னும் வேறுபலரும் எழுதியிருப்பதுண்டு. மதராஸில் பிரசுரமாகிற (The Madras Times) 'மதராஸ் டைம்ஸ்' முதலிய பெயர்பெற்ற சமாசாரப்பத்திரிகைகளிலும், நாடார்குலத்தவர் க்ஷத்திரிய

மூல முடையவர்கள் என்றும், அவர்கள் கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன் வரை இத் தமிழ்த்தேசத்தை யாண்டவர்க ளென்றும், பின்வந்த ராஜாங்கத்தாரால் அநேக கஷ்டங்களை யடைந்தார்க ளென்றும் ஒப்புக்கொண்டு, 1900-ம் வருஷத் தளவில் பலசந்தர்ப்பங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கதாக ஞாபகமிருக்கிறது.

§ (10). எம். டி. ஸி. ஸெக்ரட்டேரியா யிருந்த (Rev. A. R. Symonds, M. A.) ஸிம்மண்ஸ் என்னும் கனம்பொருந்திய பாதிரியார், திருநெல்வேலிநாட்டி லுள்ள நாடார்குலத்தவருள் விஜயஞ்செய்து அவர்களுடைய குணகுணங்களைக் கவனித்தபின், "Of all Hindus, the Chantrars are the most sensitive about caste." "இந்தியாவிலுள்ள சகல இந்துக்களிலும் சான்றோரைப்போல், ஜாதியபிமான விஷயமாய் மகா மானரோசம் பாராட்டும் ஜாதி இல்லவே யில்லை" என்று வரைந்திருக்கிறார்."—அப்படியே, நாடார்குலத்தவரின் மத்தியில் 30 வருஷங்களுக்குமேல் வாசம்பண்ணின (Rev. Canon A. Margoschis) கனோன் மார்கஷிஸ் பாதிரியார் 1897-ல், "Clannishness shows itself most whenever anything happens which is considered derogatory to their (*i. e.* the Nadars') caste or class, and a man will readily lay down his life in defence of his clan." "நடார் குலத்தவரிடம், அவர்கள் ஜாதிக்கு அல்லது குலத்துக்கு, நிந்தையா யெண்ணப்படும் ஏதாகிலும் காரியம் மற்றவர்களால் நடக்கநேரிட்டால், அவர்களுடைய குழாந்தழுவிய குணம் உடனே மிகவும் ஜாஸ்தியாய்த் தலைக்காட்டிவிடும்; அதாவது, அப்படிப்பட்ட விஷயத்தில் தன் குலமரியாதையைக் காப்பாற்றுவதற்காக, நாடார்குலத்தவன் தன் உயிரையுங்கூட தியாகம் பண்ண தயாராயிருப்பான்" என்று எழுதியிருக்கிறார்.

§ (11). 1806-ம் வருஷத் தளவில் இவ்விடம் திருநெல்வேலி ஜில்லாவில் மிஷனெரிவேலை பார்த்த (Rev. W. T. Ringeltaube) ரிங்கில்டாப் பாதிரியார், "Much sincerity is said to be a leading feature among them." "அதிகமாய் உண்மைசொல்வது அவர்களுடைய விசேஷகுணமா யிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார்.

(12). பிஷப் கால்டுவெல்துரை, 1857-ம் வருஷத்தளவில் திருநெல்வேலி மிஷன்கள் விஷயமாய் இங்கிலாந்தில் செய்த உபநியாசத்தில், நாடார்குலத்தவரின் குணங்களைப்பற்றிச் சொல்லியிருப்ப தாவது :—

"In many respects their character is as peculiar as their social position. They are peculiarly docile and tractable, peculiarly fitted to appreciate the advantages of sympathy, guidance, and protection, and peculiarly accessible to Christian influences.—They are by no means inferior to their neighbours in sincerity.—The strong points of the Hindu character are patience, good humour, and natural courtesy, and in these particulars the Chantrars are quite on a level with the rest of the Hindus.—As for patience, they have been so oppressed and harassed ever since they were a people, that it is too frequently taken for granted that their patience has no limits.—Perhaps no caste of Hindus occupies, as a caste, a more respectable position as regards the moral elements of character.—Very sensitive and touchy with respect to the honour due to their caste, that is, to their combined personality, they are apt to resort to combinations for the purpose of gaining caste-privileges, or revenging caste-injuries; and though individually they are easily influenced, there are no combinations more difficult to break or more impracticable than theirs.—Most of the peculiarities of the social condition and character of the Chantrars which have now been mentioned, have worked together for their good, and have contributed either to the reception of Christianity by members of this caste, or to their growth in Christian propriety and order after their reception of it. Obstacles which exist elsewhere have no place amongst them, and facilities abound amongst them which are rarely met with elsewhere." "சான்றோருடைய அந்தஸ்தின்மை தனிவிசேஷப்பொருந்தியதா யிருப்பது போலவே, அநேக விஷயங்களில் அவர்களுடைய குணகுணங்களும் தனிவிசேஷப் பொருந்தியவைகளா யிருக்கின்றன. சுபாவத்தில் கல்விகற்றுக்கொள்வதிலும், சாந்தபடிவழக்கைகளிலும் சான்றோர் தனிவிசேஷப் பொருந்தியவர்கள்; அப்படியே தங்களுக்காக மற்றவர்கள் அனுதாபமெடுத்துக்கொள்ளுதல், நல்வழியில் நடத்துதல், பாதுகாத்தல் ஆகிய காரியங்களால் தங்களுக்குண்டாகும் பிரயோசனங்களை நன்றுமதித்து, அநுக்குதர்க்கதாய்த் தாங்கள் நடந்துகொள்வதிலும் தனிவிசேஷ மமைந்தவர்கள்; கிறிஸ்துமார்க்க இயல்புக்கு தனிவிசேஷ தகுதியுள்ளவர்கள். சத்தியத்தைப் பேசுவதில், அவர்கள் தங்களுக்குப் பக்கத்திலுள்ள மற்றும் ஜாதிகளுக்கு ஒருவகையிலும் கீழ்ப்பட்டவர்களல்ல. இந்துக்களுடைய சுபாவத்தின் முக்கியமான அம்சங்களாகிய பொறுமை, நற்குணம், இயற்கையுபசாரம் என்ற விஷயங்களில், சான்றோர் பூரணமாய் மற்றும் இந்துக்களுக்கொப்பான சமநிலையிலேயே யிருக்கிறார்கள். . . . அவர்கள் ஒருஜாதியென் றுண்டானது முதல் எவ்வளவோ ஒடுக்கமும் இடுக்கணும் அடைந்திருந்தாலும், பொறுமை என்கிற விஷயத்தில் அவர்களுடைய பொறுமையானது கணக்கிலடங்காததா யிருக்கிறதென்று அடிக்கடி அநேகமாய்ச் சொல்லிக்கொள்ளப்படு

கிறது. . . . சன்மார்க்க மூலகுணங்களில், இந்துக்கள் மொத்தத்திலும் எந்த ஜாதியாவது, ஒருஜாதி மொத்தமாக அவர்களுடைய இயற்கைக்கு மேலான யோக்கியமுள்ள நிலைமையிலிருக்கவில்லை யென்றே சொல்லலாம். . தங்கள் ஜாதிக்குரிய மகிமை விஷயத்தில் ரொம்பவும் கரிசனையும் வெடுவெடுப்புமுள்ளவர்கள்; அதாவது, ஜாதியபிமான சுதந்தரம் பெறுவதற்காக, அல்லது ஜாதியபிமான விஷயமாய் நேரிட்ட தீமைக்குப் பழிவாங்குவதற்காக அவர்கள் ஒத்துக்கூடத்தக்கவர்களா யிருக்கிற அவர்களுடைய ஐக்கிய சுபாவந்தான். தனித்தனியே யிருப்பார்களானால் அவர்கள் பேரிலே அதிகாரஞ்செலுத்திப்போடலா மென்றாலும், அவர்களுடையதைப்போல் உடைக்கவொலாததும் அல்லது வேறொன்றுஞ் செய்யவொலாததுமாகிய ஜாதிக்கட்டுப்பாடுகள் வேறெங்குமில்லை. . . . இப்போ சொல்லப்பட்ட சான்றாரின் ஜாதிநிர்வாகமும், நடத்தை விசேஷங்களிலநேகமும் சேர்ந்து அவர்களுக்கு நன்மையாக லபித்து, அந்த ஜாதிச் சனங்கள் கிறிஸ்துமார்க்கத்தை யனுசரிப்பதற்கும், அவர்கள் அதை அனுசரித்தபிற்பாடு, அவர்கள் கிறிஸ்துமார்க்க ஒழுங்கிலும் வரிசையிலும் வளர்வதற்கும் ஏதுவாயிற்று. இதுவிஷயமாய் மற்றும் எவ்விடங்களிலிருக்கிற தடங்கல்களும் அவர்களுக்குள் இருக்க இடமில்லை; மற்றும் எவ்விடங்களிலும் கண்டுபிடிக்கக்கூடாத உபகாரணங்களுமோ அவர்களுக்குள் ஏராளமா யிருக்கின்றன" என்பதே.

(13). மதராஸ் கவர்னரா யிருந்து, நாடார் குலத்தவரின் குணங்களை நன்றாய்க் கவனித்த (The Hon. Sir Arthur Lawley, G.C.I.E., K.C.M.G.) ஸர் ஆர்தர் லாலி பிரபு அவர்கள், 1908-ம் வருஷத்தின் பின்பாகத்தில் திருநெல்வேலியில் நடத்திய ஒரு விசேஷ தர்பாரில், நாடார் குலத்தவரைப்பற்றி, "They are essentially those of sturdy and staunch determination to do one's duty and to obey the dictates of one's conscience whatever they may be." "நாடார்கள், ஏற்பட்ட கடமையைச் செய்வதில் அதிவிசேஷமாய்த் திடமும் பலமுமான தீர்மான முடையவர்களும், எவ்வளவு கஷ்டமானவைகளா யிருந்தாலுஞ் சரி, தங்கள் மனச்சாட்சியில் சரியென்று புலப்பட்ட கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களுமா யிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

(14) சேர்ந்தைபதினம் நமது கான்பரென்ஸில் அக்கிராசனாதிபதியாயிருந்த கனம்தங்கிய அட்வோகேட்ஜெனரலாகிய The Hon. Mr. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள், பி. ஏ., பி. எல்., நம் நாடார்குலத்தவரைப் பற்றி சொல்லியிருப்பதாவது:—

"You must send such a number of stalwart and eager young men as will worthily represent the martial traditions of your community - in the fighting forces of India. . . . I am sure your community will not be behind the others in seeking honour and distinction in the field of war services. . . Acute observers, Indian

and European, are united in testifying to your intelligence, independence and force of character, to your qualities of thrift, patience, hard-work and abstinence and to your energy and enterprise. And daily experience confirms this verdict. In education and co-operation you are rapidly to the front ranks." "இந்தியாவின் படைவீரருள் நீங்கள் யுத்தம் பண்ணும் ஜாதியாயிருந்த பழயசரித்திரங்களை பெருந்தன்மையாய்த் துலக்குவதாக, நீங்கள் திடமும் யுத்த அபேட்சையுமுள்ள வாலிபரை போதுமானவரை (சண்டை யுத்தத்திற்கு) அனுப்பவேண்டும். உங்கள் குலத்தவர் யுத்தகளத்தில் வேலை செய்து கனமும் கீர்த்தியும் பெறுவதில் மற்றவர்களுக்குப் பின்னடையமாட்டார்களென்பது என்னுடைய நிச்சய நம்பிக்கை. உங்கள் குலத்தவரை நுட்பமாய்க் கவனித்துவந்திருக்கிற இந்தியரும் ஐரோப்பியரும், நீங்கள் புத்திகூர்மையும், சுதந்தரப்பிரியமும், மனோவல்லமையும், சுருசுருப்பு, பொறுமை, பொறுத்து உழைத்தல் என்னும் குணங்களும், மதுபானம் விலக்கும் நடபடிக்கையும், ஊக்கமும், முன்னேற்றமுயற்சியும் உடையவர்களென்று ஏகோம்பலாய்ச் சாட்சிபகர்ந்திருக்கிறார்கள். உங்களை நித்தியம் யார் கவனித்தாலும் இத்தீர்சாட்சி உறுதிப்படுவதாகவே யிருக்கிறது. கல்வியிலும் கூட்டுறவிலும் நீங்கள் தீவிரமாய் தலைமைஸ்தானங்களை அடைகிறவர்களாகவே யிருக்கிறீர்கள்" என்பதே.

இனி, நாடார்குலத்தவரின் தற்காலநிலைமையையும் நடபடிக்கைகளையும் பற்றிய சில விவரங்களை இங் கெடுத்துரைக்க விரும்புகிறேன்.

அவர்களுடைய சன்மார்க்கஅந்தஸ்து விஷயமாகவும், அவர்களை நியாயமின்றி இதரஜாதிக்காரர் பகைக்கிறவிஷய மாகவும் மேற்கண்ட கனம் வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள் 1907-ல் எழுதியிருப்பதாவது:—

"வடஜில்லாக்களிலோ சான்றார் கீழ்ஜாதியாராக மதிக்கப்படுகிறதில்லை. கோவில்களுள் மற்றையசாதிகளோடு சமமாகப்போய்ச் சுவாமி தரிசனஞ் செய்கின்றனர். தென்ஜில்லாச்சான்றாரே வடஜில்லாக்களுக்குச் சென்றால் அங்குள்ள கோவில்களுள் தடைபடாது சென்று சுவாமி தரிசனஞ்செய்கின்றனர். மேற்கூறிய முதலி-இடையரினும் கீழ்ப்படாத சாதிஜனங்களுடன் வடஜில்லாச்சான்றார் கூடஇருந்து விருந்தருந்துகின்றனர். இதனைச் செங்கல்பட்டு ஜில்லா. திருச்சங்கோடுதாலூக்கா, புன்செய்புதுப்பாளயம் முதலான இடங்களில் விசாரித் தறியலாம்.—ஒவ்வொரு பிரதேசத்திலும் வேசியர்களின் மக்களும் சரியானசம்பந்தமல்லாத சம்பந்தத்தாற் பிறந்த பிள்ளைகளும் அவ்வப் பிரதேசத்தில் பெருமிதமாயுள்ள சாதிகளோடு இரண்டுமூன்று தலைமுறைகளில கலந்துவிடுவது வழக்கமா யிருக்கின்றது. உத்தமகுலாச்சாரந்தவறாத சான்றார்கள் இவ்வாறு கலப்பவர்களிலும் எவ்வளவோ மேம்பட்டவர்களென்பது சொல்லாமலே விளங்கும். மேற்கூறிய சங்கரஜாதியாருக்கு இடங்கொடுப்போர்கள், அச் சங்கரசாதிகளும் சான்றாருக்குச் சற்று உயர்ந்தும் - தாழ்ந்தும் - ஒத்தும் உள்ள வேறுசாதியார்களும் போல, அச் சான்றாரும் கோவில்களில் சுவாமிதரிசனஞ்செய்வதற்கு ஏனோ இணங்குகிறார்களில்லை! ஆழ்ந்தாரா

யுங்கால், அவ்வாறு இணைக்காததற்கு மேலேவிளக்கிய குலாசாரக்குறைவு காரணமாகவுமில்லை" என்பதே.

அவர்களுடைய தற்காலஸ்திதியைப் பற்றி மிஸ்டர் கால்டுவெல்துரை எழுதியிருப்பதாவது:—

"Whatever their (*i. e.*, the Chantrars') original position may have been, I consider that they now occupy a very high place amongst the most progressive native tribes and castes in Southern India." "அவர்களுடைய ஆதியியற்கை எப்படியிருந்தபோதிலும், அவர்கள், இப்போது தென்இந்தியாவில் மகாமேலாய் முன்னுக்கு வருகிற சுதேசகுலங்களும்-ஜாதிகளுமானவர்களுக்குள்ளே மிகவுயர் உன்னதஸ்தானத்தை யடைந்திருக்கிறார்களென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்" என்பதே.

(1). அந்தப்படி, நாடாண்டு நிலச்சுவான்களாயிருப்பதையே தங்கள் பிரதான குலத்தொழிலா யுடைத்தாயிருந்த நாடார்கள், தங்கள் அரசாட்சி நின்றபின்பு, நிலச்சுவான்களாயிருப்பதோடே விவசாயத்தையும் வியாபாரத்தையும் விருத்தியாய் நடத்திவருகிறார்கள். அவர்களுள், கவர்ண்மென்றுக்கு சாதாரணமாக நிலத்தீர்வையும் வருமானவரியும் செலுத்திவருகிற பட்டாதார்களும் வியாபாரிகளும் எண்ணிறந்தவர்களாயிருப்பதோடே, இவ்வரிகளை பாரிக்கமாய்ச் செலுத்துகிறவர்களின் பேர்களை, மதராஸ்ராஜதானியைச் சேர்ந்த தமிழ்ஜில்லாக்களிலும் திருவாங்கூர்ராச்சியத்திலும் பிரசுரமாகும் கவர்ண்மென்று'கெஜட்'களில் இடைக்கிடையே வெளியாகிற (Voters' and Electors' lists) வோட்டர்கள்-எலெக்டர்களின் ஜாப்தாக்களில் காணலாம். இதுபோக, பண்ணையார்களும் ஜமீன்தார்களும்போல பெருந்தொகையான நிலத்தீர்வையும், வருமானவரியும் செலுத்துகிறவர்களும் நம் நாடார்குலத்தில் பலரிருக்கின்றனர்.

(2). தற்காலத்து சாஸ்திரக்கல்விகளிலும், மற்றநேகஜாதியார்களை விட நாடார்ஜாதியார் வெகுவாய் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். அந்தப்படி, யூனிவெர்ஸிட்டிபாடங்களான (arts) சாதாரணசாஸ்திரம், (medicine) வைத்தியம், (engineering) இயந்திரசாஸ்திரம், (law) சட்டம், (agriculture) விவசாயம், (forestry) பாரஸ்ட்டுக்காடுகளின் பரிபாலனம், (veterinary) கால்நடை வைத்தியம், (teachership) உபாத்திமை, (theology) வேதசாஸ்திரம் முதலானவைகளில் தேறிய கிராஜுயேற்றுகளாகவும், (Technical examinations) கைத்தொழில்பரீக்ஷைகளில் தேறின நிபுணர்களாகவும் வெளியேறி, கவர்ண்மென்றின் எக்ஸிகியூட்டிவ், ரெவினியு, ஸிவில், ஜுடிஷியல், பப்ளிக்உவர்க்ஸ், போலீஸ், மெடிக்கல், பாரஸ்ட்டு, ஸானிட்டரி, எட்யூகேஷனல், லோக்கல்-முனிஸிபல்,

ஸால்ட்-அப்காரி, ரெயில்வே முதலிய பல டிப்பார்ட்மென்றுகளிலும் கிறிஸ்தவ மிஷன்தாப்பிலும், பலவித வியாபார-கைத்தொழில்-விவசாய ஏற்பாடுகளிலும், இந்தியாவிலும், கீழ்இந்தியத்தீவுகள்முதல் மேற்கே ஆப்பிரிக்காவரையுமுள்ள பல வெளித்தேசங்களிலும், பலவகையான எண்ணிறந்த உயருத்தியோகபதவிகளை அடைந்தவர்களும்-அடைகிறவர்களுமாயிருக்கிறார்கள். ஹைகோர்ட் முதல் பல கோர்ட்டுகளில் உயர்தரவக்கீல்களாகவும் பலரிருக்கின்றனர். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நவீன உயர்தர கல்விஸ்தானங்களுக்குப் போய் (Barrister-at-law) 'பார்-அட்-லா,' மெடிக்கல் டாக்டர் முதலிய பரீக்ஷைகள் தேறிவந்தவர்களும்-பயின்றுகொண்டிருக்கிறவர்களும் சிலருண்டு. சிலர், இங்கிலீஷ்-தமிழ் பத்திரிகைகள் நடத்துகிற (Editors) பத்திராசிரியர்களு மாகியிருக்கிறார்கள். சேற்றைத்தினம் நமது மஹாஜன காண்பரென்ஸில் அக்ராசனபதியாயிருந்த கனம்பொருந்திய அட்வோகேட்ஜெனரல் The Hon. Mr. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் இது விஷயமாய்ச் சொன்னதையும் நான் எடுத்துச்சொல்கிறேன், கேளுங்கள்:—

"In the districts in which you are most numerous, agriculture, banking and trade are markedly in your hands. As Mr. Justice Benson said, in many villages you own much of the land and monopolise the bulk of the trade and wealth. You are engaged in many industries, you have been fairly represented in the bar, and noticeably in the public services whether as Judges, Deputy Collectors, or Magistrates, or otherwise. There are many Nadars who are teachers or medical, men. There are many very wealthy men in your community, and poverty of the extreme type is, I believe, rare amongst you." "உங்களுடைய ஜனசங்கை அதிகமாயிருக்கிற ஜில்லாக்களிலெல்லாம் விவசாயத்திலும், லேவாதேவியிலும், வியாபாரத்திலும் நீங்கள் அதிவிசேஷ முக்கியம் பெற்றிருக்கிறீர்கள். (சென்னை) ஹைகோர்ட் மாஜிஜட்ஜ் கனம் பென்ஸன் துரையவர்கள் சொன்னதுபோல, அநேக கிராமங்களில் பூமியாதீனம் உங்களுடையதா யிருப்பது மாத்திர மல்ல, வியாபாரத்தின் பெரும்பாகமும் ஐஸ்வரியமும் உங்களுடைய சர்வாதீனத்திலேயே யிருக்கிறது. அநேகவித கைத்தொழில்களை நீங்கள் நடத்திவருகிறீர்கள். வக்கீல்களாக உங்களில் பலரிருப்பதன்றி, ஜட்ஜ்கள், டிப்டி கலெக்டர்கள், மாஜிஸ்டிரேட்டுகள் போன்ற அநேக உத்யோகஸ்தர்களும் கவர்ண்மென்றுத்தரப்பி லிருக்கிறார்கள். உபாத்திமார்களாகவும், வைத்திய டாக்டர்களாகவும் அநேக நாடார்கள் இருக்கிறார்கள். மிகுந்த பணக்காரர் உங்கள் குலத்தில் அநேகரிருப்பதுந் தவிர, அற்றதரித்திரர் உங்களுள் அபூர்வம் என்றும் நம்புகிறேன்" என்பதே.

உயர்தரக் கல்விபயின்ற நாடார்களுள், மதராஸுக்கு யூனிவெர்ஸிட்டி ஏற்படுமுன், மகாமேதாவி யாகிய (Dr. G. U. Pope, M.A.) டாக்டர் போப்ஐயரவர்களால் ஸ்ரீவைகுண்டம்தாலூகா-சாயர்புரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, (Oxford) ஆக்ஸ்போர்ட் யூனிவெர்ஸிட்டிமுறைப்படி கல்விகற்றுக்கொடுக்கப்பட்ட (Missionary Institution) இன்ஸ்டிடியூஷனில், இங்கிலீஷோடே, லத்தீன், கிரேக்கு, எபிரேயு முதலிய (Classical languages) இலக்கிய பாஷைகளும், மற்றும் சாஸ்திரங்களும் பயின்ற நாடார்களும், அவ்வித உயர்கல்வியை, மதராஸ், (Jaffna) யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்குப்போய் பயின்றுவந்த நாடார்களும் ஏராளமாயிருப்பது போக, மதராஸில் யூனிவெர்ஸிட்டி ஸ்தாபிக்கப்பட்டபின், முதலாவதாய் பி.ஏ. பரீக்ஷை தேறிய நாடார், தஞ்சாவூர் ஸெயின்ட்பீட்டர்ஸ் காலேஜில் வைஸ்பிரின்ஸிபாலா யிருந்த †மக-ா-ா-ஸ்ரீ ஐஸக் தானியேல் நாடாரவர்கள், B.A.;*—முதலாவதாய் எம். ஏ. பரீக்ஷை தேறி, முதலாவதாய் யூனிவெர்ஸிட்டி பெல்லோ ஆன நாடார், (Greek)கிரேக்கு பாஷையில் பி. ஏ. தேறியவரும், திருச்சிநாப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜில் இங்கிலீஷ்-பைலாலஜி புரோபெஸரா யிருந்தவரு மான †Rev. S. ஞானமுத்து ஐயரவர்கள், M. A., F. M. U.;—முதலாவதாய் வக்கீல்உத்யோகம் வகித்தவர், நாங்குனேரிதாலூகா-மருதகுளம்வாசி யான ஸ்ரீவைகுண்டம் †மக-ா-ா-ஸ்ரீ P. ஜோஸப்நாடாரவர்கள்;—முதலாவதாய் பி. எல். பரீக்ஷை தேறினவர், மிகுந்த குலாபிமானியும், நீதிசெய்யும் விஷயத்தில் மகா சுத்தவான் எனப் பேர்வாங்கி அஸிஸ்டன்று செஷன்ஸ் ஜட்ஜ்உத்யோகம் செய்தவரு மான †கனம் ராய் பஹதூர் .ஜே. ஜி. சாலமோன்நாடாரவர்கள், B. A., B.L.;—சம்ஸ்கிருதத்திலும் இங்கிலிஷிலும் புகழ்பெற எம். ஏ. பரீக்ஷை தேறி, யூனிவெர்ஸிட்டி மெடல்கள் பெற்றவரும், கடந்த 3-வது கான்பரென்ஸில் புரோபெஸர் ஐஸக் ஞானம்நாடாரவர்கள் பிரசங்கித்தபடி; "விண்வீழ்சுடர் போல பிரகாசித்து திடீரென்று மறைந்துபோன"வரு மான †மக-ா-ா-ஸ்ரீ எஸ். வி. தாமஸ் நாடாரவர்கள்,

* இந்த உபநியாஸத்தில் அங்கங்கே பேர்கள் குறிப்பிட்டிருப்பதில், எடுத்துச் சொல்லவேண்டிய பேர்கள் அவ்வளவுமாத்திரமே என்று நான் கருதியதாக எண்ணிக்கொள்ளக் கூடாது; இது அந்தவிஷயமான முதல்பிரயத்தன மானதால், எனக்கு நேரிலும் கேள்வியாலும் தெரிந்த அவ்வளவுபேர்களை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் இதில் சேர்க்கவேண்டியதான முக்கியபேர்க ளிருப்பின், அவைகளை தெரிந்தவர்கள் குறிப்பிட்டெழுதியனுப்பினால், அவைகள் இதன் இரண்டாம்பதிப்பில் சேர்க்கப்படும். மேற் பேர்களில், தற்போது உயிரோடிருப்பவர்களின் பேர்களோடே, காலஞ்சென்றுபோன சில விசேஷமனுஷர்களின் பேர்களும் சேர்ந்திருக்கின்றன. அதில், காலஞ்சென்றவர்களின் பேர்களுக்கு † அடையாளம் கொடுத்திருக்கிறது.

M. A., உலகமே பிரமிக்கத்தக்க விதமாய் இங்கிலிஷ்பாஷையில் நிபுணராயிருந்தார்கள்;—அவருடைய சிரேஷ்டசகோதரரான மெஞ்ஞானபுரம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் † Rev. அம்புரோஸ் தாமஸ் ஐயரவர்கள், பி. ஏ., தமிழ், இங்கிலிஷ் தவிர, கிரேக்கு, லத்தீன், எபிரேயு, அரபு, இந்துஸ்தானி, சம்ஸ்கிருதம், சிங்களம் முதலிய பாஷைகளிலும் விசேஷபயிற்சி யடைந்திருந்தார்கள்;—தமிழ் இங்கிலிஷ் தவிர, பல இதர பாஷைகளிலும் பிரவிர்த்தியும் நிபுணத்வமும் பெற்றிருக்கும் மேதாவிகள் நாடார்குலத்தில் இன்னும்ஏராளமா யுண்டு.—முதலாவதாய் எம். எல். பரீக்ஷை தேறி, மதராஸ் ஹைகோர்ட்டில் அட்வோகேட்டா யிருந்த †கனம் ஜோஸப் ஸத்யநாடாரவர்கள், M.A., M.L., யூனிவெர்ஸிட்டி பெல்லோ, கார்போரேஷன் கமிஷனர் முதலிய கவுரவ உத்யோகங்களையும், இந்தியகிறிஸ்தவ சங்கத்தின் பிரஸிடென்றுஸ்தானத்தையும், (Freemason) பிரீமேஸன்சங்கத்தில் (The Worshipful Master of the Lodge) 'பூஜிதை எஜமான்' என்னும் மகிமைஸ்தானத்தையும் வகித்தார்கள்;—ஷையார் குமாரரும், காளதில் மதராஸில் ஹைகோர்ட்வக்கீலா யிருப்பவரு மான மக-ா-ா-ஸ்ரீ பாலலிங்கம் சத்தியநாடாரவர்கள், M.A., B.L., லத்தீன்பாஷையில் எம். ஏ. பரீக்ஷை தேறியிருக்கிறார்கள்;—முதலாவதாய் டிஸ்டிரிக்ரிஜிஸ்திரார் உத்யோகம் வகித்தவர், குலாபிமானியும் சாதுரியமாய்ப்பேசுந் திறமைவாய்ந்தவர்களு மான மக-ா-ா-ஸ்ரீ சாமுவேல் சற்குணர்நாடாரவர்கள், B.A.;—மதராஸ்-வெப்பேரியில் S.P.G. சூப்பரின்டென்டிங் மிஷனரியா யிருந்து, 1897-ல் இரத்தச்சாட்சியாய் மடிந்துபோன † Rev. ஜோஸப் ஞானஒளிவுஐயரவர்களைப் போல் தமிழிலும் விசேஷமாய் இங்கிலிஷிலும் பேசுந்திறமையும், தைரியமும், யுக்தியும், சாமர்த்தியமு முள்ள மிஷனரி இந்தியாவில் இனி எழும்புவார்களோ என்ற சந்தேகத்தி லிருக்கிறது;—முதலாவதாய் கல்குத்தா யூனிவெர்ஸிட்டியில் படித்து கிராஜ்யேற்றாகி வந்தவர், மதராஸ் எஸ். பி. ஜி. தியாலஜிகல்காலேஜில் வைஸ்பிரின்ஸிபாலா யிருந்த † Rev. S. Y. ஆபிரகாம்ஐயரவர்கள், B.A.;—கல்குத்தா யூனிவெர்ஸிட்டியில் பி. ஏ. பரீக்ஷைதேறியபின் இங்கிலாந்துக்குப்போய் (Oxford) ஆக்ஸ்போர்ட் யூனிவெர்ஸிட்டியில் கிராஜ்யேற்றானவர், நாளதில் கும்பகோணம் கவர்ன்மென்றுகாலேஜில் புரோபெஸராயிருக்கிற மக-ா-ா-ஸ்ரீ ஆபேல் அருளானந்தம் நாடாரவர்கள், B.A;—முதலாவதாய் எல். எம். எஸ். பரீக்ஷை தேறி, இங்கிலிஷ் யூனிவெர்ஸிட்டிகளில் எம். டி. முதலிய பட்டங்களும் பெற்று, அமெரிக்காவுக்கும் போய் அவ்விடம் வைத்தியமுறைகளிலும்

பழகிவந்தவர், நாஞ்சினாட்டு வாசியாய் மதராவி லிருந்த †டாக்டர் ஜேம்ஸ் ஹாரிஸ் நாடார்அவர்கள்;— முதலாவதாய் எம். பி., சி. எம். பரீக்ஷைகள் தேறியவர், காலதில் மதராஸ்-புரசபாக்கத்தி லிருக்கும் மக-ா-ா-ஸ்ரீ மதுராஜ் ஞானஒளிவு நாடாரவர்கள், B.A., M.B., C.M.;— முதலாவதாய் பி. சி. இ. பரீக்ஷை தேறியவர், காலதில் மதராவில் D. P. W. எக்ஸிகியூட்டிவ்இஞ்ஜினீரா யிருக்கும் கனம் ராய் ஸாஹிப் எஸ். கோவில்பிள்ளை நாடாரவர்கள், B.A., B.E.;—முதலாவதாய் ஷை எக்ஸிகியூட்டிவ் இஞ்ஜினீர் உத்யோகம் பெற்றவர், மக-ா-ா-ஸ்ரீ ஜே. எஸ். முத்தையாநாடாரவர்கள்;—முதலாவதாய் டிப்டிகலெக்டர் உத்யோகம் பெற்ற மக-ா-ா-ஸ்ரீ நவமணி டேவிட்நாடார், B.A., B.L. அவர்களை, க்ஷத்திரியவீரத்துவமும் சாமர்த்தியமும் பொருந்திய ஸிம்ஹம் எனச் சொல்லலாம்;—இங்கிலாந்துக்குப்போய் பாரிஸ்டர் பரீக்ஷைதேறியவர், திருச்செந்தூர்தாலூகா-மூதலூர்வாசியாய் ரங்கூனில் பி. ஏ. பாஸ் பண்ணின † மக-ா-ா-ஸ்ரீ சத்தியநாதன் சாமுவேல் நாடாரவர்கள், Bar-at-Law;—அமெரிக்காவி லுள்ள (Yale) யேல் யூனிவெர்ஸிட்டியின் உயர்தரப்பரீக்ஷைகளில் முதலாவதாய் தேறிவந்தவர், மக-ா-ா-ஸ்ரீ J. S. கியோடோர்நாடார், M.A. அவர்களும், அவ்விடம் (Chicago) சிக்காகோ யூனிவெர்ஸிட்டியில் முதலாவதாய் எம். ஏ. பரீக்ஷைதேறிவந்தவர், மக-ா-ா-ஸ்ரீ ஏ. டேவிட் மாசில்லாமணி நாடாரவர்கள், M.A. யும் ஆகும்;—பிறையாறு வாசியும், நாடார்மஹாஜனசங்கத்தின் முதலாவதுசெக்ரட்டரியு மாகிய கனம். S. முத்துசாமிநாடாரவர்கள், B.A., இந்நாடார்களுள் முதலாவதாய் பி. ஏ. பரீக்ஷை தேறினார்கள்;—காயாமொழிவாசியும், காலதில் ஸ்ரீவைகுண்டம் யூனியன் சேர்மனு மான வக்கீல், மக-ா-ா-ஸ்ரீ S.S. ஆதித்தநாடாரவர்கள், B.A., B.L., இந்நாடார்களுள் முதலாவதாய் பி. எல். பரீக்ஷை தேறினார்கள்;—சிவகாசியில் பரம்பரைதனவந்தர் குடும்பத்தி லுதித்து, தற்போது மதராஸ் ஹைகோர்ட்டில் பிராக்டிஸ்செய்துவருகிற மக-ா-ா-ஸ்ரீ மொ. சி. ஆ. சிதம்பரநாடாரவர்கள், B.A., B.L., இந்நாடார்களுள் முதலாவதாய் ஹைகோர்ட்வக்கீ லானார்கள்;—பாளையங்கோட்டை வாசியான மக-ா-ா-ஸ்ரீ ஜே. எஸ். டேவிட்நாடார், இங்கிலாந்தில் முதலாவதாய் (I. M. S.) ஐ. எம். எஸ். என்னும் மதிப்புள்ள வைத்தியசாஸ்திரப் பரீக்ஷை தேறி, தற்சமயம் மெசோபதாமிய போர்க்களத்தில் (Captain) காப்டன்உத்யோகம் வகித்துவருகிறார்.—நாடார்குலப் பெண்களிலும் எண்ணிறந்தபேர், மெட்ரிக்லேஷன், (எப். ஏ.) இண்டர்மீடியேட் முதலிய பரீக்ஷைகள் தேறியிருப்ப தன்றி, பி. ஏ., எல். ட்டி. முதலிய உயர் பரீ-

க்ஷைகள் தேறியவர்களும் பல ரிருக்கின்றனர். இதுபோக, எல். எம். எஸ். முதலிய வைத்தியசாஸ்திரப் பரீக்ஷைகள் தேறிய பெண்களும் சிலருண்டு. முதலாவதாய் பி. ஏ., எல். ட்டி. பரீக்ஷைகள் தேறி ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸ் உத்யோகம் செய்த பெண், † மிஸிஸ் செத்வி ஞானம் அம்மாள், B.A., L.T.; பெண்களுள் முதலாவதாய் எம். பி., சி. எம். பரீக்ஷைகள் தேறியிருப்பது, மிஸிஸ் ரத்னம் ஐஸக் அம்மாள், M. B., C. M. —உயர்தரக்கல்வி பயின்று, உயர்தர உத்யோகங்கள் வகித்தவர்களும்-வகிப்பவர்களு மான மற்றும் சகல நாடாரமேதாவிகளின் நாமங்களும், நாடார்குல 'டைரெக்டரி' எழுதப்பட்டால் அதில் விவரமாய் வரக்கூடும்.

அங்கங்கே கிறிஸ்தவமிஷனரிகள் முதலானவர்களா லேற்பட்ட பள்ளிக்கூடங்க ளிருந்துவருவது போக, திருநெல்வேலிஜில்லா, திருச்செந்தூர் தாலூகாவில், காயாமொழி, பரமன்குறிச்சி, தண்டுப்பத்து, படுக்கப்பத்து, பள்ளக்குறிச்சி, கானம், வாணுபன்விளை, ஆறுமுகனேரி முதலிய வூர்களில் அந்தந்தவூர் தலைமைநாடார்களாலும், மூக்குப்பீறிகுடி, பேய்க்குளம் முதலிய வூர்களில், எகோவாமேசியாமார்க்கத்தாரான இந்திய ஏக இரக்ஷக சங்கத்தார் என்னும் நாட்டார்சபையாராலும், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, ஏறல், உமரிக்காடு, குலயங்கரிசல், மடத்தூர் முதலியவூர்களில் அவ்வவ்விடத்து நாடார்களாலும், தூத்துக்குடியில் ஒரு நாடாராலும், அப்படியே, திருநெல்வேலிஜில்லாவின் சேஷ தாலூகாக்களிலும், திருவாங்கூரைச்சேர்ந்த நாஞ்சினாட்டிலும், ராமநாதபுரம், மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களிலும் ஆங்காங்குள்ள நாடார்களாலும், விசேஷமாய் நாடார்குலச் சிறுவர்-சிறுமிகளின் கல்விவிருத்திக்காக சுயமுயற்சியாய் எலிமெண்டரிஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டு, இதரஜாதிப்பிள்ளைகளும் அவைகளில்படிக்க இடங்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். நாடார்குல 'டைரெக்டரி' தயாரானால், அவைகள் திட்டவட்டமான விவரத்துடன் வெளியாகும். அவைகளுள், விருதுப்பட்டி 'க்ஷத்திரிய வித்யாசாலை,' சிவகாசி 'விக்டோரியா ஹைஸ்கூல்,' பிறையாறு 'நாடார் ஹைஸ்கூல்' என்பவைகள் ஹைஸ்கூல்களாகவும், அருப்புக்கோட்டை, பட்டிவீரன்பட்டி, திருமங்கலம், கமுதி, பாலையம்பட்டி, சாத்தூர், கடம்பூர், ஆறுமுகனேரி முதலிய இடங்களி லிருப்பவைகள், தற்போது ஸெக்கண்டரிஸ்கூல்களும், 1-வதுகிரேட் எலிமெண்டரிஸ்கூல்களு மாக இருந்தாலும், சீக்கிரம் அதினும் உயர்வடையக்கூடியவைகளாகவும் இருக்கின்றன.—விருதுப்பட்டியில் மாத்திரம் நாடார்களின் பொது மகமைச்சொத்து சுமார் 1 கோடிரூ. பெறுமான தாகவும், அவைகளின் வருஷாந்தர

மகமைவரும்படி சுமார் 1லக்ஷரூபாயாகவும் இருப்பதின் ஒருபாகத்திலிருந்தே ஷை க்ஷத்திரியவித்யாசாலை நடத்தப்பட்டுவருகிறது.—துவக்கத்தில், விருதுப்பட்டி கனம் வ. பெ. சண்முகநாடாரவர்கள், இந்த வித்யாசாலை விஷயமாய் மிகவும் ஊக்கத்துடன் வேலைசெய்து, மானேஜராகவுமிருந்து இதை முன்னுக்குக்கொண்டுவந்ததுமல்லாமல், ஷை வித்யாசாலைக் கட்டிடத்துக்காக, தம் சொந்தத்திலிருந்து ரூ.13,000 கொடுத்தும் உதவினார்கள். விருதுப்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ சி. த. சங்கரலிங்க நாடார், சுமார் 10,000ரூ. பெறுமானதாக தூத்துக்குடியிலிருக்கும் தம்முடைய துவரைஉடைக்கும் தொழிற்சாலையை ஷை க்ஷத்திரியவித்யாசாலைக்கென்று (will) உயில்சாதனம்பண்ணி, நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார். இதுபோக, இந்த வித்யாசாலைக்காக, தூத்துக்குடியில் நாடார்களால் ஒரு ரிஸர்வ் பண்டு ஏற்பட்டிருக்கிறது. ஷை க்ஷத்திரியவித்யாசாலையிலிருந்து தேறினவர்களாய் காலேஜுகளில் சேர்ந்துபடிக்கும் மாணாக்கருக்கு ஷை நிதிகளிலிருந்து ஸ்காலர்ஷிப் உதவி நடக்கிறது. இந்த வித்யாசாலையில் தற்சமயம் 1,000 மாணாக்கர்களுக்குமேல் படிக்கிறார்கள். இதைப்பற்றி 1909-ல் டாக்டர் தர்ஸ்டன் துரை, தென்இந்தியஜாதிபுஸ்தகத்தில் (VI. 378) எழுதிவைத்திருப்பதாவது:—

"The Chandrans have established a school, called Kshatriya Vidyasala, at Virudupati in Tinnevelly. This is a free school, for attendance at which no fee is levied on the pupils, for the benefit of the Chandran community, but boys of other castes are freely admitted to it. It is maintained by Chandrans from their mahimai fund, and the teachers are Brahmans, Chandrans, etc."

க்ஷத்திரியரின் அறுவகைத்தொழில்களிலொன்று "ஈதல்" ('தானம்') ஆக இருக்கிறபடிக்கு, இந்த க்ஷத்திரிய வித்யாசாலையில், பிராமணர் உள்பட பிறஜாதி பிள்ளைகள் யாதொரு பீஸும் கொடுக்காமல் நாடார்களிடம் வித்யாதானம் பெற்றுவருகிறார்கள்.—இதுபோக, கடம்பூர் ஸ்ரீமான் க. அ. ரா. ம. மகாலிங்கநாடாரவர்கள், ஷை யூரில் தம் சொந்தஜேபியிலிருந்து ரூ.15,000க்குமேல் செலவுசெய்து, 'நாடார் ஜியார்ஜ் ஸ்கூல்' என்னும் நாமமாய் ஒரு செக்கண்டரிஸ்கூல் ஏற்படுத்தி, அதில் நாடார்குல சிறுவர்-சிறுமிகள் இலவசமாய்க் கல்வி பயின்றுவரும்படி செய்திருக்கும் நடபடிக்கையானது, மிகவும் புகழ்பெறுங் காரியமே.—மேலும், ஷை விருதுப்பட்டியிலும், சிவகாசி, பட்டிவீரன்பட்டி முதலிய இடங்களிலும், நாடார்குலப் பெண்குழந்தைகள் படிப்பதற்காக தனியாக கேர்ல்ஸ்ஸ்கூல்களும் நாடார்களால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. தவிர, (F. M. S.) பெடரேட்டட் மேலே ஸ்டேட்ஸ்-குலா

லம்பூரில் வியாபாரம் செய்துகொண்டிருக்கிற கமுதிவாசிகளான இரு சகோதரர்கள், கமுதி ஊரிலுள்ள நாடாரப் பெண்களின் கல்விவிருத்தியைக்கருதி, தங்கள் சொந்தப்பொறுப்பாய், 'கமுதி பாலபோதினிப் பெண் பாடசாலை' என்றொன் றேற்படுத்தி நடத்திவருவது மிகவும் மதிக்கப்படத்தக்க காரியமே.

இதுவன்றி, மதராசில் 'மதராஸ்நாடார்கள் சங்கம்,' நாகபட்டணத்தில் 'பாண்டியகுல அபிவிர்த்தி சங்கம்,' மதுரையில் 'பாண்டியநாடார்கள் சங்கம்,' ஆண்டிபட்டியில் 'க்ஷத்திரிய அபிவிர்த்தி சங்கம்,' சடலாடியில் 'நாடார்கள் தர்மபரிபாலன சபை,' பெருநாழியில் 'நாடார்கள் தர்மபரிபாலன சங்கம்,' கல்லூருணியில்—சபை, திருமங்கலத்தில் 'க்ஷத்திரியகுல கல்விச்சங்கம் & லைபிரேரி,' விருதுப்பட்டியில் 'ராய்பஹதூர் T. ரத்னசாமிநாடார்மெமோரியல் ரீடிங்ரூம் & லைபிரேரி,' 'க்ஷத்திரிய ஊழிய சங்கம்,' 'பங்கஜவிலாஸ வித்யாபிவிர்த்தி சங்கம்,' அறுப்புக்கோட்டையில் 'நாடார்கள் கல்விப்பிரசங்க சபை,' 'பாலசந்திர வித்யாபிவிர்த்தி சங்கம்,' பாலையம்பட்டியில் 'பால்யநாடார்கள் சங்கம்,' ஏழாயிரம்பண்ணையில் 'சான்றோர் சன்மார்க்க சற்சனர் சபை,' சிவகாசியில் 'நாடார் அபிவிர்த்தி சங்கம்,' சாத்தூரில் 'நாடார்கள் சதானந்த சபை,' கடம்பூரில் 'நாடார்கள் கல்விச்சங்கம்,' முக்கூடலில் 'க்ஷத்திரியபாலியர் அபிவிர்த்தி சங்கம்,' பொதுவாய் திருநெல்வேலியில் 'தக்ஷிண மாறநாட்டார் பேட்டை நிதி,' பாளையங்கோட்டையில் 'நாடார்கள் சங்கம்,' மூக்குப்பீறிகுடியில் 'பெண்ட்லண்டு ரீடிங்ரூம்,' சிலோன்-மஸ்கேலியாவில் 'நாடார் ஆஸோஸியேஷன்,' ஷை டிக்கோயாவில் 'நாடார் அஸோஸியேஷன்,' ரங்கூனில் 'நாடார்மஹாஜன பரிபாலனச்சங்கம்,' முதலிய கல்விச்சங்கங்களும் தர்ம சங்கங்களும் உண்டாகி நடைபெற்று வருவதும், நம் நாடார்குலத்தவரின் கல்விவிருத்தி நடபடிக்கைகளாயிருக்கின்றன.

மேலும், கைத்தொழில் விருத்திக்கான நடபடிக்கைகளும் நம் நாடார் குலத்தவருள் அங்கங்கே ஆரம்பித்திருக்கின்றன. அவைகளில், பர்மாவைச் சேர்ந்த ரங்கூனில் (Saw mills) மரமறுக்கும் யந்திரங்கள் வைத்து மிகுதியாய்வேலைநடத்தும், நாங்குனேரித்தாலூகா-இட்டமொழி வாசியான ஒரு நாடார்கம்பனியின் ஆதீனத்தில், கப்பல்கட்டும்வேலை ஆரம்பித்திருப்பது, மிகவும் முன்னேற்றமும், தற்காலம் மிகஅவசியமுமான வேலைகளிலொன்றே.—அதுபோக, ஒரு சிவகாசிநாடாரின் கம்பெனியால், விளாத்திகுளம், குளத்தூர் முதலிய இடங்களில் ஜின்கள் வைத்து வேலைநடத்தி, தென்இந்தியாவின்பஞ்சு இதரதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது.—விருதுப்பட்டியில் ஒரு நாடார் கம்பெனியாரால், சாப்பித்தாளும் தேயிலையும் டப்பாக்களிலடைத்து இதரதேசங்களுக்கு பெருமிதமாய் ஏற்றுமதி

செய்யும் தொழில் நடந்துவருகிறது.—பெருங்காயம் (தூள்காயம்)செய்து இதரநாடுகளுக் கனுப்பும் வேலையும் விருதுப்பட்டியில் சில நாடார்களால் நடந்தேறிவருகிறது.—மதராஸ்-சுங்குவார்தோட்டத்தி லிருக்கும் ஒரு நாடாரால், 'பட்டணம் பொடி' அல்லது 'சுகந்த மூக்குத்தூள்' என தென் தேசத்தில் பிரசித்திபெற்ற புகையிலைத்தூளை நயம்பட ஆயத்தம்செய்து, வெளிநாடுகளுக்கு ஏராளமாயனுப்பும் தொழில் நடந்துவருகிறது.--மேலே (பக். 52, 53) சொல்லியபடி, பிடி-பால்திரட் உற்பத்திசெய்யும் கைத்தொழில், மூக்கூடல் வட்டகை நாடார்களால் நடத்தப்பட்டு, சிலோன், திருவாங்கூர், திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை முதலிய சீமைகளில் கிட்டத்தட்ட பூராவும் அவர்களுடைய ஷை சரக்குகளே பரவுதலான நிலைமையை யடைந்துவருகின்றன.—புகையிலையைப் பக்குவம்பண்ணி ஏற்றுமதிசெய்யுந் தொழில் சிவகாசிவட்டகையிலும், தொவரையை உடைத்து பருப்பாக்கி ஏற்றுமதிசெய்வது விருதுப்பட்டியிலும், ஏராளமாய் அரிசி குத்தியனுப்புவது திருமங்கலத்திலும், ஏறல்-திருவழுதிநாடான்விளையிலும் நடந்துவருகிறது.—அளங்கள் வைத்துநடத்தி உப்பு ஏற்றுமதிசெய்வது; தூத்துக்குடி, காயல்பட்டணம், ஆறுமுகனேரி, குலசேகரன்பட்டணம், கூந்தன்குழி, நாஞ்சிநாடு முதலிய இடங்களில், விசேஷமாய் நாடார்களின் ஆதீனத்துக் கைத்தொழிலா யிருந்துவருகிறது.—மதுரையிலுள்ள ஒரு நாடாரால் ஐரோப்பியர்செய்யும் மாதிரியாய் புகையிலைச்சுருட்டும், இன்னும்சில நாடார்களால் இங்கிலாந்தில்செய்துவருவதைக் கொப்பான (biscuits) பிஸ்கோத்துகளும் செய்து, லேபல்களும் போட்டு, இதரநாடுகளுக்கும் தேசங்களுக்கும் ஏராளமாய் ஏற்றுமதியாகிக்கொண் டிருக்கின்றன.—பாளையங்கோட்டையில் ஒரு நாடாரால் ஐரோப்பாவில்செய்வதைக் கொப்பாக, உயர்தினுசான பலவகை ரொட்டிகள், பன்கள், கேக்குகளும், ரவைகளும் செய்யப்படுகின்றன.—அப்படியே, கற்கண்டுசெய்யும் தொழிலும், சாம்பிராணிதயார் பண்ணும்வேலையும், மதுரைநாடார்களால் நடந்தேறிவருகின்றன.—வைத்தியவிஷயமாய், தஞ்சாவூரில் நடந்துவரும் கனம் ராவுஸாஹிப் மு. ஆபிரகாம்பண்டிதரவர்களின் 'கருணாநிதி' ஏற்பாடும், திருச்சிராப்பள்ளியில் கனம் டாக்டர் ஏ. மதுரம்அவர்களால் நடந்துவரும் 'குரு' ஏற்பாடும், இந்தியாவிலும், இன்னும் உலகத்தின் பல இடங்களிலும் மிகவும் மதிப்பும் கியாதியு மடைந்துவருகின்றன. இதற் கடுத்தமதிப்புள்ள இன்னும்பல தனித்தனி வைத்தியஏற்பாடுகளும் நாடார்களால் அங்கங்கே நடந்துவருகின்றன. விவசாய விஷயமாய் கனம் ஆபிரகாம் பண்டிதரவர்கள், தஞ்சாவூருக்கடுத்த மேல்புறத்தில் 'கருணானந்தபுரம்' என்னும் நாமமாய் ஒரு குடியேற்றத்தை உண்டு பண்ணி, அதில் பெரும் பணச்செலவில் கிணறுகள் வெட்டி, தண்ணீ

ரிறைக்கும் இயந்திரங்களும் வைத்து நடத்திவரும் விவசாய மானது, மற்றவர்களுக்கு மாதிரியாகக்கூடிய நல்நடபடிக்கையா யிருக்கிறது.—புஸ்தகம்அச்சிடுதல் விஷய மாகவும், ஷை பண்டிதரவர்கள், பெருஞ் செலவுசெய்து, (electric power) மின்சார சக்தியினால் 'லாலி' என்னும் நாமமாய் ஒரு பிரிண்டிங்பிரஸ் நடத்திவருகிறார்கள். இதைத் தவிர, பாளையங்கோட்டையில் 'டார்லிங்' பிரஸ், விருதுப்பட்டியில் 'சச்சிதானந்தம்' பிரஸ், சேலத்தில் 'திராவிடாபிமானி' பிரஸ், மதுராவில் 'விஜயவிகடன்' பிரஸ், நாகர்கோவிலில் 'விக்டோரியா' பிரஸ் முதலானவைகளும் நாடார்களால் நடத்தப்படுவன வன்றி, நமது நாடார்மஹாஜனசங்க ஷைவ்பிரஸிடென்றவர்களால், மதுராவில் முன் 'வி. என். ஜூபிலி' பிரஸ் என்னும் பேருள் பிரஸ்தாபத்துடன் நடந்தேறிய பிரஸ், தற்சமயம் பிறையாற்றில் அக் குடும்பத்தவர்களால் 'ரத்னவிலாஸம்' பிரஸ் என்னும் நாமமாய் நடைபெற்று வருகிறது.—அநேக இடங்களில் (Book-binding) புஸ்தகம் பைண்ட் பண்ணும் வேலைகளும் நாடார்களால் நடந்துவருகின்றன.—அறுப்புக்கோட்டைவாசி யான ஒரு நாடாரால் உயர்தர (Flute Harmoniums) புளுட் ஆர்மோனியங்கள் செய்து இதரநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன; மேம்பாடான தமது வேலைக்காக இவர், லால்குடி பொருட்காட்சிசாலையில் தங்கமெடலும் பரிசளிக்கப் பெற்றிருக்கிறார்.—மகா தர்மிஷ்டரான (Rev. Canon Margoschis) மர்காஷிஸ் பாதிரிதுரையவர்கள் நாசரேத்தி லுண்டுபண்ணி நடத்திவந்த (Art and Industrial School) கைத்தொழிற்சாலையில் படித்து வெளியேறினவர்களி லநேகர் நாடார்குலத்தவரா யிருப்பதால், அவர்களாலும் அங்கங்கே பலஇடங்களில் நெசவு, தச்சு, கொல், பலவிததையல், படம்வரைதல் முதலியகைத்தொழில்கள் நடந்துவருகின்றன.—இதுபோக நாடார்களி லநேகர், அங்கங்கே (photographers) புகைப்படம்பிடிக்குந்தொழிலுடையோ ராகவும், (artists) சித்திரம்வரைகிறவர்க ளாகவும் இருக்கிறார்கள்.—கனம் ராவு ஸாஹிப் ஆபிரகாம் பண்டிதரவர்களுடையவும், கனம் மதுரம் டாக்டர் அவர்களுடையவும் வைத்தியம், விவசாயம் முதலான கைத்தொழில்முயற்சிகளைப் பற்றி, (Somerset Playne Esq., F. R. G. S.) பிளேயின் என்னும் கனம்பெற்ற துரை, 1914-15-ல் லண்டனில் திரளான உயர்தரபோட்டாபடங்களுடன் அச்சிட்ட 'Southern India தென் இந்தியா' என்னும் விசேஷ புஸ்தகத்தின் 480, 481, 486—491-ம் பக்கங்களில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

தங்கள் இருப்பிடங்களை விட்டு வியாபாரத்துறைமுகங்களான அந்நிய இடங்களுக்குப்போய், பற்பலவகையான சரக்குகளை வண்டிகள் முதலான ஹேதுக்களால் கொண்டுபோயும்-கொண்டுவந்தும், அங்கங்கே நாட்டப்பட்டிருந்து கடைகள்-பேட்டைகள் ஏற்படுத்தியும் வியாபாரம்செய்வதையும், நாடார்கள் தங்கள் ஆளுகை விட்டுப்போனதின் பின்னால் தொடங்கி நடத்திவருகிறார்கள். அந்தப்படி, கடந்த 200 வருஷங்களாக தக்ஷிண மாறநாடார்களால் திருநெல்வேலி ஜில்லாவில், குலசேகரபட்டணம், தூத்துக்குடி (4), ஸ்ரீவைகுண்டம், சேவலப்பேரி, கயற்றாறு, கழுகுமலை, சங்கரன்கோவில், கோவில்பட்டி, உப்பூத்தூர், காசலாபுரம், கீழ்நாட்டுக்குறிச்சி முதலிய இடங்களிலும், ராமநாதபுரம்ஜில்லாவில், குமாரபுரம் (வீரப்பட்டி), சிப்பிப்பாறை, ஏழாயிரம்பண்ணை, சூரங்குடி, கொல்லப்பட்டி, கோட்டையூர், சிவகாசி (2), சேடபட்டி(கன்னிசேரி), ராமநாதபுரம், அறுப்புக்கோட்டை, விருதுப்பட்டி(3), வரல்பட்டி, நடையனேரி, செவ்வல்பட்டி முதலிய இடங்களிலும், மதுரைஜில்லாவில், திருமங்கலம், சின்னம்மனூர், தம்பிச்சிநாயக்கனூர், மதுரை, ஆண்டிபட்டி, தேனி, உத்தமபாளயம், அம்மையநாயக்கனூர், நிலக்கோட்டை (2), திண்டுக்கல், பழனி முதலிய இடங்களிலும், அதற்கப்பால் உமெலைப்பேட்டையிலுங்கூட பேட்டைகளும் முஜாபர்கானைகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே, உத்தர மாறநாடார்களின் பேட்டைகளும் முஜாபர்கானைக்களும் தக்ஷிணமாறநாடார்களுடையவைகளை விட அநேகமடங்கு ஜாஸ்தியாய் வடக்கே வெகுதூரம்வரையு மிருக்கின்றன; அவைகள் இன்னும் கணக்கெடுக்கப்பட வில்லை.—நாளதில், மாறநாடார்கள், தமிழ்நாடெங்கும் மாத்திர மல்ல, அதற்கப்பால் கர்நாடக-தெலுங்க-மராட்டிய-சௌராஷ்டிர நாடுகளிலும், வங்காளம் முதலிய கௌடநாடுகளிலும், இலங்கை, பர்மா, மலேஸ்டேட்ஸ், ஸ்டிரேட்ஸ்-கீழ்இந்தியத்தீவுகள் முதலிய இடங்களிலும் உள்ள எண்ணிறந்த வர்த்தகமுக்கிய ஸ்தானங்களில் அநேக வகையான வியாபாரங்களை நடத்துகிறவர்களா யிருக்கிறார்கள்.

முற்காலத்திலுள்ள நம் முன்னோர், இந்துமதக் கோவில்கள் விஷயமாய் ஏராளமாக நன்கொடைகளும் மானியங்களும் கொடுத்து, அவைகள் பிராமணக்குருக்கள் முதலானவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதுந் தவிர, தற்காலகனவான்களிலும்-தனவர்தரிலும் பலர், தங்கள்தங்கள் மதசம்பந்தமாய் பற்பல திருப்பணிகளும், நன்கொடைகளும், மானியங்களும் அளித்திருக்கிறார்கள். கடந்த 50வருஷங்களாக, பிறையாறு கனம் வெள்ளையநாடாரவர்களின் குடும்பத்தாரால் பிராமணாதியருக்கு

அளிக்கப்பட்டிருக்கும் நில-ரொக்க மானியங்களும், நன்கொடைகளும், ஸ்காலர்ஷிப்களும், அன்னசத்திர தர்மங்களும் கணக்கில்லாமல் அநேக லக்ஷம் பெறுமானவைகளா யிருக்கின்றன. மேலே சொன்னபடி பிறையாற்றில் ஒரு ஹைஸ்கூலும் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. இப்படியே, தமிழ்த்தேசம்மொத்தத்திலும் அங்கங்கே எண்ணிறந்த நாடார கனவான்கள், சத்திரங்கள்-மடங்கள்-சந்தவனங்கள்-கிணறுகள் உண்டாக்கியும், இன்னும் மற்றும்விதங்களாகவும் செய்திருக்கிற தர்மங்களுக்கு கணக்குவழக் கில்லை. கிறிஸ்துமதசம்பந்தமாகவும் பல தர்மங்கள் நடந்திருப்பதில், தஞ்சாவூர் கனம் ராவ்ஸாஹிப் ஆபிரகாம்பண்டிதரவர்கள், மதராஸ்-ஜியார்ஜ்டவுன் கனம் டாக்டர் ஏ. சி. ஆசீர்வாதநாடாரவர்கள் முதலியோரின் பேர்களை விசேஷித்துக் கூறலாம். கோவில்பட்டிதாலூகா-மார்த்தாண்டன்பட்டியிலும், ஸ்ரீவைகுண்டம்தாலூகா-தூத்துக்குடியிலும் அமர்ந்து, வியாபார-லேவாதேவி பிரவிர்த்திகள் நடத்திவருகிற †கனம் மா. வயி. வயிரவநாதநாடாரவர்களும் அவர்களின் புத்திரர்களும் சுமார் 1லக்ஷரூ. செலவிட்டு, தூத்துக்குடிடவுனில் ஒரு கருங்கல் சத்திரமும், அதற்கு வருமானம்கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய மற்றுங்கட்டிடங்களும், விளாத்திகுளத்தில் ஒரு ஆஸ்பத்திரியும் கட்டி, அவைகளில் நித்திய தர்மமும் நடத்திவருகிறார்கள். நாடார்குலத்தவர் அங்கங்கே செய்திருக்கும் பற்பல தர்மங்கள் விஷயமாய் தனித்தனியாய் விவரம் கொடுப்பதாயிருந்தால் இன்னும் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. இப்போ நேரம் போதாதென்று அவைகளை நிறுத்தியிருக்கிறேன். டாக்டர் மதுரம் அவர்கள் உத்தேசிக்கிற 'டயரெக்டரி' செவ்வையாய்த் தயாராகுமானால், அதில் இந்த தர்மவிவரங்களும் தொகுத் தெழுதப்படலாம்.

நாளது (War Fund) யுத்தபண்டு-(War Loan) யுத்தக்கடன் விஷயத்தில் நாடார்குலத்தவரால் கொடுக்கப்பட்டிருக்கும் தொகைகள் அநேகலக்ஷக்கணக்காக இருக்கின்றன. மேலும், நாளதில் யுத்தத்துக்காகவும், நமதுதேச பாதுகாப்புக்காகவும் கவர்ன்மென்றாரால் சேர்க்கப்படும் படைகளில் நம் நாடார்குல பாலியரில் அநேகர் சேர்ந்திருப்பது மல்லாமல், (Basrah) பாஸ்ராவில்நடக்கும் யுத்தகவர்ன்மென்று ஆபிஸின் பல வேலைகளிலும், அவ்விடம் போஸ்ட்டல் டிப்பார்ட்மென்றிலும் பல நாடார்கள் சேர்ந்திருக்கிறார்கள். தூத்துக்குடிப்பக்கத்துவாசியான மதராஸ் ஸ்ரீ துரைராஜ் ஞானமுத்துநாடார், (L.M.S.) எல். எம். எஸ். பரீக்ஷைதேறி, மிலிட்டரிடிப்பார்ட்மென்றைச்சேர்ந்து, பஞ்சாப்மாகாணத்தின் தலைநகரியான லாகூரில் நாளதில் (Lieutenant)லெவ்ட்டனன்ட் என்

னும் சேனாபதிஉத்யோகம் வகித்துவருகிறார். King's Royal Rifies பட்டாளத்தைச் சேர்ந்து, தற்போது (Palestine) பலஸ்தீனாவில் 54-வது டிவிஷன், 1/10 ரெஜிமென்டி லிருக்கும் (நாங்குனேரித்தாலூகாவாசி யான) ஸ்ரீ V. A. அசரியாநாடார், யுத்தத்தில் மிகுந்த வீரதீரச்செயல்கள் நடப்பித்ததினிமித்தம், மதிப்பான தளகர்த்த உத்யோகம் பெற்று 20,000 சேனைக்கு அதிபதியா யிருப்பதாகச் சொல்லப்படுவது மாத்திரமல்ல, இன்னும் அதினும்மேன்மையான பதவி பெறக்கூடியவரா யிருக்கிறாரென்றும், மகாமாட்சிமைதங்கிய நமது ராஜசக்கரவர்த்தி யான ஜியார்ஜ் மன்னரவர்களை நேரிற் பேட்டிகாணும் சலாக்கியம் அவருக்குக் கிடைத்ததென்றும் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைகிறோம்.

அங்ஙனே வீரத்திலும், சாமர்த்தியத்திலும், வாக்வல்லபத்திலும், காரியாதிகளைநடத்தும் திறமையிலும், தாங்களிருந்தவட்டகைக்கும் அப்பால் பேர்வாங்கிய சமர்த்தர்களும் நாடார்குலத்துள் திரளா யுண்டு. அவர்கள் பேர்களை எடுத்துச்சொன்னால் உபநியாஸம் மிகுந்துவிரியுமென் றெண்ணி நிறுத்தியிருக்கிறேன்.

சிவகாசி, விருதுப்பட்டி, அருப்புக்கோட்டை, கமுதி, பாளையம்பட்டி, ஆறுமுகனேரி, கச்சினாவிளை முதலான பலஇடங்களில், அவ்வவ் விடங்களின் நாடார்கள், லக்ஷக்கணக்கான பணங்கள் செலவுசெய்து, உயர்தரக் கட்டிடங்களான இந்துக்கோவில்கள் கட்டி, அவைகளில் சிலவற்றை பூராவாய் பிராமணாதீனத்தில் விட்டும், சிலவற்றை சுதாவில்வைத்து நடத்திக்கொண்டும் வருகிறார்கள். அருப்புக்கோட்டை முதலாளி மக-ள-ள-ஸ்ரீ மு. முத்துசுவாமி நாடாரவர்கள், தங்களிடங்களில், நாடார்களுக்காக தனிக்கோவில்களுண்டுபண்ணும் வேலையையே தங்களின் முக்கிய பிரவிர்த்தியாய் வைத்திருக்கிறார்கள்.

இதுபோல, தஞ்சாவூர்ஜில்லா-பிறையாறு †கனம் வெ. தவசிமுத்து நாடாரவர்களும், †கனம் அ. சபாபதிநாடாரவர்களும், கும்பகோணம் தேவஸ்தானகமிட்டியைச் சேர்ந்து, அதினதீனத்து திருமெய்ஞ்ஞானம் கோவிலின் டிரஸ்டிகளா யிருந்திருக்கிறார்கள்.—நமது நாடார்மஹாஜன சங்கத்தின் பிரவிடென் டாகிய கனம் வெ. பொன்னுசாமி நாடாரவர்கள், கும்பகோணம் ஸர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியில் மெம்பரா யிருக்கிறார்கள்.—சிவகாசி, மக-ள-ள-ஸ்ரீ ச. அ. ச. அருணாசல நாடாரவர்கள் குமாரர் செல்லக்கனிநாடாரவர்கள், திருநெல்வேலி தேவஸ்தானம்கமிட்டியைச்சேர்ந்த ஒரு பெரியகோவிலுக்கு தர்மகர்த்தாவா யிருக்கிறார்கள்.

இந்து தேவஸ்தானங்கள் விஷயமாய் இப்படியே பல அந்தஸ்தும்பொறுப்புமான உத்யோகஸ்தானங்களை வகித்தவர்களும்-வகிக்கிறவர்களு மான நாடார கனவான்கள் இன்னும் பலரு முண்டு.

இந்தியாமொத்தத்திலும் வேறெந்தஜாதியாரும் இங்கிலிஷ் ராஜாங்கமத மாகிய கிறிஸ்துமார்க்கத்தை இவ்வளவுதிரளாய் அனுசரியா திருக்க, நாடார்குலத்தவ ராகிய இந்த ஒரேஜாதியார், சென்னைராஜதானியின் தென்ஜில்லாக்களிலும்-நாஞ்சிநாட்டிலும் மாத்திரம் 2 லக்ஷத்துக்கு அதிகமான தொகையுள்ளவர்களாய் அதை அனுசரித்திருப்பதும், அதிலும், கிறிஸ்தவர்களாகிற மற்றும் சகலஜாதிக்காரருக்கும் விகற்பமாய், இவர்கள், கொள்வினை, கொடுப்பினை முதலிய வகையாய் இதரஜாதிக் கிறிஸ்தவர்களுடன் கலக்காமலிருந்து, மாட்சிமைதங்கிய நமது பிரிட்டிஷ் கவர்ண்மென்றார்பேரில் மனப்பூர்வமான பற்றுடையவர்களா யிருந்துவருவது, உள்ளபடியே, "Defender of the Faith கிறிஸ்துமத பாதுகாவலர்" ஆகிய மகாமாட்சிமையும் கனமும் பொருந்திய நமது ராஜசக்கரவர்த்தியவர்களுக்கு இந்தியாவில்கிடைத்த பெருமைகளி லொன்றாய்ப் பேசக்கூடிய சங்கதியா யிருக்கிறது. இதுவிஷயமாய் 1893-ல் அச்சான 'மதராஸ் அட்மினிஸ்டிரேஷன் மானுயலி'ல் "Of all Iudian tribes however they (i e. the Chandrar) number most converts to Christianity" இந்தியாவின் சகலஜாதிகளிலும், கிறிஸ்துமதத்தில் அதிகத்தொகையாய்ச் சேர்ந்திருப்பவர்கள் சான்றோர்ஜாதியார்தாம்" என்றும், (E. R. Baierlein) பையர்லேன் என்னும் துரை தமிழ்நாட்டைப்பற்றி யெழுதிய புஸ்தகத்தில், "It was amongst this simple race of-the Chandrars, that Christianity has celebrated her most important victories in India" "கிறிஸ்துமார்க்கம் இந்தியாவில்கொண்டாடும் மகா முக்கியமான வெற்றிப்பிரஸ்தாபங்களெல்லாம், கபடற்றஜாதியா ராகிய சான்றோர் அம்மதத்தைஅனுசரித்த காரியத்தில்தான் ஆகியிருக்கிறது" என்றும் எழுதியிருக்கிறார். துவக்கத்திலேதான் ரோமான்கத்தோலிக்கு மிஷனரிகளும், புரொட்டெஸ்டாண்ட மிஷனரிகளும், நாடார்குலத்தவர் தங்கள் ஜாதிவரன்முறை யான சன்மார்க்க ஆசாரங்களையும்-வழக்கப்பழக்கங்களையும் மாற்றாமலே கிறிஸ்துமார்க்கத்தை அனுசரிக்க இடங்கொடுத்திருந்ததால்தான், சிம்மண்ஸ் என்னும் கனம்பொருந்திய பாதிரியார் எழுதிவைத்திருக்கிறபடிக்கு (மேலே பக். 68), "இந்தியாவிலுள்ள சகல ஜாதிகளிலும் குலாபிமானவிஷயமாய் மகா மானரோசம்பாராட்டும் ஜாதியா யிருந்த சான்றோர், தங்களுக்கு இக்கட்டு மிகுதியாயிருந்த காலத்தில்,

மிஷனரிகள் தங்களிவர் தலுசரித்தபோது, பெருந்தொகையாய் கிறிஸ்துமதத்தில் சேரும்படி யாயிற்று.* மேலும், அப்படி கிறிஸ்தவர்களானவர்களுங்கூட, தாங்கள் க்ஷத்திரியகுலத்தவராயிருக்கும் பிரம்பரையை மெச்சிப் பாராட்டிவந்தார்கள். அப்படியே, 1891-ம் வருஷத்து மதராஸ் சென்சஸ்ரிப்போர்ட்டில், "The bulk of the Kshatriya Christians are in reality Chandrans. The Native Christians have naturally not completely thrown off Hindu customs." "தங்களை க்ஷத்திரியகுலத்தவரென்றுசொல்லும் கிறிஸ்தவர்களில் பெரும்பாலர் சான்றோரே. இந்த சுதேசகிறிஸ்தவர்கள் இந்துமத இயற்கையான தங்களுடைய பழய வழக்கபழக்கங்களை முற்றிலும் அகற்றிவிடவில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுகாரணத்தினாலே, நேற்று நமது காம்பரென்ஸில் பிரஸிடென்டாயிருந்த கனம்பொருந்திய அட்வோகேட்ஜெனரல் The Hon. Mr. எஸ். ஸ்ரீநிவாஸஐயங்கார் அவர்களும் நம் நாடார்குலத்தவரைப்பற்றி, "Above all, there are two salient features which strike one most. One is . . the perfect friendliness and active co-operation which exists between the Hindu and the Christian sections of your community." "எல்லாவற்றுக்கும்மேலாக, யாவரும் வியக்கத்தக்கவிதமாய் மனதிற்படியும் மகா பிரதானமான இரண்டு குறிப்புகளிருக்கின்றன. அவைகளிலொன்று,- உங்கள் ஜாதியாரில் இந்துக்களாயிருப்பவர்களும் கிறிஸ்தவர்களாயிருப்பவர்களும் ஒருவரோடொருவர் பூரணஐக்கிய முள்ளவர்களாயிருப்பதும்,

* 1854-ல் (Rev. P. Percival) பெர்ஸிவல் என்னும் மிஷனரிதுரை லண்டனில் அச்சிட்ட 'The Land of the Veda' என்னும்) புஸ்தகத்தில் (p. 485) சொல்லியிருப்பதாவது:—"Caste distinctions were permitted in the Syrian and Romish Churches from the beginning. The Dutch allowed its usages unrestrained observance. The Danish Mission at Tranquebar fostered it-, and the venerable Schwartz, Gerricke, and others, tolerated it in various ways."—இந்தியாமொத்தத்து (Metropolitan) மெட்ராபாலிட்டன்பிஷப்பா யிருந்த (Rt. Rev. Daniel Wilson, D. D.) மகாகனம் பிஷப் உவில்ஸன்துரையின் ஜீவியசரித்திரமாக (Rev. J. Bateman, M. A.) பேட்மன் என்னும் மிஷனரிதுரை 1860-ல் பதிப்பித்த புஸ்தகத்தில்(Vol. I. p. 428), பழய ஜெர்மன் மிஷனரிகளின் ரிப்போர்ட்களிலிருந்து மொழிபெயர்த்தெழுதியிருப்பதில் காணப்படுவதாவது:—"In 1809, the missionaries then in Southern India write to the Parent Society from Tanjore, and say:—'From the commencement of the Mission on this coast, it has been the uniform practice of the missionaries to instruct the converts in the truths of Christianity;—but never did they insist on any person who wished to embrace Christianity renouncing his caste.'"

இருவரும் ஒன்றுசேர்ந்து காரியாதிகளில் முயற்சியாய் ஒற்றுமைப்படுவதுமே" என்று சொன்னார்கள். இந்தக் கிறிஸ்தவநாடார்களைப்பற்றி, (I. C. S.) இந்தியன் ஸிவில் ஸெர்விஸ பரீக்ஷை தேறும் மாணுக்கருக்கு தமிழ்கற்பிக்கும் குருவாய் இங்கிலாந்தி லிருக்கிற (Rev. J. L. Wyatt) வையட் என்னும் மிஷனரிதுரை, 1894-ல் எழுதியிருப்பதாவது:—

"It must be admitted that the Christian Chantrars of Tinnevelly are amongst the most progressive races of S. India. No Mission in the Presidency is without them; they are the principal teachers in Mission schools and colleges. They have also secured appointments under the Government and are rapidly rising to positions of great responsibility and influence." "திருநெல்வேலிஜில்லாவி லுள்ள கிறிஸ்தவச்சான்றோர் தென் இந்தியாவில் மகாமேலாய் முன்னேறுகிற ஜனங்களுள் ஒருவகுப்பா ரென்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டிய சங்கதியா யிருக்கிறது. (சென்னை) ராஜதானியி லுள்ள கிறிஸ்தவமிஷன்களில் அவர்களில்லாதவைகள் ஒன்றுமேயில்லை. மிஷன் காலேஜ்களிலும் பள்ளிக்கூடங்களிலு முள்ள முக்கிய உபாத்திமாரெல்லாம் அக்குலத்தினரா யிருக்கிறார்கள். கவர்ண்மென்று உத்யோகங்களையும் அவர்கள் பெற்றிருப்பது மல்லாமல், மிகுந்த அதிகாரப்பொறுப்பும்-செல்வாக்கு முள்ள உத்யோகஸ்தானங்களுக்கும் வெகுதீவிரமாய் ஏறுகிறவர்களாகவும இருக்கிறார்கள்" என்பதே.

நாடார்குல கிறிஸ்தவர்களுள் (Church of England) இங்கிலாந்துச் சபையைச் சேர்ந்தவர்களின் விசேஷ முயற்சியால் இப்போ பலவருஷங்களாக "The Indian Missionary Society இந்திய மிஷனரி சங்கம்" என்றொன்றுண்டாகி இந்நாட்டிலும் மேல்காத்துமலைப் பிராந்தியங்களிலும் வெகுதாக்கமாய் வேலைநடந்துவருகிறது. பின்னாலே விவரங்கண்ட நாடார்குல பிஷப்அவர்களும் இம் மிஷனை நடத்துவதாக டி. தெலுங்கநாட்டிலுள்ள (Dornakal) தோர்ணக்கல் என்னும் இடத்திலிருக்கிறார்கள். இம் மிஷன் அநேகமாய் நாடார்குல ஸ்திரீகளின் கைக்கத்திலேயே நடக்கிறதென்று சொல்லவேண்டும். இதின் நிமித்தமாக தங்களின் விலையுயர்ந்த ஆபரணங்களை இனமாய்அனுப்பியவர்களான நாடார்குல மாதர்களும், டி தர்மவிஷயமாய் தங்கள் பேர் வெளிக்குவராது இனந்தெரியாமல் பொருளுதவிசெய்த நாடார்களும் ஏராளமாயுண்டு. தங்கள் பூராஆஸ்தியையும் டி மிஷன்விஷயத்துக்கு உவில் பண்ணிய மகான்களு மிருக்கிறார்கள்.—இதைத்தொடர்ந்து, நாடார்குலத்தவர் மிகுந்திருக்கும் கிறிஸ்தவசபைகளில் மிச்சமானபேர், இப்போ சிலகாலமாக, தங்கள் சபைகளைநடத்த ஐரோப்பா-அமெரிகாவிலிருந்து பணமாவது-மிஷனரிகளாவது வரவேண்டு மென்று விரும்பாமல், தங்கள்

தங்கள் சுயமுயற்சியினாலும் பணத்தினாலும் தங்கள் தங்கள் சபைகளை நடத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

பூர்வம் சிவகங்கை வாசியும், தற்போது தஞ்சாவூர்ஜில்லா, மாயவரம்-சியாளிதாலூகாக்களில் அநேக லக்ஷ ரூபா மதிப்பான பெரும் பூஸ்திதியையுடைய மிராசுதாரும், தாலூகா-டிஸ்டிரிக்டு போர்டு மெம்பரும், மாயவரம் முனிசிபல் கவுன்சிலருமான ம-ள-ள-ஸ்ரீ நாயகம் டேவிட் நாடாரவர்கள், 'தென் இந்திய கதோலிக் அசோஸியேஷன்' என்னும் மதிப்புள்ள ரோமன்கதோலிக்குமதச் சங்கத்தில் எக்ஸிகியூட்டிவ் கமிட்டிமெம்பரா யிருக்கிறார்கள். புரொட்டெஸ்டாண்டு மதத்தின் பற்பல பிரிவுகளில் எண்ணிறந்த நாடார்கள் பாதிரிமாரும் கண்ணியம்பெற்ற குருக்களுமாகியிருப்ப தன்றி, இங்கிலாந்துச் சபையைச் சேர்ந்தவர்களில், தென் இந்தியாவில் முதலாவதாய் 'Canon கனோன்' பட்டம் பெற்ற சுதேசகிறிஸ்தவர், நாடார்குலத்தவரான † ரெவரெண்டு கனோன் C. P. ஞானக்கண் ஐயரவர்கள், பி. ஏ., ஆவர். இந்தியா மொத்தத்திலும்; இந்தியரில் முதலாவதாய் 'Bishop பிஷப்' ஆகியிருப்பவர், நாடார்குலத்தவரான (The Rt. Rev. Bishop V. S. Azariah) மகாகனம் அசரியா பிஷப் அவர்களே. இதுபோக, (Bishop's Chaplain) 'சாப்லேன்' முதலிய கிறிஸ்துமத சுவர உத்யோகங்கள், வெகு வருஷங்களுக்கு முன்னிருந்தே கிறிஸ்தவநாடார்களால் வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இதுவன்றி, புத்தர், (Zoroaster) சோராவாஸ்தர், முகம்மதுநபி, ஸ்ரீ சங்கராசாரியர், ஸ்ரீராமாநுஜாசாரியர், ([illegible]ter) [illegible]தர், கேசவ் சந்திர ஸேனர், தயானந்த சரஸ்வதி முதலானவர்க[illegible]ப்போல, மதசீர்திருத்தமாக பூர்வமதத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தும் ஒரு விசேஷ நபி, சன்மார்க்க நெறிபிசகாத கண்டிப்பான நடையை, தாங்களும் தங்கள் பிள்ளைகளும் சுயவெறுப்பாய் நடந்து மாதிரிகாட்டினவர்களாய், நம்குலத்துள் ளிருப்பதையும் கொஞ்சம் கவனிக்கக் கோருகிறேன். அந்த நபி, நாடார்குல முன்னேற்றத்துக்காகவும் ஆரம்பமாய் சுயவெறுப்புடன் வேலைபார்த்த சிஷியராவு யிருப்பதால், அவரை விஷயமாய் சற்று விவரமாய்க் கவனித்தாலும் சரியாயிருக்குமென்றே நம்புகிறேன். அந்தநபி தாமிரவருணி நதியின் சங்கமத்துக்குச் சமீபமாய் பூர்வ கொற்கைப்பட்டணமிருந்த இடத்திலுள்ள மேற்கண்ட (பக். 24) 'குலசேகரராஜா வம்சம்' என்னும் குடும்பத்தி லுதித்தவர்கள். அந் நபியின் நாமம் நபி அ. நா. சட்டம்பிள்ளை ஐயா. அவர்களைப்பற்றி என் சுயவார்த்தைகளால் விவரம் சொல்லாமல், உலகத்தில் விசேஷித்து மதிக்கப்படும் சில ஆசிரியர்களால் ஏற்கனவே எழுதி பிரசுரிக்கப்பட்டிருப்பவைகளில் சிலவற்றை மாத்திரம் இங் கெடுத்துச்சொல்கிறேன்.

(a). (H. R. Pate Esq., I. C. S.) பேட் என்னும் கலெக்டர் துரையவர்களைக்கொண் டெழுதி, 1917-ல் கவர்ண்மென்றார் பதிப்பித்திருக்கும் திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி லிருப்ப தாவது:—

"In Prakasapnram, a neighbouring hamlet (to Nazareth), is a small congregation owning a church, who style themselves 'Hindu Christians,' or 'Jehovah Messianists.' They observe the Jewish Sabbath and new-moons and make offerings to the Deity; their marriages and funerals are conducted on Hindu lines, but their priests take no part in the ceremonies. The sect dates from 1850, when their leader, a Chandran (who is still living), owing to some personal differences seceded from the S. P. G. and drew a large number of followers with him. At the present time his adherents number only a few hundreds and are scattered over three or four neighbouring villages." என்பதே.

(b). அந் நபியிருந்தவூரா கிய நாசரேத்திலேயே 30 வருஷங்களுக்குமேல் மிஷனெரியா யிருந்து உலகெங்கும் கீர்த்திபெற அநேகவேலைகள் செய்த† (Rev. Cauon A. Margoschis) மார்காஷிஸ் பாதிரியார், தாம் 1893-ல் எழுதி கல்குத்தாவில் அச்சிட்ட ஒரு புஸ்தகத்தில், இந்த நபியைப்பற்றிச் சொல்லியிருப்ப தாவது:—

"Sitampillai-Aiya,-being far and away the most educated and intelligent man in the whole mission, had ideas of his own.—He drew up so[illegible]ies of Religion by which his congregation should be self-suppo[illegible]g (and it always has been so), should be free from the tyranny o[illegible] Europeans and be entirely officered by natives. He was a student of Hebrew, Greek, Sanskrit, English and Tamil, and was quite a capable leader so far as education and ability went. Sitampillai-Aiya adopted several Jewish rites and ceremonies, and amongst them, as truly recorded, the observance of the Sabbath on Saturdays." என்பதே.

(c). (Dr. J. Mullens) டாக்டர் மல்லன்ஸ் என்னும் துரை, தாம் இந்தியாவில் மிஷனரிவேலைபார்த்த காலத்தில் நடந்த சங்கதிகளாக, 1863-ல் லண்டனில் அச்சிட்ட புஸ்தகத்தில், நபி சட்டம்பிள்ளையாவின் இந்த மதஏற்பாட்டு விஷயமாய், 'One event of an unusual kind has occurred in the mission in recent years, which must possess a special interest for all missionaries, not only in India, but throughout the world." "இப்போ சிலவருஷங்களுக்கு முன்னே, இயற்கைக்கு வித்தியாசமான ஒரு சம்பவம் மிஷனில் நடந்திருக்கிறது;

அதிசயத்தையறிந்துகொள்வது இந்தியாவில்மாத்திரமல்ல, உலகமெங்குமுள்ள சகல மிஷனெரிகளுக்கும் விசேஷ இன்பகரமாயிருக்கும்" என்று இவ்விக்ஷ, ஷை வருஷத்துக்குச் சற்று முன்னதாக (Dr., afterwards Bp. Caldwell) டாக்டர் கால்டுவெல்துரையவர்கள் எழுதி மிஷனரிப்பிரசங்கங்களில் வெளியாக்கின அடியிற்கண்ட வசனத்தை மேற்கோளாக எடுத்தெழுதியிருக்கிறார். அதாவது:—

'This schism commenced in a large Christian village in the district of Nazareth, and involved a contiguous portion (Pragasapuram, &c.) of the Church Missionary Society's district of Mengnanapuram. . . . The adherents of the schism number, it is said, more than 2,000 souls, and are without exception Chantrars.-They call themselves in their documents 'The Hindu Church of the Lord Jesus;' but amongst their neighbours they call themselves, and are generally called, the *Nattar*.-In their zeal for caste and Hindu nationality, they have rejected from their system everything which appeared to them to savour of a European origin.-They observe Saturday instead of Sunday as their Sabbath.—It is not greatly to be wondered at that a schism like this should have taken place during the progress of the native church towards maturity;-and we have been expressly forewarned, that 'there must be also heresies among you, that they which are approved may be made manifest among you.' One good result at least has already sprung out of this evil. It has often been asserted that if all European missionaries were withdrawn, and if European money ceased to circulate in our missions, native Christianity would immediately disappear. The experiment has been tried on a somewhat extensive scale at Tinnevelly. The schismatics in the district of Nazareth and its neighbourhood have cut themselves off as completely from all European help in money and influence as if there were no longer any Europeans in the country; and yet they have sustained their own religious ordinances, after their own fashion, it is true, but, it must be admitted, with considerable public spirit and zeal, for more than five years; and I have not heard it said, that any one of their number has returned to heathenism" என்பதே.

(d). நாளது நாகரீகலோகத்தின் ராஜாக்களும்-பிரபுக்களும்-தலைவர்களுமான மேதாவிகளின் பார்வைக்கேற்றதாய், லண்டனிலுள்ள (The Foreign and Colonial Compiling and Publishing Co. என்னும்) ஒரு பெரிய புஸ்தகப்பிரசுரக் கம்பேனியாரால், அநேகங்கே ரம்பக்கற்

றோரும்-அனுபவமுடையவர்களுமாகத் தெரிந்த விசேஷ மேதாவிகளைக் கொண்டு, பெருஞ்செலவின்பேரில் தயார்பண்ணி, (Somerset Playne Esq., F. R. G. S.) பிளேயின் என்னும் கண்ணியம்பெற்ற கல்விமானால் 1914—15-ல் லண்டனில் பிரசுரமாகி, பிரதி 1-க்கு ரூ. 87 கிரயமாக விற்கப்படும் மேற்கண்ட "*Southern India* தென் இந்தியா" என்னும் மதிப்புப்பெற்ற புஸ்தகத்தின் 484, 486-ம் பக்கங்களில் ஷை சபையைப்பற்றிச் சொல்லியிருப்பதாவது:—

"India is essentially a country of cults (or particular rituals or systems of worship), and the history of the religious faiths of to-day carries the student back to the origin of creeds. Many of these systems, such as Hinduism, Buddhism, and Jainism, are autochthonous, while others were formulated in the early days of the Christian era, with the exception of the doctrines proclaimed by the Jews who arrived in India during the sixth century B.C. One of the sects which has arisen in later days is connected with 'Jehovah-Messianism,' or 'The Indian Church of the Only Saviour,' and it was founded in the year 1857 by one Rabbi A. N. Chattampillai-Aiya (born October 24, 1823), who was a student of many European and Oriental languages and literature, residing at Prakasapuram, near Nazareth, in the district of Tinnevelly. The adherents were about 6,000 in number in the early seventies, but owing to lack of support and to incessant persecutions there are now (1915) only five churches, with a membership of about 1,000 persons. One of the principal tenets of this society is that the Christianity of the present day is *not identical with the teachings* of the early Apostles, but that the thousand-and-one nonconforming branches of religious activities are offshoots of a new faith, founded on the anti-Jewish or unchristian principles of Hadrian, Constantine, Justinian, and other Roman and Christian emperors in contradiction of the Holy Scriptures. Jehovah-Messianics, in their interpretation of the Divine Books, observe the seventh-day Sabbath, the festivals of the new-moon; the feasts of 'Pascha' (the Passover), the 'harvest' (the Pentecost), of 'trumpets,' of the 'expiation,' the 'ingathering,' and of 'booths,' offering first-fruits, incense, meat, and other sacrificial oblations in the presence of Jehovah. They submit themselves to bodily purifications, and assert that these were ordained by Jehovah to commemorate the fall and the expiation of the sins of our first parents. Such Hindu rites as are not inconsistent with Scriptural ideas are not rejected, and the text of the Hindu law with regard to marriage and inheritance is generally accepted.

"The present leaders of the body are Messrs. Nabhi P. V. Pandion and B. J. M. Kulasekhara-raj, sons of the founder. The founder's two daughters (Mother Maria-Ammal and Mother Bhagya-Ammal) remain virgins for religion's sake.

"Rabbi Chattampillai-Aiyar (still alive) was an ardent collector of books from the year 1850, and he succeeded in gathering together about 10,000 volumes on various subjects, chiefly Oriental and religious, in the following languages, namely, Sanskrit, Pali, Tamil, Malayalam, Canarese, Hindustani, Arabic, Hebrew, Greek, Latin, French, English, and German. In addition to these the library contains hundreds of old Tamil palm-leaf manuscripts, and about 10,000 coins belonging to the Pandya, Chola, Chera, Telugu, Mahommedan, and other dynasties of South India and Ceylon.

"Mr. B. J. M. Kulasekhara was born in the year 1873, and he is endeavouring to further the interests of the cause which was originated by his father, and to publish valuable historical and other works. To this end he is compiling a philological dictionary and a grammar of the Tamil language, having special reference to Sanskrit and other languages of India; also an early history of the Tamil country on new and original principles; he has prepared many numbers of his 'Aids to the History of Dravidam' series, and 'Sources of Tamil Lexicography' series, as well as an Anglo-Tamil magazine entitled *The Light of Dravidam and the Orient (Dravida-Purva Dipam)*. He has also made literary contributions to the local Government Ethnographic, Gazetteer, and Archæological Publication Departments. His most interesting production, however, is the 'Jehovah-Messianic Religion Explained,' which is issued in four parts. The first part deals principally with the origin and motive of the doctrines and practices of the Bible and the history of their gradual rejection by the Christians, the object of the author being to bind together the people of the world—Jews and Gentiles alike—in the truths of that book. The second part is styled the 'Torah-Bible and its Weedy Books,' and it gives the accounts of the genuine, apocryphal, and pseudonymous books of the Jewish and Christian faiths. The Jehovah-Messianic religious precepts and practices are classified and explained in the third part, while the fourth, 'Torah-Ethics,' sets forth, in tabulated form, the various moral injunctions of the Bible. Other religious works from the pen of this author include, 'Incarnate Revelation,' a treatise on Christology, and an edition of the Bible containin gvarious readings and translations according to the canon of the Jehovah-

Messianic Church together with the 'Light of Religion,' which is to be published in magazine form. Rabbi Kulasekhara-raj is most enthusiastic in the study of religious works and in orientological researches. and he is ever ready to proceed to any part of the world where he may be able to extend his knowledge, or where his vast experience and great abilities may be of service to others."

(e). இந்தியாவின் விசேஷங்களையெல்லாம் புஸ்தகரூபமாயமைக்கும்படி கவர்ண்மெண்டாரால் (Director of Indian Statistics) டயரெக்டராக நியமிக்கப்பட்டவரும், அதில் புகழ்பெற வேலைநடத்தியதால், இங்கிலிஷ் ராச்சியத்தில் பிரபுவுமான †(Sir W. W. Hunter, M.A., LL.D., K.C.S.I., C.I.E.) ஸர் ஹண்ட்டர்பிரபு, 1888-லும், அவரைத்தொடர்ந்து (Rev. Henry Rice) ஹென்ரி ரைஸ் என்னும் மிஷனெரிதுரையும், தாங்கள் சொல்வது இன்னதென்று தெரியாத தெய்வவாக்குப்போல், உலகத்தில் மகாமதிப்புப்பெற்ற பத்திரிகைகளிலொன்றாய் இங்கிலாந்தில்பிரசுரமாகிற '*The Nineteenth Century* பத்தொன்பதாம் நூற்றாண்டு' என்னும் இங்கிலிஷ்பத்திரிகையிலும், லண்டனிலுள்ள (R.T.S.) ரிலிஜியஸ் டிராக்ட் ஸொஸைட்டியாரால் அச்சிடப்பட்ட ('*Native Life in South India*') 'தென்இந்திய சுதேச ஜீவியம்' என்னும் புஸ்தகத்திலும் எழுதிவைத்திருக்கிற, அடியிற்கண்ட தீர்க்கதரிசனம், ரபி சட்டம்பிள்ளைஐயா ஆரம்பித்த மேற்கண்ட எகோவா- மேசியாமதத்தையே குறிக்கிறதென்று கடந்த 25 வருஷங்களாக பலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதாவது:-

"We have no hesitation in saying that the time is coming when the whole of South India will be Christianized, and that neither Brahmoism nor Rationalism will be able to arrest its progress. It may not be in our time or in the time of our immediate successors. But it *will* be when He sees fit, with whom a thousand years are as one day. It is not beyond the bounds of possibility that one effect of the new forces at work upon the religious conceptions of the country will be that a new religion will spring up. What form that new religion might take it is difficult to foresee. We do not think it is likely to be our modern Christianity, although Christian missions are at the present moment among the most powerful factors in determining what that new religion will be. Sir William Hunter, in the *Nineteenth Century* for July, 1888, says 'I think it within reasonable probability that some native of India will spring up whose life and preaching may lead to an accession on a great scale to the Christian Church. If such a man arises, he will set in motion a

mighty movement whose consequences it is impossible to foresee.' This is always God's method of working. A long, slow, preparatory process, and then suddenly, when the fulness of time has come, He creates a personality. So there may rise up in South India a native with the spirit of Paul and of Luther, who will fire and lead his countrymen. The story of Buddha may be repeated. We may expect to hear of whole tribes and communities abandoning their superstitions and embracing Christianity. There is no exaggeration in forming such anticipations. They rest on solid grounds. Great and efficient preparations have been made for securing them. Especially is there at the present time not only in the city of Madras, but throughout nearly the whole of South India, an intense eagerness of thought on religious questions—reminding one of Milton's words—'a mighty and puissant nation arousing itself like a strong man after sleep.' What is wanted is a Pentecost—a fresh baptism of the Holy Spirit to touch the dry bones of heathenism. The glory of the Lord would then be revealed, and all flesh would see it." என்பதே.

(f). ரபி சட்டம்பிள்ளை ஐயா, நாடார்குல முன்னேற்றவிஷயமாய் ஆரம்பமாய்ச் செய்த வேலைகளைப்பற்றி, மதராஸிலிருக்கும் மகாகுலாபிமானியான கனம் டாக்டர் ஏ. சி. ஆசிர்வாதநாடாரவர்களும், மக-ா-ா-ஸ்ரீ டி. டி. தாம்ஸ்நாடாரவர்களும் 1912-ல் பிரசுரித்த 'சான்றோர் எத்னொகிரபி' என்னும் புஸ்தகத்தில் சொல்லியிருப்பதாவது:—

"1850-ம் வருஷத்தில் (பின்னால் பிஷப் ஆன) கனம் கால்டுவெல்ஐயரவர்கள், நம் ஜாதியின் பூர்வீக-தற்கால நிலைமைகளைப்பற்றி நன்றாயாராயாமல், நமக்கு பரம்பரைப் பகைப்பற்றுஜாதிகளான சில வெள்ளாள-பிராமண முன்ஷிகளுடைய வெறுஞ்சொற்களை யனுசரித்து, நம்குலத்துக்கு நிந்தனையான பல தாற்பரியங்களைக் கலந்து 'Tinnevelly Shanars திருநெல்வேலி சாணார்'* என்னும் புஸ்தகத்தைப் பிரசுரஞ்செய்தது அநேகருக்குத் தெரிந்தவிஷயம். ஆனால், அந்த ஆரம்பத்திலேதானே,

* இந்த 'திருநெல்வேலிச் சாணார்' என்னும் புஸ்தகத்தைப்பற்றி மகாமேதாவியாகிய (காலஞ்சென்ற) கனம் எஸ். வி. தாமஸ், எம். ஏ. அவர்கள் எழுதிவைத்திருக்கும் அபிப்பிராயமாவது:—"**The Tinnevelly Shanars**-is a book which is now never named except to be laughed at as a miserable record of misplaced wit and indiscriminate satire." (The Christian Patriot, March 12, 1890.)—எஸ். பி. ஜி. மிஷன்சம்பந்தமாய் லண்டனில் வெளியான ('Church Work: Mission Life' என்னும்) ஒரு விசேஷ பத்திரிகையில் இந்தப் புஸ்தகவிஷயமாய் 1886-ம் வருஷத்தில் (Vols. II & III., p. 233) பிரசுரிக்கப்பட்டிருப்பதாவது:—"Nearly forty years ago Bishop Caldwell wrote a short pamphlet on the state of the Chantras.—This pamphlet was written for English readers.—The tract, however, gave offence to a few, who resented the disparagement of their caste. The Bishop, therefore withdrew it from circulation. A few copies remained in the possession of the people, and the grievance never entirely died out."—இதுவிஷயமாய் டை பிஷப் கால்டுவெல்துரையே தம்முடைய ஜீவியசரித்திரத்திலெழுதிவைத்திருப்பதாவது:—"In 1849, eight years after my arrival in Tinnevelly, I wrote a pamphlet descriptive of the people amongst whom I was labouring, entitled 'The Tinnevelly Shanars.'—As soon as I found that persons had taken offence at it,—I withdrew it from circulation as far as I could." ('Reminiscences of Bishop Caldwell edited by his Son-in-law, pp. 84,85. Madras, 1894.)

திருநெல்வேலிஜில்லா, நாசரேத்து-பிரகாசபுரத்தில் வசித்துவருகிற கனம் ரபி அ. நா. சட்டம்பிள்ளை ஐயா அவர்கள் அந்தத் தூஷணப்பிரசுரத்தை அறிபவந்தமாத்திரத்தில், (இங்கிலிஷ் பாஷைப்புழக்கம் தமிழ்நாட்டில் தாராளமாயில்லாத அக்காலத்தில்) அதை மொழிபெயர்த்தெழுதி, பலருக்கும் அனுப்பி; உடனே அதை ஆட்சேபித்து, நமது குலத்தின் க்ஷத்திரியப் பூர்வோத்திரத்தை பல மேற்கோள்களால் ரூபித்து, வாசகநடையும் கவிநடையுமான அநேக விதங்களின்மூலமாகவும், வாய்மொழியாகவும், மதராஸ்முதல் மலையாளம்-நாஞ்சினாடுவரை அக்காலத்திலிருந்த சகல முக்கிய நாடார்களுக்கும் பலவாறாய் வெளிப்படுத்தி, டை ஜனங்களைக்கொண்டு எம். டி. சி., மதராஸ் பிஷப், எஸ். பி. ஜி. ஹோம்கமிற்றி வரை, அதைப்பற்றி அநேக கைமொப்பங்களுடன் ஆவலாதிமனுக்கள் செய்ததன்றி, திருநெல்வேலிஜில்லாவிலுள்ள எஸ். பி. ஜி., சி. எம். எஸ். மிஷன்களைவிட்டு சில ஆயிரம் ஜனங்கள் வேறே கிறிஸ்தவமதமாகப் பிரியும்படியும் செய்துவிட்டார்கள்.—ரபி சட்டம்பிள்ளை ஐயா அவர்களின் ஜாதியபிமானவேலைகளைப் புகழ்ந்து, 1853-க்கும் 1874-க்கும் இடையில், 'சான்றோர்குல மரபுகாத்தல்' (Madras, 1874) என்னும் புஸ்தகத்தின் ஆசிரியராகிய † (Rev. S. Winfred) கனம் ச. வின்பிரிட்ஐயரவர்களும், அவருடைய சிரேஷ்டகுமாரரும் 'சான்றோர் மரபு' (Madras, 1871) என்னும் (anonymous) புஸ்தகத்தின் ஆசிரியருமாகிய † (Mr. Martin Winfred) கனம் மார்ட்டின் வின்பிரிட் அவர்களும், † (Rev. D. Gnanamuthu) கனம் டி. ஞானமுத்து ஐயரவர்கள் முதலான இன்னும்பல கனவான்களும் எழுதிய அநேக லெட்டர்களுமிருக்கின்றன" என்பதே. இதைத் தொடர்ந்து செய்த டை ரபியவர்களும் அவர்கள் குமாரர்களும் நாடார்குல முன்னேற்ற விஷயமாய்ச் செய்துவந்திருக்கிற வேலைகளைப்பற்றி, 'சான்றோர் மனு' I-ம் பாகத்தின் பாயிரங்கள், 'சான்றோர் சங்கம்,' டை 'சான்றோர் எத்னொகிரபி' முதலிய பிரசுரங்களில் ஒருசுமார் விளங்கும்.

(g). நமது நாடார் மஹாஜனசங்கத்தின் 3-வது கான்பரென்ஸில் வாசிக்கும்படியாக, திருநெல்வேலி சி. எம். காலேஜ் வைஸ்பிரின்ஸிப்பாலான கனம் ஜே. ஞானமுத்துநாடார், பி. ஏ., எல். டி. அவர்கள், "நாடார்களுக்கோர் வர்த்தமானப்பத்திரிகையிருப்ப தவசியம்" என்னும் தலைப்புள், 26—5—1917-ல் எழுதியனுப்பிய வியாஸத்தில், ரபி சட்டம்பிள்ளை ஐயா அவர்கள் விஷயமாய்ச் சொல்லியிருப்பதாவது:—

"நமக்குள்ளே இங்கிலீஷ்கல்வி எப்படி அபிவிருத்தியானது? சுமார் எழுபது-எண்பது வருஷங்களுக்கு முன்னதாக மூன்று மகான்கள், அதாவது ம-ா-ா-ஸ்ரீ ரபி சட்டம்பிள்ளை ஐயா அவர்கள், †கனம் எஸ். வில்பிரிட் ஐயரவர்கள், †கனம் தேவசகாயம் ஞானமுத்து ஐயரவர்கள், இம்மூவரும், தங்கள் சொந்த இடங்களிற் கற்கக்கூடிய கல்விகளைக் கற்றபின், மகா கஷ்டத்துடன் சென்னபட்டணம் சென்று, அந்தக்காலத்தில் கிடைக்கக்கூடிய படிப்பில் சிரேஷ்டமான படிப்பைப் படித்து, அநேக பாஷைகளையும் ஞானங்களையுங் கற்று, தங்களுக்குக் கனமும் தேசத்தாருக்கு நன்மையு முண்டாக ஊழியஞ்செய்ததைப் பார்த்து, மற்றவர்களும் படிக்க ஆரம்பித்தார்கள். அம்மூவரில் ம-ா-ா-ஸ்ரீ ரபி சட்டம்பிள்ளை ஐயா அவர்கள் திருவருள்கடாக்ஷத்தால் இன்னும் நமதுநடுவி லிருக்கிறார்கள். நம்முடைய குலத்திற்கு அவர்கள் ஒருபெரிய மூலபலம் என்கலாம். நமக்குள் வாலிபர் அர்த்தமகாப்பிரபு இருக்கிற இடத்திற்கு ஸ்தலயாத்திரை செய்தால் அது மகாமேன்மையா யிருக்கும். எனக்கு அவர்கள் வீட்டிற்குப் போய் அவர்கள் பாதம்பணிந்துவணங்குஞ் சலாக்கியம் போனவருஷத்தில் கிடைத்தது. . . இப்படியே, நங் குலத்தில் பெரியோர் யார்யார் என்றறிகிறதும், யார்யார் என்னஎன்னசெய்கிறார்க ளென் றறிகிறதும், நமக்கு மனதிற் கிதத்தையும் மேற்செல்லவேண்டு மென்கிற ஆசையையு முண்டாக்கும். இதற்காகவும் பத்திரிகை வேண்டும்" என்பதே.

மேற்கண்ட ரிஷி என் னருமைப் பிதாவா யிருப்பதற்காக நான் மகிழ்ச்சியுடையவனா யிருக்கிறேன்.

க்ஷத்திரியகுலத்தில் பிறந்து, பல நற்குணங்களுடையோராய், விவாகமாகாத பாலியவயதில் 1908-ல் காலஞ்சென்றுபோன, திருச்செந்தூர் தாலூகா-லோகல் யூனியன்சேர்மன் ஸ்ரீ ரா. அருணாசலநாடார், தென்இந்தியாவின் மிகுதியான ஜாதிகளால் சிலாக்கியமாக ஒப்பப்பட்டு, தற்போது லக்ஷக்கணக்கான இந்துக்களால் அநேக வரப்பிரசாதங்க ளருளுவோராய் வணங்கப்பட்டுவருவதி லிருந்து, பூர்வமுதல் தமிழ்த்தேச மெங்கும் அங்கங்கே சிவபெருமான், சுப்பிரமணியர், பெருமாள் (விஷ்ணு), அம்பிகை (அம்மன்) முதலானோரின் அம்சங்களாகவும்- அவதாரங்களாகவும் வணங்கப்படுவோ ரெல்லாம், வேறெந்த ஜாதியையும் சேர்ந்தவர்களாயிராமல், சான்றோரான க்ஷத்திரியஜாதியைச் சேர்ந்த தமிழரசர் முதலானவர்களின் வம்சத்தி லுதித்து, வியப்புறத்தக்க பெருங்கிரியைகள் நடப்பித்ததினால் மதிப்புப்பெற்ற ராஜாக்களும்-பிரபுக்களும்-யுத்தவீரரும்-ராஜஸ்திரீகளுமே தவிர வேறல்ல என்னு முண்மை யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுவ தாகிவருகிறது.

மேலும், தாலூகாபோர்டு மெம்பர், டிஸ்டிரிக்ட்போர்டு மெம்பர், ஆனரரி மாஜிஸ்திரேட், யூனியன் சேர்மன், முனிசிபல் கவுன்ஸிலர், முனிஸிப்பல் சேர்மன், கார்போரேஷன் கமிஷனர், ஜூரர், அஸெஸ்ஸர்,

யூனிவெர்ஸிட்டி பெல்லோ முதலிய கௌரவ உத்தியோகங்களையும் அநேக நாடார்கள் வெகுகாலத்துக்குமுன் முத லிருந்தே பெற்று வகித்துவந்திருக்கிறார்கள். அவைகளில், தாலூகாபோர்டு மெம்பர், ஆனரரி மாஜிஸ்திரேட், யூனியன் சேர்மன், ஜூரர், அஸெஸ்ஸர் என்னும் உத்தியோகங்களை வகித்தவர்கள் ஏராளமாயிருப்பது போக, டிஸ்டிரிக்டுபோர்டு மெம்பர்களாய் இருந்தவர்களும்-இருப்பவர்களு மாக தஞ்சாவூர்ஜில்லா-பிலையாறு, கனம் த. குருசாமிநாடாரவர்கள், தஞ்சாவூர், கனம் ராவுஸாஹிப் எம். ஆபிரகாம்பண்டிதரவர்கள், மதுரைஜில்லா-பட்டிவீரன்பட்டி, ம-ா-ா-ஸ்ரீ டீ. பு. அ. ரத்தினசாமிநாடாரவர்கள், உசிலம்பட்டி, ம-ா-ா-ஸ்ரீ ப. வீ. ஆதிமுத்துமாலைநாடாரவர்கள், ராமநாதபுரம்ஜில்லா- விருதுப்பட்டி, ம-ா-ா-ஸ்ரீ சு. ப. பொன்னப்பநாடாரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ என். எஸ். மாணிக்கவாசகநாடாரவர்கள், பி.ஏ., திருநெல்வேலிஜில்லா- குலசேகரபுரம், ம-ா-ா-ஸ்ரீ எம். தேவசகாயநாடாரவர்கள், ஆறுமுகனேரி, ம-ா-ா-ஸ்ரீ எம். பொன்னையாநாடாரவர்கள், இவர்களுடைய நாமங்கள் தற்சமயம் எனக்கு ஞாபகத்தில் வருகின்றன. இதுபோக, டிஸ்டிரிக்டுபோர்டுகளில் அபிஷியல் மெம்பர்களாக, †ம-ா-ா-ஸ்ரீ (தாசில்தார்) எஸ். கோவில்பிள்ளைநாடாரவர்கள், பி.ஏ., †ம-ா-ா-ஸ்ரீ (தாசில்தார்) தாமஸ் குமரேசன் நாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (டிப்டி கலெக்டர்) என். டேவிட்நாடாரவர்கள், பி.ஏ., பி.எல்., ம-ா-ா-ஸ்ரீ (டிப்டி கலெக்டர்) ராவுஸாஹிப் டி. இரவிகநாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (டிப்டி கலெக்டர்) எஸ். வி. நற்குணம்நாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (தாசில்தார்) எட்வர்ட் எஸ். ஏசுவடியான் நாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (தாசில்தார்) டி. அன்புநாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (டிப்டி கலெக்டர்) ஏ. வி. டேவிட்நாடாரவர்கள், பி.ஏ., ம-ா-ா-ஸ்ரீ (டிப்டி கலெக்டர்) ஞானமணி கோவில்பிள்ளை நாடாரவர்கள், பி.ஏ. பி.எல்., ம-ா-ா-ஸ்ரீ (தாசில்தார்) உவில்லியம் லாமேக் நாடாரவர்கள், பி.ஏ., முதலானவர்கள் மெம்பர்ஷிப் வகித்திருக்கிறார்கள்.— முனிஸிபல் சம்பந்தமான உத்யோகங்களில், †அட்வோகேட் கனம் ஜோஸப் ஸத்யநாடார், எம்.ஏ., எம். எல். அவர்கள், மதராஸ் கார்போரேஷனில் மெம்பராயிருந்தார்கள்; டிப்டி கலெக்டரான ம-ா-ா-ஸ்ரீ என். டேவிட்நாடார், பி.ஏ., பி.எல். அவர்கள் மதுரையிலும், ம-ா-ா-ஸ்ரீ வி. ஞானசிரோமணி நாடார் அவர்கள், பி.ஏ. திருச்சிராப்பள்ளியிலும், †ம-ா-ா-ஸ்ரீ ஜான் தேவசகாயம்நாடார், பி.ஏ., எல். டி. அவர்கள் பாளையங்கோட்டையிலும் முனிஸிபல் சேர்மன் உத்யோகம்செய்தார்கள்; இதுபோக, முனிஸிப்பல் கவுன்ஸிலர் உத்யோகம் வகித்தவர்களும்-வகிக்கிறவர்களும் அங்கங்கே மிகுதியா

யிருக்கிறார்கள்.—காஞ்சிரோட்டைச்சேர்ந்த ராஜாக்கள்மங்கலத்தில் இருந்து வந்தவரான, ம-ா-ா-ஸ்ரீ பொன்னையாநாடாரவர்கள், திருவிதாங்கோடு மஹாராஜா அவர்களின் ஸ்ரீமூலம் பிரஜாசபையில் கண்யம்பொருந்திய மெம்பர்ஸ்தானம்பெற்றிருக்கிறார்கள்.—ஆறுமுகநேரி கனம் எஸ். பொன்னையா நாடாரவர்கள், கடந்த 30 வருஷங்களுக்கு மேற்பட, தொடர்ந்தேற்றியாய், ஸ்கூல்மானேஜர், யூனியன்சேர்மன், தாலூகாபோர்டு மெம்பர், டிஸ்டிரிக்டு போர்டு மெம்பர் முதலிய கண்ய உத்யோகங்களை பெற்றுவகித்து, மாட்சிமைதங்கிய நமது ராஜப்ரதிநிதியவர்களால் மெரிட் ஸர்ட்டிபிக்கேட்களும் பெற்றிருப்பது, இங்ஙனம் விசேஷித்துக் குறிப்பிடத்தகுந்த தென்றெண்ணுகிறேன். தற்சமயம் திருச்செந்தூர்தாலூகாவின் ஸப்ஜெயிலை இன்ஸ்பெக்ஷன்செய்யும் அனரரிவேலையும் இந்தக் கனவானுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோக, நமது நாடார்குலத்தவர்களில், சிவகாசிக்கடுத்த சாட்சியாபுரத்தில் பாதிரியாராயிருந்த †ரெவரெண்டு எஸ். பவுல் ஐயரவர்களுக்கும், நாளதில் ஐதராபாத் மிலிட்டரி டிப்பார்ட்மெண்டில் மெடிக்கல் ஆபீசராயிருக்கும் கனம் ஜே. ஜி. சுவாமிதாஸ்நாடாரவர்களுக்கும், 1908-ல் தூத்துக்குடியில்நடந்த சுதேசிபக்கலகத்தை அடக்கியவிஷயமாய் மிகவும் மதிப்புப்பெற்றவர்களும், நாளதில் திருச்சிறாப்பள்ளிஜில்லாவில் டிப்டிகலெக்டராயிருப்பவர்களுமான, கனம் டி. திரவியநாடார், பி.ஏ. அவர்களுக்கும், தஞ்சாவூர் கனம் எம். ஆபிரகாம் பண்டிதர் அவர்களுக்கும் 'Rao Sahib ராவு ஸாஹிப்' பட்டமும், மதராஸில் பி. டபிள்யூ. டிப்பார்ட்மெண்டில் எக்ஸிகியூட்டிவ் இஞ்சினீராயிருக்கிற கனம் எஸ். கோவில்பிள்ளை, பி.ஏ., பி. இ. அவர்களுக்கு 'Rai Sahib ராய் ஸாஹிப்' பட்டமும், திருநெல்வேலியில் போலீஸ் அஸிஸ்டென்டு ஸுப்பரின்டெண்டாயிருந்த †கனம் ஐ. மாணிக்கவாசகநாடாரவர்களுக்கும், மாட்சிமைதங்கிய நமது மதராஸ் கவர்னர்பெருமான் ஆபீஸின் ரெவின்யூ ஸெக்ரட்டரியட்டில் ரிஜிஸ்திராராயிருந்து புகழுடன் வேலைபார்க்கும் கனம் வி. பொன்னையாநாடார், பி. ஏ. அவர்களுக்கும் 'Rao Bahadur ராவு பஹதூர்' பட்டமும், நமது நாடார் மஹாஜனசங்கத்தின் வைஸ்பிரஸிடென்டாயிருந்த †கனம் த. இரத்தினசாமி நாடாரவர்களுக்கும், கோயம்புத்தூரில் அஸிஸ்டன்டு செஷன்ஸ்ஜட்ஜ்வேலைபார்த்த, †கனம் ஜி. ஜே. சாலமோன் நாடார், பி.ஏ., பி. எல். அவர்களுக்கும் 'Rai Bahadur ராய் பஹதூர்' பட்டமும், மகாமாட்சிமைதங்கிய நமது ராஜப்ரதிநிதியவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், ஷை ராஜப்ரதிநிதியவர்களால் (Certificates of merit)

'மெரிட் ஸர்ட்டிபிக்கேட்டுகள்' பெற்றிருக்கும் கனவான்களும், நம் நாடார் குலத்தவரில் அனந்தமாயுண்டு. அவர்கள் நாமங்களெல்லாம் நமது 'நாடார்குல டயரெக்டரி'யில் விவரமாய் வரக்கூடும்.

நாடார்குல வரலாற்றை விவரமாய் எழுதினால், அது மிகுவிரிவான நூலாகச் சமையும்; ஆகையால், இந்தச் சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக சங்கதிகளை இவ்வளவுசுருக்கத்தில் விட்டிருக்கிறேன்.—நான் கடந்த 28 வருஷங்களாக (Oriental) கீழ்தேசங்கள்சம்பந்தமான சரித்திரம், மதம், ஜனவிவரணம், பாஷாசாஸ்திரம் முதலானவைகளை ஆராய்ச்சி செய்வதையே என்னுடைய விசேஷ பிரவிர்த்தியாக வைத்திருப்பதால், நாடார்குலவிவரமாக நான் இதுவரைசொன்ன சங்கதிகள், அந்த ஆராய்ச்சிக்கூடே கண்யம்பொருந்திய என் பிதாவவர்களின் வாய்மூலமாயும் எனக்குத் தெரிந்தவைகளாகும்.—தென்இந்தியாவின் ஜனவிவரண சம்பந்தமான எங்கள் ஆராய்ச்சியை முன்னிட்டே, 1901-ம்வருஷத்தில் கவர்ண்மென்றார் இம் மதராஸ்மாகாணத்தில், 'எத்னொகிரபிக் ஸர்வே' என தென்இந்திய ஜாதிகள்-குலங்கள் விஷயமாய் விவரஞ்சேர்க்கும் வேலையை ஆரம்பித்தபோது, ஷை எத்னொகிரபிக் ஸர்வே ஸுப்பரின்டென்டு துரையே, நாடார்குலத்தவர் முதலானவர்களின் விஷயமாய் எங்களுக்குத்தெரிந்த விவரத்தைத் தமக்கு எழுதிக்கொடுக்கும்படியாக எங்களிடம் எழுத்துமூலமாகவும்*-முகரூபிலும் கேட்டுக்கொண்டது மாத்திரமல்ல, ஜாதிகள்-குலங்களின் பூர்வோத்திரங்களை ஆராய்ந்து புஸ்தகம் பிரசுரிக்கவேண்டுமென்று கவர்ண்மென்றாரே விசேஷ விரும்புகிறார்களென்னும் சங்கதி கவர்ண்மென்றுமூலமாகவே தெரிவிக்கப்பட்டதின்பேரில், திருநெல்வேலி- (ராமநாதபுரம்-) மதுரை ஜில்லாக்களிலும், காஞ்சிரோட்டிலும், ஸிலோனிலும், பர்மாவிலுமிருந்து சுமார் 40,000 நாடார்கள் கையொப்பமிட்டு, நாடார்குலவரலாறுகளை நானும் என் சகோதரரும் எழுதிக்கொடுப்பதே சரியானதென்றும், அதுவிஷயத்துக்காக என்னையும் என் சகோதரரையும் நாடார்குலம்மொத்தத்தின் (Delegates) பிரதிநிதிகளாயிருக்க தாங்கள் கேட்டிருப்பதாகவும், ஷை எத்னொகிரபிக்ஸர்வேயின் ஸுப்பரின்டென்டு துரைக்கு மனுக்கள் செய்துகொண்டபடி, நாங்கள் ஷை

*மதராஸ் எத்னொகிரபிக் ஸர்வே ஸுப்பரின்டென்டு துரை, 9—4—1901-ல் எங்களுக்கு எழுதிய லெட்டரில், "Any stray notes on customs, however trivial they may appear, are acceptablo" என்றும், 4—5—1901-ல் எழுதியதில், "I shall be very glad to receive your account of the Chantra caste, when it is ready" என்றும் சொல்லியிருக்கிறார்.

துரைக்கு நாடார்குலவரலாற்றை இரண்டு மேற்கோளாதாரங்களின் பேரில் எழுதி, (*A Short Account of the Chantras or Tamil Xatras* என்னும் பேரால்) அச்சிட்டும்- கையெழுத்துப்பிரதிகளாகவும் கொடுத்தது மாத்திரமல்ல, டை ஆராய்ச்சிவிஷயமாய் வேறுபல உதவிகளும் செய்தோம். ஆனால், 1917-ல் கவர்ன்மெண்டுத்தரப்பில் வெளியான 'திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கெஜட்டீரி'ல் மேற்கண்டது முதலான எங்கள் குடும்ப நடபடிக்கைகள் விஷயமாய் அடியிற்கண்டபடி யதார்த்தவிரோதமாய் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது:—

"The endeavours of the caste (Chandrans) to obtain a status in Hindu society higher than other Hindus are willing to allow them and in particular their efforts to attain recognition as Kshatriyas have a long history; and within the last fifteen years their pretensions have been elaborately set out in written statements. Pamphlets on the subject, originating from a member of the caste living near Nazareth, are now in circulation and are duly presented to any one who is suspected of the intention of publishing any account of the community.—Briefly stated, the contentions raised are that the proper form of the name Chandran is 'Chandror,' a word which means 'the learned' or 'the noble,' and that the community belongs to the Kshatriya caste.—And it must not be supposed that the 'Chandror' theory has by any means spread a general infection over the whole community. In villages near the source of its origin it finds often vehement supporters.—Possibly it may die of inanition." என்பதே.

இந்த 'கெஜட்டீர்' எழுதுவதற்கு 15 வருஷங்களுக்குமுன் டை எத்னோகிராபி ஆபீசருக்கு நாங்கள் நாடார்குலவரலாறு எழுதிக்கொடுத்தது, நாங்களே ஆத்திரப்பட்டுச்செய்த ("endeavour") நடபடிக்கையல்ல; டை எத்னோகிராபி டிப்பார்ட்மென்டும், நாடார்குல மஹாஜனங்களில் 40,000பேரும் எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டதின்பேரில் நடந்த காரியம். அப்படியே, பத்துவருஷங்களுக்கொருதபா ஜனசங்கையெடுக்கும் 'சென்சஸ்' காலங்களிலும், அங்கங்கேயுள்ள மேதாவிகளிடம் ஒவ்வொரு ஜாதிகளின் பூர்வோத்திரம்-வழக்கவழக்கம் முதலானவைகளை தங்களுக்கு எழுதிக்கொடுக்கும்படி டை ஆபீசர்களே வலிய கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். காரியம்இப்படியிருக்க, உண்மைக்குவிரோதமாய் டை 'கெஜட்டீரில்,' நாடார்சரிதவரலாறெழுதும் விஷயமான பொறுப்பெல்லாம் எங்கள் பேரிலேயே சாட்டப்பட்டிருப்பதால், நாடார்ஜாதியின் இயற்கையான உயர்வைப்பற்றி மேற்கண்ட எத்னோகிராபிக்ஸர்வே அதிகாரிக்கும் மற்றவர்

களுக்கும் நாங்கள்கொடுத்த வரலாற்றுதாரங்கள் முதலானவைகளெல்லாம், அவர்சொல்லுகிறபடி, "pretensions வெறும் பாவனைகள்"தானோ, அல்லது, உள்ளபடியே நாடார்ஜாதி சிறப்பனவைகளும்-அவர்களுக்குரியவைகளுந்தானோ என்று உலகத்தில் எல்லா மேதாவிகளும் அறியும்படியாக, அவைகளைத் திரட்டி அமைத்து உபரியாலிக்கவேண்டியதும், அச்சிட்டுப் பிரசித்தம்பண்ணவேண்டியதும் என்னுடைய விசேஷித்த கடமையாயிருக்கிறது. அப்படி அது, நாடார்குலவிஷயமாய் தப்பபிப்பிராயமில்லாத மேதாவிகளின் பார்வைக்குக் கிடைக்கும்போது, நாடார்குலத்தவர், உள்படியே மேன்மக்களோ அல்லவோ என்பதை டை 'கெஜட்டீர்' எழுதியவரைப் போலொத்த ஒன்றிரண்டுபேரல்ல, உலகத்தின் விசேஷ மேதாவிகளெல்லாம் நிதானித்து, சரியான அபிப்பிராயம் சொல்லக்கூடுமென் றெண்ணுகிறேன்.—டை 'கெஜட்டீரி'ல் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கு, ஒரு குலத்தவரின் பூர்வோத்திரம், சரித்திரம் முதலானவைகளைப் பற்றி புஸ்தகம் எழுதுவது தகாதகாரியமானால், நானது நாகரிகலோகத்தில் அநேகங்கே மகாமேதாவிகளால் வேற்பட்டு, ஜாதிகள்-குலங்களின் பூர்வோத்திரத்தை ஆராய்ந்து புஸ்தகங்கள் பிரசுரிப்பதையே தங்கள் வேலையாய்வைத்திருக்கிற (Anthropological Societies, Ethnographic Societies, Ethnological Societies, Geographical Societies முதலான) சங்கங்களின் வேலைகளெல்லாம் வம்பு-அநாவசியமுமேயாகிறது. அதுவுமன்றி, டை 'கெஜட்டீர்' புஸ்தகத்திலேயே "Peopleஜாதிகளைப்பற்றிய விவரம்" என்றெழுதி, இன்னகுலம்மேல்-இன்னகுலம்கீழ் என்று எழுதியிருக்கிற அநியாயமும், அநாவசியமும், ஒன்றுக்கொன்று மனவருத்தத்தை இழுத்துவிடுகிற வம்புமேயாகிறது. ஒரு ஜில்லாவைப் பற்றி புஸ்தகம் எழுதுவதாயிருந்தால், அதிலிருக்கிற மொத்த மனுப்பிராணிகள் இவ்வளவு என்கிற அவ்வளவு எழுதப்படலாமே தவிர, எவ்விதமான ஜாதி அல்லது குலப் பேரும் அதில் வந்திருக்கக் கூடாது. சென்சஸ் கணக்கெடுக்கும்போதும், ஜாதிப்பேர்களும், ஜாதிகளின் மேல்கீழ் அந்தஸ்துகளும் எழுதப்பட்டிருக்கவே கூடாது. உலகத்திலுள்ள சகல மனுப்பிராணிகளும் ஆத்மா-சரீரம் உள்ளவர்கள்தாம்; மநுஷரில் உயர்வு-தாழ்வு கிடைக்காது!! நான் 'ஆரியன்'-அவன் '(Shemitic) செமியன்'-நான் 'துரானியன்'-அவன் 'மங்கோல்'-அவன் 'ஆப்பிரி'-அவன் 'நீக்ரோ' என்னும் ஜாதி வழக்கை மேதாவிகளும் பிரபுக்களும் எதற்காக வீணாய்ப்பேசுகிறார்கள்?!—சென்றையதினம் நமது கான்பரென்ஸில் அக்ராஸனாதிபதியா யிருந்த கனம்தங்கிய மேதாவி யாகிய அட்வொகேட் ஜெனரல், The Hon. Mr. எஸ்.

ஸ்ரீ வேல்ஐயங்கார், பி.ஏ., பி.எல். அவர்கள் வாசித்த பிரஸிடென்ஸியல் அட்ரஸில், "I have looked through the literature concerning the Nadars and the very interesting book prepared by Mr. Chattampillai-Aiya.—I believe your caste was a Hindu warlike tribe.—For me, your community (*i.e.* Nadar) belongs to the highest of all castes, namely, the caste of Hindus or Indians." "நாடார்களைப்பற்றியுள்ள நூல்களைப் புரட்டிப்பார்த்தேன்; மிஸ்டர் சட்டாம்பிள்ளை ஐயா எழுதிய மிகுவிசேஷங்கள் அடங்கிய புஸ்தகத்தையும் படித்தேன். உங்களுடைய முன்னோர்கள் போர்புரியும் தன்மையுள்ள மேலான க்ஷத்திரியர்கள் என்றும் நான் நம்புகிறேன்.— உங்கள் (நாடார்) ஜாதி மேலானதானதென்றும், ஒருவிதத்திலும் தாழ்ந்ததல்லவென்றும் என்னுடைய நிச்சய அபிப்பிராயம்" என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கும்போது, சுதேசியாய்ப் பிறந்து, சுதேசஜாதிகள் விஷயமாய் பல ஐரோப்பிய ஆசிரியர்களைவிட சரியானவிவரம் சொல்லக்கூடிய அந்த மேதாவி, கனம் பேட்டர்ஸனவர்கள் ஷை 'டிஸ்ட்ரிக்ட் கெஜட்டர்'ல் நாடார்குலத்தவரின் பூர்வோத்திரத்தைப்பற்றி குறைவாயெழுதியிருக்கும் சங்கதிகள் யதார்த்தவிரோதமானவைகளென்று நன்றாய்த் தெரிந்தே இந்தவார்த்தைகளை மொழிந்தாரென்றும், அதுவே நாடார்குலவிஷயமாய் ஒரு பெரிய கவர்ன்மெண்டு அதிகாரியின் அபிப்பிராயமாய் இப்போ கடைசியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விஷயம் என்றும் அறிந்து, நாம் சந்தோஷிக்கவேண்டியதாயிருக்கிறது.

நாடார் ஜாதியாரின் மேன்மைப்பூர்வோத்திரத்தையும், சரித்திரத்தையும், அந்தஸ்தையும் நிலைநிறுத்துவதாயிருக்கிற மேற்கண்டது முதலான சகல ஆதாரங்களையும் தவிர்த்து, அதற்கு மேலாக, ராமநாதபுரம்ஜில்லாவிலுள்ள (Kamuti, Kamuthi or Kamudi) கமுதி என்னும் ஊரிலுள்ள ஒரு கோவில்பிரவேசவிஷயமாய், அவ்விடத்தில் வசிக்கும் விவகாரந்தெரியாதவர்களுமாயிருந்த 15 சான்றோர் பிரதிவாதிகளாக, 1897-ம்வருஷம் முதல், நாடார்குலத்தைப் பகைக்கும் பலர் ஒன்றுகூடி நடத்தின ஒரு கேஸ் விஷயமாய், ஷை சான்றோருக்குப் பிரதிகூலமான தீர்ப்புகள் கோர்ட்டுகளில் உண்டாகிவிட்டதாகவும், அதுவே, நாடார்ஜாதி மொத்தத்தின் விஷயமாகவும் இங்கிலீஷ்ராஜாங்கத்தில் சதாகாலம் நிலைக்கவேண்டிய கட்டளையாகிவிட்டது போலவும், இப்போ சிலகாலமாய், பொதுவாய் நாடார்ஜாதியைப் பகைப்போராலும், நாடார்ஜாதியார் இன்னும், ஷை கேஸின் விவரம் என்னவென்றும் நன்றாய் ஆராயாத பலராலுமென்று

உத்யோகஸ்தராலும் தப்பபிப்பிராயமுண்டாகியிருப்பதால், அதுவிஷயமாய் கொஞ்சம் விவரம் சொல்லவேண்டியதும் இவ்விடம் அவசியமென்றெண்ணுகிறேன். கமுதியூரிலுள்ள ஷை வியாச்சியக்கோவிலும்*, வேதங்கள் எழுதப்பட்ட பூர்வகாலத்தியற்கைப்படி, அனேகமாய் கலப்பில்லாமலிருக்கிற (நாடார்குலத்தவரின்) பழய ஆரியஇந்துமதத்தைச் சேர்ந்ததாயிராமல், மேலேகண்டபடி, புத்த-ஜைனமதச் சார்பாய் மதுமாம்சத்தை நிஷேதித்து, 'ஆகமம்' முதலான போகத் தங்களுக்கு நூதன மதசட்டங்களுண்டாக்கிக்கொண்ட 'சைவம்' என்னும் பதிதமதத்தைச் சேர்ந்தது. அந்த ஆகமசாஸ்திரப்படி, நாடார்கள் அக்கோவிலுக்குள் போகத்தக்கவர்கள் என்றாவது, போகத்தகாதவர்கள் என்றாவது எப்படித் தீர்ப்பானாலும் நாடார்களுக்கு காரியமில்லை.—அது ஸிவில் விவாஜ்ஜியமாய், மதுரை ஸப்கோர்ட்டில் (O. S. No. 33/1898 ஆக) நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, (பழய) ஸிவில் ப்ரொஸிஜர் கோடு, 30-வது செக்ஷன்படி, மற்றவர்களையும் ஷை வியாச்சியத்தில் கட்டுப்படுத்தும் விஷயமாக, 30—7—98-ல் ஷை கோர்ட்டு மூலமாய்ப் பிறந்த (Proclamation) விளம்பரத்திலும், "கமுதி வகையறா"வூர் என்றே இடவிவரம் குறிக்கப்பட்டு, அதுவிஷயமான தண்டோராவும் கமுதிக்கிராமத்தில் மாத்திரம் 13—8—98-ல் செய்யப்பட்டது. இவ்வளவே இடத்தைத்தவிர தென்இந்தியா வெங்கும், இந்தியாவுக்கப்பாலுமிருக்கிற லக்ஷக்கணக்கான நாடார்குலத்தினருக்கு இந்த வியாச்சியத்தைப்பற்றி எவ்வகையாகவாயினும் தெரிவிக்கப்படவில்லை. அப்பால் 28—9—98-ல் இஷ்யூக்கள் தீர்மானிக்கப்பட்டபோதும், ஷை கோர்ட்டின் ஜட்ஜ், "Issues agreed to by the parties" "இருகட்சியாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விவாதாம்சங்கள்" என்று தாவாக்கோவில் விஷயமாகவே 14 சங்கதிகளை எழுதி, அதின் கடைசியில், "The contentions raised in the suit are admittedly confined to the Nadars of Kamudi and to the temple mentioned in the plaint" "இந்தவியாச்சியத்தில் எடுத்துப்பேசப்படுகிற விவாதங்களெல்லாம், இருகட்சிக்காரராலுமே ஒப்புக்கொள்ளப்படுகிறபடிக்கு, கமுதியூர் நாடார்களையும், பிரியாதில் சொல்லப்பட்ட கோவிலையும் மாத்திரம் கட்டுப்படுத்துமேயல்லாமல் வேறல்ல" என்று எழுதி

* கனம் வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள் 1907-ல் எழுதி, திருச்சிராப்பள்ளி (Tamilian Archæological Society) 'தமிழ் புராதன ஆராய்ச்சி சங்கத்'தாரால் பிரசுரமாகியிருப்பதாவது:—"க்ஷத்திரியர்கள், வேதகாலத்தில், மாமிச பட்சணத்தோடு சோமபானமென்ற மதுபானமும் செய்தவர்கள். வடதேசத்தில் அவர்கள் வகுப்புகளுக்குள் சிலவகுப்பினர் இன்னும் மாமிசம்புசிக்கின்றனர். அன்றி, அவர்கள் எத்தேசத்திலாவது யாகமாயினும் மாம்சம்புசிக்கின்றனர்."

யிருக்கிறார். அப்பால், அதை அடுத்து, அந்தக்கேஸை நாடார்குலம் மொத்தத்துக்கும் சம்பந்தப்படுத்தவேண்டு மென்று ஷை வாதி வகைவரா 20—1—99-ல் மனுக்கொடுத்தபோதும், ஷை ஜட்ஜ் அதுவிஷயமாய் 6—2—99-ல் ஆர்டருமென்று நடத்தி, வாதியின் பிரியாதையும் அதுவரை ஷை கேஸ்விஷயமாய் வாதிவகையராக்கள் கமுதி வாசிகளுள்ள ஷை 15 பிரதிவாதிகளை மாத்திரம் கருதி வியாச்சியம் ஆரம்பித்து நடத்திய நடபடிக்கைகளையும் 21 பாராக்களில் விரிவாய்க் கண்டெழுதி, அந்த வியாச்சியம் ஷை 15 பிரதிவாதிகளுக்கும் அவர்களோடுசேர்ந்து தாவாக் கோவிலில் பிரவேசித்ததாகச் சொல்லப்பட்ட ஷை கமுதிவகையரா வாசிகளுள்ள வேறுசில நாடார்களையும் மாத்திரம் கட்டுப்படுத்துமே தவிர வேறல்ல என்றும், ஷை தேதியில் செய்த தம்முடைய 44-ம் நெ. ஆர்டரில் வெகுதெளிவா யெழுதியிருக்கிறார். இந்த சங்கதிகளை 20—7—99-ல் பிறப்பித்த ஷை கேஸ்விஷயமான தம் ஜட்ஜ்மென்டின் 7-ம், 8-ம் பாராக்களிலும் கொஞ்சம் எடுத்துச் சொல்லுகிறார்.§ மேற்சொன்ன 15 பிரதி

§ஷை ஜட்ஜ்மென்டின் 7-ம், 8-ம் பாராக்களி லிருப்ப தாவது:—

"7. With the consent of the counsel then (i. e. at the time of framing the issues) appearing for the parties I added the following note to the issue paper:—'The contentions raised in the suit are admittedly confined to the Nadars of Kamudi and to the temple mentioned in the plaint.'

"8. My proceedings, dated 6th February 1899, after setting out the averments in the plaint and the steps taken by the Plaintiff to secure a proper representation under section 30 of the Code of Civil Procedure, runs thus:—'There can be no question therefore that the Nadars living in Kamudi and kindred villages, viz., its hamlets, were sought to be originally proceeded against, and although the petition under section 30 of the Code of Civil Procedure refers to other Chandrars living in the District, the proclamation is issued only to the Nadars of 'Kamudi and Vagaira' villages and was published only locally. If wider representation was sought for by the Plaintiff he should have taken care to ask the Court to specify the manner of public advertisement, and if it was intended that the numerous body of Chandrars living in the Madura District should be publicly informed, this Court would have taken care to see that the notice published in the District Gazette was duly promulgated by beat of tom-tom in such of the villages of the District where any considerable body of Chandrars is known to reside. The manner of local publication was restricted to Kamudi and vagaira villages and this was accepted as sufficient by Plaintiff. He cannot now ask for a wider representation than what he has been able to secure by the manner of publication of his notice. So the prayer for a general declaration against all Chandrars including those not resident in Kamudi cannot be granted in this suit.'"

வாதிகளும் அநேகலட்சக்கணக்கான நாடார்ஜாதியின் பூர்வோத்திரம்-அந்தஸ்து விஷயமாய் கோர்ட்டில் தாங்களாயாவது, சாட்சிகள் மூலமாயாவது சரியான ஆதாரங்களும் விவரங்களுங் கொடுக்கவே யில்லை; அவர்கள் எப்போதாவது-எவ்விதமாயாவது நாடார்ஜாதியின் பிரதிநிதிகளா யிருந்தவர்களு மல்ல. அவர்கள், அந்தக் கேஸ்நடக்கு முன்னமே நாடார்களோடு விகற்பமாகி, ஷை வாதிவகையராக்களோடே குலத்துரோகமாய்ச் சேர்ந்துபோனவர்களென்றும் பிரஸ்தாபமுண்டு. அந்தப்படி, அவர்களுடைய துரோகநடபடிக்கையை முன்னிட்டு, ஷை கமுதிவாசிகளுள்ள கண்ய நாடார்கள் ஷை, 15 பேருக்கும் அனுகூலமாய் சாட்சிசொல்ல உடன்படவில்லை யென்பது, ஷை கேஸின் ஹைகோர்ட் ஜட்ஜ்மென்டிலும் கண்டிருக்கிறது.* இந்தக்கேஸ் ஷை ஹைகோர்ட்டில் நடந்துகொண்டிருந்த விவரம் ஷை கமுதிவட்டகைக்கு அப்பாலுள்ள நாடார்குலத்தவருக்கு தெரியவே மாட்டாது. "Most of the (Plaintiff's) witnesses were Brahmins who were not concerned in the dispute." "வாதியின் சாட்சிகளில் மிச்சமானபேர் இந்தத்தாவாவுக்கு சம்பந்தப்படாத பிராமணர்" என்று ஷை கேஸின் ஹைகோர்ட் ஜட்ஜ்மென்டில் சொல்லியிருக்கிறபடிக்கு, கல்விவிஷயமாகவும், மற்றும் முன்னேற்றவிஷயமாகவும் நாடார்குலத்தவர்பேரில் பொறாமையுள்ள பல பிராமணரும் மற்றவர்களும் தூண்டுதல்செய்தே வாதியாகிய ஷை ஜமீன்தார் இந்த வியாச்சியத்தை நடத்த உடன்பட்டதாகவும் தெரியவருகிறது. மேலும், நாடார்குலத்தவருக் கெதிராக ஷை கேஸில் வாதிபக்கம் பிராமணச்சாட்சிகளால் தாக்கலான 'ஆகமங்கள்' என்னும் ஏட்டுப்பிரதிகள் பூராவும், திருத்தல் - வரிப்பிழப்பு - ஊடே நூதனவரிகள்சேர்த்தல் முதலான (போர்ஜெரி) சிருஷ்டிகளைக்குற்றம் நிறைந்தவைகளாயிருந்த சங்கதி, அந்தக்கேஸ்நடக்கும் காலத்திலேதானே வக்கீல்களால் கண்டுபிடிக்கப்பட்டு, ஷை ஏடுகளை ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்து, ஷை போர்ஜெரியை சவிஸ்தாரமாய் எடுத்துக்காட்டி ஷை கோர்ட்டில் தாக்கல்செய்த ஸ்டேட்மென்டுகளும் ஷை கேஸின் தஸ்தாவேசுகளோ டிருக்கின்றன. அதுமாத்திர மல்ல, ஆரியருக் கய ரான 'தானியர்' அல்லது 'திராவிடர்' என்னும் ஜாதியார், முன் தமிழ்த்தேசத்தி லிருந்தார்களென்றும், வேற்றுமூலமுடையோரான, ஆரி

*ஷை ஹைகோர்ட் ஜட்ஜ்மென்டி லிருக்கும் வசன மாவது:—

"It was a remarkable fact, that, although there were hundreds of respectable Nadars in the place (Kamuthi), not one of them had come into the witness box to state if it was a fact that he had entered the temple or attempted to prove that he had ever entered it on any particular occasion."

யர்,' பின்னால் வடஇந்தியாவிலிருந்து வந்து தங்களுடைய வழக்கபழக்கங்களை இந்த தமிழ்த்தேசத்தில் ஸ்தாபித்தார்க ளென்றும், தமிழ்ப்பாஷை தனிமூலமுடைய தென்றும், பின்னால், ஷை ஆர்யர்கொணர்ந்த சம்ஸ்கிருதம் அந்த தமிழுக்கு மூலமல்ல என்றும் சில ஐரோப்பிய சாஸ்திரிகள் கட்டிவிட்ட கதையை ஆதாரமாய்வைத்தே, ஷை கமுதி கேஸில், நாடார்ஜாதியாரின் பூர்வோத்திரம் சில சாட்சிகளின் வார்த்தைகளைக்கொண்டு ஆராயப்பட் டிருக்கிறது; ஜாதிப்பேர்-பட்டப்பேர்களுக்கு மூலமும் இந்த ரீதியின் படியே ஷை சாட்சிகளால் தாறுமாறாய்த் துலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதோ, இந்த 'திராவிடர்' - 'ஆரியர்' என்பவர்களின் மூலமும், தமிழ்ப்பாஷையின் மூலமும் அந்தப்படித்தில்லாமல் வெவ்வேறு வகையாய் நாளது சாஸ்திரிகளால் திருப்பப்படுகின்றன. எப்படியும், ஷை கமுதிக்கேஸை மிஸ்டர் வரதராவு பரிசீலனைசெய்யுங்காலத்தி லிருந்த தாற்பரியங்களுக் கர்யமாக ஷை மூல சரித்திரங்கள் வேறெவ்விதமாகவாவது திரும்பி நிலைப்படும்போது, ஷை பழயகொள்கையை ஆதாரமாய்க்கொண்டு ஷை கேஸின் ஜட்ஜ்மென்றில் நாடார்ஜாதியின் பூர்வோத்திரம்-அந்தஸ்து முதலான விஷயமாயெழுதப்பட்ட சகல தப்புவசனங்களும் அடியோடே பாதாளத்தி லிறங்கி அழிவுக்குட்படுமென்பது நிச்சயமான சங்கதியா யிருக்கிறது.—இதுபோக, மதராஸ் ஹைகோர்ட்டில் இந்தக்கேஸின் அப்பீல் நடந்துகொண்டிருந்த சமயத்தில், அசல்வாதியாகிய ஷை ஜமீன்தார், நாடார்ஜாதியாரின் உயர் பூர்வோத்திரத்தையும் அந்தஸ்தையும் உத்தேசித்து, நாடார்கள் தாவர கோவிலிலும் பிரவேசிப்பதில் யாதொரு ஆட்சேபமு மில்லையென்று, ஷை ஸிவில்புரோஸீஜர் கோடு 375-வது ஸெக்ஷன்படி மனுக்கொடுத்தபோதும், இதரஜாதிக்காரரே அதற் கெதிர்வைபண்ணி, அதைப் பலிக்கவிடாமற் செய்துவிட்டார்கள்.

ஷை கமுதிக்கேஸ் மேற்சொல்லியபடி 1901-ல் ஹைகோர்ட்அப்பீலாகிக்கொண்டிருக்குஞ்சமயத்தில்தானே, தென் இந்தியாவின் ஜாதிகள்-குலங்களுக்கு விவரந்தயாரிக்கும் எத்னோகிராபிக் ஸர்வேயை கவர்ண்மென்றார் துடங்கினபோது, தென்இந்தியாவிலும் - சிலோனிலும் - பர்மாவிலுமுள்ள சுமார் 40,000 நாடார்கள், தங்கள் கையொப்பங்களிட்ட மனுக்கள்மூலமாய், தங்கள் குலவிவரம்எழுதிக்கொடுக்கும் பிரதிநிதிகளை ஷை எத்னோகிராபிக்ஸர்வே ஸூப்பரின்றென்டென்றுக்கு இனங்காட்டி, அந்தப் பிரதிநிதிகள் மூலமாய்த் தயார்செய்து - அச்சிட்டு ஷை ஸூப்பரின்றென்டென்றுதுரையிடம் ஆஜர்செய்த ஷை (*A Short Account*

of the Chantras or Tamil Xatras என்னும்) மனுப்புஸ்தகத்தின் 118-ம் பக்கத்தில், இந்தக் கமுதிக்கோவில்கேஸைப் பற்றிச் சொல்லும்போது, "It is an insignificant local suit undesired by the generality of the Chantras" "அது பொதுவாய் சான்றோர்ஜாதிக்காரரால் ஒப்புக்கொள்ளப்படாததும், ரொம்ப அற்பமான ஓரிடத்துக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது மான ஒரு வியாச்சியம்" என்றும், "It has been up to date a malicious custom among our old foes to take various opportunities to drag to magisterial and civil courts certain individuals of our caste and accomplish their deceptive task by their influence and threats, in order to harass our people in religious and social affairs, and to make up records in deterioration of our noble origin." "எங்கள் பழயசத்துருக்களாகிய ஜாதிக்காரருக்குள் இற்றைவரை யிருந்துவருகிற ஒரு மோசமானவழக்கம் என்னவென்றால்: மதவிஷயங்களிலும் மற்றும் உலகப்புழக்கவிஷயங்களிலும் எங்கள்ஜனங்களைத் தொந்தரவுசெய்வதற்கும், எங்களுடைய மேன்மைப் பூர்வோத்திரத்தை ஈனப்படுத்த ரிக்கார்டுகள்உண்டுபண்ணுவதற்கு மாக, எங்கள்ஜாதிமனுஷரிற் சிலரை மேஜிஸ்ட்ரேட்டு - ஸிவில் கோர்ட்டுகளுக்கு இழுத்து, தங்களுடைய செல்வாக்கினாலும் பயமுறுத்துதலினாலும் தங்கள் ஏமாற்றுவேலையை முடித்துக்கொள்ளும் பல சமயவாய்ப்புகளைத் தேடிக்கொள்ளுகிறார்கள்" என்றும் சொல்லியிருப்பது மல்லாமல், ஷை கேஸின் அசல்கோர்ட்டு ஜட்ஜ்மென்று என்னநிலைமையி லெழுதப்பட்டது என்பதைப்பற்றி, ஷை மனுப்புஸ்தகத்தின் 118, 119-ம் பக்கங்களில் அடியிற்கண்டபடியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—

"In the bad temple case of Kamuti, the Original Suit No. 83 of 1898 on file in the Subordinate Court of Madura (East), ll the leading members concerned were of anti-Chantras, as he - Judge, the - Vakils of the plaintiff, the - Commissioner appointed by the Judge to examine and translate the extracts and xhibits, etc. Even the anti-Chantra riot of 1899 was caused y the envy of the old enemies at the reviving wealth and terary proficiency of the Chantras just like the anti - Shemitic gitation in the West. Notwithstanding unobjectionable proofs n the Chantra side in the said Kamuti case, though it is an nsignificant local suit undesired by the generality of the hantras, the Judge was openly threatened with death by the nti-Chantras against passing a judgment on their favour. is desk was heaped with hundreds of anonymous threatening

letters; walls in the main streets of Madura were placarded with the same threatenings, which appeared also boldly in the *South Indian Mail* of Madura, dated 12th June 1899, conducted by the anti-Chantras in the following words; viz.,

'The people, it is said, are awaiting the decision of the Madura Sub-Court in the well-known Kamuti temple case. Judgment in favour of the Chandrars, it is feared, will cause a more terrible excitement.'

The date of this publication was 38 days before the Judge delivered the Judgment, and six days after the sack of Sivakasi and during the vehement affliction of the Chantras, in the districts of Tinnevelly and Madura and Travancore State. That even the anti-Chantraic riot itself was conducted in order to terrorise the Sub-Judge to give judgment in the Kamuti temple case against the Chantras was made known by an English Missionary, about one month before the Judge delivered the Judgment, viz.,

'Another reason (of the riot) is that it is in consequence of a great lawsuit in Madura connected with the temple, and that the side that fears it is being decided against them have stirred up the Maravars against the Chandrars who are supposed to be gaining the case, in order to terrorise the Native Judge.'—**The Madras Mail**, 26th June 1899.

When it is possible now in the justice-loving English Government for anti-Chantras to compel a Judge to deliver a perverse judgment to satisfy their envy and enmity, it may be readily understood by all conscientious persons how miserably the Chantras might have been treated by their enemies in those olden days when they had the whole power of the country in their own hands."

இப்படியெல்லா மிருக்க, எந்தவிஷயத்தில் அந்தக் கமுதிக்கேஸ் நாடார் ஜாதி மொத்தத்தையும் கட்டுப்படுத்தக் கூடியது? யதார்த்தப்படி யானுலுஞ் சரி, கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளின்படி யானாலுஞ் சரி, டை. கேஸின் ஜட்ஜ மென்று நாடார்ஜாதி மொத்தத்தையும் கட்டுப்படுத்துவதற்கு யாதொரு ஆதாரமு மில்லை யென்பது உறுதியாய்நிலைப்பட்ட காரியம்.

அப்பால், இந்தக் கேஸ் மதராஸ் ஹைகோர்ட்டிலும், அதின் பின்னுல், பிரிவிகவுன்ஸிலிலும் அப்பீலானபோதும், நாடார்ஜாதியாருக்கு அனுகூலம்செய்வதினுல், அவர்களைப் பகைப்போரான இதரஜாதிக்காரரால் கலகம்சேரிடுமோ என்று, தென்ஜில்லாக்களின் தாலுகாஆபீஸ்கள், போலீஸ் ஸ்டேஷன்கள் முதலானவைகள்வரை யுள்ள சகல இறுதிற ஆபீஸ்தானங்கள்வரைக்கும், டை. அப்பீல்களை பரிசீலனைசெய்த கோர்ட்டுகளின் அதிகாரி

கள் லோக்கல்கவர்ன்மென்று மூலமாய் ஸர்க்குலர்களனுப்பிக் கேட்டதில், கலகம்சேரிடு மென்றே யிருதியான் ஆபீஸ்களிலிருந்து பதில்களனுப்பப்பட்டதாகவும் கேள்விப்பட்டோம்.—அந்த ஹைகோர்ட்ஜட்ஜுகளானுலுஞ் சரி, பிரிவிகவுன்ஸில்ஜட்ஜுகளானுலுஞ்சரி, நாடார்ஜாதியின் பூர்வோத்திரம் - சரித்திரம் - அந்தஸ்து விஷயமாக, ஆதனமாய் யாதொரு ஆராய்ச்சியும் செய்யாமல், 'டை. கீழ்மதுரை ஸப்கோர்ட்டின் ஜட்ஜ் ஆகிய Mr. வரதராவு மிகவும் மேதாவி யாக்கும்; அவர், நாடார்ஜாதிவிஷயமா யெழுதியிருப்பவைக ளெல்லாம் சரியாயிருக்கும்' என்று அவ்வளவில் நாடார்ஜாதி விஷயமான ஆராய்ச்சியை நிறுத்திக்கொண்டார்களே யல்லாமல், ஆதன விசேஷங்கள் யாதொன்றும் கொடுக்கவில்லை. ஆனுல், கனம் வரதராவு தென்இந்திய எத்னலஜி விஷயமாய் எவ்வளவு ஆராய்ச்சி யுடையவ ரென்பதும், நாடார்ஜாதியாரின் பூர்வோத்திரம் - சரித்திரம் - அந்தஸ்து முதலிய விஷயமாய் திடமான அபிப்பிராயம் கொடுக்கத்தக்கதாக போர்த்த சாட்சியமும் ரிக்கார்டுகளும் அவருக்கு கிடைத்தது என்பதும், நாம்இன்னுர் என்னும் நிச்சயஅறிவுடைய நமக்கும், இன்னும் டை. கேஸின் ரிக்கார்டுகளைப் படித்துப்பார்க்கும் சகல மேதாவிகளுக்கும் தெளிவாய்விளங்குஞ் சங்கதியா யிருக்கிறது.—உலகமொத்த மேதாவிகளும் ஆராய்ச்சி செய்கிற எத்னலஜிப்படி யாகிய, 'ஆரியர்' - 'திராவிடர்' முதலிய நாமங்களால் சொல்லப்படும் சனக்கூட்டத்தார் யாரென்பதும், அவர்களின் பூர்வஇடம் இன்னதென்பதும், அவர்களின் சரித்திரமுமே, சரித்திர ஆராய்ச்சிப்படி, நாள்தோறும்-நிமிஷம்தோறும் மாறுகிறதா யிருக்கிறது. மத்தியஆசியாவிலிருந் தெழும்பியதாக 1820-ம் வூ முதல் யூகித்து சரித்திரம்நிலைப்படுத்தப்பட்ட ஆரியர், அப்பால் சில ஆசிரியர்களால் மேல்ஆசியாவுக்கு மாற்றப்பட்டு, 1857 அல்லது 1867 அல்லது 1868 முதல் ஜெர்மானியரால் மத்திய ஐரோப்பாவுக்கும், மற்றும் ஐரோப்பியசாஸ்திரிகளால் தென் ஐரோப்பாவுக்கும், இன்னும்சிலரால் வட ஐரோப்பாவுக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்; இந்த ஆரியரை Mr. B. G. திலகர் முதலிய சாஸ்திரிகள் வடத்ருவகோடிகளுக்கு மாற்றுகிறார்கள்; ஆனுல் இன்னும்சில சாஸ்திரிகளோ, யதார்த்தத்தை யனுசரித்து, 'ஆரியாவர்த்தம்' ஆகிய வடஇந்தியாவின் இமயமலைச்சாரலே அவர்களின் ஆதியிடமெனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருகாலத்தில் இந்த ஆரியருள் சகலவிஷயத்திலும் மகாசிரேஷ்டமுடையவர்கள் என்று குறிப்பிடப்பட்ட ஜெர்மானியர், இப்போது (Prof. Sergi) புரொபெஸர் ஸெர்ஜி முதலான பேர்போன சாஸ்திரிகளின் ஆராய்ச்சிப்படிக்கு, மிகுந்தமூல முள்ள அநாரியரான ஆப்பிரிக்காரவும், மகாமேதாவி லெப்ட்கொல்னல் (Lieut. Col. L.A. Waddell, C.B.) உவாடெல்துரையின் ஆராய்ச்சிப்படிக்கு, அவர்கள் அநாரிய ரான

(Turanians) துரானியரு மாகுகிறார்கள். 'திராவிடர்' என்று டை. சாஸ்திரிகளால் பேர்குறிக்கப்படும் ஜனங்கள் இன்னாரென்பதும், அவர்களின் ஆதியிடம் இன்னதென்பதும், தென்இந்தியா எவ்விதமாய்க் குடியேற்றப்பட்டது என்னும் சரித்திரமுமோ, இந்த ஆரியரின் சரித்திரத்தைக்காட்டிலும் அதிகமாக, உலகத்தில் மகாமேதாவிகளா யெண்ணப்படும் சாஸ்திரிகளுக்குள், ஒன்றுக்கொன்று முற்றிலும் விகற்பமுள்ள வெவ்வேறு வகையான எண்ணிறந்த தீர்மானங்களை யடையப்பெற்றிருக்கிறது. [இந்த விவரங்களெல்லாம், நான் இங்கிலிஷில் எழுதி, அச்சிடத் தயாரித்திருக்கிற *Dramilo-Oriental Research* 'த்ராமிள-பூர்வ ஆராய்ச்சி' என்னும் பிரபந்தத்தில் சவிஸ்தாரமா யிருக்கின்றன.] உலகமொத்த சாஸ்திரிகளும் ஆதாரங்கள் தேடி ஆராய்கிற இந்த ஆரியர் - திராவிடரின் சரித்திரங்களே இப்படி நிலைமாறுகிறபோது, டை. கமிஷன் நடைபெறுங்காலத்திலிருந்த அவ்வளவு ஆதாரங்களையுங்கூட பூரணமா யாராயாமல், நாடார்குலத்தவரின்பேரில் பகையும்-பொறாமையுமுள்ள சில மனுஷர்கள் மூலமாய்ச் சேர்க்கப்பட்ட சாட்சியங்களையும், 'ஆகமங்கள்' முதலிய பிரட்டு நூல்களையும் ஆதாரமாய்வைத்துக்கொண்டு நிதானித்த டை. Mr. வரதராவு அவர்கள், நாடார்குலத்தைமதித்த அவமதிப்பு இன்னும் எவ்வளவுகாலம் நிலைநிற்குமோ, பார்ப்போம்! ஆனால், நமக்கே தெரிகிறபடி, நாடார்குல வரலாறு விஷயமாய் அக் காலத்தில் டை. ஜட்ஜின் ஆராய்ச்சிக்கு வந்துசேராத ரிக்கார்டுகளும் ஐதிகங்களும் விவரங்களும் ஏராளமா யிருப்பது மாத்திரமல்ல, (archæological researches) புராதன ஆராய்ச்சி மூலமாகவும், நூதனமாய் வெளிவந்திருக்கும் பழயநூல்கள் மூலமாகவும், இன்னும் மற்றும்வகை யாகவும் இப்போ நமக்குக்கிட்டியிருக்கும் ஆதாரங்களும் ஏராளமாயிருக்க, மிஸ்டர் வரதராவின் தப்பபிப்பிராயங்கள் மூலமே பார்க்கப்போவதற்கு இன்னும் வெகுநாட்களா செல்லும்? டை. கமிஷனின் மூன்றுகோர்ட்டு ஜட்ஜ்மென்றுகளிலும், நாடார்குல விஷயமாய் தப்பிதமாயெழுதப்பட்டிருக்கும் சங்கதிகளை வரிவரியாயெடுத்து தாட்சேபித்து தனிப்புஸ்தகமாய்ப் பிரசுரிக்கவும் அப்பேர்க்கொத்த (notes) குறிப்புகள் தயார்செய்து யிருக்கிறேன்.

இறுதியாக, நான் சொல்லும் ஆலோசனை யென்னவென்றால்: தென் இந்தியாவின் சரித்திரம், பாஷைகள் முதலியவற்றின் ஆராய்ச்சிவிஷயமாய் உலகெங்கும் கீர்த்திபெற்றவரும், நாடார்குலத்தவருடன் வெகுவாய்ப் பழகியவருமாகிய (Bp. Caldwell) பிஷப் கால்டுவெல்துரையவர்கள் 1850-ம் வருஷத்தில், "The Chantrars of Tinnevelly have for nearly fifty years been our fellow-subjects; and, during the whole of that period they have considered their subjection to the East India Company's Government, and the introduction of the rudi-

ments of English law, as priceless blessings. No insurrections, no riotous insubordination, no disloyalty, have ever been laid to their charge. Though taxed, like all Hindus, under all successive governments, beyond their ability, more submissive tax-payers are nowhere to be met with in the world." "திருநெல்வேலி சான்றோர் கிட்டத்தட்ட ஐம்பது வருஷங்களாக நம்முடைய உடன்குடிகளா யிருந்துவருகிறார்கள்; இந்த எல்லாக் காலத்திலும் அவர்கள் ஈஸ்ட் இந்தியா கும்பனியாரின் கவர்ன்மென்றுக்கு கீழ்ப்படிந்திருப்பதையும், இங்கிலீஷ்சட்ட மூலாதாரம் தங்களுக்குள் ஏற்பட்டிருப்பதையும் தங்களுக்கிடைத்த விலைமதியா ஆசீர்வாதங்களாக எண்ணியிருக்கிறார்கள். ...ங்கிலும் ஊர்க்கலகங்களாவது, கலாதிக் கிடமான அடங்காமை...து, எதாகிலும் ராஜத்ரோகமாவது, எப்பொழுதாகிலும் அவர்கள் ...மாய்ச் சொல்லப்பட்டதில்லை; மற்றும் இந்துக்களைப்போல் [illegible] சகல ராஜாங்கங்களுக்குள்ளும், இவர்கள் தங்கள் திராணிக்கும் மேலாக வரிசெலுத்தும்படியான ஸ்திதியில் வைக்கப்பட்டிருந்தும், இவர்களைவிடக் கீழ்ப்படிதலோடு தீர்வைசெலுத்துகிறவர்களை இந்த உலகத்தின் எந்த இடத்திலாகிலும் காணமுடியாது" என்று அனுபவங்கண்டு எழுதிவைத்திருக்கிறபடி, நமக்கு இயற்கையும் பரம்பரையுமா யுள்ள ராஜபக்தியை ஒருபோதும் விட்டுவிடாது தலைமேற்கொண்டு, கவர்ன்மென்றார் 1909-ல் பிரசுரித்த தென்இந்திய எத்னோகிராபிபுஸ்தகத்தில் மேற்கோள்களாக எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிற அடியிற்கண்ட புத்திமதிகளையும் கவனித்து நடந்து முன்னேறுவோமாக:

"Evolutions resulting from intellectual and social development are quite irresistible, if any caste will continue to advance by its own efforts in the path of freedom and progress." "எந்தஜாதியாராவது, தங்கள் சொந்தமுயற்சிகளால், சுவாதீனத்திலும் முன்னேற்றத்திலும் விருத்தியாகிக்கொண் டிருப்பார்களாகில், அறிவாக்கத்தாலும், மற்றும் ஜனங்களோடு ஐக்கியப்புழக்கஞ்செய்வதாலும் அவர்களுக் குண்டாகிற முற்போக்கை ஒருபோதும் தடுக்கமுடியாது."

(b). "They (*i.e.* The Chantrars) have temples of their own, and are numerous enough, and strong enough in wealth and education, to rise along their own lines, and without appropriating the institutions or infringing the rights of others, and in so doing they will have the sympathy of all right-minded men, and, if necessary, the protection of the Courts." "சான்றோருக்கு அவர்கள் சொந்தக்கோவில்களே யிருக்கின்றன; அவர்கள், ஜனத்தொகையிலும் ஐஸ்வரியத்திலும் கல்வியிலும் போர்ந்தபலமுடையவர்களா யிருப்பதால், அவர்கள், இதரஜாதிக்காருடைய ஏற்பாடுகளையும் சுதந்தரங்களையும் கவராமலும் கெடுக்காமலும், தங்கள் சொந்தமுறைப்படியே முன்னேறக்கூடியவர்களா யிருக்கிறார்கள்; இப்படி நடந்துவருவார்களாகில், நன்மனதுடைய யாவரும் அவர்களுக்காக பட்சம் [illegible] பாராட்டுவதல்லாமல், அவசியமாயின், ராஜாங்கத்தாரும் வேண்டிய பராமரிப்பு செய்வார்கள்."

மேலும், எமது முன்னேற்ற விஷயமாய், மேற்சொன்ன கனம் வி. சுப்பிரமணியமுதலியாரவர்களும், அடியிற்கண்டபடி நம் நாடார்குலத்தவருக்கு நல்லாக்கும் இதரகுலத்தவருக்கு எச்சரிப்பும் கூறி எழுதி, 1907-ல் (திருச்சிறுப்பள்ளி Tamilian Archæological Society மூலமாய்) அச்சிட்டிருக்கிறார்கள். அதாவது:—

"இவர்கள் (=நாடார்கள்) கலக்கிரமத்தில் உயர்வடைந்தோரென்பது நிச்சயமானதேயன்றி, தடுக்கமுடியாது; சிலகாலத்தில், இவர்கள் பிராமணரினும் உயர்வடைந்தாலும் ஆச்சரியப்படத்தக்க காரணமிராது; ..... மேற்கூறியவாறு தென்றிலாச் சான்றோர் நிச்சயமாகத் தடுக்கமுடியாதபடி யாகவும் உயர்வடையு முண்மையை மனதில் வைத்துப், பிறசாதியாருள் அறிவாளிகள் மேற்கூறிய முயற்சிக்கு உதவி செய்யாராயினும், தடையேனுஞ் செய்யாதிருத்தல் தகுதி" என்பதே.

முடிவுரையாக, சேற்றையதினம் நமது கான்பரென்ஸில் அக்ராசனபதியாயிருந்த கனந்தங்கிய அட்வோகேட் ஜெனரல் The Hon. Mr. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி.ஏ., பி.எல். அவர்களுடைய உபந்நியாஸத்தின் ஆசீர்வாத வசனத்தைக்கொண்டு என்னுடைய இந்தக் குலவரலாற்றைப் பூர்த்திபண்ணுகிறேன். அதாவது:—

"Judged by your vigour and enterprise, you are one of the youngest and most promising communities . . . . With courage and faith in yourselves, with peace and good will to all the castes and communities, with justice, generosity and service to the poor as your mottos, may you, individually and as a community, prosper more and more till you take your appointed place in the National life and earn the gratitude of our whole Province as the Pioneers of a great Industrial Renaissance!"

"உங்களுடைய தைரியத்தையும் ஊக்கத்தையும் கொண்டு உங்களைப்பற்றி நிதானிக்கும்போது, நீங்கள், (இந்தியாவில்) மிகுந்த யௌவனமும், முன்னுக்குவரும் இயற்கையு முடைய ஜனக்கூட்டத்தார்களி லொருவராயிருக்கிறீர்கள்; ... உங்கள் சொந்தநடபடிக்கைகளிலேயே ஊக்கமும் நம்பிக்கையும் வைத்து, உங்களைச்சுற்றிலு முள்ள எல்லா ஜாதிகளிடத்திலும் சமாதானமும் நல்லெண்ணமு முடையவர்களாயிருங்கள்; நீதியும் பெருந்தன்மையு முடையவர்களாயிருந்து, ஏழைகளுக்கு உத்தாரணம்பண்ணுவதை உங்களுடைய விருதுவாக்கியங்களாக வைத்துக்கொண்டு, தேசஜீவியத்தில் உங்களுக்குக் குறிக்கப்பட்ட உயர்ந்த ஸ்தானத்தை அடையுமட்டும், தனித்தனியாகவும் ஜாதிமொத்தமாகவும் மேன்மேலும் செழித்தோங்கி, கைத்தொழில்சம்பந்தமான புதுப்பிறப்புக்கு வழிகாட்டிகளென்பதாய் தென் இந்தியா மொத்தத்திலுள்ள ஜனங்களும் உங்களை நன்றியறிதலோடு மதிக்கும்படியான கீர்த்தியை யடைந்துகொள்ளுங்கள்."

6—6—1918.

B. J. M. KULASEKHARA-RAJ.

சுபமஸ்து.

Printed at the Darling Printing Press, Palamcottah—1891.